# பத்துப்பாட்டு ஆய்வு

தெ.பொ.மீ.

# பத்துப்பாட்டு ஆய்வு

( புறம் )

# SARVODAYA ILAKKIYA PANNAI

*Collected Works of*

*Professor* T. P. MEENAKSHISUNDARAN

*Volume XIII*

## PATTUPPĀṬṬU (Puṟam) ĀYVU

with Pattuppāṭṭu (Puṟam) Text with Index

*edited by* M. SHANMUKHAM PILLAI

( Contributions to Classical Tamil Studies )

சர்வோதய இலக்கியப் பண்ணை

பேராசிரியர் தெ. பொ. மீ. நூல்கள் வரிசை

தொகுதி 13

*பத்துப் பாட்டு ஆய்வு (புறம்)*

Sarvodaya Ilakkiya Pannai
Madurai 625 001
1981

தெ. பொ. மீ.

# பத்துப் பாட்டு ஆய்வு

## ( புறம் )

( பத்துப் பாட்டு புறம் - மூலமும் பொருட்குறிப்பு அகராதியும் இணைக்கப்பட்டுள்ளது )

பதிப்பாசிரியர்

மு. சண்முகம் பிள்ளை

தமிழியல் புலம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

சர்வோதய இலக்கியப் பண்ணை

மதுரை 625 001

1981

முதற் பதிப்பு 1981
பிரதிகள் 1000

பத்துப் பாட்டு ஆய்வு — உரிமை
திருமதி காமாட்சி சண்முகம்

பத்துப் பாட்டு மூலமும் பொருட்குறிப்பு அகராதியும் — உரிமை
மு. சண்முகம் பிள்ளை

விலை ரூபாய் பதினைந்து

மத்திய அரசினரால் சலுகை விலையில்
வழங்கப்பட்ட தாளில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது

அச்சிட்டோர் : வைகை அச்சகம், மதுரை
வெளியிடுவோர் : சர்வோதய இலக்கியப் பண்ணை
32/1 மேல வெளி வீதி
மதுரை 625 001

## இந்நூல் பற்றி . . .

பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்களின் மறைவுக்குப் பின் வெளிவரும் அவருடைய இரண்டாவது நூல். பேராசிரியர் நோயால் துன்புற்றகாலை இந்நூலை வாய்மொழியாகச் சொல்ல திருமதி எல். ராஜம்மாள் அவர்கள் எழுதினார்கள். நூல் முற்றுப் பெறாமல் நின்று விட்ட பொழுதிலும் இப்பொழுது அச்சேறி வெளி வருகிறது. அறிஞர் மு. சண்முகம் பிள்ளை அவர்கள் எழுத்துப் பிரதிகளைச் செப்பம் செய்து பத்துப் பாட்டு (புறம்) மூலத்தையும் இத்துடன் இணைத்துப் பதிப்பித்து உள்ளார். விரிவான பொருட் குறிப்பு அகராதி ஒன்றை யும் அவர் சேர்த்துள்ளார். அகராதிப் பணியில் அவருக்குச் செல்வி மீ. மல்லம்மாள் அவர்கள் உதவினார்கள். பேராசிரியரின் நூல்களை வெளியிடும் திருப்பணியினைச் சர்வோதய இலக்கியப் பண்ணை தொடரும் என்பதில் ஐயமில்லை. இப்பணியினைத் தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் என்பதும் உறுதி. எல்லாம ''அன்பின் விளைவே.''

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
6-4-1981

**ச. செயப்பிரகாசம்**

# முகவுரை

மு. சண்முகம் பிள்ளை

'பத்துப்பாட் டாதி மனம்
பற்றினார் பற்றுவரோ—
எத்துணையும் பொருட்கியையும்
இலக்கணமில் கற்பனையே?'

இது பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை அவர்களின் பெரு வாக்கு. பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமாய் இலங்கும் சங்க இலக்கியங்களை அவர் இவ்வாறு நமக்கு அறிமுகப் படுத்துகிறார். பின்னாள் இலக்கியங்களில் மதி மருட்டும் கற்பனைகளைப் புலவர்கள் புகுத்தியது போல இச்சங்கப் பழம் பாடல்களில் இல்லை. இயற்கை நவிற்சியாய் உலகியல் காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் விளக்குவதால் இவை கற்பார் மனத்தைப் பெரிதும் பிணித்து விடுகின்றன. இத்தகு இயற்கை நல இலக்கியங்களில் ஈடுபட்டோர் உயர்வு நவிற்சி யான இல்லது புனைதலான கற்பனைகளில் ஈடுபடார் என்பது கருத்து.

சங்க இலக்கியங்களை ஆக்கியபுலவர்களை, 'பொய்யடிமை இல்லாத புலவர்கள்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாராட்டுகின்றார். சங்கப்புலவர்களுக்குத் தனிக்கோயில் மதுரை மீனாட்சி-சுந்தரேசுவரர் திருக்கோயிலில் உள்ளது. பழம்புலவர்களுக்குக் கோயிலெடுத்துப் போற்றிய நம் முன்னோர்களின் நன்றியுணர்வு நமக்கு வழிகாட்டியாகும். சங்கப்புலவர்களை நம்பியாண்டார் நம்பி பின்வருமாறு போற்றுகின்றார்.

'தரணியிற் பொய்மை இலாத்தமிழ்ச்
சங்கமதிற் கபிலர்
பரணர்நக் கீரர்முதல் நாற்பத்
தொன்பது பல்புலவோர்

அருள்நமக் கீயும் திருஆல
வாய் அரன் சேவடிக்கே
பொருள்அமைத் தின்பக்கவிபல
பாடும் புலவர்களே.'

சங்கப்புலவர்கள் எல்லாரும் இன்பக்கவிபல பாடியுள்ளனர் என்று இவர் குறிப்பிடும் சிறப்பு நோக்கத்தக்கது. இப் பழம் புலவர்களைப் பொதுப்படையாகத் தமிழ்விடுதூதின் ஆசிரியர்,

— மூத்தோர்கள்
பாடியருள் பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும்
கேடில் பதினெட்டுக் கீழ்க்கணக்கும்'

என்று பாட்டு — தொகை நூல்களில் பாடிய புலவர்களை 'மூத்தோர்கள்' என்று அவர்கள் வாழ்ந்த காலப் பழமையினையும் தொட்டுக் காட்டியுள்ளார்.

சங்கத்தொகை நூல்களுள் பத்துப் பாட்டு முற்பட வைத்து எண்ணப்படுகிறது. இதுவும் எட்டுத்தொகை போன்றதொரு தொகை நூலேயாம். ஆசிரியர் எண்மர் பாடிய பத்து ஆசிரியப் பாடல்கள் இதில் உள.

ஆசிரியப் பாட்டின் அளவுகுறித்துத் தொல்காப்பியர்,

'ஆசிரியப் பாட்டின் அளவிற்கு எல்லை
ஆயிரம் ஆகும் இழிபுமூன் றடியே'

என்று செய்யுளியலுள் வரையறுத்துள்ளார். நீண்ட அகவற்பாடல்களுக்கு உதாரணமாக இளம்பூரணர் பத்துப் பாட்டுப் பாடல்களையே குறிப்பிட்டுள்ளார். 'பெரிய பாட்டு பத்துப்பாட்டினுள்ளும் மணிமேகலையுள்ளும் கண்டு கொள்க' என்பது அவர் கூற்று (தொல். செய்யு. 150) நச்சினார்க்கினியர் இன்னும் சற்று விளக்கமாக, 'கூத்த ராற்றுப்படை தலையளவிற்கு எல்லை; மதுரைக் காஞ்சியும் பட்டினப் பாலையும் ஒழிந்த பாட்டு ஏழும் பரிபாடலும் கலியும் ஒழிநத ஆறும் இடையளவிற்கு எல்லை' என்று எழுதியுள்ளார். இதனால் பத்துப்பாட்டுகளும் பெரும்பாடல் வரிசையில் வைத்துப் போற்றப்படுதல் காணலாம். மேலும்

பத்துப்பாட்டு என்னும் வழக்கு இவ்வுரையாசிரியர்களின் காலத்திற்கு முன்பே பயின்று வந்ததாகும் என்பதும் இதனால் உணரலாகும்.

எனினும், இவ் வழக்கு மிகவும் முற்பட்டு எழுந்ததாக வும் இல்லை. சங்க நூல்களின் வரலாற்றை விளக்கும் இறையனாரகப் பொருள் உரையில் (சூ. 1) கடைச் சங்க வரலாறு கூறுமிடத்துப் பத்துப்பாட்டைப் பற்றிய செய்தி எதுவும் இடம் பெறவில்லை. எனவே, இவ் வழக்கு இறைய னாரகப் பொருளுரையின் காலத்திற்குப் பின்னர்த் தோன்றியதாதல் வேண்டும்.

பிற்காலத்தில் தோன்றிய பன்னிரு பாட்டியலில், பத்துப்பாட்டு நூலின் அமைப்புக் குறித்து இரண்டு நூற் பாக்கள் காணப்படுகின்றன. அவை வருமாறு:

'நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே
ஏறிய அடியின் ஈரைம் பாட்டுத்
தொடுப்பது பத்துப் பாட்டு எனப்படுமே.' (384)

'அதுவே அகவலின் வருமென அறைகுவர் புலவர்.'
(385)

இந்த நூற்பாக்கள் 'பத்துப் பாட்டு' என்னும் வழக்கு நாட்டில் நிலவிய காலத்தில் இயற்றப் பெற்றதாகலாம். இப்பொழுது வழங்கும் பத்துப்பாட்டுத் தொகுப்பின் இயல்பு நோக்கி இயற்றப்பெற்றனவே இந்நூற்பாக்கள். இத்தொகுப்புத் தவிர வேறுவகையான பத்துப்பாட்டுத் தொகுப்புத் தமிழுலகில் இல்லாமையும் ஈண்டுக் கருதத்தகும்.

பத்துப்பாட்டு என்னும் பெயர் வழக்கும் உரை யாசிரியர்களின் காலத்திற்குச் சில நூற்றாண்டுகள் முற் பட்டு எழுந்ததாகலாம். ஏனெனில் இளம்பூரணரும் மயிலை நாதரும் (நன்.387) தத்தம் உரைகளில் பத்துப் பாட்டு என்பதைச் சுட்டியுள்ளனர். பேராசிரியர் தம்முடைய உரை யில் 'பாட்டு' என்றே இதனை வழங்கியுள்ளார் (செய்யு. 50, 80 உரை). இளம்பூரணரும் ஏனைய உரையாசிரியர்களும் பத்துப் பாட்டுப் பாடல்களை மேற்கோள் காட்டும்பொழுது அவ்வவற்றின் தனிப்பெயராலேயே குறிப்பிட்டுள்ளனர்.

பத்துப்பாட்டு ஏட்டுப்பிரதிகளில் பத்துப் பாட்டு முறைவைப்புப் பின்வருமாறு காணப்படுகிறது. திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம். இவ் வரிசையை மெய்ப்பிப்பது போன்று ஏட்டுப் பிரதிகளில் அமைந்துள்ள பழம்பாடல் ஒன்றும் காணப் படுகிறது. அது வருமாறு:

> 'முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
> பெருகு வளமதுரைக் காஞ்சி — மருவினிய
> கோல நெடுநல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
> பாலை கடாத்தொடும் பத்து.'

இந்தப் பாடலில் காணும் வரிசை முறையோடு, ஏட்டுப் பிரதிகளில் முதலாவது, இரண்டாவது என எண்ணுப் பெயராலும் இவை குறிக்கப்பட்டுள்ளன என்பதும் கவனிக் கத்தக்கது. இவ் வரிசை அப் பாடல்கள் எழுந்த கால வரிசை யைக் குறிக்கவில்லை. பத்துப்பாட்டின் கடவுள்வாழ்த்துப் போல முதலில் திகழும் திருமுருகாற்றுப்படை பிற்காலத்துத் தோன்றிய பாடலாகும்.

பத்துப்பாட்டு நூலுள் மிகச் சிறிய பாட்டு முல்லைப் பாட்டு; இதில் 103 அடிகள் உள்ளன. மிகப்பெரிய பாடல் 782 அடிகளையுடைய மதுரைக்காஞ்சி.

பத்துப்பாட்டுள் ஐந்து பாடல்கள் ஆற்றுப்படைகள். அவையாவன: திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடு கடாம். மலைபடுகடாம் என்பதற்குக் கூத்தராற்றுப்படை என்று ஒரு பெயரும் உண்டு. திருமுருகாற்றுப்படை புலவர் ஆற்றுப்படை எனவும் வழங்கும். 'மதுரைக்காஞ்சி' வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமைகளைச் சான்றோர் எடுத்துக்கூறும் பகுதியாகிய காஞ்சித் திணை என்னும் புறப் பொருட் பகுதியைச் சாரும்.

முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை என்னும் மூன்றும் அகப்பொருள் பற்றிய பாடல்களாகும். குறிஞ்சிப்பாட்டை 'பெருங்குறிஞ்சி' என்னும் பெயராலும்

உரையாசிரியர்கள் குறிப்பிடுவர். நெடுநல்வாடை அகப் பொருட்செய்தி பொதிந்ததாயினும், 'வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகமொடு, முன்னோன் முறைமுறை காட்ட (176—177) எனப் பாண்டியனது அடையாளப் பூவைக் கூறினமையால், இதனைப் புறப்பொருள் சார்புடையது என்பர். வாகைத்திணையுள் கூறிய 'கூதிர்ப்பாசறை' என்னும் துறையுள் இதனை நச்சினார்க்கினியர் காட்டுவர்.

பத்துப்பாட்டுத் தொகுப்பில் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களால் அவ்வப் பாடல்களை இயற்றிய புலவர் பெயர்கள் தெரியவருகின்றன. அதோடு பாட்டுடைத் தலைவர் பெயர்களும் சுட்டப் பட்டுள்ளன, பாடினோர், பாடப்பட்டோர் பற்றிய செய்திகளும் பிறவும் அடுத்துவரும் பக்கங்களில் (xii-xiii) காணப்படும் அட்டவணையால் தெளிவுறத் தெரியவரும்.

திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை என்னும் இரண்டையும் இயற்றியவர் நக்கீரர். பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை என்னும் இரண்டையும் இயற்றியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை என்னும் இரண்டிற்கும் பாட்டுடைத்தலைவர் கரிகாலன். மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை இரண்டிற்கு முரியவர் பாண்டியன் நெடுஞ்செழியன்.

பாண்டிமண்டலம், சோழமண்டலம், தொண்டை மண்டலம் என்னும் மும்மண்டலத்தை ஆண்ட பெருமன்னர்கள் பத்துப்பாட்டில் இடம் பெற்றுள்ளனர். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும், சோழருள் கரிகாற்பெருவளத்தானும், தொண்டைமான் இளந்திரையனும் புகழப்பட்டுள்ளனர். ஓய்மானாட்டு நல்லியக்கோடன், நன்னன் சேய் நன்னன் என்னும் இரு குறுநில மன்னர்கள் முறையே சிறுபாணாற்றுப்படை, மலைபடுகடாம் ஆகிய பாடல்களில் சிறப்பிக்கப்பட்டுள்ளனர்.

'முருகாறு செவ்வேள் பொருநாறு பாலை
கரிகால் நெடுஞ்செழியன் காஞ்சி—இருபாணும்
நல்லியக் கோடன் இளந்திரையன் நன்னன்கடாம்
கல்வித் தலைவர் கருது'

| எண் | பாட்டு | அடி | பாடினோர் | பாடப்பட்டோர் | வேறுகுறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| 1 | திருமுருகாற்றுப்படை | 317 | மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் | குமரவேள் | |
| 2 | பொருநராற்றுப்படை | 248 | முடத்தாமக் கண்ணியார் | சோழன் கரிகாற் பெருவளத்தான் | |
| 3 | சிறுபாணாற்றுப்படை | 269 | இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் | ஓய்மானாட்டு நல்லியக் கோடன் | எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம் ஒப்பு-புறம் 158 |
| 4 | பெரும்பாணாற்றுப்படை | 500 | கடியலூர் உருத்திரங் கண்ணனார் | தொண்டைமான் இளந்திரையன் | |
| 5 | முல்லைப்பாட்டு | 103 | காவிரிப்பூம் பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் | | மிலேச்சர் 60-66 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | மதுரைக்காஞ்சி | 782 | மாங்குடி மருதனார் | தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் | நன்னன் குறிக்கப் பட்டுள்ளான் 618-619 |
| 7 | நெடுநல்வாடை | 188 | மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் | பாண்டியன் நெடுஞ் செழியன் | மிலேச்சர் 31-35 |
| 8 | குறிஞ்சிப்பாட்டு | 261 | கபிலர் | ஆரியவரசன் பிரகத்தன் | கபிலரை நக்கீரர் குறித்துள்ளார் அகம். 78, 141 |
| 9 | பட்டினப்பாலை | 301 | கடியலூர் உருத்திரங் கண்ணனார் | கரிகாற் பெருவளத் தான் | |
| 10 | மலைபடுகடாம் | 583 | இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் | பல்குன்றக் கோட்டத் துச் செங்கண் மாத்து வேள் நன்னன் சேய் நன்னன் | |

எனவரும் பழம்பாட்டு பத்துப்பாட்டின் பாட்டுடைத் தலைவர்களைத் தெளிவுபடுத்துகிறது.

பத்துப்பாட்டுத் தொகுப்பை உருவாக்கியோர் சங்கத்துச் சான்றோரே என்பது நச்சினார்க்கினியர் கருத்து. மலைபடுகடாத்தில், 'தீயினன்ன ஒண்செங்காந்தள்' (145) என்று ஒரு தொடர் காணப்படுகிறது. இதன் உரையில் நச்சினார்க்கினியர்,

> 'இவர் செய்த செய்யுளை நல்லிசைப் புலவர் செய்த ஏனைச் செய்யுட்களுடன் சங்கத்தார் கோவாமல் நீக்குவர். அங்ஙனம் நீக்காது கோத்தற்குக் காரணம் ஆனந்தக் குற்றம் என்பதொரு குற்றம் இச் செய்யுட்கு உறுமையான் என்று உணர்க'

என்று எழுதியுள்ளார். இங்கே சங்கத்தார் கோவாமல் நீக்குவர் என ஏது எடுத்துக்காட்டுதல் கொண்டு சங்கத்தார் தொகுத்ததொகுப்பே பத்துப்பாட்டு என்பது பழங்கருத்தாதல் வேண்டும்.

மதுரையில் திகழ்ந்த கடைச்சங்கத்துச் சான்றோர் குழுவினரால் பாட்டு, தொகைகள் அடைவுபடுத்தப் பெற்றன எனப் பெரும்பாலாரும் கருதுகின்றனர். ஆனால், இது சங்கப்பாடல்கள் தோன்றிய காலம் அன்று. பாடல்கள் தொகைப்படுத்தப்படுவதற்கு முன் நீண்டகாலம் அவை வழக்கில் வந்திருக்க வேண்டும். எனவே, சங்கப்பாடல்களுள் சில கிருத்துவ ஆண்டு தோன்றுவதற்கு முற்பட்டனவாயும் இருத்தல்கூடும்.

பத்துப்பாடல்களைக் கொண்ட ஒரு கோவை பத்துப்பாட்டு என வழங்கப்பட்டாலும் இது நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு போன்ற நூற்கோவை அன்று. இதில் வரும் பாடல்கள் ஒன்றற்கு ஒன்று தொடர்பு இன்றி வெவ்வேறு காலத்தில் எழுந்த பாடல்களாகும்.

பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்னும் இருபாடல்களையும் பாடினோர், அவற்றால் பாடப்பட்டோர் பற்றிய செய்திகள் பிற்கால இலக்கியங்களிலிருந்தும் கல்வெட்டுகளிலிருந்தும் தெரியவருகின்றன.

'தத்துநீர் வரால் குருமி வென்றதும்
தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொடு ஆறுநூ றுயிரம்பெறப்
பண்டு பட்டினப்பாலை கொண்டதும்'

எனவரும் கலிங்கத்துப்பரணிப் பாடலில் பட்டினப்பாலை பாடிய உருத்திரங்கண்ணனுருக்கு மன்னன் செய்த சிறப்பைக் கவிஞர் போற்றியுள்ளார். இச் செய்தியை,

'பாடிய பாக்கொண்டு பண்டு பதினறு
கோடி பசும்பொன் கொடுத்தோனும்' (10)

எனவரும் சங்கர சோழனுலாவிலும் காணலாகும். பிற்காலத்ததாகிய தமிழ்விடுதூதில்,

'பாடியதோர் வஞ்சிநெடும் பாட்டால் பதினறு
கோடி பொன் கொண்டது நின் கொற்றமே'

என்று பட்டினப்பாலைக்கு அரசன் செய்த சிறப்புக் குறிக்கப் பட்டிருத்தல் காணலாம்

திருவெள்ளறைக் கல்வெட்டில் இடம்பெற்றுள்ள பின் வரும் பாடல் பட்டினப்பாலையின் அரங்கேற்றம் பற்றிய செய்தியை அறிவிக்கிறது.

'வெறிஆர் தளவத் தொடைச்செய மாறன்
வெகுண்டது ஒன்றும்
அறியாத செம்பியன் காவிரிநாட்டில்
அரமியத்துப்
பறியாத தூண்இல்லை கண்ணன்செய் பட்டினப்
பாலைக்கு அன்று
நெறியால் விடுந்தூண் பதினறுமே
அங்கு நின்றனவே.'

இப் பாடலில் கண்ணன் என்றது கடியலூர் உருத்திரங் கண்ணனுரை. 'அரமியம்' என்றது அரண்மனை முற்றத்தை. இங்குக் குறிக்கப்பட்ட போர் நிகழ்ச்சியால் அரண்மனைப் பகுதிகளில் பதினறுகால் மண்டபம் ஒன்று தவிர ஏனைய எல்லாப்பகுதிகளும் அழிவுற்றன என்பது விளங்கும். பண்டை நாளில் பட்டினப்பாலை அரங்கேறிய மண்டபம் ஆதலாலும் அதனை அழித்தால் தமிழிலக்கிய நினைவுச் சின்னம் ஒன்றைச்

சிதைந்ததாய்விடும் ஆதலாலும் அம் மண்டபம் மட்டும் பாதுகாக்கப்பட்டதாதல் வேண்டும். இதிலிருந்து முன்னை யோர் நம் தமிழிலக்கியச் சின்னங்களை எவ்வாறு பேணிப் போற்றினர் என்பது புலப்படும்.

'நல்லிசைக் கடாம்புனை நன்னன் வெற்பில்
வெல்புகழ் அனைத்தும் மேம்படத் திட்டிய'

என்பது திருவண்ணாமலைக் கல்வெட்டுப்பகுதி. இதில் 'கடாம்' என வரவேண்டுவது 'படாம்' எனச்சாசனக் குறிப்பில் காணப் படுவது பிழையாதல் வேண்டும். இக் கல்வெட்டுப் பகுதியில் மலைபடுகடாமும் அதன் பாட்டுடைத் தலைவனாகிய நன்னனும் சுட்டப்பட்டுள்ளமை தெரியவரும்.

பத்துப் பாட்டு முழுமைக்கும் நச்சினார்க்கினியர் ஆக்கிய சிறந்த உரை நமக்குக் கிட்டியுள்ளது. நச்சினார்க்கினியர் உரைச்சிறப்புப்பாயிரம்,

'சான்றோர் உரைத்த தண்டமிழ்த் தெரியல்
ஒருபது பாட்டும் உணர்வார்க் கெல்லாம்
உரையற முழுதும் புரைபட உரைத்தும்'

என்று போற்றுகிறது.

பத்துப்பாட்டு நூலுள் திருமுருகாற்றுப்படை முதல் மலைபடுகடாம் ஈறுகப் பத்துநூல்களும் இப்பொழுது காணும் வரிசை முறையில் அவை தோன்றியன அல்ல என்பது ஆராய்ச்சியாளர் கண்ட துணிபு. கடவுள் வாழ்த்துப் போல முதலிற் காணப்படும் திருமுருகாற்றுப்படை இயற்றிய நக்கீரரும் நெடுநல்வாடை ஆசிரியரும் ஒருவரல்லர் என்பர். சங்ககால வழக்குகளுக்கும் மரபுகளுக்கும் மாறுபட்ட பல கூறுகள் திருமுருகாற்றுப்படையில் உள்ளமையினால் அதனைக் காலத்தால் பிற்பட்டதென்றும் கி.பி. 10 ஆம் நூற் றாண்டளவில் தோன்றிய நூலாகலாம் என்றும் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் பல காரணங்கள் காட்டி நிறுவியுள்ளார்கள் (இலக்கிய தீபம், பக். 40). மேலும் அவர் கள் 'பத்துப்பாட்டும் காலமுறையும்' என்னும் கட்டுரையில் நூலுள் காணும் அகச்சான்றுகளை முதன்மையாக எடுத்துக் காட்டி ஒன்றற்கொன்றுள்ள தொடர்புகளை நன்கு அலசி ஆராய்ந்துள்ளார்கள் (இலக்கிய தீபம், பக். 4-12).

முடிவாகக் கீழ்க்கண்டவாறு பத்துப்பாட்டின் தோற்ற வரிசையைக் கணித்துள்ளார்கள்.

1. பொருநராற்றுப்படை 6. மதுரைக் காஞ்சி
2. பெரும்பாணாற்றுப்படை 7. நெடுநல்வாடை
3. பட்டினப்பாலை 8. முல்லைப்பாட்டு
4. குறிஞ்சிப்பாட்டு 9. சிறுபாணாற்றுப்படை
5. மலைபடுகடாம் 10. திருமுருகாற்றுப்படை

''இவற்றுள் சிறுபாணாற்றுப்படை முதல் எட்டு நூல்களுக்கும் 2 அல்லது 3 தலைமுறைகள் பிற்பட்டுத் தோன்றி இருக்கலாம். முருகாற்றுப்படை இவற்றிற்குப் பல நூற்றுண்டுகள் பிற்பட்டு இயற்றப்பட்டதாதல் வேண்டும்'' என்பது பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையவர்கள் கருத்து.

பன்மொழிப்புலவர் டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரும் கிட்டத்தட்ட பிள்ளையவர்களின் கருத்துகளை ஒத்த கருத்துடையவர்களாக உள்ளனர். பத்துப்பாட்டுள்ளும் புறம்பற்றிய பாடல்களின் ஆய்வாக அமைந்துள்ளது தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரின் 'பத்துப் பாட்டு ஆய்வு' என்னும் இந் நூல். இந் நூலுள் புறம்பற்றிய பாடல்களைப் பொருநராற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, கூத்தராற்றுப்படை, திருமுருகாற்றுப்படை, மதுரைக் காஞ்சி என்னும் அடைவில் கொண்டுள்ளார். சிறுபாணாற்றுப் படையைப் பெரும்பாணாற்றுப்படையுடன் சேரவைத்த போதிலும், திருமுருகாற்றுப்படையை, ஆற்றுப்படைப் பாடல்களின் இறுதியாக வைத்துள்ளார். இதனால் திருமுருகாற்றுப்படை பிற்பட்டு எழுந்த பாட்டு என்பது இவருக்கும் கருத்தாதல் விளங்கும். இந்தவகைப் புதிய கண்ணோட்டத்தில் பத்துப்பாட்டுப் புறப்பாடல்களை அலசி ஆராய்ந்து பற்பல புதிய கருத்துகளை வெளியிட்டுள்ளார்கள். பத்துப்பாட்டுப் பாடல்களை எந்தெந்த நோக்கில் ஆராய்ந்து பார்த்தல் கூடும் என்று நுணுகிக் கண்ட நுட்பமும் திட்பமும் நிறைந்த ஆராய்ச்சியாகும் இந் நூல்.

பத்துப்பாட்டுள் புறம்பற்றிய பாடல்களின் மூல பாடங்களும் இந் நூலுள் இணைக்கப்பட்டுள்ளன. இம் மூல பாடம் கூடியவரையில் கடினசந்திகளைப் பிரித்துச் சீர்முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. நீண்ட பாடல்களாதலின்

அடி எண்கள் எளிதில் புலப்படவேண்டி ஐந்தைந்து அடிகளுக்கு இடையே அதிக இடைவெளியிட்டுத் தொடர் எண் குறிக்கப்பட்டிருக்கிறது. மூலபாடத்துடன் டாக்டர் தெ. பொ. மீனுட்சி சுநதரனுரின் ஆய்வுக் கருத்துகளை ஒரு சேரவைத்துக் காண்பதற்குப் பெரிதும் உதவும். மேலும், பிற்சேர்க்கையாகப் பத்துப்பாட்டு நூல் பதிப்பு விவரமும், இந்நூல் பற்றி எழுந்த ஆராய்ச்சி நூல்களின் பட்டியலும் சேர்க்கப்பட்டுள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாகப் பொருட் குறிப்பு அகராதி சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதில் மூலபாடங்களில் இடம்பெற்றுள்ள பொருட்குறிப்புகளும் ஆராய்ச்சி நூலுள் இடம் பெற்ற கருத்துகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த அகராதியின் துணையால் சிறுசிறு பொருட் கூறுகளின் விளக்கத்தையும் உடனடியாகக் கண்டு கொள்ள இயலும்.

பேராசிரியர் டாக்டர் தெ. பொ. மீனுட்சி சுந்தரனுரின் எழுத்துக்களைக் காப்பாற்றி அவர் மறைந்த பின்னும் தொடர்ந்து வெளியிட முன்வந்துள்ளஅவர் கால்வழியினரின் தமிழுணர்ச்சி பாராட்டத்தக்கது. பேராசிரியரின் நூல்களையெல்லாம் தொடர்ந்து வெளியிட முன்வந்துள்ள சர்வோதய இலக்கியப் பண்ணையாரின் தமிழார்வம் போற்றத்தக்கது. மதுரை வைகை அச்சகத்தாரும் மிகுந்த கவனத்துடன் சிறப்பாக அச்சிட்டுள்ளனர். எல்லாரையும் ஒருங்கிணைத்து நூலாக்கத்திற்கு இடையருது ஊக்கம் தந்து இதனைச் சிறப்புற அமைப்பதற்கு உறுதுணையாகப் பின்னணியிலிருந்து பெருந்துணைபுரிந்த டாக்டர் செயப்பிரகாசனுரின் தொண்டுளளம் பெரிதும் பாராட்டத்தக்கது. இதனுல் மறைந்த பெரியாா அவர்களின் ஆய்வுநூல் தமிழுலகிற்குப் பயன்படும் வகையில் வெளிவருகிறது. மேன்மேலும் முன்னேர் ஈட்டிய அருஞ்செல்வங்களைப் போற்றிக் காத்துத் தமிழுலகிற்குப் பயன்படச் செய்வோர்களின் முயற்சிகள் வெற்றி பெறுக.

'பண்டை இயற்கை வளங்களெல்லாம்—பத்துப்
பாட்டு வளத்தினிற் கண்டறிந்து
மண்டல மெங்கும் கமழும் அருந்தமிழ்
வாசம் நுகர்ந்து மகிழ்வோமே!'

— கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

# பொருளடக்கம்

இந்நூல் பற்றி v

முகவுரை vii

## பத்துப் பாட்டு (புறம்) ஆய்வு

1 ஆற்றுப்படைகளின் அமைப்பு 1
2 பொருநராற்றுப்படை 5
3 பெரும்பாணாற்றுப்படை 10
4 சிறுபாணாற்றுப்படை 18
5 கூத்தராற்றுப்படை 24
6 திருமுருகாற்றுப்படை 32
7 மதுரைக் காஞ்சி 55

## பத்துப் பாட்டு (புறம்) மூலபாடம்

பொருநராற்றுப்படை 99
பெரும்பாணாற்றுப்படை 107
சிறுபாணாற்றுப்படை 122
கூத்தராற்றுப்படை 131
திருமுருகாற்றுப்படை 149
மதுரைக் காஞ்சி 161

## பத்துப் பாட்டு

பதிப்புக்கள் 185
ஆராய்ச்சி நூலடைவு 191

## பத்துப் பாட்டு

பொருட்குறிப்பு அகராதி 193

# 1

## ஆற்றுப்படைகளின் அமைப்பு

சங்க நூல்கள் இரண்டு வகையில் வளர்ந்திருப்பதைக் காணலாம். ஒன்று முப்பத்திரண்டு அடிகளுக்கும் நீண்ட பல அடிகளைக் கொண்டு வளர்ந்தது. இப்படி வளர்ந்த செய்யுளைப் 'பாட்டு' என்றார்கள். அப்படிப் பத்துப்பாட்டுக்கள் இருக்கின்றன. இவற்றின் தொகையைப் பத்துப் பாட்டு என்று வழங்குகின்றார்கள். 1) திருமுருகாற்றுப்படை, 2) பொருநராற்றுப்படை, 3) சிறுபாணாற்றுப் படை, 4) பெரும்பாணாற்றுப்படை, 5) கூத்தராற்றுப்படை என இந்த ஐந்தும் ஆற்றுப் படை வகையைச் சேரும். குறிஞ்சிப்பாட்டு குறிஞ்சி ஒழுக்கத்தினையும், முல்லைப்பாட்டு முல்லை ஒழுக்கத்தினையும், பட்டினப்பாலை பாலை ஒழுக்கத்தினையும் தெரிவிப்பன. இவை நீண்ட அளவுடைய பாடல்களாகக் காண்கிறோம். நெடுநல்வாடை என்ற மற்றொரு நூலும் இப்பிரிவைப் பற்றியதுதான். மதுரைக் காஞ்சி என்பது மதுரைமா நகரையும் பாண்டியனை யும் பாடி ஒருவகையில் புறப்பொருளைச் சேர்ந்த காஞ்சி ஒழுக்கத்தை மிக நீண்ட அளவில் பாடி முடிப்பதாம்.

சங்கப் பாடல்கள் பாத்திரங்களின் பேச்சுக்களாக அமைகின்றனவேயன்றி அவற்றிலே கதையாக ஒன்றும் நீண்டு வருவதில்லை எனக் கண்டோம். வாழ்க்கையில் ஏதோ ஒரு கூட்டின் விளக்கமாக அப் பேச்சுக்கள் அமைகின்றனவேயன்றி அப் பேச்சிலிருந்து அப் பாத்திரத்தின வாழ்வினைப்பற்றிக் கற்பனை செய்து பார்க்க அப் பாடலின் ஆசிரியர்கள் படிப்போராகிய நமக்கு உரிமை தந்திருந்தாலும், அந்தக் கற்பனை குறிப்பிட்ட ஒரு வகையில்தான் செல்ல வேண்டுமென்பதில்லை. ஆனால் இபபொழுது நாம் குறிப்பிடும் வளர்ச்சியினால் கதை, பாத்திரத்தின பேச்சாக இருந்தாலும ஏறக்குறைய முழு வடிவு கொள்வதைக காணலாம்.

ஆறு என்றால் வழி; படை என்றால் படுத்தல். குறிப்பிட்ட ஒரு வழியில் செல்லும்படி செய்வதே ஆற்றுப்படையாம். இது உயர்ந்த மக்களைப் பாடும் பாடாண திணையைச் சேர்ந்தது. ஆற்றுப்படை என்று பதிற்றுப்பத்து, புறநானூறு முதலியவற்றிலும் பழங்காலத்தில் வந்திருப்பதைக காணகிறோம். அங்கெல்லாம் ஒருசில அடிகளில் இந்த ஆற்றுப்படை வரக் காண்கிறோம். இந்தத் தலைவனிடம் போனால் நன்கொடை பெறுவாய் என்ற அளவில் அந்தப் பாடல்கள் நீண்டு விடுகின்றன. புதிதாக வளர்ந்த ஆற்றுபபடைகள் இவ்வளவு குறுகியனவாய் அமையவில்லை. இங்கே ஆற்றுப்படுத்தப்படுவோர் கலையில் வல்ல பொருநர், விறலியர், கூத்தர், பாணர் என்ற வகையில் இசையையும் கூத்தையும் வளர்க்கின்ற கலைஞர்களேயாம். கலையிலிருந்த ஈடுபாட்டினால் இப்படி வளர்ந்தது எனலாம்.

புரவலர்கள் இல்லையேயானால் கலைஞர்களுடைய கலையை மதிப்பார் யார்? வறுமைதான் கலையைப் பிடுங்கித் தின்னும். இத்தகைய நிலை வளர்ந்துவிட்ட அவலச் செய்தியையும் இங்கே காண்கிறோம். வறுமையிடையே செழுமையாகப் புரவலர்களது கலையன்பும் கொடைத் திறனும் இங்கே வெளியாகின்றன. இந்த ஆற்றுப்படைகளிலெல்லாம் தலையாய இசைக் கருவியாம் யாழின் பலவகை வருணனைகள் வருகின்றன. இவற்றிலிருந்து விபுலாநந்த அடிகளார் பலவகை யாழின் வடிவங்களையும் தமிழிசையின் அந்நாளைய போக்கினையும் விளக்க முற்பட்டார். இந்த ஆற்றுப் படைகள் அந்த வகையில் இசைக்கலைப் புதையல் என்று கூறலாம்.

கலை என்றபோது அழகுதானே வடிவம் கொள்ளும்? அதற்கேற்ப இந்த இசைக் குழாம் பெண்களின் அழகினை அடி முதல் முடிகாறும்

அழகொழுகப் பாடக் காண்கிறோம். ஆனால் இந்த உயர்ந்த காட்சியைக் கண்ட பின் கலைஞர்களின் வறுமையினையும், பிழைக்க வழியறியாது பசியின் கொடுமையால் புலம்புகின்ற புலம்பலினையும், கலையினையே வெறுத்திருக்கின்ற அவலத்தையும் துய்க்க வேண்டியிருக்கிறது. இவை அத்தனைக்கும் மாற்றுப்போல மற்றொரு இசைக் குடும்பம் செல்வச் சிறப்போடும் கலையில் ஈடுபாட்டோடும் எதிரே வருகிறது.

அப்படி எதிரே வருகின்ற கலைஞன் வறுமைக் குடும்பத்தினைக் கண்டு வருந்தி, நீ வாடவேண்டியதில்லை என்று தேறுதல் கூறுகின்றான். தான் அப்படியே முன்னே வாடி நின்ற நிலையினையும் பின்னர் தன் புரவலனை நாடிச் சென்றபோது அவனால் அன்பாக வரவேற்கப் பெற்றுப் பாராட்டப் பெற்றதையும், பிரியவே மனமின்றிப் பிரிந்தபோது அவன் கொடுத்த பரிசில்களையும் எடுத்துக் காட்டி விளக்குகிறான். அங்கே அவனிடம் போனால் தனக்குக் கிடைத்த பரிசில்களைவிடச் சிறந்த பரிசில்கள் கிடைக்கும் என்றும் உறுதி கூறுகிறான். அந்தப் புரவலன் ஊருக்குப் போகின்ற வழியையும் நாட்டின் வளப்பத்தையும் அவனுடைய பெருமைகளையும் தெள்ளத்தெளியக் கூறுகிறான்.

கூறிய வழியில் வறுமைக்குடும்பம் செல்கிறது. அந்த நாட்டையே நேரில கண்டது போல் மகிழ்கிறோம். இந்தப் பூகோள விளக்கம் இந்த நூல்களில் எல்லாம் நடுநிலையாக அமைகிறது புரவலனைக் கண்டதும் அவன் இசைக் குடுமபத்தைத் தன் குடும்பம் போல் பேணி வரவேற்று உண்டியும் உடையும் கொடுத்துப் பாராட்டுகிறான். சிலநாள் ஆனபின்னர் பிரியாவிடை கொண்டு பரிசில்களும் பெற்றுக்கொணடு வறுமைககுடுமபம் செல்வக் குடுமபமாய்ப் புரவலனது புகழைப் பாடிக்கொண்டு திரும்புகிறது. இங்கே ஒரு கதையே உருவாகிவிட்டதல்லவா? இதனைத் தொல்காப்பியப் புறத்திணையியல்,

> 'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
> ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
> பெற்ற பெருவளம் பெறுஅர்க் கறிவுறீஇச்
> சென்று பயன்எதிரச் சொன்ன பக்கமும்'

என்று பாடாண்திணையை விளக்குகிறது. இந்தச் சூத்திரம் பத்துப் பாட்டில் வருகின்ற நான்கு ஆற்றுப்படைகள் வளர்ந்த பின்தான்

எழுதியிருத்தல் வேண்டும். பழைய ஆற்றுப்படைகள் இப்படியெல்லாம் அமையவில்லையல்லவா?

தொல்காப்பியர் இருவர் என்று கொள்ள வேண்டியிருக்கிறது. அகத்தியன் மாணுக்கராய் அவிநயனுரோடு உடன் பயின்ற ஒருவரும் தொல்காப்பியர் என்ற பெயரோடு பன்னிருப்படலத்தில் வெட்சிப் படலம் பாடியிருக்கின்ருர். இவர் நாமறிந்த தொல்காப்பியர் அல்லரென்று இளம்பூரணர் கூறுகின்ருர். இன்று நமக்குக் கிடைக்கும் தொல்காப்பியத்தில் பழைய தொல்காப்பியத்தின் கூறுகளும் பின்னைய தொல்காப்பியத்தின் கூறுகளும் கலந்து குழம்பியிருக்கின்றன.

மேலே கூறிய சூத்திரப் பகுதியில் திருமுருகாற்றுப்படையைப் பற்றிய விளக்கமொன்றும் இல்லை. அங்கே கூத்தருமில்லை. பாணருமில்லை, பொருநருமில்லை, விறலியுமில்லை. எனவே இந்த வளர்ச்சி எழுவதற்கு முன்னரே அந்தச் சூத்திரம் உருவாகியிருக்க வேண்டும்.

# 2

# பொருநராற்றுப்படை

பொருநர், பாணர், கூத்தர், விறலியர் என தொல்காப்பியச் சூத்திரம் அடுக்குவதைப் பார்த்தோம். பொருநராவார் நாடகத்தில் வேடம் பூண்டு ஆடுபவர் போல வேறொருவர் போலக் கோலம் பூண்டு வருபவராம். பாணர்கள் யாழோடு பாடுபவர்கள். பழைய யாழ் ஏழு நரம்பு கொண்டது. அது சீறியாழ் எனப் படும். பின்னர் வளர்ந்த யாழ் இருபத்தொரு நரம்புகள் கூடியதாய்ப் பேரியாழ் எனப்படும். சீறியாழ் இசைக்கும் பாணர் சிறுபாணர் என்றும், பேரியாழ் இசைக்கும் பாணர் பெரும் பாணர் என்றும் அழைக்கப்பெற்றனர். சிறு பாணாற்றுப்படை 269 அடியும் பெரும்பாணாற் றுப்படை 500 அடியும் கொண்டுள்ளன. அதாவது சிறுபாணாற்றுப்படை குறைந்த அடிகளையும் பெரும்பாணாற்றுப்படை மிகுந்த அடிகளையும் கொண்டு வந்தமையால் பாணாற் றுப்படையில் சிறியது, பாணாற்றுப்படையில் பெரியது என்று பொருள் கூறலாம் போலத் தோன்றும். இருந்தாலும் 'சீறியாழ் இடந் தழீஇ' என சீறியாழ் கூறப்பெறுதலின் சீறி யாழ் இசைப்பவனே சிறுபாணன் என்றும், அவனை ஆற்றுப்படுத்துவதே சிறுபாணாற்றுப்

படை என்றும் கொள்ளவேண்டும். இவ்வாறே பெரும்பாணாற்றுப் படைக்கும் கொள்ளவேண்டுமென்பது 'இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி' (462) என வருவதால் பேரியாழ் இசைக்கும் பெரும்பாணனை ஆற்றுப்படுத்துவதே பெரும்பாணாற்றுப்படையாம். கூத்தராவார் நடனம் என்ற கூத்து ஆடுவோர். 'கலம்பெறு கண்ணுள ரொக்கல் தலைவ' என்பர் (50). கூத்தர்கள் பேரியாழும் சீறியாழும் (534) உடன கொண்டு செல்வர். இந்தக் கூத்தராற்றுப் படை மலைபடுகடாம் என்ற அழகிய தொடரினாலேயே பெயர் பெறுவதால், 'கூத்தராற்றுப்படை' என்ற பெயர் வழக்கில் இல்லை. பாணனுடைய மனைவி யாழொடு பாடும்பொழுது பாடினி என்றும், பாடுவதோடு விறல்பட ஆடுவதால் விறலி என்று பெயர் பெறுவாள். அவள் தனி யே சென்று பரிசில் பெறுவதை 'விறலியாற்றுப் படை' எனப் புற நானூறு முதலியவற்றில் காணலாம். ஆனால், இங்கே வந்த நான்கு பெரிய ஆற்றுப்படைகளும் பாணனையோ, பொருநனையோ, கூத் தனையோ தனியாக அல்லாமல் அவரவருடைய பெரிய குடும்பத் தோடும் அவரவர்கள் படும் வறுமைத் துன்பத்தினைக் கண்டு ஆற்றுப்படுத்துவதாகக் கூறலின், இங்கே விறலியாற்றுப் படைக்கு இடமில்லை. பெண்மகளுக்குக் குடும்பத்தின் தலைமை இருந்தகாலம் ஒன்றுண்டு. அது மறைந்து ஆணுக்கு அந்தத் தலைமை வந்தபோது விறலியாற்றுப்படை மறைய இடம் ஏற்பட்டது. அப்படிக் கொள் ளாமல் தனியாகவோ, சிறிய குடும்பமாகவோ அன்றிப் பெரும் குடும்பமாக வாழ வந்தபோது வறுமையை வற்புறுத்தற்குப் பெரும் குடும்பத்தையே ஆற்றுப்படுத்த அழகாகத் தோன்றியது எனலாம். இந்த ஆற்றுப்படைகளில், 'கோடியர் தலைவ, ஒக்கல் தலைவ, முதுவா யிரவல, புலவுவாய்ப் பாண' என முதலில் தலைவனையே விளித்துக் கூறத் தொடங்கினாலும வறுமையில் சிக்கி வாடும் அவ்விசைக் குடும்பத்தினரை வாயில் எல்லாம் நீர் ஊறத் தொழுது பின் நிற்கு விராயின், செலவு கடைக் கூட்டுதிராயின, நீவிரும் செல்குவிராயின் பெறுகுவிர் திரையப்படர்குவிராயின், கழிமின், நயந்தனர் சென்ற நும்மினும் தானமர்ந்து நோக்கிச் செல்வோமென விடுப்பினும் என்றெலாம் பன்மையில் முடிதல் காணலாம்.

'முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே
ஆற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்'
(தொல். சொல் 945)

என்பது தொல்காப்பியச் சூத்திரம். இதுவும் இங்கே நாம் ஆராயும் ஆற்றுப்படைகளை மனத்தில் கொண்டு எழுந்ததாம். எனவே பிற் காலத்தில் நுழைந்ததாதல் வேண்டும்.

கரிகால் வளவனை முடத்தாமக் கண்ணியார் பாடியது பொருநராற்றுப்படை. பெரும்பாணாற்றுபடை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் இங்கே இளந்திரையனைப் பாடியிருந்தாலும் அவர் பாடிய மற்றொரு பாட்டான பட்டினப்பாலையில் திருமாவள வனைப்பற்றிப் பாடுகிறார். அந்தப் பாட்டின் கொளுவில் சோழன் கரிகால் பெருவளத்தானைப் பாடியது என்றே குறிக்கப்பட்டுள்ளது. எனவே முடத்தாமக் கண்ணியாரும் கடியலூர் உருத்திரங்கண்ண னாரும் ஒரு காலத்தவரல்லர். சிறுபாணாற்றுப்படை கோடியர் தலைவன் நல்லியக்கோடனைப்பற்றியது. இதனைப் பாடியவர் இடைக்கழி நாட்டுநல்லூர் நத்தத்தனார்.

இந்த ஆற்றுப் படைகளின் அமைப்பு ஒருசீராக இருப்பதை முன்னரே சுட்டினோம். இங்கே ஒவ்வொரு ஆற்றுப்படையின் அமைப் பினையும் சிறிது ஆழமாகக் காண்போம். முதலில் இசைக் குடும்பத் தின் தலைவன் ஒருமையில் விளிக்கப் பெறுகின்றான் என்றாலும் அவன் குடும்பத்தோடேயே அங்கே வறுமையில் வாடுவதும் சுட்டப்பெறு கின்றது. தனியொரு மனிதன் வறுமையில் வாடுவதைவிட ஒரு பெரிய குடும்பமே—அதிலும் கலைவல்ல குடும்பமே வாடுவது கொடிய காட்சியல்லவா? இந்தக் குடும்பத்தில் ஆடல் வல்ல பாடல்வல்ல பெண்கள் வாடுவது காணுதற்கரிய கொடுமை. அதிலும் அவர்கள் அழகுடையவர்களாக இருப்பது இந்தக் கொடுமையை மிகுதிப் படுத்துகிறது. அவர்கள் கலையெல்லாம் ஒருருவம் பெற்று நம்முன் இயங்குவதுபோல அவர்கள் இயக்கிய யாழ் காட்சியளிக்கிறது. பொருநராற்றுப்படை,

'மணங்கமழ் மாதரை மண்ணி யன்ன
அணங்கு மெய்ந்நின்ற அமைவரு காட்சி'

என்று யாழினை ஒரு தெய்வப் பெண்ணாகவே காண்கிறது. இசைக்கலையின் மேன்மையை,

'முரசு முழங்குதானை மூவருங் கூடி
அரசவை யிருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை யெழாஅல்
கோடியர் தலைவ, கொண்ட தறிந' —

(பொருந. 54-57)

என்று புகழ்கிறது. இப்படிப் பேசுபவன் மற்ருெரு பொருநன். அவன் பரிசில் பெற்றுச் சீரும் சிறப்புமாகத் தோன்றுகிருன். தான் பெற்ற விருந்தினையும் அருந்தினையும் அந்த வறுமைக் குடும்பத்தினரின் வாயில் நீரூற முழுவதும் விளக்குகின்ருன். விருந்தில் உண்பதைப் புனைந்துரைப்பது சிறந்த பண்பாடாகாது. எனினும் உணவின்றி வாழ்கின்ற அந்தக் குடும்பத்திற்கு இன்றியமையாததாகும். நீங்கள் போனல் இப்படியிப்படியெல்லாம் உண்பீர்கள் என்று விரித்துரைப்பது நாகரிகமல்ல. எனவே அந்த உணவினையும் அவர்கள் உண்ணப் போவதாகக் கூருமல் தாமுண்ட அனுபவமாகக் கூறி, இந்தப் புனைந்துரையில் வரும் விரிவுரையெல்லாம் தன்மேலே ஏற்றுக்கொண்டு கூறும் பண்பாட்டின் மூலம் இந்தப் பாட்டு நன்கு விளக்குகின்றது.

ஆற்றுப்படைகளின் நோக்கமே சிறந்த ஆண்மகனைப் பாடுவதேயாகவின் இத்தகைய பெருஞ் சிறப்பினைக் கலைஞர்க்கு செய்யும் கரிகாலன் பெருமை அடுத்துப் பேசப்படுகின்றது.

'தாய் வயிற்றிருந்து தாயம் எய்தி
... ... ... ...
இரு பெருவேந்தரும் ஒருகளத் தவிய' (132–145)

வெண்ணிப் போரை வென்றவன் அவன். அவன் செய்யும் வரவேற்பு முன்னே கூறியபடியல்லாது பண்பாடு நிறைந்த வகையில் வருவதைக் காணலாம்

'ஈரும் பேனும் இருந்திறை கூடி
வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னற் சிதாஅர் துவர நீக்கி
நோக்குநுழை கல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுரி யன்ன அறுவை நல்கி' (பொருந. 79-83)

எனத் தன்னைப் பற்றி கூறினன் பொருநன். வறுமைக் குடும்பம்,

'ஈற்ரு விருப்பிற் போற்றுபு நோக்கிநும்
கையது கேளா வளவை ஒய்யெனப்
பாசி வேரின் மாசொடு குறைந்த
துன்னற் சிதாஅர் நீக்கித் தூய
கொட்டைக் கரைய பட்டுடை நல்கிப்
பெறலருங் கலத்திற் பெட்டாங்கு உண்கெனப்
பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர

வைகல் வைகல் கைகவி பருகி ......
ஏடில் தாமரை, பித்தை பொலியச் சூட்டி......
நுணங்கரில் மாலை ...... பாடினி அணிய ......
நெடுந்தேர் பால்புரை புரவி நால்குடன் பூட்டிக்
காவின் ஏழடி பின்சென்று கோலின்
தாறு களைந்து ஏறென்று ஏற்றி......
நன்பல் ஊரா நாட்டொடு......
வேழம் தூரவிடைத் தங்கலோ விலனே'

(பொருந. 151-173)

என்பது காண்க. அந்த நிலையில் ஏழை இசைக் குடும்பத்தின் பெருமையையும் சுட்டுகிருன்.

வரவிடைப் பெற்றவை பிறர் பிறர்க்கு ஆர்த்தி என்று புகழ்வது காண்க.

'செலவுகடைக் கூட்டுதி ராயின் பல புலந்து
நில்லா வுலகத்து — சூட்டி
செல்கென விடுக்குவ னல்லன்' (பொருந. 175—177)

என்று கூறும் பொருநன் கரிகாற்பெருவளத்தானது வளம் சிறந்த நாட்டினைப் புகழ்ந்து, 'காவிரி புரக்கும் நாடு கிழவோனே' (பொருந. 248) என முடிக்கின்ருன். நாடு வறண்டு போன காலத்திலும் வளம் சிறக்கச் சாலி நெல்லின் சிறை கொள்வேலி ஆயிரம் விளையுட்டாக, காவிரி வறட்சி நீங்கப் புறந்தருகின்றதாம். இங்கே திணை மயக்க மென்று பின்னோர் கூறும் மரபுக்கு வித்திட்டது போல நாட்டு வருணனை வருகிறது. இந்த நாட்டின் வளப்பத்தைப் பறவை முதலிய கிழினங்களும் தம்மையுமறியாது கூட்டுறவு அன்பு வாழ்க்கை வாழ்வதைச் சுட்டுகிறது.

'செஞ்சோற்ற பலிமாந்திய
கருங்காக்கை கவவு முனையின்
மனைநொச்சி நிழலாங்கண்
ஈற்றியாமைதன் பார்ப்போம்பவும்' (பொருந. 183-186)

இந்தக் கூட்டுறவு, 'தேனெய்யொடு கிழங்கு மாறியோர் மீன் நெய்யொடு நறவு மறுகவும்' (பொருந. 214-15) எனவரும் கூட்டுறவு வாழ்க்கையினை மக்களிடத்தும் ஏதுவாகத் தோன்றுவது போலப் பாடுகிருர்.

# 3

# பெரும்பாணாற்றுப்படை

கடியலூர் உருத்திரங்கண்ணனார் பெரும் பாணாற்றுப்படை பாடுகின்றார். இசைக் குடும் பத்தின் வறுமையைப் பாடுவார் யாழினை அந்தப் பாணனது இடக்கையில் கண்டு அதனைப் புனைந்துரைக்கின்றார். வறுமை பாலை நிலத்தில் கொடுமையாகத் தோன்றுமாதலின் கடுந்திறல் வேனிலைக் கருதுகின்றார். பாதிரி வேனிற் காலத்தின் மலர். அந்த மலரின் உள்ளகம் புரையும் ஊட்டுறு பச்சைத் தோல் யாழில் இருப்பதைக் கண்டு யாழினைப் புனைந் துரைப்பவர், பாதிரி பாசிலை ஒழித்து மலரும் கடுந்திறல் வேனிலை'க் கருதுவது இயல் பாகிறது.

'கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண!'

(பெரும்பாண். 21–22)

என்று இசைக் குடும்பத் தலைவன் பிற ஆற்றுப் படை போல இங்கும் முதலில் விளிக்கப் பெறுகின்றான்.

பெரும்பாணாற்றுப் படையில் காஞ்சியில் ஆண்டு வந்த இளந்திரையனே பாடப்பெறும் தலைவன். 'முரசு முழங்கு தானை மூவருள்ளும் ...பல்வேற்றிரையன் படர்குவிராயின்' எனத் திரையனைச் சேர, சோழ, பாண்டியரில் ஒருவனுக்குதலின் நச்சினார்க்கினியர் ஒரு பழைய கதையின்படி நாகமகள் சோழமகனுக்கு ஈன்ற மகனைத் திரையனைக் கொள்ளுவர். திரையனிடமிருந்து 'வழங்கத்தவாப் பெருவளனெய்தி' வருவதைப் பாணன் அந்த ஏழைக் குடும்பத்திற்குக் கூறுகிறான். நீங்களும் அங்கே சென்றால் பெருவளம் பெறுகுவிர் என்று முடிப்பதற்கு முன் இளந்திரையனது பெருமையைச் சுட்டுகின்றார் ஆசிரியர். பொருநராற்றுப் படையில் வறுமையுற்றோர் வாயில் நீருற விருந்தினை விரித்துரைத்த பான்மையைக் கண்டோம். இங்கேயும் அந்தக் குறிப்பு வரவேண்டுமல்லவா. உருத்திரங் கண்ணனார் அதனைப் புதியவொரு முறையில் குறிக்கின்றார். இளந்திரையனிடம் போகவேண்டுமென்றால் போவதற்கு வழி கூற வேண்டுமல்லவா. சோழர்கள் தங்கள் எல்லையை வடக்கில் விரித்துக் கொண்டே வந்ததால் காஞ்சி, கல்விநிலையம் மட்டுமேயன்றி அரசு நிலையமும் ஆயிற்று. அங்கே வணிகர்களையும் காப்பாற்ற வேண்டும். உழவர் வளத்தையும் சிறப்பிக்க வேண்டும். காட்டையும் நாட்டையும் காத்து வருதல் வேண்டும். காட்டில் வாழும் பழங்கால நாகரிக மக்கள் காட்டில் வருவோருக்குத் தீமை செய்து வாழாதபடி அவர்களையும் முன்னேற்றி அவர்களையே தன்னுடைய காவலர்களாகக் காட்டில் சிறக்கச் செய்கின்றான். இங்கே பலப்பல பழங்கால நாகரிக நிலைகளில் உள்ளவர்களின் படம் பிடித்து காட்டப் படுகிறது இதிலிருந்து அரசனுக்குரிய இலக்கணத்திற்குப் புதியதொரு விளக்கம் தோன்றுகிறது. அரசன் உறங்கினாலும் அவனுடைய செங்கோல் எங்கும் அமைதியைக் காக்கின்றது.

> 'அத்தஞ் செல்வோர் அலறத் தாக்கிக்
> கைப்பொருள் வெளவும் களவேர் வாழ்க்கைக்
> கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புலம்
> உருமும் உரறுது அரவும் தப்பா
> காட்டுமாவும் உறுகண் செய்யா வேட்டாங்கு,
> அசைவுழி யசைஇ நசைவுழித் தங்கிச்
> சென்மோ இரவல! சிறக்க, நின் னுள்ளம்!'

(பெரும்பாண். 39-45)

காடுவாழ் வாழ்க்கையிலிருந்து நாடுவாழ் வாழ்க்கைக்கு வருவது போல இளந்திரையன் ஊருக்குப் போகின்ற வழி விரித்துரைக்கப் படுகின்றது. மலைவிளை பொருளும், கடல் விளைபொருளும் நாட்டில் வரவேண்டுமானால் காட்டு வழியாகவும் வருதல் வேண்டும். உப்பு விற்கும் உமணரது சாத்து அல்லது கூட்டம் குடும்பத்தோடு வண்டியில் போகும். பல எருதுகள் நுகம் பூண்டு முன்செல்ல, முடலை யாக்கை முழுவலி மாக்கள், இருபுறத்தும் காத்துச்செல்வார்கள். 'சில்பத உணவின் கொள்ளை சாற்றி எல்லிடை எயினர்க்கு ஏமமாக இளந்திரையனின் காட்டு வீரர்கள் அங்கு வாழ்வார்கள். மிளகு மூட்டையைத் தாங்கிச் செல்லும் கழுதைச் சாத்தும் அங்கு வழங்கும். இவர்களிடத்திலிருந்தெல்லாம் சுங்கம் வாங்கி நாடு கொழிக்க வேண்டுமாதலின், 'உல்குடைப் பெருவழிக் கவலைகாக்கும் வில்லுடை வைப்புகள்' காட்டு வழியில் உண்டு.

ஈத்திலை வேய்ந்த எய்ப்புற குரம்பை வீடு; அதனுள் மான் தோல் பள்ளியில் பெற்ற குழந்தையோடு முடங்கிக்கிடக்கும் தாய், சிலநாள் ஆனவுடன் உணவு தேடப் போகின்றாள் எயின சாதிப் பெண். தாமாகவோ அல்லது திருந்துகணை விழுக்கோல் உளிவாய்ச் சுரையின் கரம்பை நிலத்தை மிண்டுதலால் விளைந்தவற்றையோ அல்லது எறும்புகள் சேர்த்து வைத்த அவற்றின் புற்றைக் கிண்டி எடுத்த தானியங்களையோ கொண்டு வந்து, நிலவுரற் பெய்து நெடுங் கிணற்றின் உவரி நீரை மொண்டு, முரவுவாய்க் குழிசி முரியடுப் பேற்றி, வாராது அட்ட வாடூன் புழுக்கலைத் தெய்வ மடையின் தேக்கிலைக் குவைஇத் தருவார்கள். 'செவ்வரை நாடன் சென்னிய மெ'னினே உங்கள் குடும்பம் முழுவதும் இத்தகைய உணவினைப் பெறும்.

எயினப் பெண் உணவை உழுது விளைவியாமல் இயற்கையாகவோ எறும்பு சேர்த்து வைத்ததாகவோ இருக்கிற உணவைத் திரட்டுகிறாள். இது ஒரு நிலை. இதே நிலையில் ஆண்கள் வேட்டையாடி உண்கிறார்கள். பன்றிக்காகக் காத்திருப்பார்கள். சிலபோது ஏமாற்றமடைவார்கள். வலையிட்டு நாயையோட்டி குறுமுயலைத் தான் சிலபோது பிடிக்க முடியும். இதனைத்தான் அவர்கள் கூடியுண்ண வேண்டும். ஆனால், அங்கும் பகைவர்கள் வருவார்கள். அவர்களினின்றும் அந்த வழியைக் காக்க இளந்திரையன் ஆட்கள் அங்கேயும் இருப்பார்கள். எயினக் குறும்பு ஒருவகையில் அவர்களுடைய கோட்டை. வேலும் கேடயங்களும் சுற்றி நிற்கும்.

வில்லும் அம்பும் அங்கே கிடக்கும். ஊகம் வேய்ந்த உயர்நிலை வரைப்பு அது. மறவரை எழுப்பி வீரமூட்டத் துடிகள் தொங்கு கின்றன. நாய்கள் கட்டப்பட்டிருக்கும். அதில் வாழ்முள்வேலிச் சூழ்மிளைப்படப்பைக் கொடுநுகம் வைத்த கதவோடு கழு வை நிரைந்த வாயில். இதுதான் எயினக் குறும்பு. வேட்டையாடுவோர் அரசரின் காவலாளராக மாறியிருக்கும் நிலை இது. இதுவும் ஒரு வளர்ச்சிதானே. அங்கே போனாலும் இநத ஏழைக் குடும்பம் விருந்து தரும். மேட்டிலே விளைந்த நெல் ஈச்சம் கொட்டை போலப்பெரிதாக இருப்பதைச் சோறாக வடித்து, உடும்பின் கண்டத் தோடு நீங்கள் பெறுவீர்கள் எனகிறான் பாணன். இந்தக் காவ லாளிகள் தாமே பகைவர்களை அடக்க அவர்கள் மாடுகளைக்கொண்டு வந்து கள்ளுக்கு விலையாகக் கொடுத்தது போகப் பிறவற்றை உண்டு ஆடிப்பாடுவார்கள்.

இந்தக் காட்டு வழியையும் பாலை வழியையும் தாண்டி முல்லை நிலத்தின் வழியாகப் போக வேண்டும். ஆட்டுக் குட்டிகள் தின்பதற்காக இலைகளைத் தறியிலேயே கட்டியிருப்பார்கள். குறுகிய காலையுடைய குரம்பைகள். செற்றை வாயில் செறிகழிக்கதவிற்குள் தோலைப் பரப்பித் தூங்குவான் ஆயன். இதற்கும் முள்வேலி உண்டு. பொழுது விடிவதற்கு முன்னே தயிரைக் கடைதல் வேண்டும். தயிர்ப் பானையைப் பூஞ்சுமட்டில் வைத்துக் கொண்டு ஆய்மகள் விற்கப் போவாள். அவள் கண்ட பொருளாதார உண்மை மோர் விற்ற விலைகொண்டு தன் சுற்றத்திற்குச் சோறு போடுவாள். நெய்க்கு விலையாக வந்ததையே அப்படித் தின்று தீர்க்காமல் மேலும்மேலும் பயன் தரும் முதலாக வைத்துக் கொள்ள வேண்டு மாதலின் நெய்விலைக்குப் பொன் வாங்காது எருமை, நல்லான், கருநாகு வாங்குவாள். இத்தகைய கோவலர் குடிவயின் சேப்பின், பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர். இத்தகைய இடையர் களும் பல பூக்களைச் சூடிக்கொண்டு மந்தையை மேய்க்கும்போது தீக்கடை கோல் கொண்டு துளையிட்ட புல்லாங்குழலில் பாலை பாடி, பின்னர் வில்யாழ் கொண்டு குறிஞ்சிப் பண்ணை இசைப்பார்கள். இந்தக் கோவலர் குடியிருப்பையும் தாண்டிச் சென்றால், புஞ்செய் நிலம் கொள்வார், உழுவாரது சீர்போல்வரும் குறுகிய வண்டியின் சக்கரமும் கலப்பையும் சுவரில் சாத்தியிருப்பார்கள். உள்ளேயெல் லாம் புகை சூழ்ந்து கிடக்கும். கூரையோ கரிய வைக்கோல் போர்த்தது. அங்கே வரகரிசியின் சிறுசோறும் அவரையின் புழுக்கும் சுவையாகப் பெறுவீர்கள்.

இப்படி உழுது வாழ்பவரின் வன்புலம் கடந்த பின்னர் மருத நிலத்தில் உழவர்கள் உழுது சேறழித்து நாற்று நட்டுப் பெருஞ் செந்நெல் அறுவடை செய்து போரடித்து நெல் ஆக்கிப் பொன்மலை போலக் கூட்டில் சேர்த்து வைத்திருப்பார்கள். அங்கே சிறுவர் நற்றேர் உருட்டி விளையாடுவார்கள். ஓடியாடிக் களைத்ததும் செவிலிப் பெண்கள் அவர்களுக்குப் பாலூட்டிப் படுக்கையில் தூங்க வைப்பார்கள். அங்கே செல்லின் வெண்ணெல் சோற்றை வீட்டுக்கோழியின் வறுவலொடு பெறுவீர்கள். அங்கே கரும்பாலைகளும் உண்டு. உங்களுக்கு விருப்பமானால் கருப்பஞ்சாறும் உண்ணலாம். இதைத் தாண்டினால் வலைஞருடைய இருப்பில் தங்கினால் அவர்கள் அரிசியை களியாக்கி அதைப் பின் சாடியில் வைத்து விளைத்த கள்ளைச் சுட்ட மீனோடு பெறுவீர்கள்.

இதையும் தாண்டினால் வருவது மறையவர் குடியிருப்பு. சிறிய பந்தலில் கன்றைக் கட்டியிருப்பார்கள். வீட்டின் முற்றம் சாணமிட்டு மெழுகப்பட்டிருக்கும். கோழியோ, நாயோ, அங்கு வாரா, கிளிகள் வேதபாராயணம் செய்யும். அந்த வீட்டுப் பெண்மணி அருந்ததி போன்ற கற்புடையவள். அங்கே போனால் சிறந்த அரிசிச் சோறும் நல்ல மோரும் கொம்மட்டி மாதளங் காயின் துண்டுகளை மிளகோடு கறிவேப்பிலை கலந்து மாவடுவோடு பெறுவீர்கள். 'நீர்ப்பெயற்று' என்ற ஊரின் எல்லைக்குள் போனால் கடற்கரை வரும். வடக்கேயிருந்து குதிரைகளை இறக்குகின்ற கப்பல்கள் அங்கே உண்டு. மாடங்கள் மணல் பொதிந்த தெருவில் ஓங்கி நிற்கும். பரதவர்கள் நிறைந்து வாழ்வார்கள். அங்கே எருதோ பசுவோ வாரா. அந்த உயர்நிலை மாடங்களில் செல்வப் பெண்கள் பந்தும் கழலும் ஆடுவார்கள். அந்தப் பட்டினத்தில் தங்கினால் கொழுகொழு என அவர்கள் வளர்த்த பன்றியின் கொழுவிய தடியொடு கூர்நறாஅப் பெறுகுவிர். அங்கே வேயாமாடமொன்று மிகவுயர்ந்து நிற்கும். அதிலே இரவில் தீக்கோலொன்று சுடர்விட்டு எரியும். அதுதான அங்கே கலங்கரை விளக்கம். அதைத் தாண்டிப்போனால், தென்னங் கீற்றுக் கொண்டு வேய்ந்த உழவர்கள் தனித்தனியாக வீடு கட்டிக் கொண்டிருக்கும் இடத்திற்குப் போனால், பலாப் பழம், இளநீர், வாழைப்பழம் முதலிய பலபொருள்களை உண்ணலாம். இவற்றில் வெறுப்படைந்தால் சேப்பங்கிழங்கு உண்ணலாம். வழியெல்லாம் கமுகு மரமும் தென்னை மரமும் நிறைந்த பாக்கத்தைத் தாண்டி நீங்கள் பல நாடுகளையும் கடந்தால், பாம்பணைப் பள்ளி

யமர்ந்தோனின் திருவெஃகாவை அடைவீர்கள். ஒவ்வொரு பொழி விலும் கள்ளுண்டு மகளிரொடு பகல் விளையாடித் துறக்க மேய்க்கும் பெருந்துறையில் செவ்வி கொள்பவரோடு நீங்களும் தங்கி, அங்கே அருந்திறற் கடவுளை வாழ்த்தி, உங்களுடைய இசைக் கருவிகளை வாசித்துப் பின்னே அப்புறம் செல்லுங்கள்.

காஞ்சி வந்தாயிற்று. அடையாத வாயிலுடையது. நெடி யோனது கொப்பூழில் நான்முகனைப் படைத்த தாமரை போலத் தோன்றுவது. பூவாதே காய்க்கும் மரவகைகள் பழத்தில் சிறந்த பலாப்போல உலகத்து நகர்களில் சிறந்தது இந்தக் காஞ்சி. நூற்றுவரைக் கொன்ற ஐவர் போலப் பகைவரை வென்று கச்சியில்தான் இருக்கின்றான் வள்ளல். அவனை விரும்பிச் சென்றோர்க்கு அவனுடைய தண்ணளியும் சீற்றமும் காவலாகும். அவனை நட்புக்கொள்ள வேண்டியோரும் வேறொரு துணையில்லாமல் அவனுடைய துணையை வேண்டினவர் ஆக மன்னர் பலர், கல்வீழ் அருவி கடலில் பாய்வது போல அவனைச் சுற்றிப் பணிந்து நிற்பார்கள். ஓடிப் போகும் மாக்கள் கங்கை நீரைக் கடப்பதற்கு ஒரே படகில் எல்லோரும் கூடிப் போவது போல, அந்த மன்னர்கள் கூடி அவனைப் பார்க்கச் சமயம் பார்த்திருப்பார்கள். எல்லோர்க்கும் சூரியன் ஒளி தருதல் போல வேண்டியதையெல்லாம் வேண்டியவர்க்கு அருளித் தன்னுடைய அரசவையில் வீற்றிருந்த அவனை நீங்கள் சென்று அடையலாம். புலவர் 'பூண்கடனாற்றி (பெரும். 450) பகைவர் கடிமதில் எறிந்து குடுமி கொள்ளும் வென்றி யல்லது வினையுடம்படினும் ஒன்றல் செல்லா உரவு வாள் தடக்கைக் கொண்டியுண்டித் தொண்டை யோர் மருக! மள்ளர் மள்ள! மறவர் மறவ! செல்வர் செல்வ! செரு மேம்படுந, காளிக்குக் கூளி சொல்வது போல உன்னுடைய புகழை வாழ்த்தி வந்தேன், நீ நீடூழி வாழ்க! எனப் பேரியாழை வாசித்ததும், அவன் உங்களை அன்போடு எதிர்கொண்டு, நில்லா வுலகத்து நிலைமை தூக்கி உடனே பரிசில் தந்து அன்றே விடுக்கும்.

முடத்தாமக் கண்ணியார் நாட்டு வருணனையும் திணைமயக்கமும் கூறியது கண்டோம். சோழன் ஊருக்கு வழி சொல்ல வேண்டுவதில்லை. ஆனால், காஞ்சியோ அரசியல் நகரமானபோது அதற் கடங்கிய நாடு, புதுவதாக அரசியலமைதி பெற்றது. அந்த அமைதியை நிலைநாட்டியவன் இளந்திரையன். அவன் பல நிலையில் உள்ளவர்களையும் தன் அரசொடு சேர்த்து அந்த அரசினை வளர்க்கும்

காவலாளர்களாக ஆக்கிக்கொண்டான். அந்தச் சிறப்பும் அவன் நாட்டினைப் புனைந்துரைக்கும் போதே தோன்றுகிறது. வடக்கேயிருந்து தெற்கே சென்று காஞ்சி நகர் புகுதற்கு வழி கூறும்போதே காடு பலநிலையில் நாடாகத் திருந்துவதையும் காண்கிறோம். ஐந்திணை வருணனையும இங்கு உண்டு. பாணனன்றி இந்த வளர்ச்சியில் உருவாகும் விருந்துகளையெல்லாம் கண்டு உண்டு மகிழ முடியாது.

பாணன் பெற்ற வரவேற்பையும், விருந்தையும், பரிசிலையும் முடத்தாமக்கண்ணியார் போலவே உருத்திரங்கண்ணனாரும் பாடுகின்றார்.

'அந்நிலை யணுகல் வேண்டி நின்னரைப்
பாசி யன்ன சிதர்வை நீக்கி
ஆவி யன்ன வவிர்நூற் கலிங்கம்
இருப்பே ரொக்கலொ டொருங்குட னுடீஇக்
கொடுவாள் கதுவிய வடுவாழ் நோன்கை
வல்லோ னட்ட பல்லூன் கொழுங்குறை
அரிசெத் துணங்கிய பெருஞ்செந் நெல்லின்
தெரிகொ ளரிசித் திரணெடும் புழுக்கல்
அருங்கடித் தீஞ்சுவை யமுதொடு பிறவும்
விருப்புடை மரபிற் கரப்புடை யடிசில்
மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி
மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்து
மங்குல் வானத்துத் திங்க ளேய்க்கும்
ஆடுவண் டிமிரா வழலவிர் தாமரை
நீடிரும் பித்தை பொலியச் சூட்டி
உரவுக் கடல் முகந்த பருவ வானத்துப்
பகற்பெயற் றுளியின் மின்னு நிமிர்தாங்குப்
புனையிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின்
தொடையமை மாலை விறலியர் மலைய
நூலோர் புகழ்ந்த மாட்சிய மால்கடல்
வளைகண் டன்ன வாலுளைப் புரவி
துணைபுணர் தொழில நால்குடன் பூட்டி
அரித்தேர் நல்கியு மமையான் செருத்தொலைத்து
ஒன்னாத் தெவ்வ ருலைவிடத் தொழித்த
விசும்புசெ லிவுளியொடு பசும்படை தரீஇ
அன்றே விடுக்குமவன் பரிசில்.' (பெரும்பாண். 467-493)

அரசனது இலக்கணத்தை உருத்திரங்கண்ணனார் கூறியதை வற்புறுத்தினோம். அவர் புனைந்துரைத்த பார்ப்பனச் சேரியின் அழகையும் கண்டோம். முனிவர்களுக்கு விலங்குகளும்கூடத் தொண்டு செய்யும் என்பதனை ஒரு காட்சியாகப் புனைந்துரைத்துத் தம் பாடலை முடிக்கின்றார் ஆசிரியர்.

'மந்தி சீக்கு மாதுஞ்சு முன்றிற்
செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டுக்
களிறுதரு விறகின் வேட்கும்
ஒளிறிலங் கருவிய மலைகிழ வோனே.'

(பெரும்பாண். 497-500)

# 4

## சிறுபாணாற்றுப்படை

பொருநராற்றுப்படையும் பெரும்பாணாற்றுப்படையும் கரிகாலனையும் சோழர் வழி வந்த இளந்திரையனையும் பாடுவது கண்டோம். பெரும்பாணாற்றுப்படையில் வட தமிழ் நாட்டில் காடு நாடாகும் வளர்ச்சியையும் கண்டோம். நாடு வாழ வேண்டுமானால் செல்வம் வளர வேண்டும். போரிலேயே பெரிதும் ஈடுபட்டால் நாடு செழிப்பது எங்கே! பேரரசின் பெருமை அழியத் தொடங்குகிறது. சிற்றரசர் நல்ல உயர் நிலைக்கு வருகின்றார். அவர்களில் பழமை பெற்ற சிற்றரசர்களும் இப்படியே மறையத்தான் வேண்டும். கொடையிற் சிறந்தவர்கள் ஏழு வேளிர்கள் என்பது ஒரு மரபு. அவர்களும் மறைகின்றனர். அந்த நிலையில் வேறு சில சிற்றரசர்கள் உருவாகின்றனர். அவர்களில் ஒருவன் ஓவியர் குடியில் பிறந்த நல்லியக் கோடன். இவன்மேற் பாடிய பாடல்தான் சிறுபாணாற்றுப்படை. இவனும் வடதமிழ் நாடான தொண்டை நாட்டைச் சேர்ந்தவன். மற்றொருவன் செங்கம் என்று இப்போது வழங்கப் பெறும் செங்கண்மாவின் தலைவனான நன்னன் சேய் நன்னனாவான்.

அவனை இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனர் பாடியதே கூத்தராற்றுப்படையாம் மலைபடுகடாம். எனவே இந்த இரு நூலிலும் சங்க காலத்தின் பிற்பகுதிக்கு வருகிறோம்.

சிறுபாணாற்றுப்படையிலும் முதலில் வருத்தத்தோடு வறுமையில் வாடும் பாணனை மற்றொரு பாணன் விளிக்கின்றான். பெரும்பாணாற்றுப்படையில் யாழின் பச்சைக்கு உவமையான பாதிரி பாலையை நினைப்பூட்டுகின்றது. ஆனால் சிறுபாணாற்றுப்படையில் பாலையே வருணிக்கப்படுகின்றது. அந்தப் பாலையின் கொடுமை ஆற்றுச் சுடுமணலில் விறலியர் நடக்கும் அரும்பாட்டினைக் காட்டி வருணிக்கப்படுகிறது. வேனிற் காலம், கதிரவன் வெப்பம் இவற்றால் பாலை நின்ற பாலை நெடுவழியில் இந்த இசைக் குடும்பம் செல்கிறது. ஏதோ அருமையாகக் கிடைத்த வழி நிழலில் தளர்ந்து விறலியர் தங்குகின்றனர். இவ் விறலியை முடிமுதல் அடிவரை வருணிக்கக் காண்கிறோம். இந்த வருணனையில் இயற்கையிலுள்ள பொருள்களும், விறலியின் உறுப்புகளும் ஒன்றற்கொன்று நிழல் போல வருணிக்கப்படுகின்ற அழகைக் காணலாம். 'முல்லை சான்ற கற்பின் விறலியர்' என அவர்கள் புகழப் படுகின்றனர். கல்லா இளையர் அவர்கள் காலைப் பிடித்து விடுகின்றார்கள். இங்கே யாழின் வருணனை விரிவாக இல்லை. 'பொன் வார்ந்தன்ன புரியடங்கு நரம்பின் இன்குரல் சீறியாழ்' என்ற அளவில் இங்கே வருகிறது. ஆனால் பின்னே நல்லியக்கோடனைக் கண்டு பாடும்போது அந்த வருணனை சிறிது நீண்டு அமைகிறது (சிறுபாண். 222-230). அவனைப் பாடும் போது அதை வருணித்தலில் ஒரு பொருத்தம் உண்டு. இங்கே அவர்களின் வருத்தத்தைத் தெரிவிக்கும் வகையில் அவர்கள் அந்தப் பாலை நிலத்தில் அதற்கேற்ற பாலைப்பண் பாடித் துன்பத்தை மிகுவிப்பதை இங்கே காணலாம். இவர்களது நிலையே ஒரு துயராற்றுப்படை. 'இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇ துனிகூர் எவ்வமொடு துயராற்றுப்படுப்ப முனிவிகந்து இருநத முதுவாயிரவல!' என்று அவனை விளிக்கின்ற பாணன் நேரே தலைவனுடைய பெயரைச் சுட்டி அங்கிருந்து செல்வத்தோடு வருவதாக உடனே கூறாது, வறுமைப் பாணனின் வறுமைக்கேற்ப உலகமே வறிதாய்ப் போயிருத்தலைப் பாடுகிறான். வறுமையே ஒரு தட்டாக நல்லியக்கோடன் மற்றொரு தட்டாக விளங்குகிறான் என்று கூறும்போது வறுமை போதல் உறுதியாகிறது. (எருமையும் மிளகும் நிறைந்த சேரநாட்டின் அரசர்கள் இமயத்தில் வில் பொறித்தவர்கள்.) நீர்

வளமிக்க அவர்கள் தலைநகராகிய வஞ்சியும் இன்று வறிதாய்க் கிடக்கின்றது. பாண்டிய நாடு முத்துக்குப் பெயர் போனது. உமணச் சாத்தோடு மந்தி கிழிஞ்சில்களுக்குள் முத்தம் பெய்து உமணப் பெண்களின் குழந்தைகளோடு கிலுகிலியாடும் செழியனது மதுரை தமிழ் நிலை பெற்ற இடமானாலும் இன்று அதுவும் வறிதாகக் கிடக்கின்றது. நீருண் துறை ஓவியம் போல விளங்கத் திருமகள் அமர்ந்த தெய்வத் தாமரையில் காமரு தும்பி தன் துணையோடு காமரம் பாடும் வளம் என்றும் குறையாத சோழநாட்டில் தூங் கெயில் எறிந்த தொடி விளங்கு தடக்கைச் செம்பியனுடைய ஓடாப் பூட்கை உறந்தை இன்று வறிதாகக் கிடக்கின்றது.

தமிழ்கெழு மூவர் நிலங்களே இப்படிப் பாழ்பட்டுக் கிடக்கக் கடையேழு வள்ளல்கள் எனப் புகழப்பட்ட வேளிர் எழுவர், சிற்றரசர்களாயிருந்தவர்கள் கொடைக் கடன் பூண்டு உலகைக் காத்தனர். கடையேழு வள்ளல்கள் என்ற மரபு இங்கே பேசப் படுகின்றது. ஓரறிவுப் பொருளாகிய முல்லைக்கு அது படர்ந்து வளரப் பெருந்தேர் நல்கினன் பறம்பின் கோமான் பாரி. ஐயறி வுடைய கானமஞ்ஞை மழையில் நடுங்குவதைக் கண்டு தன்னுடைய கலிங்கத்தை நல்கினன் பெருங்கல் நாடன் பேகன். ஆறறிவு படைத்த மக்களில் இரவலர்க்கு ஈந்தவன் காரி. நீண்ட நாகமொன்று தனக்குத் தந்த கலிங்கத்தை மக்கள் தொழும் ஆலமர் செல்வர்க்கு அன்புடன் கொடுத்தான் ஆய். சாகாது வாழவைக்கும் அமிழ்து விளை நெல்லிக் கனியைப் புரவலரினும் சிறந்தவர் புலவர் எனக்கருதி அதியன ஒளவைக்கு ஈந்தான். 'கரவாது நட்டோர் உவப்ப நடைப் பரிகாரம் முட்டாது' கொடுத்தான் நள்ளி. இபபடியல்லாமல் குறும் பொறை நன்னாட்டையே கோடியர்க்கு ஈந்தான் ஓரிக்குதிரை ஓரி. மூவர் நாடு வறிதாயபின் ஈகைச் செந்நுகத்தை இப்படி எழுவர் பூண்டனர். இன்று அதுவும் பழங்கதையாயிற்று, இநத ஈகைச் செந்நுகத்தை இனறு ஒருவனாய்த் தாங்குகிறான் நல்லியக் கோடன். பழைய இலங்கையின் பெயரையே கொண்டு அவனுடைய தலைநகரம் மாவிலங்கை என வழங்குகிறது. இவனுடைய குலம் ஓவியர் குலம். அந்த ஓவிய மன்னருள்ளம் குற்றமின்றிச் சிறந்து விளங்குகிறான் இவன். நமக்கென வந்த பல்லியர் கோடியர் பெருமகன் முனனால் (முந்திய நாள்) நாங்கள் அவனையும் அவன் தந்தையது மலை வளனையும் பாடிச் சென்றோம். இங்கே பாணன் அவனிடத்தில் பரிசில் பெறுவதற்கு முன் பட்ட பசி வருத்தத்தைப் பாடுகிறான்.

'திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பால்முலை கவர்தல் நோனாது
புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்
காழ்சோர் முதுசுவர்க் கணச்சித லரித்த
பூழி பூத்த புழற்கா ளாம்பி
ஒல்குபசி யுழந்த வொடுங்குநுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை யுப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து
இரும்பே ரொக்கலொ டொருங்குடன் மிசையும்
அழிபசி வருத்தம்.' (சிறுபாண். 130–140)

இப்படி இவர்கள் எதிர் வரும் பாணனை விட மிகமிக வாடிய பாணன் நல்லியக் கோடனைப் பாடியவுடன் 'அழிபசி வருத்தம் வீடச் சிறுகண் யானையொடு பெருந்தேரெய்தி அவனிடத்திலிருந்து தாம் திரும்பி வருவதைக் கூறுகிறான். 'நீங்களும் அங்கே போவீர்களானால்' எனக் கூறத் தொடங்கிப் போகிற வழியை பெரும்பாணாற்றுப்படையைப் போல விரித்துரைக்கின்றான்.

நெய்தல் நெடு வழியிலிருந்து தொடங்கி அவனுடைய எயிற் பட்டினத்திற்குப் போகும் வழியைக் கூறுகிறான். இயற்கையிலுள்ள மலர்கள் பூப்பதைக் கூறுகினறவர் உருவகந் தோன்ற அழகாக விளக்குகின்றார்.

'அலைநீர்த் தாழை யன்னம் பூப்பவும்
தலைநாட் செருந்தி தமனிய மருட்டவும்
கடுஞ்சூல் முண்டகம் கதிர்மணி கழா அலவும்
நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவும்
... ...
பைந்நனை யவரை பவழங் கோப்பவும்
கருநனைக் காயாக் கணமயி லவிழவும்
கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவும்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்!
கொல்லை நெடுவழிக் கோபம் ஊரவும்!
(சிறுபாண். 145-168)

என்பதைக் காண்க.

பனிநீர்ப் படுவின் பட்டினம் படரின், நல்லியக்கோடனைப் பாடி, பரதவரோடு ஆடி, அவரோடு வறற்குழற் சூட்டின் வயின் வயின் பெறுகுவிர். முல்லை நிலத்தில் சூரியன் மறைந்ததும் வேலூர் எய்தின், எயினர் குரம்பையில் இன்புளி வெஞ்சோறு ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவிர். மருதஞ் சான்ற மருதத் தண்பணை அவன் ஆமூர் எய்தின், உழவர் தங்கை மகமுறைத் தடுப்ப, வெண் சோறு கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவிர். அவன் சாறயர் மூதூர் சேய்த்து மன்று; சிறிது நணியதுவே. இங்கே பொருநர்க்காயினும், புலவர்க்காயினும், அந்தணர்க்காயினும் அடையா வாயில் என்கிறார் நத்தத்தனார். பரிசிலர்கள் அவனைக் குறுகி,

> 'செய்ந்நன்றி யறிதலுஞ் சிற்றின மின்மையும்
> இன்முக முடைமையும் இனிய ளுதலும்
> செறிந்துவிளங்கு சிறப்பி னறிந்தோ ரேத்த,
> அஞ்சினர்க் களித்தலும் வெஞ்சின மின்மையும்
> ஆணணி புகுதலும் அழிபடை தாங்கலும்
> வாள்மீக் கூற்றத்து வயவ ரேத்த,
> கருதியது முடித்தலுங் காமுறப் படுதலும்
> ஒருவழிப் படாமையும் ஓடிய துணர்தலும்
> அரியே ருண்கண் அரிவைய ரேத்த,
> அறிவுமடம் படுதலும் அறிவுநன் குடைமையும்
> வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்'
> (சிறுபாண். 207-217)

பரிசிலர் ஏத்துவர். இங்கே ஏழைப் பாணன் குடும்பம் தன்னுடைய சீறியாழை மீட்டிப் பாடவேண்டும் என்று கூறும்போது யாழின் வருணனை வருகிறது. யாழை மீட்டிச் சில சொன்னவுடனே காம்பு சொலித்தன்ன அறுவையை இவர்களுக்கு உடுத்துவான். பாம்பு வெகுண்டன்ன தேறல் நல்குவான். வீம பாகம் அந்தக் காலத்திலேயே எல்லோருக்கும் தெரிந்திருந்தது. வீம பாகத்தில் சிறிதும் குறையாத உணவினைத் தான் நின்று ஊட்டுவான். 'விறல் வேல் மன்னர் மன்னெயில் முருக்கி, நயவர் பாணர் புன்கண் தீர்த்தபின், வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு வாண்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ அன்றே விடுக்கும் அவன் பரிசில்.' 'குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச் செல்லிசை நிலைஇய

பண்பின் நல்லியக் கோடன் என்று முடிக்கின்றான் ஏழைக் குடும் பத்தைக் கண்ட பாணன். இங்கே பாண்டிலின் வருணனை புதிய தாத உள்ளது.

‘உருவ வான்மதி யூர்கொண் டாங்குக்
கூருளி பொருத வடுவாழ் நோன்குறட்டு
ஆரஞ் சூழ்ந்த அயில்வாய் நேமியொடு
சிதர்நனை முருக்கின் சேணோங்கு நெடுஞ்சினைத்
ததர்பிணி யவிழ்ந்த தோற்றம் போல
உள்ளரக் கெறிந்த வுருக்குறு போர்வைக்
கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி
ஊர்ந்துபெயர் பெற்ற எழில்நடைப் பாகரொடு
மாசெல வொழிக்கு மதனுடை நோன்றாள்
வாண்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ
அன்றே விடுக்குமவன் பரிசில்.’

(சிறுபாண். 251-261)

# 5

# கூத்தராற்றுப்படை

கூத்தராற்றுப்படை 583 அடிகளைக் கொண்டது. இதனைப் பாடியவர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார். நன்னனும் அந்த வள்ளலைப் புகழ்வது. திருவண்ணாமலைக்கு அருகில் இன்று செங்கம் என வழங்கும் செங்கண்மா என்பது அவனுடைய தலைநகரம். மதம் பிடித்த யானையின் பலவகை ஒலிபோல அந்த மலையில் பல வகையான ஓசைகள் எழுகின்றனவாம். எனவே, 'மலைபடு கடாஅம்' என இந்தப் பாட்டுப் புகழ்தலின் அந்த அழகை நோக்கி, இந்தப் பாட்டுக்கே 'மலைபடு கடாம்' என்று பெயர் வழங்கலாயிற்று. மலை என்பது மலையாகிய யானை. படு-உண்டாதல். கடாம்-மதம். அதாவது இங்கே மதத்தினால் உண்டாகும் ஒலிகளாகும்.

இந்த ஆற்றுப் படையும் ஏழைக்கூத்தர் தலைவனை, 'கலம்பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ' (50) என்று அன்புடன் விளித்தே தொடங்குகின்றது. அவனைச் சுற்றி விறலியர் உள்ளனர். அவர்கள் மலையேறிய வருத்தத்தைக் குறிக்கின்றான் ந்தத் தலைவனோடு பேசுபவன். பாணர்களும் கூட இருக்கின்றனர்.

அவர்கள் தாங்கியுள்ள பேரியாழின் வருணனை வருகிறது. அவர்களுடைய இசைத் திறத்தை 'அருள்நெறி திரியாது இசைபெறு திருவின் வேத்தவை ஏற்பத் துறை பல முற்றிய பாணர்' (38-40) என்று புகழ்கிறான். பசியால் வருந்தும் இந்தப் பாணர் கூட்டம் கூத்தர்கள் கூட்டமாகலின் மிகப் பெரியதாகும். அதற்கேற்ப அவர்கள் கையில் முழவு முதலான இசைக்கருவிகளும் இருக்கின்றன. இவற்றையெல்லாம் பலாக்காய் மூட்டை போலக் கட்டிக் கொண்டு வருவதையும் குறிக்கின்றான். அந்தப் புரவலனிடத்திலிருந்துதான் நாங்கள் வருகிறோம். நீங்களும், பழுத்த மரத்தை நாடிச் செல்லும் புள்ளினம் போல அவனை நாடிப் போனால்...எங்களைப் பார்த்ததால் உங்களுக்கு நல்ல காலமேயாம். நீங்கள் போக வேண்டிய வழி, தூரம், அங்கேயங்கே தங்கக் கூடிய இடம், அங்கேயங்கே கிடைக்கும் உணவுகள், அவனுடைய நாட்டுவளம், அரசு முழுதும் கொடையாக அவன் கொடுத்தாலும் தன் முகம் கோணாது இருக்கும் அவன் பண்பு, ஒன்றும் அறியாதவர்க்கும் நிறைய வழங்கும் அவனுடைய அவையம், அவனுடைய நவிரமலையில் அவன் வழிபடும் காரியுண்டிக் கடவுளின் இயற்கை, எத்தகைய பகைவர்களையும் தோற்கடித்துப் புலவர்க்கு வழங்கும் அவனது முன்னோரின் வரலாறு, அகழியும் மதிலும் சூழ்ந்த அவனுடைய மூதூரின் இயல்பு இவற்றைச் சொல்கிறேன் கேள்.

நீ போக வேண்டிய வழியும் இதுதான். குறையாத விளைவு புதுமையல்ல; அவன் நாட்டின் இயல்பு. முசுண்டை, எள், ஏனல், அவரை, வரகு, ஐவனம், கரும்பு, தோரை, ஐயவி, நெய்தல், இஞ்சி, கவலை, வாழை, நாவல், தேமா, பலா இவை வளந்தருவதைப் பொருத்தமான உவமைகளோடு கூறிக் காட்டுகிறான். 'வரகின் கவைக்கதிர் வாதிகை அன்னது' என்ற உவமையை இங்கே காணலாம். இந்தப் பாதைகளெல்லாம் வெறிக்களம் போலக் கோலம்கொண்டு நிற்கும். அந்த மலைநாட்டுச் சிறு குடியில் நீங்கள் சென்றால் தேனும் கிழங்கும் ஊனும் உங்கள் சுற்றத்தோடு வயிறார உண்ணுவீர்கள். அன்றிரவு அங்குத் தங்கி பூக்களைச் சூடிக்கொண்டு போய் மலையிடையே யிருந்த பக்கத்தை அடைவீர்களானால், உங்கள் வீடு போலே உலாவலாம், இறைச்சித் துண்டமும் தினைச்சோறும் உண்டு. காலையில் நறவு பருகிப் பின்னர் முள்ளம் பன்றியின் இறைச்சியையும் புளியும் மோரும் கலந்த உலையில் குறமகள் ஆக்கிய சோற்றையும் ஒவ்வொரு வீட்டிலும் பெறுவீர்கள். தாய் மகவினைத் தடுத்து ஊட்டுவது போல உங்களுக்கு அவர்கள் ஊட்டுவார்கள். இந்த விருந்து வளர்த்த நிலையிலே மன்னனது பரிசிலை நீங்கள் மறந்துகூடப் போகலாம்.

அவனுடைய மலைமேல் உள்ள நாடு இப்படி இடையூறு இல்லாதது அன்று. அங்கே வெம்பி நடுங்குவீர்கள். எனவே அங்கே நீண்டநாள் நில்லாமல் நிலத்தில் பரந்த அவனுடைய நாட்டைத் தேடிச் செல்லுங்கள். பன்றி பிடிப்பதற்காக எங்கும் பொறிகளை வைத்திருப்பார்கள். ஆகையால் இருட்டில் போகவேண்டாம். பாம் பொடுங்கும் பள்ளங்களும் உண்டு. எனவே இதை மனத்தில் வைத்து மரங்களைத் தட்டிக் கொண்டு வழியே நடவுங்கள். யானை மீது கவண்கல் எறிகின்றவர்கள் பரண்மேல் இருப்பார்களாகையால் மரத்தில் மறைந்து மறைந்து செல்லுங்கள்.' கான்யாற்று வழி வழுக்கும். கொம்பு சுற்றிய கொடியைப் பிடித்துக் கொண்டு உங்களுடைய குழந்தைகளோடு ஒருவர்பின் ஒருவராக நடந்து செல்லுங்கள். இடத்தை மறைத்த பாசி உங்களை அடிசறுக்கச் செய்யும். பிரப்பங்கோல் முதலியவற்றைப் பிடித்துக்கொண்டு மெல்ல நடந்து செல்லுங்கள். பழைய மதில் சூழ்ந்த கடவுள் இடத்தைக் கண்டால் உங்களுடைய இசைக் கருவிகளை இயக்காது தொழுது பின் செல்லுங்கள். ஏனென்றால் அங்கெல்லாம் மழை பொழியும். மயில் தளர்ந்தாலும், உங்கள் குழந்தைகள் போலக் குரங்குகள் குதித்தாலும், மலைமேலே தேனடைகளைப் பார்த்தாலும் ஞெரேரென விரைந்து பார்க்கவேண்டாம்; அடி பிறழும்.

கானத்தின் நடுவே போனால் பரணிலிருந்து எய்யப்பட்ட பன்றி இடையே கிடக்கலாம். மூங்கில் ஒன்றோடொன்று உராய்ந்து உண்டான நெருப்பிலே புகைபடாமல் வதக்கி உண்டு, சுனைநீர் பருகி, மிகுந்ததை மூட்டை கட்டிக்கொண்டு போகலாம். இரவிலே வழி நடவாது குகைகளில் தங்கிப் பொழுது விடிந்ததும் நடந்து செல்லுங்கள். அங்கே யானையையும் விழுங்கும் பாம்புகளுண்டு. தொலைதூரம் மணம் வீசும் மலர்களுண்டு. உண்டோர் மறக்க முடியாத பழங்களுமுண்டு. அந்த இடங்களில் மக்கள் போகமாட்டார்கள். நான் கூறியவற்றை மனத்தில் வைத்துக்கொண்டு வலமும் இடமும் பார்த்துச் செல்லுங்கள். குறவர்களும் மருளும் அந்தக் குன்றுகளினூடே நீங்கள் போனால், விரைந்து நடவாது, உங்களுடைய இசைக் கருவிகளை வாசியுங்கள். அந்தக் காட்டினைக் காக்கின்ற கானவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் உடனே ஓடி வந்து நீங்கள் உண்ணக்கூடிய பழங்களையும் சூடக்கூடிய மலர்களையும் காட்டுவார்கள். இடையூறுகள் நிறைந்த அந்த வழியில் அவர்

கள் முன்னதாகச் சென்று வழிகாட்டுவார்கள். சுற்றத்தார்களோடு இருப்பது போன்ற மகிழ்ச்சி தோன்றும். அந்த வழியை அறிந்தவர்கள் கூறியபடி சென்று மலர்கள் நிறைந்த நிழலில் தங்கினுல், பலதிறம் பெயர்பவை கேட்குவிர்.

வானவர்கள் அருவியில் குளிக்குந்தோறும் தோன்றும் இனிய இசை, யானே புனத்தில் மேய்கின்றபோது அதை வெருட்டி விளேக்கும் ஆரவாரம், முள்ளம்பன்றி தாக்க இழுக்கிய கானவரின் அழுகை, கணவர் மார்பு மீது புலி பாய்ந்ததால் அந்தப் புண் ஆறும்படியாகக் கொடிச்சியர் பாடும் பாடல், முதல் நாளிலே பூத்த வேங்கையின் பூவைப் பெண்கள் சூடுவதற்காக இடும் பூசல், கன்றும் பிடியும் தன்னுடைய யானேயைப் புலி தாக்குதலினுல் கிளேயோடு கதறுவது மலேமுழுவதும் எதிரொலித்தல், குழந்தைக் குரங்கு தாயைப் பிடிக்க மறந்து கற்பிளவினுள் விழுந்துவிட்டபோது குரங்குகளெல்லாம் கூப்பிடும் கூப்பாடு, நூலேணி வழியாகப் பெரிய தேனடை கொள்ளே யிடும் கானவரது மகிழ்ச்சி யாரவாரம், குறவர்கள் பெண்களோடு நன்னனே எண்ணி மலேமீது அயரும் குரவை, தேர் வந்தாற் போலக் காட்டாறு மலேப்பிளவில் ஓடும் ஓசை, பெருஞ் சுழியில் சிக்கிக் கொண்ட யானேயைச் சினந்தணித்துப் பலமொழி கலந்து பேசுகின்ற பாகர்கள் அதனேக் கட்டுவதற்குச் செய்யும் ஆரவாரம், புனந்தோறும கிளி கடியும் மகளிர் பூசல், மலேயிலிருந்து வந்த மரைமானேடு கோவலர்களுடைய எருது போரிடும் போது கோவலர்களோடு குறவர்களும் ஆரவாரித்தல், பலாப்பழத்தை உண்டு பின் இந்தக் கொட்டைகளேயும் கொள்வதற்காகக் கன்று கடாஅவுறுக்கும் மகாஅரோதை, கரும்பாலேகளில் கருப்பஞ்சாறு பாய்கின்ற ஓசை, திணேயைக்குற்றும் மகளிர் பாடுகின்ற வள்ளேப்பாட்டு, சேப்பங்கிழங்கும் மஞ்சள் கிழங்கும் காக்கின்ற காவலாளிகள் எழுப்புகின்ற பறையோசை, இப்படி எண்ணில்லாத பல ஓசை மலேபடு கடாமாகத் திக்கெல்லாம் முழங்கும். அங்கே பெண்கள் கைகோத்து ஆடுவார்கள். அதற்கேற்ப முழவும் முழங்கும்; முழவுக்குத்தூக்கமே கிடையாது. அத்தகைய திருவிழாக் கோலம் பூண்டு அவன் மலே விளங்கும். கண் குளிர எல்லாவற்றையும் கண்டுங்கேட்டும் உண்டற்கினிய பல பாராட்டியும் இத்தகைய இன்பம் இன்னும் நமக்கு வருவதாக எனப் பழைய மரபுப்படி பாராட்டி, இந்த மலே பிற்பட உங்களுடைய விறலியர் குறிஞ்சிப் பண்ணேப் பாடி வரக் கும்பிட்டு அதனேத் தாண்டி நடவுங்கள்.

பஞ்சு போல் பொங்கி மழை பொழியுமாதலின் உங்களுடைய இசைக் கருவிகள் நனையாதபடி மலைப் பிளவுகளில் ஒதுங்கிக்கொள்ளுங்கள். கற்களின் மேல் செல்லும்போது நொறுங்கி விழும். பக்கத்தில் போகாமல் பார்த்துச் செல்லுங்கள் உங்களுடைய முழவின் தலைக்கோலைத் தண்டு காலாகத் தவறிவிழாதபடி ஊன்றிக் கொண்டு செல்லுங்கள். உளி போல் காய்ந்திருக்கும் கூரிய கற்களின் மேல் வெயில் தணிந்த பிறகு செல்லுங்கள். பெரிய அரசனையும் தோற்பிக்கும் அரண்கள் அங்கே உள்ளன. பின்னி வைத்தாற் போல இருக்கின்ற செடி முதலியவற்றின் உள்ளே நுழையும்போது உங்களுடைய முழவு முதலியவற்றின் தோல்கள் கிழிபடாமல் பார்த்துக்கொண்டு ஒருவர் கையை ஒருவர் விடாது பிடித்துக் கொண்டு மெல்லச் செல்லுங்கள். பகைவர்களைத் தோற்றோடச் செய்து தம் உயிரைக் கொடுத்த வீரர் பலரின் நடுகற்கள் அங்கே மிகப்பல. அங்கே உங்களுடைய பாட்டை விருப்புடன் பாடி, இசைக் கருவிகளை இயக்கி விரைந்து செல்லுங்கள். முன்பின் அறியாத இடத்தில் புதியவர்களாக வந்தவர்களாகலின் போகிற இடம் தெரிவதற்காகச் சந்து செய்து அங்கே புல்லை முடிந்து வைத்து அடையாளமாக விட்டுச் செல்லுங்கள். பிளவு வழிகளும் எண்ணினும் மனம் நடுங்கும் அரு வழிகளும் பலப்பல. ஆனால் நன்னனிடம் போகின்றோம் என்று சொன்னவுடனே அவனுடைய தொல்குடி மூதூர்கள் நம்முடைய பழைய ஊர்கள் போலாகிவிடும். தங்க வேண்டும் போது தங்கி அஞ்சாது நீங்கள் போகலாம். பெண்மானைப் புலி தாக்குதலால் அது இறந்துபட, அதை நினைத்து கலைமான் நிற்கிறது.

அத்தகைய காட்டைவிட்டு வேறு புலம் படர்ந்தால் கோவலர்கள் காவல் காட்டுக்குள் பாலைச்சொரிவார்கள். உங்கள் ஊரைவிட்டு வந்த வருத்தமெல்லாம் தீரப் புத்துணர்ச்சி பெறுவீர்கள். ஆட்டு மந்தைக்குள் விரைவினில் சென்றால், பாலுஞ்சோறும் உங்களுக்கென்று தனியே செய்ய வேண்டாதபடி பெறுவீர்கள். தோல் படுக்கையில் நெருப்பைத் துணையாகக் கொண்டு படுத்திருந்து பின் செல்லுங்கள். வில் ஏந்திய வீரர்கள் அங்கே வழியில் இருப்பார்கள். நன்னனிடம் போகின்றோம் என்று சொன்னவுடனே இறைச்சியும் கிழங்கும் வேண்டி வேண்டி ஊட்டுநரல்லாமல் உங்களை வருத்துவோர் அங்கே யாருமில்லை. வழியெல்லாம் பூவும் தளிரும் பிணைத்துக் கட்டிச் சூடிக்கொண்டு இன்பமாகப் போகலாம். மூங்கிலரிசிக் கஞ்சியோடு கலந்து மேட்டில் விளைந்த நெல்லரிசிச் சோற்றோடு அவைகளைப்

புளித்திருக்கும் கூழோடு இரவில் வருந்திய வருத்தமெல்லாம் தீரப் புல் வேய்ந்த குடிசைகள் தோறும் பெறுவீர்கள். அங்கே தங்கினால் அரிசியும் நெய்க் கொழுப்பும் உண்ண நாளும் பெறுவீர்கள். இரவில் விறகையே பற்ற வைத்துக் குளிர் சிறிதும் தோன்றாதபடி தூங்கி விடியற்காலையில் எழுந்து செல்லுங்கள்.

மருத நிலத்தில் நீர் வளமுள்ள ஊர்கள்தோறும் பல பல சோலைகளும் பள்ளிகளும் உள்ளன. அங்கே தங்கிப் போகலாம். அங்கே வலையோர் தந்த வாளை மீனோடு தூண்டிலில் பிடித்து வந்த வரால் மீனின் துண்டங்களோடு சோறும் தேறலும் விடியற்காலத்திலேயே பெறுவீர்கள். உங்களுடைய சுற்றத்தார்களுடன் விருந்துண்டு மருதயாழ்பண்ணி இசைத்துச் செல்லுங்கள். வெண்ணெல்லை அறுவடை செய்கின்றவர்களின் முழவு முழக்கத்திற்கு அஞ்சி எருமை ஏறு ஓடிவரும். அதைப் பார்த்துப் பாதுகாவலாகச் செல்லுங்கள். சேயாறு அங்கே மிக விரைவாகச் சுழல்களோடு ஓடிவரும். அதன் ஒரு கரைக்கொண்டுத் தாண்டிச் செல்லுங்கள்.

அவனுடைய ஊர் தொலைவில் இல்லை. அங்கே செல்வங்கள் தூங்கிக்கிடக்கின்றன மலையென ஓங்கிய அத்தகைய மாடங்களில் பழங்குடிகள் நெருங்கியிருக்கிறார்கள். பகைவர்களின் தலையைத் துண்டிக்க வேலைச் சாத்திவைத்திருக்கும் படியான கதவுகளுடைய வாயிலுக்குள் அஞ்சாது நீங்கள் போகலாம். நன்னனை எண்ணி வந்தவர்கள் என்று எல்லோரும் உங்களை வரவேற்பார்கள். காவிரி கடலோடு கலக்கும் இடத்தைப் போல அங்கே வாயில் முற்றத்து நன்னனுக்குக் காணிக்கையாகப் பலபொருள்கள் காணப்படும். ஆமானின் கன்று, கரடியின் குட்டி, வருடையாடு, மதயானையின் குழவி, உடும்பின் ஏறு, மஞ்ஞை, கானக்கோழியின்சேவல், பலாப் பழம், மாம்பழம், நூறை, மணிகள், யானைக்கோடு, காந்தள், நாகம், திலகம், சந்தனம், பச்சைமிளகு, மூங்கில் குழலில் பெய்த தேறல், தயிர், தேனடை, ஆசினி எனப் பலபல திரண்டிருக்கும்.

யானையோடு கூடிய தாதெருத் ததைந்த முற்றத்தில் நீங்கள் உங்கள் முழவு முழங்க ஊதுகொம்பு இசைக்கச் சீறியாழில் மருதப் பண் அமைத்து அருந்திறற் கடவுளை வாழ்த்தியபின் அவன் கொடையையும், வீரத்தையும் பாடத் தொடங்குவீர்களானால், மேலே பேசவும் விடாமல் விருப்பத்தோடு 'என்னிடம் வந்ததேபோதும்; வந்த வருத்தமும் உங்களுக்குப் பெரிது' என்று வரவேற்பான்.

இலமென மலர்ந்த கையராகித் தம் பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர் கடுவரல் கலுழிக் கட்கின் சேயாற்று வடுவாழ் எக்கர் மணலினும் பலரே; அதனால், புகழொடுங் கழிக நம் வரைந்த நாள்' என்று வாளளாவும் ஊக்கத்தோடு, அவனை விரும்பிச் சென்ற உங்களை விட உவந்த உள்ளத்தோடு, உங்களை அமர்ந்தினிது நோக்கு வான். கலிங்கத்தை உடுப்பிப்பான். கொழுவிய இறைச்சியும் சோறும் முதல் நாள் போல வழிநாளெல்லாம் கொடுப்பான். எங்கள் ஊருக்குப் போகிறோம் என்று சொன்னால் உங்கள் தலைவனுக் குத் தாமரை சூட்டுவான்; விறலியருக்கு விளங்கிழை அணிவிப்பான். தேரும் யானையும் ஏறுடைப் பெருநிரையும், குதிரையும் நிலந்தினக் கிடந்த நிதியமோடு அனைத்தும் மழை சொரிந்தாற்போல் உங்களுக்கு ஈந்து அனுப்புவான். இப்படி முடிகின்றது மலைபடுகடாம்.

இந்த ஆற்றுப் படையின் அமைப்பும் பிற ஆற்றுப்படையின் அமைப்புப் போலவே விளங்குவது காணலாம். இசைக் குடும்பத்தின் ஏழ்மை, இசையின் பெருமை, யாழின் வருணனை, இந்த நிலையில் இந்த ஏழை இசைத் தலைவன் விளிக்கப் பெறுகிறான். பரிசில் பெற்று வந்த கூத்தன் நன்னனிடமிருந்து பரிசில் பெற்று வந்ததைக் கூறி, அங்கே ஏழை இசைத்தலைவன் போனால் அவன் நல்ல காலமேயாம். நன்னன், அவன் நாட்டின் பெருமைகளைச் சொல்லிப்போகும் வழியைப் பூகோளப் பாங்கு குறையாமல் திணைவளம் பாடுகிறான். காட்டில் வாழ்வோரும் நன்னன் குடைக்கீழ் வந்தமையால், வாழ்வோராய் நன்னனை நாடி வருகின்றவர்களை யெல்லாம் விருந்தூட்டி வரவேற் கும் சிறப்பினைக் கூறிப்போகும் வழியின் அருமைப் பாடுகளையும் காட்டிச் செங்கண்மா நகருக்கு அழைத்துச் செல்கின்றான். அங்கே அவனுக்கு வந்திருக்கும் காணிக்கைகளைக் காட்டி. அந்தக் காட்டு மக்களை அவன் எப்படித் தன் அன்பால் தன்வயப்படுத்தினான் என்ப தையும் காட்டுகின்றான். பின் அவன் அவர்களை வரவேற்று எப்படிப் பரிசில் தந்து அனுப்புவான் என்பதையும் கூறி முடிக் கின்றான் எதிரே வந்த கூத்தன்.

ஆற்றுப்படைகள் வளர்வதற்கு முன் பதிற்றுப்பத்து, புற நானூறு முதலியவற்றில் வரும் ஆற்றுப்படை இந்த முறையில் சென் றிருக்கக் காணோம். குட்டுவனைப் பாடிய பரணர் பதிற்றுப்பத்தில் விறலியாற்றுப் படையொன்று பாடுகிறார். அப் பாடல் பதினேழு அடிகளைக் கொண்டது. யாமும் சேறுகம் நீயிரும் வம்மின்... கொளை வல் வாழ்க்கை நும் கிளை யினிதுணீஇயர்...பெருஞ்சினக் குட்டுவற்

கண்டனம் வரற்கே' என்று முடிகிறது அந்தப் பாடல். பெற்ற பெரு வளம் பெறுஅர்க்கு அறிவுறீஇப் பாடுவதாக அந்தப் பாடல் அமைய வில்லை. யாமும் சேறுகம் என்றல்லவா தொடங்குகிறது அந்தப் பாடல். செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பதிற்றுப்பத்தில் கபிலர் பாடிய பாடலொன்று 'பாணாற்றுப்படை' எனக் குறிக்கப்படுகின்றது. அது இருபத்து மூன்று அடிகளைக் கொண்டது (சங்க.930). 'கடனறி மரபிற் கைவல் பாண தெண்கடல் முத்தமொடு நன்கலம் பெறுகுவை...செலவக் கோமாற் பாடினை செலினே' என்று முடிகின்றது (சங்க. 1593). இந்தப் பாடல்களோடு பத்துப்பாட்டில் வரும் ஆற்றுப்படைகளைப் பார்க்கும்போது ஆற்றுப்படைஎப்படிப் பெரும் பாட்டாக வளர்ந்தது என்பது தெளிவாகிறது.

# 6

# திருமுருகாற்றுப்படை

பத்துப் பாட்டில் 'திருமுருகாற்றுப்படை' என்ற ஒன்றும் முதலில் வைக்கப்பட்டுத் தோன்றுகிறது. பத்துப் பாட்டு என்று கூறுவது பிற்கால வழக்கானாலும் உரையாசிரியர்கள் பாட்டும் தொகையும் என்று கூறும்போது பத்து என்ற அடையின்றிப் பாட்டு என்ற அளவிலேயே சுட்டி வந்திருப்பதைப் பலர் எடுத்துக் காட்டுகிறார்கள். பிற தொகை நூல்களுக்குக் கடவுள் வாழ்த்தென வரும் பாடல்களில் பெரும்பான்மையும் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடினவாகக் காண்கிறோம். அவர் சங்க காலத்திற்குப் பின்னே வந்த ஒருவர் என்பது பலருடைய கொள்கை. தொகை நூல்களுக்குப் போல, பாட்டு என்பதற்கும் கடவுள் வாழ்த்து ஒன்று இக்காலத்தே சேர்க்கப்பட்டதாம். இதை எழுதியவர் பெயர் நக்கீரர் என அறிகிறோம். திருமுருகாற்றுப்படை பதினோராம் திருமுறையில் தொகுக்கப் பெற்ற நக்கீரர் பாடல்களில் ஒன்றாக வருகிறது. கல்லாடர், கபிலர், பரணர் முதலியோர்கள் பாடிய சைவப் பாடல்களையும் பதினோராம் திருமுறையில் காண்கிறோம். ஆனால் அவை சங்க காலத்துப் புலவர்கள் பாடல்கள்

அல்ல என்று வேங்கடராஜுலு ரெட்டியார் போன்றவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். அதே போலப் பதினொராந் திருமுறையில் வருகிற திருமுருகாற்றுப்படை முதலியவற்றைப் பாடிய நக்கீரரும் சங்கப் புலவர் அல்லர் என்ற கொள்கை உருவாகியுள்ளது.

செய்யியர் என்ற வாய்பாட்டு வினையெச்சம் எதிர் காலத்தைக் காட்டும், திருமுருகாற்றுப்படையில் 168–ஆம் அடியில், 'ஒன்பதிற் றிரட்டி உயர்நிலை பெறீஇயர்' என வருகிறது. அந்த ஆட்சி 'செய்யியர்' என்ற வினையெச்ச ஆட்சிக்கு மாறுபட்டு வருகிறதாம். எனவே, அது சங்ககால வழக்கன்று என்று காட்டுவர். ஆனால், அது பிற்கால வழக்கா என்று நாம் கேட்கலாமல்லவா? அப்படிப் பிற்கால வழக்காகவும் இல்லையே. பெறீஇயர் என்பது அங்கே வினையெச்சம் அல்லவே. பெற்றோர் என்ற பொருளில் வருகின்ற வினையாலணையும் பெயராகும். 'மறீஇயோர்' என்று வரும் சங்க வழக்குப்போலப் 'பெறீஇயோர்' என்று வருதல் வேண்டும். ஆ, ஓ வாகும் செய்யுளுள்ளே.

'ஆ ஓ வாகும் பெயருமா ருளவே
ஆயிடன் அறிதல் செய்யு ளுள்ளே' (தொல். 680)

என்பது விதி. ஆகாரமட்டுமேயன்றி அகரமும் ஓவாகும். கிழவன் கிழவோன் என வருதல் காண்க. அதுபோல, 'பெறீஇயர்' என்பது 'பெறீஇயோர்' என வரும். அப்படி அகரம் ஓகாரம் ஆகாது. அகரமாகவே வந்த அரிய வழக்காகும் பெறீஇயர் என்பது.

வடமொழிப் புராணக் கதைகள் சங்க காலத்தில் மிக அருகியும், அதன்பின் காலம் செல்லச்செல்லப் பல்கியும் வரக் காண்கிறோம் என்பர். இந்த அளவில் கூறினால் அது உண்மையாகாது. திராவிடமொழி பேசுவோரும் ஆரியமொழி பேசுவோரும் வேதகாலத்திலிருந்தே ஒருவரோடொருவர் கலந்து வந்ததால் இருவர் பண்பாடும் ஒரு பண்பாடாகவே வளரத்தொடங்கின. இந்தியா பரந்த ஒரு நாடு. அங்கே பலபல இடத்தில் உள்ளவரும் தங்களுடைய பழைய கதைகளுக்கு ஏற்பப் புதிதாகத் தாங்கள் கேட்ட கதைகளையும் மாற்றிக்கொள்வதை நாம் எதிர்பார்க்க வேண்டும். இந்தப் பரிமாற்றத்தைத் திராவிட ஆக்கம் என்றோ, தமிழ் ஆக்கம் என்றோ, ஆரிய ஆக்கம் என்றோ கூறுவது உண்மையாகாது. இந்திய ஆக்கம் என்று கூறினால் பொருத்தமாகலாம். இந்த இந்திய ஆக்கம் இடத்திற்கு இடம் மாறுபடுதலின், ஒரே

வகையாக இருக்கும் என்பதற்கில்லை. தமிழில் வரும் இராமாயணம் ஒருவகை. இந்த வேற்றுமையைக் குறிப்பதற்கு இந்திய ஆக்கத்தைத் தமிழ் ஆக்கம், வங்க ஆக்கம் என வேண்டுமானால் கூறலாம்.

தொல்காப்பியர் வடமொழி வரலாற்றோடு தமிழ் மக்கள் கலந்து உறவாடிய காலத்தே தொல்காப்பியத்தை எழுதினார். கொற்றவை, வள்ளி, வெறியாட்டு, பேய் முதலியவற்றைக்குறிப்பதோடு மாயோன்மேய காடுறை உலகமும், சேயோன்மேய மைவரை உலகமும், வேந்தன் மேய தீம்புனல் உலகமும், வருணன் மேய பெருமணல் உலகமும் என்று வழங்கிய பழைய திணை வழக்கத்தையும் குறிக்கின்றார். இங்கே திருமாலைப் பற்றியும், விஷ்ணுவைப் பற்றியும் வழங்கிய வளமைக்கலைகளும், பிறகலைகளும் முல்லைத் திணையின் தலைவன் மாயோனைப்பற்றிய கலைகளோடு ஒன்றாகி வளர்ந்தன. நப்பின்னை, ஏறு தழுவுதல் முதலிய தமிழ்க்கலைகள் வடமொழியிடம் புகுந்து, திருமாலின் வழிபாட்டையும் புராணத்தையும் மாற்றி விட்டன எனலாம். பாகவத புராணமே ஆழ்வார்களின் காலத்திற்குப் பின் தென்னாட்டில் எழுதப்பட்டது என்பர் அறிஞர். தொல்காப்பியர் கூறுகின்ற சேயோன் முருகனை மட்டும் இல்லாமல் தாய்க்கடவுளின் வழிபாடாக வளர்ந்த பல கதைகளையெல்லாம் ஒன்று சேர்த்து, அந்தத் தாய்க்கடவுளின் பிள்ளையாக மட்டும் வளர்ந்ததன்றி, அந்தத் தாய்க்கடவுள் சிவனின் மனைவியானபோது, சிவனின் பிள்ளையாகவும், பிறகுழந்தைத் தெய்வங்களின் வேற்றுப் பெயராகவும் வளர்ந்ததைக் காண்கிறோம். இந்த வளர்ச்சியின் முதிர்ச்சியே கந்தபுராணக் கதையாகும். கச்சியப்பர் கந்தபுராணம் எழுதிய வண்ணம் அதனுடைய எதிரொலிகள் காந்த புராணத்தில் வளர்ந்திருத்தல் வேண்டும். வேந்தன் என்பதை இந்திரனைக் கொண்டு இங்கு வழங்கிய கதைகளோடு ஒன்றுபடுத்தி இந்திரவிழாக் கொண்டாடிய காலமும் உண்டு. ஆனால், அது தமிழ்நாட்டில் வேர்கொண்டதாகக் காணோம். வருணனை ஒழுக்கத்து அழகால் விஞ்சிய கடவுளாகக் கொண்ட காலம் ஆசிரியர்கள் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னரே மறைந்து போய்விட்டது. வருணன் படிப்படியாகக் கீழிறங்கிப் பெருநீர்க் கடவுளானான். நெய்தல் நிலத்து மக்கள் வழிபட்டுவந்த தெய்வத்தோடு இந்த வருணனை ஒன்றுபடுத்தினார்கள். சினைச் சுறவின் கோடு நட்டு அதிலே வருணன் வருவதாக நெய்தல்திணை மக்கள் வழிபட்டு வந்தனர். இந்த வழிபாட்டுக் கதை வருணன் கதையாகவும் வளர்ந்தது.

இப்படியே பல கதைகள் தமிழர்கள் அறிந்து வைத்திருந்தாலும் தமிழர் அனைவரும் அவற்றை அறிந்தார்கள் என்று கூறுவதற்கில்லை. பொதுமக்கள் ஒருசிலவற்றையே அறிந்திருத்தல் கூடும். எனவே, புலவர்கள் பாடும்போது எல்லோரும் அறிந்திருந்தவற்றையே பெரும்பான்மையும் பாடுவார்கள். நாளடைவில் இந்தக் குறிப்புகள் மிகுந்து வருவதிலிருந்து பொதுமக்களிடையே இந்த அறிவு பரவி வந்ததை அறியலாம். தமிழ்நாட்டுச் சங்கப்புலவர்கள் இக் கதைகளை முன்னரே அறிந்திருந்தாலும் பொதுமக்களிடத்தில் பரவாத போது அவற்றை அவர்கள் சுட்டுவதில்லை. எனவே, இந்தத் தமிழ்நாட்டு அறிஞர்கள் அறிந்திருந்தார்களா என்பதல்ல கேள்வி? புலவர்கள் தங்கள் பாடல்களில் குறிப்பிடக் கூடிய அளவு பொதுமக்கள் அறிந்திருந்தார்களா என்பதே கேள்வி. இதனை மனத்தில் கொண்டுதான் இத்தகைய குறிப்புகள் காலம் செல்லச்செல்லத்தான் பரவிவந்தன என்று கூறுகின்றனர். ஆனால், இங்கேயும் பொதுவாக இப்படிக் கூறலாமேயன்றி இந்தக் கதை இந்தக் காலத்தில்தான் வந்தது என்று வரையறுத்துக் கூறுவது, வேறு நேர்வழிச் சான்று இல்லாதபோது சிறிது அருமையேயாம்.

குறுந்தொகை பழையதொரு தொகைநூல். அதில் முதல் பாட்டுப் பாடிய திப்புத்தோளார்,

'செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட்டு யானைக்
கழல்தொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே'

என்று அவுணர் என்ற இனத்தைப் பற்றியெல்லாம் குறிக்கின்ற குறிப்பினைப் பார்க்கிறோம்.

திருமுருகாற்றுப் படையில் புராணக் கதைகள் பல குறிக்கப் படுகின்றன. பல வழிபாட்டு முறைகளும் குறிக்கப்படுகின்றன. இவையெல்லாம் பொதுமக்களிடையே பரவிப் பழக்கத்தில் வந்த காலத்தில்தான், அதாவது சங்க காலத்திற்கு பின்தான் வந்திருக்க முடியும் என்று அறிஞர்கள் எடுத்துக்காட்டுகின்றார்கள்.

'மறுஇல் கற்பின் வாணுதல் கணவன்' என்பதில் தேவயானை குறிக்கப்படுவதாகக் கொள்கின்றனர். முருகன் கடப்பமாலை அணிந்தவன் என்பது புதிய கருத்தன்று. வரையர மகளிரும் பேய்மகள் துணங்கைக் கூத்தாடுவதும் முன்னர் அறிந்த செய்திகளே.

'இருபே ருருவி னொருபே ரியாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து
எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்' (திருமுருகு. 57-61)

என்பதில் சூர்மா தடிந்த வரலாறு முன்னரே அறியப்பட்டிருந் தாலும், இருபேருருவின் எனவரும் குறிப்புகள் பின்னே பரந்த குறிப்புகளாம். திருச்சீரலைவாய்ப் பகுதியில் ஆறுமுகங்களும், ஒவ் வொரு முகத்திற்கு இரண்டு கைகளும், அந்தக் கைகள் செய்யும் செயல்களும், விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

திரு ஆவினன் குடிப் பகுதியில் புராணக் கதைகளின் நோக்கில் முருகனுடைய தனிப் பெருமை கூறப்படும் போது முனிவர், கந்தருவர், திருமால், சிவன், இந்திரன் என்பவர்களின் தலைமையும் 'நால்வேறியற்கைப் பதினொரு மூவரொடு ஒன்பதிற்றிரட்டி யுயர் நிலை பெறீஇயர்' எனப் பதினெண் கணங்களாய், முப்பத்து முக் கோடி தேவர்களாய் இருக்கின்ற மூவர் தலைமையில் வருகின்ற பாங்கும், இவர்கள் அனைவரும் முருகனால் சிறையுண்ட பிரம்மனை விடுவிக்கும் நோக்கோடு ஆவினன் குடியிலுள்ள முருகனை நோக்கிக் காண வருதலும், புராணக் கதைகளின் சுருக்கமாகக் குறிக்கப் பெறுவதும் புதிய கோவையாக இங்கேதான் முதன்முதலில் காண் கிறோம். 'திருவேரகத்தைப் பாடும் பகுதியில் மறையவர் வழி பாட்டை முருகனோடு தொடர்பு படுத்தும் முயற்சி வருவதோடு நாற்பத்தெட்டு ஆண்டுகள் அவர்கள் பிரமச்சரியம் காப்பதும், ஈரத்துணியோடே வழிபாடு செய்ய வருவதும், ஆறெழுத்து மந்திர மும், மலர் கொண்டு வழிபடுவதும் இங்கே விளக்கப் பெறுகின்றன. 'குன்றுதொறாடலில்' குன்றக்குரவை கூறப் பெறுவது பழையதொரு செய்தியே யானாலும், முருகன் அவர்களோடு கைகோத்து ஆடுவதை 'இரசலீலை' நினைவூட்டுவது போலக் கூறி முடிப்பது புதியதொரு விளக்கமேயாகும்.

'பழமுதிர் சோலைப் பகுதியில் கடவுளை எங்கெங்கெல்லாம் மக்கள் வழிபட்டார்கள் என்று கூறுவதும் புதிய செய்தியன்று. ஆனாலும், அவற்றையெல்லாம் முருகன்மேலேற்றி முருகனோடு தொடர்பு படுத்திக் கூறுவது புதியதொரு சமரச முயற்சியேயாம். குறமகள் தன்னை மறந்து முருகன் தன்மேல் வரநிற்கின்ற நிலையில்

அப்படி அவன் முருகாற்றுப்படுத்துவதனை கூறுவதிலும் பழைய செய்திகளையே புதிய உட்கோளோடு புதிய கண் கொண்டு பார்க்கின்ற நோக்கத்தையும் காண்கின்றோம்,

'நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவரு ளொருவ னங்கை யேற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ!' (திருமுருகு. 253–255)

என்ற குறிப்புப் பரிபாடலில் வரும் முருகனது பிறப்பு வரலாற்றைச் சுட்டுவது. இது பழைய வரலாறுனாலும், பொதுமக்களிடையே பரவிய நிலை புதிதேயாகும். இதனாலேயே பரிபாடலும் திருமுருகாற்றுப்படையும் சங்க காலத்தின் பிற்பகுதியில் எழுந்தவை என்பர். சேயோனைச் சிவனொடு தொடர்பு படுத்தியதில் வெற்றியடைந்த நிலையில்தான், 'ஆல்கெழு கடவுள் புதல்வ' என்ற தொடர் தோன்றுகிறது. தாய்க் கடவுளின் வழிபாடு பரவியிருந்த நிலையில் அந்தப் பல தெய்வங்களையும் ஒன்றுபடுத்தி அந்தத் தாயின் மகனாக முருகனைக்காண்கின்ற காட்சியையே 'மலைமகள் மகனே!' 'கொற்றவை சிறுவ!' 'பழையோள் குழவி!' என வரும் தொடர்களில் காண்கிறோம்.

தேவசேனாபதி என்ற கதை, 'வானோர் வணங்குவில் தானைத் தலைவ!' எனக் குறிக்கப் படுவதோடு, வீர வழிபாடுகளாக இருந்தவைகள் எல்லாம் முருகனொடு ஒன்றிப்போனதாலே, தேவசேனாதிபதி என்ற கருத்து, 'மாற்றோர் கூற்றே!' 'செருவில் ஒருவ!' 'பொருவிறல் மள்ள!' என்றெல்லாம் கூறுவதற்கு இடந்தருகிறது. முருகன் வைதீகக் கடவுளாக ஓங்கிய நிலையை, 'அந்தணர் வெறுக்கை,' 'அரும்பெறல் மரபின் பெரும் பெயர் முருக' என்றெல்லாம் பாடத் தூண்டுகிறது. 'அணங்குசா லுயர்நிலை' என்பது விசுவரூபத்தின் 'அச்சுறு நிலையையும்' 'மணங்கமழ்தெய்வத்து இளநலம்' என்பது உள்ளுக்குள்ளாய் நின்று ஒளிரும் அவனின் அன்பு நிலையையும் குறிப்பன போலத் தோன்றுகின்றன. இந்தக் குறிப்புக்களும் புதியனவேயாம். 'உலகத்து ஒரு நீயாகித்தோன்ற விழுமிய பெறலரும் பரிசில் நல்கும்' என்பதற்கு நச்சினார்க்கினியர் அத்துவிதக் கொள்கைக்கு ஏற்பக் கூறுவதும் பொதுமக்களிடைப் புதிதாகப் பரவியதேயாம்.

இப்படிக் கூறும்போது காலத்தை உறுதியாக அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை. தொகை நூல்களில் கலித்தொகை பரிபாடல்

என்றவை விடுத்த பிறவற்றிற்கெல்லாம் பிந்தியது என்று மட்டுந் தான் கூறமுடியும். திருமுருகாற்றுப்படை முருகனைப் பற்றியே நேராகக் கூறவருவது. பிறபாடல்கள் அத்தகையன அல்ல. ஆதலின் திருமுருகாற்றுப்படையில் முருகனைப் பற்றிய செய்திகளையெல்லாம் ஓரிடத்தில் கூறுவதற்கு வாய்ப்பு உண்டு. இதனையும் நாம் மனத்தில் இருத்திக்கொள்ள வேண்டும்.

ஆற்றுப்படை புறநானூறு, பதிற்றுப்பத்து முதலிய இடங்களில் ஏதோ விறலியர் முதலியோர் பற்றிக் குறிப்பாகவும் புரவலனைப் பற்றி விரிவாகவும் அமைந்த சுருங்கிய நிலையைக் கண்டோம். ஆற்றுப்படை, பாட்டாக வளர்ந்த நிலையில் ஆற்றுப்படையின் அமைப்பினையும் ஆராய்ந்தோம். தொல்காப்பியச் சூத்திரப் பகுதியோடு இந்த அமைப்பு ஒத்துப் போவதையும் கண்டோம். இந்த நிலையில் திருமுருகாற்றுப்படையின் அமைப்பு எப்படி அமைந்துள்ளது என்பதை ஆராய்வதும் பொருத்தமேயாம்.

பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை என்றெல்லாம் கூறும்போது பரிசில் பெறுவோனையே வற்புறுத்தி அவன் பெயரால் பாட்டு வருவதைக் கண்டோம். இங்கேயோ முருகாற்றுப்படை எனக் கூறும்போது, பரிசில் பெறுவோனை யல்லாமல் பரிசில் தருவோனையே பாட்டின் பெயரில் அமைத்து வழங்கக் காண்கிறோம். இத்தகைய பரிசில் பெறுவோர்களும் தரத்தகவோர்களும் உலகமக்கள் அனைவோருமாதலின் பரிசில் பெறுவோரைத் தனியே எடுத்துக் கூறுவதற்கில்லை எனவேதான் பரிசில் தருவோனை இங்கே குறிக்க வேண்டியதாயிற்று. தொகை நூல்களோ, தொல்காப்பியமோ இந்த வளர்ச்சியை அறிந்திருக்கக் காணோம். பரிசில் வகைத் துறைகளில் ஒன்றாக இதனை அடக்கலாமேயன்றி ஆற்றுப்படை என அடக்குவதற்கில்லை. ஆதலின், புலவராற்றுப்படை என ஒன்றைப் புதிய துறையாகப் படைக்க வேண்டியதாயிற்று. சங்க நூல்களில் வரும் பாடல்களில் பாடும் புலவர்கள் தம்மைப் பாட்டில் மறைத்துக் கொண்டு ஏதோ ஒரு பாத்திரத்தின் பேச்சாகப் பாடுகிறார்கள் என்று கண்டோம். இவை ஒரு கூற்று நாடகங்கள் என்றும் குறிப்பிட்டோம். புலவராற்றுப்படையிலோ புலவன் நேராகத் தன் கூற்றாகப் பாடுகின்ற புதிய முயற்சி தோன்றுகிறது எனல் வேண்டும்.

ஆற்றுப்படை என்ற பெயருக்கு ஏற்பச் சில அமைப்புகள் திருமுருகாற்றுப்படையிலும் பொதிந்துவரக் காண்கிறோம். ஆற்றி

டைக் காட்சி உறழத் தோன்றுவது இங்கே நேரிடையாக விளங்க வில்லே. தான் பெற்றதொரு வளத்தை பெறுஅர்க்கு அறிவுறுத்தும் போது, தான் பெற்றேன் என நேரிடையாகக் கூறும் பகுதியும் இங்கே இல்லே. 'கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்' என்பதற்கிணங்கத் தான் பெற்றதனைப் பெற்றதாகக் கூறிக் கொள் வதற்கு இடமில்லே. இருந்தாலும் பழைய ஆற்றுப்படைத் துறை களில வருவது போல இங்கும்,

'சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே' (திருமுருகு. 62-66)

என்று கூறுகின்ற ஆற்றுப்படைத் தொடக்கம் இங்கேயும் உண்டு. ஆற்றுப்படைகளும் புரவலனது சிறப்பைக்கூறும்போது, அவன் நாட் டினை அமைதியாகக் கண்டு, அவனைப்போய் அடையும் வழியையும், அந்த வழியிலே இரவலன் பெறும் விருந்தையும் பூகோளப் பாங் கோடு விளக்குகின்ற முறையினையும் கண்டோம். அதுபோல இங்கே முருகன் கோயில்கொண்ட இடங்களையெல்லாம் சுட்டிக் கூறுகின்ருர். அங்கங்கே காணும் சிறப்புக் காட்சிகளையும் கடவுட்காட்சியாக விரித்துக் கூறுகின்ருர். பின்னே மக்கள்கூடி வழிபடும் எல்லா இடங் களிலும் அவன் குடிகொண்டிருப்பதை கூறுகின்ருர்.

இங்கே கடவுள் எங்குமாக இருக்கின்ருன் என முடிக்கின்ரு ராதலின் இந்தப் பாட்டு உலகத்தையே சுற்றி வந்து, எங்கு நடக் கின்ற வழிபாடுகளாஞலும் அவையெல்லாம் முருகனைப் பற்றியனவே என முடிக்கின்ருர். இந்தப் பயணத்தில் உலக முழுவதும் சுற்றிப் பின் தொடங்கிய இடத்திற்கே வருவதுபோல, இந்தப் பயணம் அமைந்திருக்கக் காண்கிரும். மதுரைப் பரங்குன்றத்திலிருந்து தொடங்கித் தெற்கே திருச்சீரலைவாய்க்குச் சென்று, பின மேற்கே திரு ஆவினன் குடிக்கும், திருவேரகத்திற்கும் சென்று, பின் உலக முழுவதுமுள்ள குன்றுகளில் எல்லாம் அவனைக் கண்டு, எல்லா வழி பாடுகளையும் அவன் வழிபாடுகளாகவே உணர்ந்து முடிவில் தொடங் கிய மதுரைக்கே வந்து பழமுதிர்சோலையின் அழகிய காட்சியாக முடிகிறது.

உலகம் இருளும், ஒளியும், இன்பமும், துன்பமும் என்றெல்லாம் பலவகையாக இரண்டாட்டமாய் முரணிநிற்கக் காண்கிறோம். இங்கே ஒற்றுமையைக் காண்பதுதான் உண்மைக்காட்சி. ஓர்மரம்; அதில் பலபல வேர்கள்; அடித்தண்டு, பலபல கிளைகள், பலபல இலைகள், பலபல காய்கள், பலபல பழங்கள்! எத்தனை முரண்பாடு! வேரினைத் தொட்டுப் பார்த்தால் ஒருவகை. அடிமரத்தின் நடுவிடை வைரம் மிக உறுதிகொண்டது. பட்டையோ அதனை நோக்க மெல்லியது; இலையோ அதனினும் மெல்லியது. காயோ அதனினும் மெல்லியது. பழம் எல்லாவற்றிலும் மெல்லியது. இப்படி வன்மை மென்மை முரண்பாடுகள் பலபல. அப்படியே வேரின் சுவை வேறு; பட்டையின் சுவை வேறு; நடுமரத்தின் சுவை வேறு; இலையின் துவர்ப்புச் சுவை வேறு. காய் முதலில் துவர்த்துப் பின் புளித்து நிற்கும் முரண்பாடு ஒருவகை, அந்தக் காயே புழுத்துப் பின் மாம்பழம் முதலியவற்றைப் போல இனிய சுவை மிக்கு வருகின்ற புதிய முரண்பாட்டு வளர்ச்சி வேறொரு வகையாக அமைகிறது. அப்படியே நிறத்திலும் மேலே கண்ட பகுதிகளெல்லாம் வெவ்வேறு நிறங்கொண்டு முரண்மிக்கு நிற்கக் காண்கிறோம்.

வேரின் நிறம் வேறு; பட்டையின் சாம்பல் நிறம் ஒன்று; அதை உரித்தால் உள்ளே இருக்கும் வைரத்தின் நிறம் வேறு; இலையின் பசுமை ஒருபுறம். அது துளிர்க்கும் போது கொழுந்தாக இருக்கும் மாமை நிலம் வேறு; அது முதிர்ந்தால் கொள்ளும் மஞ்சள் நிறம் வேறு; அப்படியே அரும்பின் வெண்மை நிறம் அது மலராக முதிரும்போது கொள்ளும் பலவகை அழகிய நிறங்கள், பின் காயாகப் பசுமை நிறம் கொள்ளுவதோடு பழமாகும்போது மஞ்சள் நிறம் கொண்டு நிற்கின்ற பலவகை முரண்பாடுகளையும் காண்கிறோம். இப்படியே ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் வெவ்வேறு மணங்கள் தோன்றவும் காண்கிறோம். இவ்வாறு வேறுபடுகின்ற ஒவ்வொரு பகுதியைத் தட்டிப் பார்த்தாலும் வேவ்வேறு வகையான ஒலிகள் எழக் காண்கிறோம். இப்படிப் பலபல வகையாய் முரணி முரணி வளர்ந்தாலும் இவையனைத்தும் ஒரே உயிர்ச்சத்தின் விளக்கமாகவே அமைகின்றன. வேரில் இருக்கின்ற நிறமற்ற, சுவையற்ற சாறுதான் மரத்தின் வெவ்வேறு பகுதிகளில் சென்று மேலே கூறிய பலவேறு முரண்பாடுகளாக வரக் காண்கிறோம். ஆனால், எல்லாம் அடிப்படையில் உயிர்ச் சத்தான சாற்றின் விளக்கமேயாம். அப்படிக் காணும்

போது முரண்பாடெல்லாம் அகன்று அந்த உயிர்ச்சத்தோடு நம்முடைய உயிர்ச்சத்தும் ஒன்றாக இருப்பதை உணரலாம். அப்பாலுக்கப்பாலான கடவுள் நிலையாகவும், எவற்றிற்கும் உள்நின்று இயக்கும் அடிப்படை இயவுள் நிலையாகவும் அந்த ஒன்றே விளங்குவதைக் காண்கிறோம். அப்போது, அச்சமெல்லாம் நீங்க, என்றும் அழியாத இளம்பெருஞ் சோதியாகத் தோன்றுகின்ற அழகினைக் காண்போம். முரணெல்லாம் ஒழிய அந்த முழுநிலையே நம் நிலையாகத் தோன்றுகின்றபோது, உலகத்து ஒரு நீயாகித் தோன்ற விழுமிய பரிசில் பெற்றவர்களாக ஓங்கி, அனைத்தோடும் ஒன்றுகின்றோம். இப்படி மாறுபாடுகளை யெல்லாம் இயையவைத்து ஒற்றுமைக் காட்சியாகக் காண்கின்ற உணர்வினை, நயத்தை இந்தப் பாட்டில் ஆசிரியர் அழகாகத் தம்முடைய அனுபவத்தில் கண்ட உண்மையாக நம் மனம் கொள்ள புனைந்துரைத்துக் குறிப்பாக விளக்கிக் கொண்டு போகிறார்.

கடலில் எழுகின்ற சூரியன் போல எங்கும் பரந்த பேரொளி உள்ளும் புறமும் ததும்பி வழிகிறது; சூரியன் பொதுவாகக் காயும் போது மலரின் இயல்புக்கேற்ப ஒரு சில தாமரைகள் மலரும்; ஒருசில மலர்கள் காய்ந்து வற்றும். அதுபோல இந்த ஒளியில அனபர்கள் மகிழ்கிறார்கள்; எதிர்ப்போர்கள் மடிகிறார்கள். இநத ஒளியில் மறுவில் கற்பின் வாணுதல் கணவனைக் காண்கிறார் ஆசிரியர்.

ஒளி அவனால் இருளென்ன? எல்லாம் அவனால் இருட்டும் அவன்தானே! கோடை வெயிலின் கொடுமை மழையை உருவாக்கி விடுகிறது. மழைக்காலத்தில் மேகங்கள் வானத்தை மூடிக்கொள்வதால், மழை பெய்யும் பெருங் காடுகளில் ஒரே இருட்டு. அங்கே கண்ணால் பார்ப்பதற்கில்லை. அப்போது அங்கே பூக்கின்ற மலர்கள் கடவுள் மணம் நிறைந்தவை. கடப்ப மலரைக் கையாலே தொட்டு, 'உருள்பூங் கடம்பு!' என்று வியக்கின்றோம். இப்படி இருட்டிலும் உருள்பூந்தண்தார் புரளும் மார்பினனாக அவனைக் காண்கிறார் ஆசிரியர்.

ஒளியும் இருட்டுமாகக் கண்டது போக, ஒளித் தத்துவத்தின் விளக்கம் மலர்ந்து உயரிய நிலையை அடையும்போது தெய்வமாகி நிற்கின்ற நிலை ஒன்று; பேயாக அமைகிற நிலை வேறு. வரையர மகளிர் அழகின் வடிவம். அவர்கள் அணி பூண்டு அழகு செய்து கொள்கிறார்கள். சந்தனத்தைப் பூசியபின் விளவின் தளிரை ஒருவர்

மேல் ஒருவர் கூடி விளையாடித் தூவிக் கொள்ளும்போது, அது தோழியர்களின் மார்பில் பட்டுப் புனை கோலத்தின் முடிந்த முடியின் அழகு நிலையாக விளங்கும்போது, அங்கே ஓர் உண்மை வெளிப் படுகிறது. மலை முழுவதும் இந்த உண்மையை எதிரொலியாக முழக்குகின்றன. 'கோழியோங்கிய வென்றடு விறற்கொடி வாழிய பெரிது' என்று சிலம்பகஞ் சிலம்பப் பாடுகின்ற பாட்டே அங்கே தோன்றுகிற புதுமைக் காட்சி. 'சுரும்பும் மூசாச் சுடர்ப்பூங் காந்தட் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியனையே'" அங்கே காண்கிறார் ஆசிரியர்.

தெய்வநிலை இப்படியானால், பேயின்நிலை என்ன? செடி வளர் கிறது; மாய்கிறது. அதுதானா முடிந்தநிலை! இல்லை! மட்குகிறது, எருவாகிறது. விழுந்த வித்து மறுபடியும் வளர்வதற்கு உயிர்ச் சத்தை ஊட்டுகிறது. பிணநிலையே முடிவுநிலையானால் உலகம் புழுத்துப்போகும். ஆனால், புழுத்தநிலையே மட்குநிலையாகி, உலகம் புழுத்துப்போகாமல் காத்து, உயிர்ச் சத்தாகி, மேலும் உயிர்களை வளர்க்க வழிசெய்கின்ற நுட்பத்தைக் காண்கிறோம். இதனைப் பேய்கள் உண்டு களிக்கும் விருந்தாக, அவைகள் ஆடும் துணங்கைக் கூத்தாகப் பரணி பாடுவதைப் புலவர்கள் ஒரு மரபாய் நிலைநாட்டி யுள்ளார்கள். அங்கே கொடுமையின் உருவான சூர்மா மடிய, 'மா முதல் தடிந்த மறுவில் கொற்றத்து எய்யாநல்லிசைச் செவ்வேல் சேயினையே' காண்கிறார் ஆசிரியர். இத்தகைய இரண்டாட்ட மின்றி ஒற்றுமைக் காட்சியைக் காண வேண்டுமானால், அதற் கொரு வழியுண்டு. அந்த வழியை மேற்கொள்ள உன் மனம் அதனை எதிர்க்காது விருப்பத்தோடு ஒன்றுபடுமானால், அதுவே போதும். அதுவே வழி. உடனேயே உன் மனவிருப்பம் நிறைவேறிவிடும்.

'சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே!'

(திருமுருகு. 62–66)

நீ இருக்கின்ற மதுரையிலேயே திருப்பரங்குன்றத்திலும் அவன் உறையவும் உரியன் என்று சுட்டுகின்றார். இன்னும் அங் கெழும் நாகரிக வாழ்க்கையின் முரண்பாட்டையும், அந்த முரண்

பாட்டிலிருந்து முருகனின் அமைதியை அனுபவிக்கிற நுட்பத்தையும் விளக்குகிறார் ஆசிரியர். நாகரிக நகரத்தின் சிறப்பு என்ன? ஒன்று, போரில் அனைவரையும் வென்று அப்படி எதிர்ப்பவர்களைப் பெண்களென இகழ்ந்து கொடிகட்டிப் பறக்கும் வெற்றிநிலை ஒன்று.

'செருப் புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில் !

(திருமுருகு. 67-69)

இந்த வாயிலுக்குள்ளே அமைதியின் பயனாகப் பல விளை பொருள்கள் பல நாடுகளிலிருந்தும் வர, செல்வத்தின் சிறப்பாக வாணிபம் விளங்கும் கடைத் தெருக்கள் நாகரிகத்தின் இரண்டாவது சிறப்பு. அதுவும் மதுரையின் சிறப்பு. 'திரு வீற்றிருந்த தீதுதீர் நியமத்து மாடமலிமறுகின் கூடல்.'

இந்த ஆரவாரத்தின் எதிர்த்தட்டாக அமைதி விளங்குகிறது. சிறிது மேற்குப்புறம் திரும்பினால் திருப்பரங்குன்றம் தோன்றுகிறது. அங்கே வயல்; அந்த வயலின் வளப்பத்தால் நெல்லேயன்றித் தாமரையும் பொலிந்து விளங்குகிறது. அந்தத் தாமரைக்குள்ளிருக்கும் தேனை உண்ண வந்த வண்டு தாமரை குவியும்போது அதற்குள்ளேயே தூங்கி விடுகின்றது. விடிந்ததும் தாமரை மலர வைகறைப் பொழுதில் நெய்தல் மலரிலுள்ள தேனை உண்டு, மெல்ல மெல்ல மேலே பறந்து சென்று, திருப்பரங்குன்றத்தின் சுனையிலே கண்போல் மலர்ந்த அழகிய மலர்களில் வண்டுகள் பாடிமகிழ்ந்து, எல்லையில்லா இன்பத்தில் திளைத்து நிற்கும். இதுதான் திருப்பரங்குன்றம். இப்படிப் பாடுகின்ற ஆசிரியர் இந்த வண்டின் புனைந்துரையில் செலவு நயந்த சீவனின் வளர்ச்சியையும் சுட்டுகிறார். சேற்றில் மலர்ந்த உலக வாழ்வில் சிக்கிப் பின் படிப்படியாக உயர்ந்து, அவனுடைய அருள் சுனையை எட்டியபொழுது, உலகச் சிறையெல்லாம் நீங்கி அவன் அருட் பார்வையின் எல்லையில்லா இன்பத்தில் திளைக்கின்ற ஓர் உயர் நிலை எய்துவதைக் குறிப்புப் பொருளாக, தொனிப்பொருளாக, இறைச்சியாக ஆசிரியர் சுட்டுகின்றார்.

முருகப்பெருமானுக்கு ஆறு படைவீடுகள் உண்டு என்பது இன்று வழங்கும் நம்பிக்கை. அந்தக் கருத்திற்குப் பிறப்பிடமே திருமுருகாற்றுப்படையாம். முருகன் கோயில்கொண்ட இடங்களெல்லாம் 'குன்றுதொறாடலில்' வழங்கும். 'திருப்பரங்குன்றம்'

முதல் படைவீடு. இரண்டாவது படைவீடாகத் 'திருச்சீரலை வாயை'த் திருமுருகாற்றுப்படை குறிக்கின்றது.

இங்கே முருகனது உலகம் இயக்கும் இயங்கு நிலையைப் புலவர் புனைந்துரைக்கின்றார் அன்பர்கள் கூவி அழைக்கும்போதெல்லாம் மிக விரைவில் ஓடி வந்து தண்ணருள் செய்கின்றான். மயிலேறி வருகின்றான் என்பது பின்னாளைய கருத்து. புலவர் இங்கே முருகன் வேழத்தின் மேலேறி விரைந்து வருவதாகப்பாடுகின்றார். வேழத்தை விரைந்து செலுத்துவதற்காக அங்குசத்தால் குத்துகின்ற வடு, அவன் அன்பர்கள் மேல் கொண்ட விருப்பின் அடையாளமாக விளங்குகின்றதைக் குறிக்கின்றார்.

பலவகை இசைக் கருவிகள் முழங்க வரும்போது மயிற்கொடியும் அகவுகிறது. காற்றைப் போன்ற வேகத்தோடு வரும்போது, யானையின் இருபுறமும் கட்டியமணிகள் ஒலிக்கின்றன. பலவகையான சமரசத்தைக் கூறவந்த புலவர் முரண்படும் பல 'ஜியோமிதி' வடிவங்களின் ஒற்றுமைப் பாங்கினையும் சுட்டுகின்றார். 'ஐவேறுருவிற் செய்வினை முற்றிய முடி' என்பது காண்க. அப்படியே முரண் மிகு திருமணிகளும் அழகின் கோளமாய் விளங்குகின்றன முருகப் பெருமான் ஆறுமுகங்களோடு விளங்குகின்றானும். அண்டத்தில் நடைபெறும் செய்திகளையெல்லாம் ஆறு தலைக்குள் அடக்கி, அவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு முகங்களின் செயல்களாகக் காணுகின்றார். புலவர். ஒவ்வொரு முகங்களின் செயல்களையும் இவ்விரண்டு கைகள் செய்கின்றன. எனவே அண்டத்தின் செயல்களையெல்லாம் இயக்கிவைப்பன, ஆறு முகங்களும் பன்னிரண்டு கைகளுமேயாம். இப்படி அறு முகம் கொண்ட கோலத்தின் உட்பொருளை விளக்குகின்றார் புலவர்.

அண்டம் புற இருளில் விழாது ஒளிபெற்று விளங்கினால்தான் உலகத்தில் பரிணாம வளர்ச்சியே கைகூடுவதாகும். இந்த ஒளி என்றும் உள்ளே ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. அதன் வெளிப்பாட்டு நிலையே உலகப் பரிணாமம். சூரியன் இல்லையானால் உலகில பசும்புல்லும் தோன்றாது. மக்கள் உழைக்க ஊக்கம் தருவதும் சூரியன் ஒளியே. சூரியன் ஒளி முழுவதும் நம்மேல் பாயுமானால் உலகம் தீய்நது விடும். உலகைச் சுற்றிக் காற்று மண்டலம் முதலியன அமைந்து கிடப்பவை இந்த ஒளியின் கடுமையைத் தாங்கிக் கொண்டு நமக்கு வேண்டிய ஒளிகளை மட்டும் வடிகட்டித்

தருகின்றன என்று ஒருவகையில் கூறலாம். இவற்றைப் புராணம் 'வாலகில்லியர்' என்ற முனிவர்களாக உருவகப்படுத்திக் கூறும், இந்தப் பரிணும வளர்ச்சிக்கு இத்தகைய வாய்ப்பினைத்தருவது ஒளி படைத்த ஒரு முகம். அதற்கேற்ற இரு கைகளில் ஒன்று இந்த வாலகில்லியர்களைத் தாங்கி நிற்கும். இந்தத் தொழிலை மிக எளிதில் செய்வதைக் காட்ட மற்றொரு கை இடுப்பில் அமைந் திருக்கும்.

உலகம் விரிந்தவுடன் முருகன் நம்மீது அன்பு பூண்டு நாம் விரும்புகின்ற வரங்களை எல்லாம் கொடுத்தருள வேண்டும் என்றல்லவா விரும்புகிறோம்! அப்படி வரங் கொடுக்க ஒரு முகம் முந்தி நிற்கிறது. அதற்கேற்ற இரண்டு கைகளில ஒன்று அங்குசத் தைக் கொண்டு யானையைத் துரத்தி நம்மிடம் வரும்படி செய்கின்றது. இதுவும் ஒரு விளையாட்டெனத் தோன்ற, அவன் தொடைமேல ஒரு கை தங்குகிறது. மந்திரம் முதலியன கொண்டு செய்யும் வழிபாடுகளாகவும், வேள்வியாகவும் ஆன பலவற்றில் அந்தணர்கள் ஈடுபடுகின்றனர்கள். அப்படிச் சடங்குகளிடையே அவர்கள் கொண்ட உள்ளக் கருத்தினை நிறைவேற்றி வைப்பதும் ஒருபுறம் நடைபெறுகிறது. இப்படி இயக்கி வைபபது ஒரு முகம். அத்தகைய சடங்குகளுக்கு இடையூறாக வருவனவற்றைத் தடுக்க ஒரு கை வேலையும் மற்றொரு கை சுழலும் வட்டத்தையும் தாங்கி நிற்கின்றன.

முருகனுடைய ஒளியால் பரிணும வளர்ச்சி ஏற்பட்டாலும், அன்பர்கள் வரன்களைப் பெற்றாலும், சடங்குகள பயனைத் தந்தாலும் இவையெல்லாம் மேல்வாரியாகத் தான் தோன்றுகின்றன. இவற் றின் ஆழமான உட்பொருளை அறிய ஆராய்கிறது மனம். பல வகை ஐயங்கள் எழுகின்றன. இவையெல்லாம் நீங்கி விஞ்ஞானம் மெய்ஞ்ஞானமாய் அமைதிதரும் இன்ப ஒளி அறிவு வேண்டு மல்லவா? அதனைத் தருகின்றது ஒருமுகம். திங்களின் ஒளி போன்ற குளிர்ச்சியும் மனநிறைவும் அங்கே உண்டு. எல்லாவற்றின் உண்மையை அறியும்போது அச்சமில்லாத அமைதிக்காவல் நிலை நிலைபெறுகிறது. இந்த உண்மை ஆராய்ச்சி எங்கும் பரவி விளங்கு கிறது. இது ஒரு முகத்தின்செயல். அதற்கேற்ற இரண்டு கைகளில் ஒன்று மார்பிலே அஞ்சாதே என்ற குறிப்போடு விளங்க மற்றொருகை அவனுடைய மாலையோடு கீழ்நோக்கி அவனுடைய திருத்தாளைப் புகலிடமாகக் காட்டி நிற்கிறது.

உலகில் எப்போதும் போராட்டம் என்ற ஒன்று அமைதியைக் குலைத்து வருவதை உலகம் தோன்றிய நாளாக மக்கள் கண்டு மனம் புழுங்கி வந்திருக்கிறார்கள். எல்லாம் அவனுல் இந்தப் போராட்டம் அவன் செயலே ஆதல் வேண்டும். இநதப் போராட்டம் வெவ்வேருகத் தோன்றினும் முடிவில் தீமையை ஒடுக்கி நலமே விளங்குகின்ற விழாவாதல் வேண்டும். இந்தக் களவேள்வி புரிகின்றது மற்ருெரு முகம். இந்தப் போர்க்கோலத்திற்கு ஏற்ப ஒரு கை மேலோங்கி நின்று பகையை அழிக்கச் சுட்டுகிறது. மற்ருெரு கை மணியை ஆட்டி அந்த ஒலியிலேயே அச்சத்தை விளைத்துக் கொடுமையை ஒழிக்கிறது கொடுமை ஒழிந்ததும் அன்பு வாழ்வு உலகில் நிலைக்க வேண்டும். இனப் பெருக்கம் உண்டாதல் வேண்டும். ஆண் பெண் போன்ற வரவே, அவர்களிடத்து அன்பினையும் இன்பத்தையும் தோற்றுவித்து, அவர்களை ஒன்ருக்கி அந்த அனபுப்பிணைப்புக் குடும்பமாகவும் பிறபிற கூட்டுறவுத் தொகுதிகளாகவும் வளரும் நிலையை உருவாக்குகிறது. இதை நிலைநிறுத்துவதே ஆருவது முகம். அவனன்றி அணுவும் அசையாது. எனவே, இந்த அன்பு இயக்கம் இயங்க வேண்டுமானுல், அவனிடத்திலும் இது இயங்க வேண்டும். அதனை விளக்குவதுதான் அகத்திணை அன்பின் வடிவான வள்ளியொடு கொஞ்சுகின்ற முகம். இந்த அன்பு வாழ்வு வளர வேண்டுமானுல் மலைவளம் சுரந்து பசியில்லாப் பெருவாழ்வு ஓங்க வேண்டும். எனவே வஞ்சியொடு கொஞ்சும் முகத்திற்கேற்ற இரணடு கைகளில் ஒன்று மழை பொழிகிறது. மற்ருெரு கை திருமணம் செய்கிறது. இவ்வாறு ஆறு முகங்களும் பன்னிரண்டு கைகளும் கொண்ட முருகன் உலகை இயக்கி, வேழத்தின்மேல் விரைந்து அன்பர்க்காக வருகின்ருன். இங்கே உலகில் காணும் பல முரண்பட்ட தொழில்களும், ஒரே ஊற்றிலிருந்து வளர்ந்த ஒருமைப்பாட்டினைக் காண்கிருேம்,

மூன்ருவது படைவீடு 'திருவாவினன்குடி'. இதைப் பாடும் பகுதியே புராணத்தை அடிப்படையாகக் கொண்டது முரண்பட்ட கருத்துககளைக் கூறுவன புராணங்கள். சிவனைப் பெரியன் எனும் சில புராணம்; திருமாலைப் பெரியன் எனும் சில புராணம். இந்தப் புராணங்களின அழகையெல்லாம் அத் தேவர்களின் இயங்கு நிலையில் வைத்து முரண்பாடு நீங்கும் ஒருமைப்பாட்டுக் காட்சியைப் பல வகை அழகோடும், ஆற்றலோடும், ஆழக்கருத்தோடும், உலாக் கோலம் கொண்டு நம்முன் செல்லக் காட்டுகிறது இப் பகுதி.

சூரனுக்கு அஞ்சித் தேவர்கள் எல்லோரும் சிவனிடம் ஊர் வலமாய்ச்சென்ற கதையொன்று. அப்போது முருகனின் தோற்றமும் அவனுடைய திருவிளையாடல்களும் உண்டாக இடமேற்படுகிறது. அவை குறிப்பாகச் சுட்டப்படுகின்றன, முன்னும் பின்னும் இப்பாட்டில். பின்னே சிவனைப் பார்க்க வந்த பிரமன் அகந்தையோடு செல்லக் கண்ட முருகன், அவனை அழைத்துப் பிரணவத்தின் பொருளைக் கேட்க, அவன் அறியாது விழித்தபோது, அவனைக்குட்டிச் சிறையில் அடைத்துப் படைப்புந் தொழிலையெல்லாம் முருகனே செய்து வந்த தாகக் கூறுவது ஒருகதை. நேரிடையாக இந்தக் கதை கூறப்பெற வில்லை. ஆனால், அதன் விளைவாக அனைவரும் ஒருங்கு திரண்டு இந்தப் பகுதியில் கூறுகின்றபடி பிரமனை விடுவிக்க வேண்டும் என்ற வேண்டு கோளோடு ஊர்வலமாகப் போகிற காட்சியைக் காண்கிறோம். முருகனுடைய கதை இப்படிப் பல்கிப் பெருகிப் பொதுமக்களிடத் தேயும் பரந்துநின்ற நிலையும் இங்கே தோன்றுகிறது.

முருகன் 'திருவாவினன் குடியில்' வீற்றிருக்கிறான். அவனை நோக்கிப் புராணத்தில் வரும் தேவர்களெல்லாம் வருகிறார்கள். முருகனுடைய தனிச்சிறப்பு இப்படி சொல்லாமற் சொலலப்படு கிறது. நீத்தோருக்கு எங்கும் பெருமையுண்டு. உள்ளொளி பெருக்கி உடலினை சுருக்கிய கோலமுடன் அவர்கள் ஊர்வலததின் முன்னே போகின்றனர். இவர்கள் வேண்டுகோளை மறுப்பவர்கள் யார்? என்பெழுந்து இயங்கும் யாக்கையோடு உலகை வெறுத்த நிலையில் செல்லும் இவர்களுடைய கோலத்திற்கு மாறாகப் பலபல அழகோடு யாழோர் கூட்டத்தில் சிறநத கந்தர்வர்கள் யாழ்கொண்டு வாசிக் கும் நிலையில் அந்த யாழின் இனிமையோடு பழுத்து இனிக்கும் நெஞ்சினராய் அடுத்து ஆணும் பெண்ணுமாகச செல்கின்றனர். நீத்தோர் நிலையும் கந்தர்வ யாழோர் நிலையும் மாறுபட்டிருந்தாலும் ஒன்றையொன்று அழகுபடுத்தி முரண்பாட்டையெல்லாம் நீக்கி ஒன்றாக்கும் ஒரேநோக்கத்தோடு செல்லும் அந்த ஊர்வலத்தின் அழகு சிறந்து விளங்குகிறது.

இனி, அழகால் மட்டுமன்றி ஆற்றலாலும் ஓங்கித் தோன்று கிறவர்கள் வருகிறார்கள். மாயோன், சேயோன், வேந்தன் வருணன் என நாற்பெருந் தெய்வங்களைக் கூறுகின்றது தொல்காப்பியம். மாயோன், சிவன், இந்திரன், பிரமன் என்ற நாற்பெருந்தெய்வங் களைச்சுட்டுகிறது இப் பாட்டின் இப் பகுதி. இந்த நால்வரில் பிரமன்

சிறைபட்டுக் கிடத்தலின், அவனை விடுவிக்க, 'உலகங் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப் பலர் புகழ் மூவரும்' ஊர்வலத்தின் நடு விடத்தே உயிர்நிலையாக விளங்கி உலா வருகின்றனர். அவர்களைப் புனைந்துரைக்கும் சொற்களிலேயே இவர்கள் மூவரையும், திருமாலை, 'புள்ளணி நீள்கொடிச்செல்வன' என்றும், சிவனை, 'மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வன' என்றும் இந்திரனை, 'யானை எருத்தமேறிய திருகிளர் செல்வன்' என்றும் கூறக்காண்கிறோம். அழலென உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறற் பாம்பைப் பதைபதைக்க எடுப்பது திருமாலின் கருடப்புள். வெள்ளேற்றுக் கொடி உயர்ந்து தோன்றுகிறது. உமையவளும் அமர்ந்து விளங்கு கிறாள். இந்த நிலையில் முப்புரம் எரித்த சிவன் முக்கண்ணோடு விளங்குகிறான். இந்திரனோ நூற்றுபத்தடுக்கிய நாட்டத்தான். நூறுபல் வேள்வி முற்றியவன்.ஒவ்வொரு வேள்வியும் அவனது வென்றடுகொற்றத்தை விளக்கும். அவனுடைய யானை ஈரிரண்டேந்திய மருப்பினது. முப்பத்து முக்கோடி தேவர் என்றால், அவர்கள் நான்கு வகையாகப் பிரிவர். மருத்துவர் இருவர், வசுக்கள் எண்மர், உருத்திரர் பதினொருவர். ஆதித்தர் பன்னிருவர் எனக் காண்க சித்தர், சாரணர் முதலான பதினெட்டுக்கணங்களும் உண்டு. பலவகைத் தொழிலும் செய்யும் இவர்களெல்லாம் பகலிலேயே மாறுபாடின்றித் தோன்றுகிறார்கள். இப்படி ஊர்வலம் செல்லும் இந்தக் கூட்டத்தின் ஆற்றலைச்சொல்லப்போமோ! வான்மீன பூத்தன்ன தோன்றலர். தோற்றம் அப்படி. வான்மீனோடு வளி கிளர்ந்தன்ன செலவினர். அவர்கள் வேகம் இருந்தபடி அது. வளியிடைத் தீயெழுந்தன்ன திறலினர். அவர்களுடைய திறமை இருந்தபடி அது. தீப்பட உருமு இடித்தன்ன குரலினர். அவர் களுடைய பேச்சின் உரம் இருந்தபடி அது. விழுமிய வரமே கேட்க வருகின்றனர். அந்தரத்தில் சுழன்று வருகின்றனர். அவர்கள் வந்து காண அருள் அம்மையோடு வீற்றிருக்கின்றான் முருகன.

புராணத்தில் வரும் தேவர்களெல்லாரும் ஒரே நோக்கத்தில் முரணின்றி ஒன்றுபட்டுவரக் காண்கிறோம். தங்கள் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டுமென்று முருகனிடம் வருகின்றனர். முருகன் கை ஓங்குகிறது. அவனுடைய தனிச்சிறப்பு விளங்குகிறது.

இங்கே வரும் செய்யுள் நடையும் சிறந்து விளங்குகிறது. முரண்பாட்டாரின் ஒருமைப் பாட்டை வற்புறுத்துகின்ற இப் பகுதி

யில் ஒரு செய்யுள் நடைக்குள்ளேயே இன்னொரு செய்யுளின் நடையும் முரணின்றி வரப் பாடுகின்ருர்.

'மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
உருமிடித் தன்ன குரலினர்.' (திருமுருகு. 170-172)

இதனை, 'மீன்பூத் தன்ன தோன்றலர்
மீன்சேர்பு' வளிகிளர்ந் தன்ன செலவினர்,
வளியிடைத் தீயெழுந் தன்ன திறலினர்
தீப்பட உருமிடித் தன்ன குரலினர்'

என்ற செய்யுள் நடையாகவும் படிக்கலாம். இந்த அழகு இந்தப் பகுதியின் பல இடங்களில் சிறந்து தோன்றக் காண்கிறேம்.

'திருவேரகம்' நாலாவது படைவீடு 'திருவேரகத்தை'க் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள சுவாமிமலை என்று இன்று கருதுகின்றனர். ஆனல், நச்சினர்க்கினியர் மலைநாட்டிலுள்ள திருப்பதி என்பர். ஆதலின், அதனை மங்களூருக்கருகில் மேற்குத் தொடர்ச்சி மலையில் காணவேண்டும். வேத வேள்வியில் திளைத்திருந்த அந்தணர்கள் தென்னுட்டில் முருக வழிபாட்டில் ஈடுபட்டு, இந் நாட்டு ஆகமங்களின் வழியே முருகப்பெருமானின் ஆறெழுத்து மந்திரத்தை ஓதி, அதற்கேற்பப் பூப்பலி தூவி பூசை செய்கின்ற முறையைப் பின்பற்றியதைத் திருவேரகக் கோயிலில் காண்கிருர் புலவர். அந்த மந்திரத்தை வெளியே ஒலிக்காது, நாவினுக்குள்ளேயே பழகிப் பாடி உச்சரிக்கும் நிலையில் செபித்தனர் என அறிகிறேம். இவர்களின் தந்தைவழி முன்னேரும் தாய்வழி முன்னேரும் தூய அந்தணர்கள். அந்தணர் குலத்தின் மரபின்படி ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேள்வி செய்வித்தல், ஈதல், காணிக்கை ஏற்றல் என்ற அறுவகைத் தொழிலில் வழுவாது வாழ்ந்த பரம்பரையில் வந்தவர்கள்; நாற்பத்திரண்டு ஆண்டு வரை பிரமசரியம் காத்து, அறத்தைத் தம் வாழ்க்கையாலேயே உணர்த்திய கொள்கையுடையவர்கள்; பூணூல் பூண்டவர்கள்; இருபிறப்பாளர் இந்தப் பொழுதில் செபமும் பூசனையும் நடைபெற வேண்டுமென்று வரையறுத்துக் கூறியபடி நடத்துபவர்கள். ஒவ்வொரு பொழுதும் குளித்து விட்டு ஈரத் துணியைக் கட்டிக் கொண்டு, மணமுள்ள மலர்களைத் தூவிப் பூசனை செய்வார்கள். அந்தணர்கள் கோயிலுக்

குள் பூசனை செய்ய வந்த காலம் பிந்தியதேயாம். நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரமசரியம் காப்பது என்ற விதியும் பின் எழுந்தது என்று ஆசிரியர் காணே என்பவர் சுட்டிக் காட்டுகிறார். (தர்ம சாஸ்திர வரலாறு. History of Dharma Sastra)

மேற்குக் கடற்கரைக்குச் சென்றபின் உலகத்தைச் சுற்றி வருகிறார் புலவர். 'உலகெங்கும் மேவிய தேவாலயங்கள் தோறும் மேவிய பெருமாளே!' எனப் பின்னே வந்தவர் பாடியபடி உலகெங்கும் முருகனையே காணுகிறார் புலவர். முருகன் குறிஞ்சிக் கிழவனாதலின் குன்றுதொறாடுகிறான் எனப் புலவர் அவற்றையெல்லாம் ஒன்றுசேர்த்து ஒரு படைவீடாக ஆக்குகிறார். இங்கே குறிஞ்சி நிலத்தில் வேலன், வழிபடு களத்தைக் குன்றத்துப் பொருள்கள் கொண்டு ஒப்பனை செய்கின்றான். குறவர் மகளிர் கைகோத்துக் குன்றக்குரவை ஆடுகிறார்கள். முருகப்பெருமான் சிவந்த தன் வடிவோடு சிவந்த ஆடையை உடுத்திக் கொண்டு தகரன், மஞ்ஞையன், புகரில் சேவலங் கொடியன், நெடியன், தொடியணிதோழனாய், மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலனாய், அந்தக் குரவைக் கூத்தில் தானும் கைகோத்து ஆடுகிறான். மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து ஆடுகிறானும். பெண்கள் ஒவ்வொருவரும் தங்களோடு கைகோத்துத் தலைத்தந்து ஆடுவதாகவே காண்கின்றனர். ஆய்ச்சியர் குரவையில் இப்படியே கண்ணன் ஆய்ச்சியர் எல்லோருக்கும் நடுவுமாக இருப்பதன்றி ஒவ்வொருவரோடும் கைகோத்து நின்று ஆடுவான். இதனைப் பாகவதம் 'இரசலீலை' என்று கூறும். ஆண்டவன், சீவன் ஒவ்வொருவரிடத் தேயும் அன்பு பாராட்டுவதை இந்த லீலை விளக்குகிறது. பக்தி நெறியில் ஆண்டவனைக் காதலனாகக் கொண்டு (நம்மை) மறந்து ஒன்றும் போது அவன் எங்கும் நின்று ஒவ்வொருவருக்கும் அன்பாகிக் குழைவதனை இந்தக் குரவைக் கூத்து விளக்கும் என்பது இந்தச் சடங்கின் உயிர்க் கருத்து. இந்த உயர்ந்த கருத்தினையே குறவர் வாழ்க்கையில் வைத்து விளக்குகிறார் புலவர்.

'பழமுதிர்சோலை' என்பது ஆறாவது படைவீடு. உலகம் சுற்றிய புலவர் தாம் புறப்பட்ட மதுரைக்கே வருகிறார். ஆனால் மதுரைக்குச் சிறிது வடக்கிலுள்ள 'பழமுதிர்சோலை'க்கு வருகிறார். 'பழமுதிர்சோலை' இன்று அழகர்மலையென வழங்குகிறது. திருப்பரங்குன்றமோ, பழமுதிர்சோலையோ சங்க காலத்திலிருந்த இயற்கை அழகோடு இன்று விளங்கவில்லை. திருப்பரங்குன்றம்

மரங்களையிழந்த வெற்றுப் பாறையாகக் காட்சியளிக்கிறது. அழகர்மலை அவ்வளவு சீர்கேடு அடையாமல் போனாலும், அன்றிருந்த நெருங்கிய காடுகளும், சோலைகளும், வற்றாத அருவிகளும் கொண்டு விளங்கவில்லை. சிலம்பாறு என அதன் தோற்றுவாயைத் தான் காண்கிறோம். எல்லா வளங்களையும் கொண்டு பாய்கிற அருவியாக இன்று காட்சி தரவில்லை.

சிறந்தன எனக் குறிப்பிடத்தக்க வழிபாட்டு முறைகளைப் புராணங்களோடும், வேதங்களோடும், ஆகமங்களோடும், களம் பாடுவது, குரவை அயர்தல், போன்ற தமிழ் மரபுகளோடும் ஒன்று படுத்தி இதுவரையில் புலவர் காட்டிவந்தார். ஆனால், கடவுளை வழி படும் முறைகள், அவரவர்களுடைய வழக்கப்படி மிகமிகப் பலவாம். அவற்றையெல்லாம் விரித்துக் கூறமுடியாது. எனவே சுருக்கமாக இங்கே அவற்றைச் சுட்டுகிறார். ஆட்டினை அறுத்துப் பூவினைத் தூவி ஒவ்வோர் ஊரிலும் எடுக்கின்ற விழாப்பல; அன்பர்கள் பொருந்தி இருந்து அவனை ஏத்துகின்ற நிலை பல; வேலன் வெறியாடும் களனும் பல.

இவையே ஒவ்வோர் இடத்தைச் சிறப்பாகக் கொண்டு வழி படுதலும் உண்டு. காடும், காவும் வேறுபல வைப்பும், சதுக்கமும், சந்தியும், கடம்பும், மன்றமும், பொதியிலும், கந்துடை நிலையிலும் தெய்வம் இருப்பதாகக் கொண்டு வழிபடுவார்கள். இங்கே செய்யப் படுகின்ற பூசையினைச் சிறிது விரிவாகவேக் கூறுகின்றார். பிற வழி பாடுகளை நோக்கும்போது இது அச்சந்தருவதாகவும், கொடுமை யாகவும், இன்றைய நோக்கில் அநாகரிகமாகவும் தோன்றலாம். ஆனால் தான் என்ற முனைப்பு நீங்கி, தன்னை மறந்து, இயற்கையின் விதிப்படி எல்லாம் நிகழ்வதை உணர்ந்து, அவற்றில் ஈடுபடாது, அந்த இயற்கைச் சக்திகளுக்கு உயிர் நிலையாக இருக்கிற அப்பாலைக் கப்பாலான ஓர் உண்மையோடு ஒன்றாகி விடுவதே எங்கும் நாம் காணும் கடவுள் வழிபாட்டின் உண்மைத் தத்துவமாம். அந்த நிலையில்தான் குறமகள் ஆடும் ஆவேசக் கூத்தினையும் புலவர் காண்கிறார். மேல்வாரியான ஆரவாரங்களை விட்டு அடிப்படைத் தத்துவத்தைக் காண்கிறார். அப்போதுதான் குற்றங்கள் மறை கின்றன; குணங்கள் தோன்றுகின்றன; உண்மை வெளியாகிறது.

இனி, சடங்கைப் பார்ப்போம். ஆண்தலைக்கொடி பறக்கிறது. இது கோழிக்கொடி ஆகலாம். பேய் முதலிய தீமை அணுகாதபடி

வெண்கடுகோடு நெய்யையும் அப்பி வைக்கின்றார்கள்; மெல்ல அவன் பெயரைப் பாடி, வணங்கி பூவைத் தூவுகிறார்கள்; செந்நூலைக் கட்டுகிறார்கள்; வெண்பொரியைச் சிதறுகிறார்கள்; கொழுவிய எருதைப் பலிகொடுத்து அதன் இரத்தத்தோடு தூய வெள்ளரிசியைப் பலியாகக் கொடுக்கிறார்கள்; பல கூடைகளில் படையல்களைப் படைக்கின்றார்கள்; மஞ்சளையும் சில வாசனைப் பொருள்களையும் தெளிக்கின்றார்கள்; செவ்வலரி மாலையை ஒரே சீராக வெட்டிச் சுற்றிலும் தொங்க விடுகிறார்கள்; நெருங்கிய மலையில் தாங்கள் வழிபடுகின்ற அந்த இடத்தை வாழ்த்துகிறார்கள்; நறுமணம் வீசும் புகையை ஊட்டுகிறார்கள்; குறிஞ்சிப் பண்ணைப் பாடுகிறார்கள்; அருவி ஒருபுறம் இசைக்க, பலவகையான இசைக் கருவிகளை முழக்குகிறார்கள்; குறிஞ்சியோடு கலந்த செந்தினையைப் பரப்புகிறார்கள்; முருகனுக்கேற்ற பறையைக் கொட்டுகிறார்கள். குறமகள் தன்னை மறந்து ஆடுகிறாள். முருகனை, இப்படி வழிபடுகிறவர்களிடத்தே வரும்படியாக வழிகாட்டுகிறாள் அந்த ஆவேசத்தில். இதுதான் இங்கே உயர்ந்த நிலை, முருகாற்றுப்படுத்த என்று புலவர் பாடுகின்றார்.

எதிர்பாராத இடத்தில் ஓர் ஏழைக் குறமகள் முருகனையே, நம்மீது அன்பு பாராட்டக் கொண்டு வருகிற நிலையைக் குறிக்கும் 'முருகாற்றுப் படுத்த' என்ற தொடரே இந்தப் பாட்டுக்குத் ''திருமுருகாற்றுப்படை'' என்ற பெயரை வாங்கித் தந்தது. அந்த இடத்தில் மக்கள் ஆடுகளம் சிலம்பப் பாடுகிறார்கள்; சங்குகளை ஊதுகிறார்கள்; மணிகளைக் கொடுமையாக ஆட்டுகிறார்கள்; முருகப் பெருமான் ஏறிவரும் வேழத்தை வாழ்த்துகிறார்கள். அங்கே வரங்கேட்டு வரும் ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பிய வரத்தைப் பெறுகிறார்கள்.

இப்படிப் பலபல இடத்தில் பலபல வழிபாடுகள் நிகழும் போது, அவன் அருள் புரிவதை எல்லோரும் அறிவார்கள். எங்கேயாயினும் ஓரிடத்தில் அவனைக் காண வேண்டும் என்ற எண்ணம் உந்தக் காதல் பொங்கக் கும்பிட்டு, 'நீயே புகல்' என அவன் காலில் விழுந்து வணங்கிப் பலவகையாக வாழ்த்தினர்.

இங்கேதான் அந்நாளைய பல தெய்வங்களோடு தொடர்பு கொண்டு ஒன்றாகி நிற்பதைப் புலவர் தமது சமரச நோக்கில் சுட்டிக்காட்டிப் பாடுகின்றார், இதனை முன்னரே சுட்டிக்காட்டினோம். 'கிரவுஞ்சம்' என்ற மலை கிரவுஞ்சன் என்ற அசுரன் மலையாகி

நின்றபோது, அந்த அசுரனையும் கொன்றான் என்பது முருகப் பெருமானுடைய கதை. 'குன்றம் கொன்ற குன்றாக் கொற்றவன்' என இந்த வெற்றியைப் பாடுகின்றார் புலவர். 'பெரும் பெயர் முருக!' என்று முருகன் பிரமமாய் விளங்குவதையும் பாடுகிறார். இப்படியெல்லாம் பாடி நாம் அறிந்த அளவு அவனைப் புகழத் தொடங்கினாலும் அதுவும் முடிவதில்லை.

'நின்னளந் தறிதல் மன்னுயிர்க்கு அருமையின்
நின்னடி யுள்ளி வந்தனென் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமையோய்'' (திருமுருகு. 278-280)

என்று நீ நினைத்ததைச் சொல்வதற்கு முன்னரே அவனுடைய ஏவலாளர்கள் அவனுக்கு அறிவிப்பார்கள். வந்தவன் அருள் செய்யத்தக்கவன், அடியன் என்றும் வாதாடுவார்கள். அடியார் நடுவில் நாம் இருப்பதால் வருகின்ற பெரும்பயன் இது. அச்சந் தரும் விசுவரூபத்தைக் காட்டினால் அஞ்சுவான் என்றும், அவனுக்கு இயல்பாக உள்ள மாறா இளநலத்தோடு நம் உள்ளும் புறமும் இருக்கின்ற நிலையைக் காட்டி, 'அஞ்சாதே!' என்று அன்புடன் கூறிப் பரிசில் தருவான் எனப் பிற ஆற்றுப்படைகளில் வருவது போலப் பரிசிலும் இங்கே குறிக்கப்படுகிறது. ஆனால், இந்தப் பரிசிலென்ன? பிரமம் அன்றி வேறொன்றுமில்லை; அதனோடு ஒன்றாகும்போது வேறொன்றும் தோன்றுவதில்லை. அதனைத்தான் உலகத்து ஒரு நீயாகித் தோன்றிய விழுமிய பெறலரும் பரிசில் என்று நச்சினார்க்கினியர் விளக்குகிறார்.

இதன் பின்னே பழமுதிர்சோலையில் இருக்கின்றவனே இப்படி விளங்குகின்றான் எனக் கூறவருவார், பழமுதிர்சோலையில் பாயும் அருவியினை அது வெள்ளத்தோடு பாயும் இயங்கு நிலையில் புனைந் துரைக்கின்றார். இத்தகைய இயற்கை வருணனைகளில் ஓர் தொனிப் பொருள் — இறைச்சிப்பொருள் தோன்றப்பாடுவது சங்கப் புலவர் இயற்கை. அதுபோல இங்கே ஆண்டவன் அருள் நம் மீது பாய் வதை அருவியின் வீழ்ச்சியாகப் பாடுகின்றார். பலபல வளங்களுடன் நாம் வாழ அந்த அருள் கொழிக்கின்றது. ஆனால், மக்கள் குரங்கு கள் நிலையிலும், யானைகள் நிலையிலும், மயில்கள் நிலையிலும், கோழி கள் நிலையிலும், பன்றிகள் நிலையிலும், கரடிகள் நிலையிலும், ஆமா நிலையிலும் இருந்து குளிரால் நடுங்குகின்றனர்; வெருவிப் பறந் தோடிப் போகின்றனர்; மலைப்பிளவுகளிலும், குகைகளிலும் ஓடி.

ஒளிந்து கொள்கின்றனர்; முக்காரமிட்டு நடுங்குகின்றனர். அகிலும் சந்தனமும் நாம்பூசி மகிழ வருகின்றனர்; உண்டு மகிழத் தேன் கூடுகள் வருகின்றன; பலாப்பழம் ஒருபுறமிருந்து வருகிறது; நாகநறு மலர்கள் உதிர்கின்றன; விலையுயர்ந்த தந்தங்களும் வருகின்றன; பொன்னும் கரையில் கொழிக்கப்பெறுகிறது; இளநீரும், வாழையும் இன்புறுத்த வருகின்றன. இவற்றைப் பூசி, அணிந்து, உண்டு, களித்துப் பேரின்பம் அடையத் தெரியாமல் பக்குவமில்லாத மக்கள் அஞ்சி ஓடுகிறார்கள். ஆனால், அருளோ இழுமென்ன நம்மை நோக்கி இழிதருகிறது. எங்கும் அருள், எல்லாம் அருள். அந்த அருளில் கலந்து ஒன்றாகிவிட்ட வாழ்வே வாழ்வு.

'... ... ... ... பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை யிரியக் கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாவடி யுளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்டு
ஆமா நல்லேறு சிலைப்பச் சேணின்று
இழுமென இழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.' (திருமுருகு. 310-317)

இந்த ஆற்றுப்படையின் அமைப்புப் பழைய தொல்காப்பியர் காலத்திலோ பின் வந்த தொல்காப்பியர் காலத்திலோ அறிந்த தொன்றாக இருக்க முடியாது. இதில் புராணக் கதைகள் பலவும் வளர்ந்தோங்கிப் பொதுமக்களிடையே பரவிய நிலையும் சங்க காலத்தில் எழுந்திருக்க முடியாது. எங்கும் சமரசம் காண்கிற அனுபவ முதிர்ச்சியும் சங்கரர் காலத்தை ஒட்டியதாக வேண்டும். சங்க நடையில்தான் புலவர் பாடுகின்றார். ஆனால், அதில் ஒரு நெளிவும் வேண்டியபடி இயக்கும் ஆற்றலும் இங்கே தோன்றுகின்றன. எனவே, விருத்தப்பாவில் விளையாடும் விளையாட்டெல்லாம் இங்கே ஒரு சிறிது தோன்றுகின்றன. 'திருமுருகாற்றுப்படை' பதினொராம் திருமுறையிலும் ஒரு புதுமையேயாம். எனவே, இது சங்க காலத்தது ஆகாது.

# 7

## மதுரைக் காஞ்சி

மதுரைக்காஞ்சி காஞ்சித் திணையின்பாற் பட்டது. மதுரையை அக்காலத்திலிருந்தபடி புனைந்துரைப்பது. இளையனாக இருப்பது கண்டு நெடுஞ்செழியனை வென்று விடலாமென்று பகைவர்கள் அவனைத் தாக்கினர். தலையாலங் கானம் என்ற இடத்தில் போர் நிகழ்ந்தது. பகைவரை நெடுஞ்செழியன் வென்றது கண்டு புலவர்கள் அவனைப் பாராட்டினார்கள். புலவர் களிடத்தே பெருமதிப்புடையவன் நெடுஞ் செழியன். பகைவர்கள் தம்மீது படை யெடுத்தபோது நெடுஞ்செழியன் ஒரு வஞ்சி னம் கூறிப் பாடியுள்ளான் (சங்க. 308). 'நாட்டைப் பெரிதாகக் கூறுகின்றவர்கள் சிரிக்கத்தக்கவரே. என்னை இளையன் என்று நினைத்துத் தம்முடைய படைச்செருக்கால் படையெடுத்துள்ளனர். இவர்களை ஒருங்கே அழியாது விடுவேனானால், என் நிழற்கீழ் வாழும் குடிமக்கள் கண்ணீர் விட்டு அழும்படி செய்யும் கொடுங்கோலன் ஆவேனாக! இரப் போர்க்கு ஈயாத வறியேன் ஆவேனாக!' என் றெல்லாம் சொல்லியவன் மற்றொன்றும் சொல்கிறான். புலவர்கள் தன்னைப் பாடாது போவார்களாக என்று கூறும்போது, புலவர்

களிடத்தே அவன் வைத்திருந்த பெருமதிப்புப் புலனாகிறது. புலவர்களுக்கெல்லாம் தலைவனாக மாங்குடிமருதனை அவன் குறிப்பிடுகிறான்.

'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை!'

நெடுஞ்செழியனை இடைக்குன்றூர்கிழார், கல்லாடனார், குறுங்கோழியூர் கிழார், நக்கீரர், பரணர், பொதும்பில் கிழார் மகனார், மதுரைக் கணக்காயனார், மாங்குடி மருதனார் என்போர் பலர் பாடியுள்ளனர். இவர்களுக்கெல்லாம் தலைவனாக மாங்குடி மருதனாரைக் கருதுகிறான் நெடுஞ்செழியன். 'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி மாங்குடிமருதன்' என்று அவரைப் புகழ்ந்து பாடுகின்றான்.

அவர் பாடியதுதான் மதுரைக் காஞ்சி. நெடுஞ்செழியனுக்கு அறிவுரை கூறுவதாக அந்தப் பாடல் அமைந்துள்ளது.

'பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும்
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே'

என்று தொல்காப்பியம் காஞ்சித் திணையைப் பாடுகிறது. நேர் சென்று படையெடுத்தலை வஞ்சி யென்றும், அதைத் தடுத்தலைக் காஞ்சி என்றும் பின் வந்தோர் கூறுவர். அதனாலேயே நிலையாமையைக் கூறும் காஞ்சிப் பகுதிகளை யெல்லாம் பொதுவியல் என ஒரு தனித் திணையாக்குவர். தொல்காப்பியர் படையெடுத்தலையும், அதைத் தடுத்தலையும் வஞ்சியென்றே கூறி, நிலையாமையைக் காஞ்சியென்றே கூறுவார்.

'நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது'

என்று வள்ளுவர் கூறுகின்றார். சாதல் என்ற ஒன்று உண்டு. அது உடலாகும் மண்ணை, மண்ணோடு போட்டு விடுகின்றதாம். வித்தகர், இப்படி உடலை மண்ணோடு போட்டு விட்டாலும் தாம் வாழும் போதே நிலையான செயல்களைச் செய்து புகழுடம்பு பெற்று என்றும் வாழ்வர். வள்ளுவர் இப்படி என்றும் வாழவில்லையா? எனவே, நிலையாமையைக் கூறும்போது ஒன்றுமில்லை எனச் சூனியத்தைக் காட்டிக் கையை விரிப்பதல்ல. நிலையாக நிற்கும் ஒன்றனைச்

சுட்டிக் காட்டி, அதன்படி வாழ்ந்து, நிலையாமையை வெல்லுவதே காஞ்சியாம். 'பாங்கருஞ் சிறப்பின்' என்று தொல்காப்பியர் கூறும் சிறப்பும் இதுதான். பிற நிலையாமைப் பாடல்களைப் போலாது, மதுரைக்காஞ்சி, புகழுடம்பு பெறுவோர் வாழும்போது இன்பமாக வாழ்ந்து பிறரையும் வாழ வைப்போரே அவர் எனக் கூறும். உடம்பை வருத்துவோர் ஒருபுறம்; உடலைக் கொழுக்க வைத்து இன்பம் அனுபவிக்க வேண்டுமென்று எண்ணி இன்பமே காணுது போவோர் ஒருபுறம். இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட நல்வாழ்வே மதுரைக் காஞ்சி கூறும் வாழ்வு. இப்படிச் செல்லும் நடுவாழ்வைத் தான் புத்தரும் கூறுகிருர். தமிழ்நாட்டுக்கு வந்த யவனர்கள் தங்கள் நாட்டில் சிறந்தவரெனப் பாராட்டும் 'அரிஸ்ட்டாட்டில்' என்பவரும் இந்த நடுவழியையே கூறுகிருர் என்கின்றனர். குறுந் தொகை போலக் குறுகிச் செல்லாது நெடுந்தொகை போல நீண்டும் செல்லாது இவற்றிற்கு இடையாக நின்று விளங்கும் தொகை நூலை 'நற்றிணை' என்பது போல, இந்த இடைவழியையும் 'நல்வழி' எனலாம். காஞ்சி என்ற பெயரைக் கேட்டு நில்லாமையையே நினைக் கின்றவர்கள் நில்லாமைக்கு இடையே விளங்கும் புகழுடம்பு தரும் வாழ்வை மதுரைக் காஞ்சி வற்புறுத்துவது கண்டு திகைப்பதும் உண்டு.

பாவாணர்கள் பல பாடல்களைப் பாடுவார்கள்; திருத்துவார் கள். முடிவில் ஒரு சிறந்த பாடலை உலகுக்கு அளிப்பார்கள். இப்படிப் பாடல் வளர்ந்த வளர்ச்சியை ஆராய்வது மிகமிகச் சுவையுடையதாகும். ஆனுல், இப்படித் திருத்திய திருத்தங்களும், வளர்ந்த வளர்ச்சியும் பெரும்பான்மையும் நமக்குக் கிடைப்பதில்லை. ஆனுல், மாங்குடி மருதனுர் பாடிய முன்னைய பாடல்களும், அவற் றின் முதிர்ந்த முதிர்ச்சியாக விளங்கும் மதுரைக் காஞ்சியும் நல்லகாலம் நமக்குக் கிடைக்கின்றன.

மதுரைக் காஞ்சி, இருக்கின்ற பாடல்களிலெல்லாம் மிகப் பெரியது; 782 அடிகளைக்கொண்டது. ஆசிரியப் பாட்டுக்கு மேல் எல்லை ஆயிரம் அடிகள் என்பார்கள். அதனை ஒரு சிறிது எட்டிப் பிடிக்கின்றது மதுரைக் காஞ்சி. இந்த மிகப்பெரிய பாட்டையே யன்றிச் சிறிய பாடல்களையும் நெடுஞ்செழியன்மேல் மாங்குடி மருத னுர் பாடியுள்ளார். இப்படிப் பல பாடல்கள் பாடும்போது எழுந்து முற்றிய கருத்துக்கள் மதுரைக் காஞ்சியில் முழுமை பெறு வதைக் காண்கிறேம். அடுத்து ஒருசில பார்ப்போம்.

புறநானூற்றில் வரும் 24-வது பாடல் (சங்க. 2113) நெடுஞ் செழியன் மேல் பாடப்பட்ட பொருண்மொழிக்காஞ்சிப் பாடலாம். தான் இன்பமாக வாழ்வது மட்டுமல்லாமல் தன் குடிகள் எல்லாமும் தங்கள் கடன்களைச் செய்தபின் இயற்கையோடியைந்து இன்பமாக வாழ வகைசெய்கின்றான். முத்தூறு என்ற இடம் ஒன்றுண்டு; நெல்லின் குப்பை மிக்கது; வளமையாக வருகின்ற வேளிர்களுக்கு உரியது அது. பொன்னணி யானைப் படைகளையுடையர் அந்த வேளிர். கழனியில் இருக்கும் கயல்களை மேய்ந்த நாரை நெற்போரில் போய்த் தங்கும். அது ஒருபுறம், 'மிழலை' என்பது மற்றோர் இடம்; நீர்வளம் மிக்கது. நீரைத்தேக்கி வைத்து வேண்டும்போது மதகின் வழியே பாயவைக்கும் ஏற்பாடு அங்கே உண்டு. வேளிர்களில் சிறந்த 'எவ்வி' என்பவனுக்கு உரியது. தனக்காக வைத்துக்கொள்ளாமல் இல்லையென்று வருகிறவர்களுக்கு வாரி வழங்குபவன் அவன். குடி மக்கள் நிரம்பிய நல்லூர் மிக்கது அந்த மிழலை. திணை மயங்கிக் கிடத்தலின் ஓரிடத்திலிருந்தே எல்லாத் திணைவளங்களையும் அங் குள்ளவர்கள் நுகர்ந்து திளைப்பார்கள். உழுதொழிலாளர் நெல்லை அறுவடை செய்கின்றார்கள். சூரியனுடைய வெப்பம் பொறுக்க முடியாமல் அவர்கள் முணுமுணுக்கும்போது உடனே தெளிந்து நிற்கும் கடலின் திரைமேல் பாய்ந்து விளையாடி உள்ளமும் உடலும் குளிர்வர். வலம் பொருந்திய படகுகளை ஓட்டுகின்ற பரதவர்கள் தம்முடைய வாட்டம் தீர வெப்புடைய மதுவை உண்டு தாளந் தப்பாமல் கைகோத்துக் குரவைக் கூத்தாடுவார்கள். மெல்லிய பூங்கொத்துக்களால் ஆகிய கண்ணி மாலையைத் தலையில் அணிந்து கொண்டு ஒள்ளிய வளையல்கள் அணிந்த பெண்களோடு கைகோத்துத் தலைக்கை தந்து குரவையில் தலைமை பூணுவார்கள். மலர்கள் பூத்து நறுமணம் வீசும் கானலில் மாலைகளணிந்த பெண்கள் தங்கள் கடமைகள் முடிந்தவுடன் நுங்கின் நீரும், கரும்பின் தீஞ்சாறும், தென்னையின் இளநீரும் ஒன்றாகச் சேர்த்து இந்த முந்நீர் உண்டு முந்நீராகிய கடலில் பாய்ந்து விளையாடுவார்கள். இப்படி தொழிற் கலையிலும் ஒய்வுக்கலையிலும் சிறந்து விளங்குகிறார்கள். மிழலையையும் முத்தூற்றையும் நெடுஞ்செழியன் போரில் வென்று இத்தகைய நிலைக்குக் கொண்டு வந்துள்ளான். இப்படிக் குடிமக்களிடத்தே இன்பத்தையும் அமைதியையும் நிலைநாட்டிய செழியனை எண்ணு கின்ற புலவர்க்கு, இத்தகைய இன்பத்தையும் அமைதியையும் நிலை நாட்டிய பாண்டியனது நட்சத்திரம் ஓங்கி நிற்கவேண்டும் என்றும், இந்த இன்பத்தையும் அமைதியையும் குலைக்கின்ற பகைவர்களுடைய

நட்சத்திரம் கீழே விழுந்து அவர்களையும் அழிக்க வேண்டும் என்றும் நெடுஞ்செழியனைப் பாட விரும்பிப் பாடுகின்றான். பாண்டியனோடு வளர்ந்து வந்த அவனுடைய உயிர் ஒன்று; அந்த உயிரோடு வளர்ந்து முதிர்ந்த யாக்கையொன்று. இவற்றைப் போலவே இவனோடு வளர்ந்து முதிர்ந்து இவனுடைய வெற்றிக்குத் துணையாயிருந்த வாளில வாழ்கின்ற மறக்குடி மக்கள் தமக்கு எப்பொழுதும் வெற்றி யேவர அவனுடைய காலின் வலத்தை, முயற்சியின் வளத்தை வாழ்த்தி இன்புறுகிறார்கள். இவனிடத்து இரந்து வாழும் இரவல் மக்கள் வரையின்றித் தரும் இவனுடைய ஈகையைப் புகழ்கிறார்கள். மறக்குடி மக்கள் வெற்றியின் சிறப்பாம் பொருட்சிறப்பை வாழ்த்த, இரவலர்கள் அறத்தின் சிறப்பை வாழ்த்த, இன்பச் சிறப்பும் அங்கே ஓங்குகிறது. ஒண்டொடி மகளிர் பொற்கலத்தில் தண்கமழ்தேறல் இவனுக்கு ஊட்ட மகிழ்ச்சியில் சிறந்து இன்பமும் அமைதியும் நிலவ எல்லோர்க்கும் இனிதாக நீ ஒழுகுவாயாக!' என்று வாழ்த்துகிறார். இப்படி நல்லது செய்து நல்வாழ்வு வாழ வல்லவர்களே வாழ்ந்தோர் எனப்படுவார்கள். மற்றவர்களோ தொல்லிசை மலர்தலை உலகத்து வீணே தோன்றி, ஒன்றும் செய்யாது குட்டிச்சுவர் போல் நின்று வீணே செத்தவர்களாவார்கள். இந்தப் பாடலில் வரும் காஞ்சிப் பொருள் விளக்கமே மதுரைக் காஞ்சி.

மதுரைக் காஞ்சியில் 24 ஆவது அடியாகிய 'பிணக் கோட்டக் களிற்றுக் குழும்பின் நிணம் வாய்ப்பெய்த பேய்மகளிர்' என்பது தொடங்கி, 38ஆவது அடியில், 'படையோர்க்கு முருகயர' என்பது வரை பரணிக்கூழ் அடுவதைப் பாடுகிறார் மாங்குடி மருதனார். இந்த பரணிக்கூழ் அடுவதை, போர்க்களம் பாடுவதை இரண்டு பாடல்களில் பாடிப் பழகுகிறார் மாங்குடி மருதனார். ஒன்று புறம் 26 (சங்க. 2114), மற்றொன்று புறம் 372 (சங்க. 2117). காற்றால் உந்தப்படும் கப்பல் போல யானைகள் போர்க்களத்தைப் பகைவர்கள் இல்லாமல் செய்கின்றன. அத்தகைய இடத்தில் வேலேந்திய மறவர்கள் பகையரசர்கள்படப் போர் செய்து, புகழ் மிக்க அரசர்களது முரசினை வெளவுகின்றனர். 'அடுகளம் வேட்ட அடு போர்ச் செழிய' என்று செழியனைப் பாடுகின்றவர் போர்க்கள வேள்வியைச் சுருக்கமாவே கூறுகிறார்.

'முடித்தலை அடுப்பாகப்
புனற்குருதி உலைக்கொளீஇத்
தொடித்தோட் டுடுப்பிற் றுழந்த வல்சியின்'

என அடுகளம் வேட்டலைப் பாடுகின்றார். வேள்வி என்றதும் மறையவர்களது நினைவு வர, அவர்களையே தம் சுற்றமாக மன்னர்கள் அவர்களுக்கு ஏவல் செய்கின்றனர். அப்படி வேள்வி வேட்டல் செய்தான் பாண்டியன். உனக்குத் தோற்றோர் சிறந்தவர்களே. ஏனெனில் அவர்கள், உனக்குப் பகைவர்கள் என்ற பெயர் பெற்று விட்டார்கள். இருந்தாலும் உன்னோடு போர் செய்யும் ஆற்றல் அவர்களுக்கு இல்லை. எனினும் போரில் இறந்து வீர சொர்க்கத்தில் வாழ்கின்றார்கள் என முடிக்கின்றார் புலவர். இந்த அடுகள வேள்வியை விரிவாகப் பாடுன்றார் புறம் 472-ல் (சங்க. 2117).

'விசிபிணித் தடாரி விம்மென ஒற்றி
ஏத்தி வந்த தெல்லா முழுத்த
இலங்குவாள் அவிரொளி வலம்பட மின்னிக்
கணைத்துளி பொழிந்த கண்கூடு பாசறைப்
பொருந்தாத் தெவ்வர் அரிந்ததலை யடுப்பிற்
கூவிள விறகி னாக்குவரி நுடங்கல்
ஆனா மண்டை வன்னியந் துடுப்பின்
ஈனா வேண்மாள் இடந்துழந் தட்ட
மாமறி பிண்டம் வாலுவன் ஏந்த
வதுவை விழவிற் புதுவோர்க் கெல்லாம்
வெவ்வாய்ப் பெய்த பூதநீர் சால்கெனப்
புலவுக்களம் பொலிய வேட்டோய்நின்
நிலவுத்திகழ் ஆரம் முகக்குவ மெனவே.'

இதன் முழு வளர்ச்சியே,

'பிணக்கோட்ட களிற்றுக்குழும்பின்
நிணம்வாய்ப்பெய்த பேய்மகளிர்
இணையொலியிமிழ் துணங்கைச்சீர்ப்
பிணையூபம் எழுந்தாட
அஞ்சுவந்த போர்க்களத்தான்
ஆண்டலை யணங்கடுப்பின்
வயவேந்தர் ஒண்குருதி
சினத்தீயிற் பெயர்புபொங்கத்
தெறலருங் கடுந்துப்பின்
விறல்விளங்கிய விழுச்சூர்ப்பின்
தொடித்தோட்கை துடுப்பாக

ஆடுற்ற ஊன்சோறு
நெறியறிந்த கடிவாலுவன்
அடியொதுங்கிப் பிற்பெயராப்
படையோர்க்கு முருகயர.' (மதுரைக். 24-38)

மாங்குடி மருதனார் வாட்டாற்று எழினியாதனையும் பாடியுள்ளார் (புறம். 396 ... சங்க. 2118). ஆறு அகப்பாடல்களையும் பாடியுள்ளார் (அகம். 89; குறுந்தொகை — 164, 173, 302; நற்றிணை 120, 123: சங்க. 2106 2111). இங்கேயெல்லாம் வரும்-குறிப்புகளும் மதுரைக் காஞ்சியை அணி செய்து முற்றிப் பழுத்திருக்கின்றன.

இனி மதுரைக் காஞ்சியின் அமைப்பினை நோக்குவோம். பரணிக் குறிப்பு வந்தமையை முன்னரே காட்டினோம் (24-38). ஆனால், பிறர் பாடும் பாட்டினை பாடித் தொடங்குவது முறையாகாது. எனவே அவனுடைய உலகு காக்கும் தொழிலைப் பாடித் தொடங்குகிறார். "உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக!" (21). எனவே இந்த காக்குந் தொழில் அவனுடைய குல முதல்வர்களுக்குப் பரம்பரையாக வருகிறது. உலகங் காத்தலைக் கூறினார். அண்டம் முழுவதுமே அக் காவல் தொழிலுக்குத் துணை நிற்பது போலத் தோன்றுவதையும் பாடுகிறார். கடலே எல்லை, இமயமலை ஒரு எல்லையாகத் தோன்றுகிறது. இந்த அகன்றுபட்ட உலகத்தே கொடியன காட்டும் வானிலை அமைப்புகள் ஒன்றும் விழுவதில்லை. காற்றும் வலம் சுழித்தெழுந்து நன்மையே காட்டுகிறது. வான் மீன்களும் உலகுக்குத் தீமையைக் காட்டாமல் நன்மையையே குறிக்கும் முறையில் நெறியே ஒழுகுகின்றன. பகலைச் செய்யும் ஞாயிறும் இரவுச் செய்யும் திங்களும் புகை சூழ்ந்தோ இருண்டோ கிடவாமல் குற்றமின்றிச் சிறந்து ஒழுகுகின்றன. மழையும் உதவுகிறது. திக்கனைத்தும் கொழுக்கின்றன. உழுதால் விதைத்த விதை ஒவ்வொன்றும் ஆயிரமாயிரமாக விளைகின்றன. நிலனும் மரனும் தத்தம் பயனை எதிர் கொண்டு வந்து தருகின்றன. எங்குப் பார்த்தாலும் இந்த இன்ப விளக்கம்தான். துன்பமே இல்லை. இந்த இன்பச் சிறப்பை அந்த நகரத்தின் மிகச் சிறந்த தெருவில் நடமாடும் யானைகளின் இன்பத் தோற்றத்தாலும் கொழுமையோடு, வளம் சிறந்த தோற்றத்தாலும் காணலாம்.

'எவ்வழி நல்லவர் ஆடவர்;
அவ்வழி நல்லை வாழிய நிலனே'

என்பதற்கேற்ப இந்த வளனெல்லாம் உயிரொடு சிறப்பது சிறந்த மக்களாலல்லவா? ‘பொய்யறியா வாய்மொழியாற் புகழ் நிறைந்த நன்மாந்தர்’ இந்தக் குலத்தினரைப் பின்பற்றுகின்றனர். இந்தச் சிறப்பினைக் கண்ட வெள்ளக் கணக்கான மக்கள் பாராட்டத்தானே செய்வர்? இப்படி அண்டத்தோடு ஒன்றுபடுத்திப் பாண்டியர் காவலைப்பாடித் தொடங்குகிறார் மாங்குடி மருதனார்.

நன்மை சிறப்பது தீமை ஒழிந்தாலல்லவா? அந்தத் தீமை ஒழிவதைக் களவேள்விப் பரணியாகப் பாடுகிறார். இதன் தெய்வத் தன்மையை ‘முருகயர’ என்கிறார். இப்படி அமர் கடக்கும் வியன்தானையை உடையவன் பாண்டியன். அவனுடைய தெய்வத் தன்மையும் பழமையும் மேலும் தோன்ற அகத்தியர் வாழும் பொதியமலையோடு ஒன்றுபடுத்தி ‘வரைத்தாழருவிப் பொருப்பிற் பொருந’ என்கிறார். இங்கே அகத்தியர் இராவணனை யாழில் வென்றதை ஆசிரியர் குறிக்கின்றார் என்று நச்சினார்க்கினியர் உரை கொள்கின்றார்.

தீமையை ஒழிப்பது என்பது ஒருபுறமிருக்க இத்தகைய அறப்போர்கள் அறமில்லா வாழ்வின் நிலையாமையை நிலைநாட்டு வதையும் இங்கே மனத்தில் கொள்ள வேண்டும். போரில் நாற் படை வெற்றி கொள்ளும் நிலையை, அவை இயங்கும் நிலையிலேயே காட்டிப் பாடுகிறார். தமிழ்நாட்டு ஒருமை முற்றுப் பெறுதிருப்பது, மூவேந்தரும், வேளிர்களும் முரண்பட்டுப் போரிடுவதாலேயாம். அந்த ஒருமையைப் பாண்டியன் நிலைநாட்ட வேண்டுமானால், மற்றைய இருபெரு வேந்தரையும் வேளிரையும் இவன் வெல்லுதல் வேண்டும். அப்படி வெல்லுவது பாண்டியர்க்கு இன்றியமையாத தாயிற்று. பாண்டிய நாட்டின் தென்கோடியைக் கடல் விழுங்கியது. அதற்கீடாக வடக்கே தன்னுடைய நாட்டை அகலச் செய்ய வேண்டியதாயிற்று. அப்படிச் செய்தவன் நிலந்தரு திருவிற் நெடியோனாகிய பாண்டியன். அத்தகைய நெடியோனின் வழிவந்தவன் நெடுஞ்செழியன்.

தலையாலங் கானத்து இருபெரு வேந்தரையும் வேளிரையும் வெல்லப் போவதாக அவன் கூறிய வஞ்சினத்தைக் கண்டோம். அப்படி அவன் வெல்வதையும் பின்னர்க் காண்போம். அப்படி வெல்வது அவனுடைய குடியின் பழம்பெருமை என்பது தோன்ற இங்கே பாடுகிறார். அந்தக் குடிப்பெருமைக் கேற்ப, ‘மரந்தின்னூஉ வரையுதிர்க்கும், நரையுருமின் ஏறனைய’னாய் மிகச் சிறந்த காவல்

அமைந்த கோட்டைகளையெல்லாம் விரும்பியபடி வென்று, தென் குமரி வடபெருங்கல் குணகுட கடலா எல்லை கொண்ட இந்திய உலகை வென்று, அரசரெல்லாம் தன் ஏவல் செய்ய வென்றானும் நெடுஞ்செழியனைக் 'கொற்றவர்தங் கோனுகுவை' (அடி. 74) என்று பாடுகிறார். இப்படி நெடுஞ்செழியனின் திக்கு விசயத்தைப் பாடத் தொடங்குகிறார் ஆசிரியர். வடபெண்ணையாற்றங்கரையிலுள்ள நெல்லூரை, 'சீர்சான்ற உயர் நெல்லின், ஊர் கொண்ட உயர் கொற்றவ' (அடி. 87-88) எனப் பாடுகின்றார். பூம்புகாரோடு இணைத்துப் புகாரின் பெயரையே இதற்குத் தந்து பேசும் மணிமேகலை. நாடு அகலமாகியது ஒன்று; நெல்லின வளம் சிறந்தது மற்றொன்று. இவை இந்த வெற்றியின் பயன. நெல்லூரின் துறைமுகத்தில் அந் நாளைய கப்பல்கள் பல பண்டங்களைக் கொண்டு வந்து இறக்கு வதைக் குறிக்கின்றார். கடலில் திரையிடைப் போகும் கப்பல்களின் காட்சி அழிவு நிலையிலும் ஆக்க நிலையிலும் இந்த ஆசிரியர் மனத்தை விட்டு அகலுவதில்லை. இங்கே ஆக்க நிலைக் காட்சியைக் காண்கிறோம்

'வானியைந்த இருமுந்நீர்ப்
பேஎநிலைஇய இரும்பௌவத்துக்
கொடும்புணரி விலங்குபோழக்
கடுங்காலொடு கரைசேர
நெடுங்கொடிமிசை இதையெடுத்து
இன்னிசைய முரசமுழங்கப்
பொன்மலிந்த விழுப்பண்டம்
நாடார நன்கிழிதரும்
ஆடியற் பெருநாவாய்
மழைமுற்றிய மலைபுரையத்
துறை முற்றிய துளங்கிருக்கை (மதுரைக். 75-85).

பின்னரும்,

'விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்
நனந்தலைத் தேஎத்து நன்கலன் உய்ம்மார்'

என இறக்குமதியைப் பாடுவார் (அடி. 321-322). அழிநிலைக் காட்சியும் இவர் மனத்தைக் கவர்ந்தது.

'பனைமீன் வழங்கும் வளைமேய் பரப்பின்
வீங்குபிணி நோன்கயி றரீஇ இதைபுடையூக்
கூம்புமுதல் முருங்க எற்றிக் காய்ந்துடன்

கடுங்காற் றெடுப்பக் கல்பொரு துரைஇ
நெடுஞ்சுழிப் பட்ட நாவாய் போல'

என இதனை,

'இருதலைப் பணில மார்ப்பச் சினஞ்சிறந்து
கோலோர்க் கொன்று மேலோர் வீசி
மென்பிணி வன்தொடர் பேணுது காழ்சாய்த்துக்
கந்துநீத் துழிதரும் கடாஅ யானை' (376 – 383)

என யானைக்கு உவமை கூறுகின்றார். பின்னும் மதுரைத் தெருவில் போக்குவரத்தால் அல்லங்காடி அழிதரு கம்பலையைப் பாடும்போது கப்பலை நினைத்துக் கொள்கின்றார் (536 – 544).

'வாலிதை யெடுத்த வளிதரு வங்கம்
பல்வேறு பண்டம் இழிதரும் பட்டினத்து
ஒல்லெ னிமிழிசை மானக கல்லென
நனந்தலை வினைஞர் கலங்கொண்டு மறுகப்
பெருங்கடற் குட்டத்துப் புலவுத்திரை யோதம்
இருங்கழி மருவிப் பாயப் பெரிதெழுந்து
உருகெழு பானாள் வருவன பெயர்தலின்
பல்வேறு புள்ளின் இசையெழுந் தற்றே
அல்லங் காடி அழிதரு கம்பலை.'

புறம் 26-லும் (சங்க. 2114) காற்றிடைச் சிக்கிய கப்பல் இவர் மனத்தைக் கவர்ந்ததைக் காண்கிறோம்.

'நளிகடல் இருங்குட்டத்து
வளிபுடைத்த கலம்போலக்
களிறு சென்று களனகற்றவும்.'

பொதுவாக நெய்தல் நிலத்து ஊரை இவர் நன்கு அறிந்துள்ளார் எனலாம். (புறம் 24, சங்க. 2113) பற்றி முன்னரே குறித்தோம் அங்கே மக்கள் கடலில் குளிப்பதையும், குரவையாடுவதையும், பெண்கள் இளநீரும், நுங்கு நீரும், கருப்பஞ்சாறும் உண்டு முந்நீர் உண்டு முந்நீரில் பாய்வதையும் கண்டோம். நற்றிணை 123-லும் (சங்க. 2111)

'புலவுத்திரை யுதைத்த கொடுந்தாட் கண்டற்
செம்பேர் ஈரளை யலவற் பார்க்குஞ்
சிறு விளையாடல்'

எனப் பாடுகின்றார்,

மாங்குடி மருதனாரின் நெய்தல் நில ஈடுபாட்டை இதனோடு விட்டு, நெடுஞ்செழியனின் வெற்றி உலாவலைத் தொடர்ந்து காண்போம். பிற நாடுகளில் ஆறுவளன் இல்லாதபோது நிலத்துக்குள் கிடக்கும் நீரை ஏற்றம் முதலிய கொண்டு வயலில் நிரப்பிப் பயன் படுத்துவர். உழுவோர்கள் கூட்டம் எருதின் கழுத்தில் கட்டிய மணி பறவைகளை ஓட்டிவிடுகின்றன. இந்த மருத நிலம் நெய்தல் நிலத்தின் அருகே இருத்தலின் அங்குள்ள பரதவர் மகளிர் ஆடும் குரவையோடு இந்த ஓசை ஒத்திருக்கின்றது. நெல்லூரைச் சொல்லி இதனை அடுத்துக் கூறும்போது, கடலைச் சார்ந்த செங்கற்பட்டுப் போன்ற ஊர்களின் நினைவு நமக்கு வருகின்றது. சேரரைச் சேர்ந்தவர்கள், அதிகனைப் போன்று குட்டுவர்களோடு முறைகொள்பவர்கள் இங்கெல்லாம் ஆண்டார்கள் போலும். நல்லியக்கோடன், நன்னன் முதலியவர்கள்மேல் பாடிய ஆற்றுப்படைகளைக் கண்டோம். இவர்களும் விழவு நின்ற வியலாங்கண் தம்மை நாடி வந்தோர்க்குப் பரிசளித்து வந்தார்கள் என்றும் கண்டோம். அத்தகைய பல் குட்டுவர் வெல்கோவாக நெடுஞ்செழியன் விளங்குகிறான்.

முடத்தாமக் கண்ணியார்,

'கருவிவானங் கடற்கோள் மறப்பவும்,
பெருவற ளாகிய பண்பில் காலையும்
... ... ... ... ... ...
கூனிக் குயத்தின் வாய்நெல் அரிந்து
சூடுகோ டாகப் பிறக்கி நாள்தொறும்
குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பைக்
... ... ... ... ... ...
காவிரி புரக்கும் நாடு' (பொருந. 236-248)

என்று பாடுகிறார். அது போல இங்கே மாங்குடி மருதனார், 'இரு வானம் பெயலொளிப்பினும், வரும் வைகல் மீன் பிறழினும் வெள்ளம் மாறாது விளையுள் பெருக, நெல்லின் ஓதை அரிநர் கம்பலை' யைப் பாடுகிறார். அந்த மருதநிலத்திற்கு அருகிலே நெய்தல் நிலம் உண்டு. அங்குள்ள முதுவெள்ளில் என்ற ஊர் மிகச் சிறந்தது. நெய்தல் நிலத்து ஈடுபாடு இங்கும் தோன்றுகிறது.

'சலம்புகன்று சுறவுக்கலித்த
புலவுநீர் வியன்பௌவத்து

நிலவுக்கானல் முழவுத்தாழைக்
குளிர்ப்பொதும்பர் நளித்தூவல்
நிரைதிமில் வேட்டுவர் கரைசேர் கம்பலை
இருங்கழிச் செறுவின் வெள்ளுப்புப் பகர்நரொடு
ஒலியோவாக் கலியாணர்
முதுவெள்ளில்' (மதுரைக். 112 - 119)

என்று பாடுகிறார். இந்த முதுவெள்ளிலில் ' புகழும் செல்வமும படைத்த சிறுகுடிப் பெருந்தொழுவர் இருக்கின்றார்கள். அவர்கள் காணியாளர்களாகவும், கீழ்க்காணியாளர்களாகவும் விளங்குகிறார்கள். இத்தகைய குடிகள் நிரம்பிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நானிலவர்களும், முதுவெள்ளிலை மீக்கூறும் பெருந்தொழுவர்களோடு பொருந்துகின்றவர்கள். பாண்டியன் நெடுஞ்செழியனோடு தமக்குள்ள பழைய பழங்குடி நிலைமையை எடுத்துக்கூறி, அவன் ஏவல் கேட்டு நிற்கின்றனர். இந்த நிலைமை எப்படி ஏற்பட்டது. அவனுடைய வெற்றி உலாவின் முடிமணியாய் விளங்கும் தலையாலங்கானத்து வெற்றியே இதனை விளைவித்தது. 'மயிலே மயிலே இறகு கொடு', என்றால் கொடுக்குமா? போர்க் கொடுமை கண்டே இப்படி மாறினர்.

இளையன் இவனென உளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரும் உடையம் யாமென்று
உறுதுப் பஞ்சா துடல்கினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தர் (சங்க. 1616)

அல்லவா? அவர் அவர்களை வென்றதை,

காலென்னக் கடிதுராஅய்
நாடுகெட எரிபரப்பி
ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து
அரசுபட அமருழக்கி
முரசு கொண்டு களம்வேட்ட
அடுதிறலுயர் புகழ்வேந்தே' (மதுரைக் 125-130)

எனப் பாடுகிறார்.

அவர்கள் தோற்றதனால் உலகத்து நிலையாமை விளங்குகிறது. ஆனால், இந்த நிலையாமையிடையே நிலைத்து நிற்பது எது? இவனுடைய அறமும் அன்பும் தான்.

'உள்ளிலோர்க்கு வலியாகுவன்
கேளிலோர்க்கு கேளாகுவன்'

என்று வாட்டாற்று எழினியாதனைப் (சங்க. 2118), பாடியுள்ளார் மாங்குடி மருதனார். இங்கே நெடுஞ்செழியனை 'நட்டவர் குடியுயர்க்குவை' என்று கூறுவதோடு நிலையாமையைக் குறிக்கச 'செற்றவர் அரசு பெயர்க்குவை' என்றும் பாடுகிறார் (மதுரைக்' 131–132).

கொற்கை, பாண்டியனது ஊர். பாண்டிய நாட்டின் தெற்கேயுள்ள தென்பரதவர்களும் வீரக்குடிகளே. கொற்கை விளைந்து முதிர்ந்த விழுமுத்தினால் சிறந்தது. அத்தகைய 'நற்கொற்கையோர் நசைப்பொருநன்' நெடுஞ்செழியன். பாண்டிய நாட்டிலும் அமைதியை நிலைநாட்டினான். 'தென்பரதவர் போரேறே!' என்று பாடுகின்றார் மாங்குடி மருதனார். அத் தென்பரதவருடைய பெருமைகளை,

'செற்ற தெவ்வர் கலங்கத் தலைச்சென்று
அஞ்சுவரத் தட்கும் அணங்குடைத் துப்பிற்
கோழூஉன் குறைக் கொழுவல்சிப்
புலவுவிற் பொலிகூவை
ஒன்றுமொழி ஒலியிருப்பின்
தென்பரதவர்' (மதுரைக். 139-144)

என்கின்றார் ஆசிரியர்.

இப்படி அரியவற்றையெல்லாம் எளிதிலே கொண்டு, தனக்கு உரியவற்றையெல்லாம் வரையின்றி ஈந்து, அமைதியாக வாழ்வோம் என்று எண்ணாது, பகைவர்மாட்டுப் படையெடுத்துப் புறப்படுகின்றான் நெடுஞ்செழியன். பனி நிறைநத கொடுமுடியின்மேல் உள்ள கானங்களையெல்லாம் கடந்து சென்று, அவர்களுடைய உள்நாட்டில் புகுந்து அவர்களது கோட்டையைக் கைப்பற்றுகிறான. தான் வேண்டிய நாட்டைக் கைப்படுத்தும் வரையில் ஆண்டு பலவானாலும தங்கியிருந்து வெல்கின்றான். 'மேம்பட மரீஇய வெல்போர்க் குருசில்' என்று புகழ்கிறார் ஆசிரியர்.

நிலையாமையை உணர்த்தவந்த ஆசிரியர் இவனைப் பகைத்தவர் நாடு பாழாவதை விரித்துப் பாடுகிறார். புறநானூற்றிலும், அதற்கு மேலாகப் பதிற்றுப்பத்திலும் நாடு பாழாவதைக் கூறுகின்ற பகுதியின் பிழிவு போலத் தோன்றுகின்றது இந்தப் பகுதி. காவல் மரம் நிலைகலங்கி வீழ்கிறது. வற்றா வளம் படைத்த வயல்கள் தீப்பிடித்து எரிகின்றன. நாடெல்லாம் இன்று காடே. ஊரெல்லாம் பாழ். பசுபோன இடத்திலே புலிதான் போகும். துணங்கைக் கூத்தாடும் மகளிரில்லை; பேய்கள்தான் ஆடுகின்றன. பெண்கள் அழுகின்றனர். குடிகள் தங்கள் உற்றாரை நம்பி ஓடுகின்றனர். நெற்களஞ்சியக்குதிர் கரிந்துபோதலின் அங்கே ஆந்தைதான் கூவுகிறது. பொய்கை யெல்லாம் சண்பங்கோரை நிறைந்துள்ளன. விளை வயலில் ஆணும்பெண்ணுமாய் பன்றிகள் திளைக்கின்றன 'வாழாமையின் வழிதவக் கெட்டுப் பாழாயின நின் பகைவர் தம் தேயம்.'

இப்படி அழிவைப் பாடியவர் இவன் படைத்திறனையும் பாடுகிறார். யானையை பரப்பிக்கொண்டு தன் சேனையைச் செலுத்தி முருகப் பெருமான் போலப் பகைமேல் சென்று கணையை மழை போலச் சிதறுகிறான். இந்த ஆரவாரம் வானிலும் எதிரொலிக்கின்றது. குதிரைப்படை எழுப்பும் துகள்கள் எல்லாவற்றையும் மறைக்கின்றன. வெற்றிச் சங்கம் ஒலிக்கிறது. ஊதுகொம்பு முழங்குகிறது. பகைவர் பெருமை கெடுகிறது. கோட்டை இவன் கையில் படுகிறது. இப்படி அழியவே இவனைப் பகைத்த தெவ்வர்கள் இவன் வழி நடக்கின்றனர். இப்படி வியன்கண் முதுபொழில் மண்டிலம் முற்றும் வெல்கிறான்.

இந்த நிலையாமையிடையே நினைப்பது என்ன?

'நின்று நிலைஇயர் நின் நாள்மீன் நில்லாது,
படாஅச் செலீஇயர் நின்பகைவர் மீனே'!
(புறநானூறு 24 - சங்க. 2113)

என்று அவனைப் பாடினார். அவன் வாழவேண்டியது எதற்காக? அறம் நிலைக்க அல்லவா? அந்த அறம் வளர்க்கும் கொற்றத்தை வாழ்க என்கிறார் மதுரைக்காஞ்சியில்.

'அரசியல் பிழையா தறநெறி காட்டிப்
பெரியோர் சென்ற அடிவழிப் பிழையாது
குடமுதற் றோன்றிய தொன்று தொழு பிறையின்

> வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம்
> குணமுதற் றோன்றிய ஆரிருள் மதியின்
> தேய்வன கெடுகநின் தெவ்வ ராக்கம்'' (மதுரைக். 191-196)

என்று வாழ்த்துகிறார்.

சிறிதும் சிதையாத அறனே அவன் வடிவம். என்ன வந்தாலும் பழியின் பக்கம் அவன் திரும்பான். கொடையால் வரும் புகழே அவன் உயிர்நிலை. அப்படிப்பட்ட அவன், எதிரே நின்று, அவனை முன்னிலையாக்கி, அறிவுரை கூற என்ன இருக்கிறது?

> 'உயர்நிலை யுலகம் அமிழ்தொடு பெறினும்
> பொய்சேண் நீங்கிய வாய்நட் பினையே
> முழங்குகட லேணி மலர்தலை உலகமொடு
> உயர்ந்த தேஎத்து விழுமியோர் வரினும்
> பகைவர்க் கஞ்சிப் பணிந்தொழு கலையே
> தென்புல மருங்கின் விண்டு நிறைய
> வாணன் வைத்த விழுநிதி பெறினும்
> பழிநமக் கெழுக வென்னாய் விழுநிதி
> ஈத லுள்ளமொடு இசைவேட் குவையே
> அன்னாய் நின்னொடு முன்னிலை எவனோ' (மதுரைக். 197-206)

என்கின்றார்.

நச்சினார்க்கினியர், 'நின்னொடு முன்னிலை எவனோ?' என்பதற்கு வேறொரு பொருள் கூறுகின்றார்.

> 'பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும்,
> நில்லா வுலகம் புல்லிய நெறித்தே'

என்று காஞ்சித் திணை இலக்கணம் கூறும் சூத்திரத்தில், 'சிறப்பு' என்று வருவதற்குப் 'பிரமமாய் நிற்கும் மோட்ச நிலை' என்றும், 'பாங்கரும்' என்பதற்கு 'எல்லாம் பிரமமாவதோடு வேறின்றி ஒன்றான போது, இரண்டாவது பாங்காக இருப்பது ஒன்றுமில்லை' என்றும் பொருள் கூறுவர். நெடுஞ்செழியன் சனகர் போலப் பிரமமாய உண்மை நிலையை உணர்ந்து அந்தப் பிரமமாய் நின்று ஆள்கின்றவன் எனக் கொண்டு அவனெதிரே பிரமம் தவிர வேறொன்றுமில்லை யாதலின் முன்னிலையாக ஒன்றுமில்லை என்கிறார். தோன்றும் உலகெல்லாம் பிரமமாகவே அவனுக்குத் தோன்றுதலின் அந்த நிலையில் ஆள்பவன் அந்த உலக மயக்கதில் மயங்காது உண்மை

நெறியைக் கைப்பிடித்து பழியஞ்சிப் புகழ் வளர்த்து எல்லோரையும் வாழ வைத்து, இயல்பாகவே வாழ்கின்ருன். இவ்வாறு மனத்தில் கொண்டு பொருள் எழுதுகிருர் நச்சினுர்க்கினியர்.

இத்தகைய அத்வைதக் கொள்கையை நிலைநாட்டிய சங்கரர் எட்டாம் நூற்ருண்டின் முடிவிலும் ஒன்பதாம் நூற்ருண்டின் முதலிலும் வாழ்ந்தவர். இருந்தாலும் அவர் தமக்கு முன்னிருந்த வேதாந்திகளைப் பற்றிக் குறிக்கும்போது ஆச்சாரியர், சுந்தர பாண்டியர் எனப் பாண்டிய அரசரொருவரைக் குறிக்கிருர். பாண்டிய அரசர்களுக்குத் தெரிந்திருந்த உண்மையென்று கொண்டாலும், சங்க காலத்திலேயே இவ்வளவு தெளிவாகவும், விளக்கமாகவும் இந்தக் கொள்கை பரவியிருந்ததென்று கொள்வதற்கு வேண்டிய சான்றுகள் இல்லையெனலாம். எனவே நச்சினுர்க்கினியர் உரையினை வரலாற்று வகையில் கொள்வதற்கில்லை.

படையெடுத்தான்; பகையை வென்ருன்; உற்றவரைத் தாங்கினுன் என்றெல்லாம் நெடுஞ்செழியனின் பெருமைகளைக் கண்டோம். ஆனுல் அவையெல்லாம் அவனுடைய உண்மைப் புகழ். அந்தப் புகழ் என்ன என்பதனையும் மாங்குடி மருதனுர் கூறியுள்ளார். ஒருவன் உயர்நிலையடைய நிலையாமைக்கு அஞ்சி அரச வாழ்வையோ, உலக வாழ்வையோ துறக்க வேண்டுவதில்லை. மோசிகீரனுர் கூறுவது போல,

'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனுல், யானுயிர் என்ப தறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே.' (சங்க. 2202)

வெள்ளைக்குடி நாகனுர்,

...... ...... ...... ......
அறம்புரிந்தன்ன செங்கோல் நாட்டத்து
முறைவேண்டு பொழுதிற் பதனெளியோர் ஈண்டு
உறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் ருேரே
ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
மாக விசும்பின் நடுவுநின் ருங்குக்
கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயில்மறைக் கொன்டன்ருே அன்றே வருந்திய

குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ
வெளிற்றுப்பனந் துணியின் வீற்றுவீற்றுக் கிடப்பக்
களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தரூஉங் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே
மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை ,யல்லன செயற்கையிற் றோன்றினும்
காவலர்ப் பழிக்கும்இக் கண்ணகன் ஞாலம்
அதுநற் கறிந்தனை யாயின் நீயும்
நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறந் தருகுவை யாயினின்
அடிபுறந் தருகுவர் அடங்காதோரே' (சங்க. 2269)

என்று குடிமக்கள் நிலையிலேயிருந்து அரசன் கடமையை வற்புறுத்து கின்றார். பாண்டியன் நெடுஞ்செழியனே தான் பாடிய வஞ்சினக் காஞ்சியில் நாம் சுட்டியபடி அரசியலின் மூன்று குறிக்கோள்களை வற்புறுத்துகின்றான். ஒன்று, குடிகள் தூற்றாமை; இரண்டு புலவ ரால் போற்றப்படுதல்; மூன்று, இரப்போரில்லா நிலை. இரப்போர் எங்கிருந்து வந்தாலும் இரவச்சம் நீங்க பொருள் ஈதல் வேண்டும். இதற்காகவே அரசன் வறியனாக இல்லாமல் பொருளுடையனாதல் வேண்டும்.

'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்' (குறள் 1062)

என்கிறார் திருவள்ளுவர். நெடுஞ்செழியனது முதல் வஞ்சினம,

'எனனிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலேன் ஆகுக!'

என்பதாம். இரண்டாவது வஞ்சினம்,

'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை!'

என்பதாம். மூன்றாவது வஞ்சினம்,

'புரப்போர் புன்கண் கூர,
இரப்போர்க் கீயா இன்மையா னுறவே!' (சங்க. 1616)

என்பதாம். குடிமக்கள் என்பதில் எல்லா இனத்தாரும், தொழிலினரும், மதத்தினரும், பெண்களும், குழந்தைகளும் அடங்குவர். புலவர் என்ற போது, 'உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பில் புலவர்' என்றதனால் எல்லா வகையான அறிவும், ஞானமும், உணர்வும், அனுபவமும் பெற்று விளங்கி உலகை உயர்த்த வல்ல எல்லாத் துறையினரும் அடங்குவர். குடிமக்களை பற்றி முன்னமே கூறினமையால், 'இரப்போர்' என்று கூறுவது பிற கலைகளில் வல்லவராயும், மாட்டாரையும் பிறநாடுகளிலிருந்தும் வருவோரையெல்லாம் சுட்டுமாதலின் உலகமுழுவதும் உள்ள வறுமையை அரசன் போக்க வேண்டும் என்பதாயிற்று. நெடுஞ்செழியன் போருக்கு சென்றான் என்றால், அதன் குறிக்கோள் இப்போது விளங்குகிறது. இத்தகைய அறத்தையே நிலைநாட்டச் சென்றான். எப்படியேனும் வெற்றி கொள்ள வேண்டும் என்று கொள்ளாமல் உண்மை நெறியையே கடைபிடித்தான். முடிவு நன்றாயினும் போதுமெனக் கருதாது அதனை அடையும் வழியெல்லாம் அறவழியாதல் வேண்டுமெனக் கருதினவனாதலின், 'பாணன் விழுநிதி தெறினும் பழி வருக' என்று கொள்ளாது அஞ்சுபவன். இப்படியெல்லாம் செல்வத்தைப் பெற்றாலும் இரப்போர் புன்கண் தீர, உலகில் வறுமையொழிய ஈதலால் வரும் இசையினையே நோக்கமாகக் கொண்டவன். இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி விட்டார் மாங்குடி மருதனார். இனி அப்படிப் பட்டவனுக்கு 'இது செய், அது செய்' எனக் கூறுவதற்கு என்ன உள்ளது? எனவே செய், செய்யாதே என்று கூற முற்படாமல் அத்தகைய குறிக்கோள் வாழ்வு வாழ்பவன் அரசனாயிருந்தால் அவன் வாழ்வும், அவன் நாடும் அவன் மக்களும் எப்படி அமையும் என்பதை நெடுஞ்செழியன் வாழ்வைப் பாடுவார் போலக் குறிப்பாக உணர்த்திப் பொருண்மொழிக் காஞ்சி பாடி முடிக்கின்றார்.

அத்தகைய அரசியல் நிலையைப் பாடுவதற்கு முன் அத்தகைய உயரிய குறிக்கோள் இல்லாத, ஆனால், பிறவகையில் உயர்ந்த அரசையும் சுட்டிக்காட்டி, அத்தகைய அரசர்களது நிலையாமையை வற்புறுத்துகின்றார்.

'நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது.' (குறள் 235)

இந்தக் கருத்தையே சொல்வார்போல மாங்குடி மருதனார் நாம் முன்னே காட்டியது போல,

'ஆங்கினி தொழுகுமதி பெரும ஆங்கது
வல்லுநர் வாழ்ந்தோ ரென்ப தொல்லிசை,
மலர்தலை யுலகத்துத் தோன்றிப்
பலர்செலச் செல்லாது நின்று விளிந்தோரே' (சங்க 2113)

என்று பாடினார். மனிதன் ஒரு நாள் சாகத்தான் போகின்றான். மண் உடலை உண்டாலும் அவன் செய்த செயல் என்றும் வாழும் அந்தப் புகழுடம்பு சாகாது. அதுதான் உளதாகும் சாக்காடு. வள்ளுவர் முதலானோர் இப்படித்தானே இன்றும் வாழ்கிறார்கள்.

தான் கூறப் போவதற்கு அவையடக்கம் போல,

'கொன்னொன்று கிளக்குவல் அடுபோ ரண்ணல்
கேட்டிசின் வாழி கெடுகநின் அவலம்
கெடாது நிலைஇயர்நின் சேண்விளங்கு நல்லிசை'
(மதுரைக். 207-209)

என்று தொடங்குகிறார். அரசு என்றால் என்ன? நிறைய விருந்து, நிறையச் செல்வம இருக்க வேண்டுமல்லவா? அத்தகைய பயனறவு அறியா வளங்கெழு திருநகரில் இசைக் கலைஞர்கள் வருகின்றார்கள். அவர்களுக்கு அணிகலமும் யானைகளும் வாரித் தருகின்றான் அரசன். தன்னொடு கலந்தவர்கள் உவப்பப் பல கோட்டைகளை வென்று, தன்னை வாழ்த்தி வரும் நல்லவர்க்குத் தேரும், குதிரையும் வாரி வழங்குகிறான். பெரியோர் சுற்றமாகக் கள்ளின் பைக்கலத்தைக் குடித்து மகிழ்கின்றான். அவனைப் பணிந்தோர் தேயங்கள் தம்வழி நடககின்றன. பணியார் தேயத்திலிருந்து திறை கொள்ளப் படை யெடுத்துச் சென்று பாசறையில் தங்கிப் பெருந்திறன் பெற்ற மன்னர், மலர்தலை யுலகம் ஆண்டு கழிந்தோர் கரைபொருது இரங்குங் கனையிரு முந்நீர்த் திரையிடு மணலினும் பலரே.

அதனால் அறமொன்றையே குறிக்கோளாகக் கொள்ளாத வாழ்க்கை நிலையான புகழை விளைவிப்பதில்லை. அறத்தையே குறிக்கோளாகக் கொண்ட வாழ்க்கை எப்படி அமையும் என்பதை நம் கண் முன்னே காட்டுகின்றார் ஆசிரியர். அத்தகைய அரசனது

நாடு எவ்வாறு அமையும், அவனுடைய நகரம் எவ்வாறு விளங்கும் அவனுடைய அரசியல் இன்பத்தோடு இயைந்து எவ்வாறு நடை பெறும் என்று மூன்று கூறுகப் பிரித்துப் புனைந்துரைக்கின்ருர். பின் வந்த காப்பியங்களும் புராணங்களும் நாட்டுப் படலம், நகரப் படலம், அரசியற் படலம் எனப் பாடுவதற்கு அடிகோலியவர் மாங்குடி மருதனுரே எனலாம்.

நாட்டைக் கூற வந்தவர் தமிழ் மரபோடு ஒட்டி ஐந்திணை வளத்தை, மருதம், முல்லை, குறிஞ்சி, பாலை, நெய்தல் என்ற ஐம்பால் திணையும் அழகுடன் அமைந்திருப்பதைச் சுட்டுகிருர். மருதந்தானே உணவளிப்பது? அந்த உணவு விளைய வேண்டுமானுல் நீர்வளம் வேண்டும். அதனுல்தானே ஆற்றுப் படலம் பாடுகின்ருர்கள். மேற்கிலிருந்துதான் கிழக்காகப் பாய்கின்றன நதிகள். ஆனுல், கீழ் கடலிலிருக்கின்ற நீர் ஆவியாக மாறி எழுகிறது. ஆனுலும் பெருமழை பெய்யும் காலத்தில் பருவக் காற்று மேற்குக் கடலைச் சுற்றித் தாக்கி மழை பொழிகிறது. பெருமழை இரவும் பகலும் விடாது பெய்கிறது. பள்ளத்திலும் மேட்டிலும் தண்ணீர் திரண்டு ஓடுகிறது. மலைகளில் அருவி நிரம்பி ஒலிக்கின்றது. இப்படிப் பெருமழை பெய்யும்போது மலையின் கொடுமுடியிலிருந்து இடி இடிக்கிறது. மலையின் மூங்கிற் புதரில் காவலாக இருக்கும் களிற்றினங்களும் நடுங்குகின்றன. இந்த மலை, வெள்ளம் தாங்காது போதலின் கீழ்கடலை நோக்கி நீர் ஓடுகிறது. எல்லாவற்றையும் அடித்துக் கொண்டு வருகிற அந்த நீர் சிவந்து விளங்குகிறது. வெள்ளத்தின் பெருக்கால் நீர்ச்சுழிகள் மேலும்மேலும் உயர்ந்து விளங்குகின்றன. ஊர்மக்கள் காவலாக இருந்து வெள்ள நீரைத் தங்களுடைய ஏரிகளில் நிரப்பிக் கொள்ளுமாறு அதற்கென்று ஏற்பட்டவர்கள் பறையறைகின்றனர். இப்படி வெள்ளத்தை அடக்கி ஆளும்போது வளம் சிறக்கின்றது. நெற்கதிர், கழனிகளில் ஓங்கி வளர்தலின் உள்ளே யானை இருந்தாலும் வெளியே யாருக்கும் தெரியாது. பொய்கைகளும், இலஞ்சிகளும் நீர் நிறைந்து தோன்றுகின்றன. தாமரையும், நெய்தலும், நீலமும், ஆம்பலும் வண்டுகளுக்குத் தேன்விருந்து ஊட்டுகின்றன; எங்கும் தம் மணத்தை வீசுகின்றன. இந்தப் புதுநீரோடு மீன்களும் வந்திருக்குமாதலின், வலைஞர்கள் மீன் பிடிக்க வந்திருக்கின்றனர்; அவர்களுடைய ஆரவாரத்தைக் கேட்டுக் கம்புட் சேவல் தூக்கங்கெட்டு ஓடுகின்றன. போர்க்களத்து 'நூழிலாட்டு'ப் போல வேழப் பழனத்து மீன்களைக்

குவிக்கும் 'நாழிலாட்டு' ஆரவாரமாக எழுகிறது. மற்ருெரு புறத்தே கரும்பாலைகளில் கருப்பஞ்சாறு எந்திரத்தில் பிழிபட்டுப் பாய்கின்றன இன்னொரு பக்கம் எருது சேற்றில் சிக்கிக்கொண்டதால், கள் குடித்து மகிழ்ந்து, களத்தில் வேலை செய்வோர் அந்த எருதுகளை அவற்றின் துன்பத்தினின்று நீக்கி ஆர்ப்பரிக்கிருர்கள். விளைவு முடிந்து விட்டது. அறுவடையாகின்றது. அந்த மகிழ்ச்சியில் அரிபறையினது இன்குரல் எழுகின்றது. வளத்தில் திளைக்கும் தோழியர் கூட்டம் கோதையின் தாரும் அணிந்து பரங்குன்றில் ஒருங்கு சேர்ந்து ஆடுகின்ற இசை ஒருபுறம். இப்படி இந்த ஓசையெல்லாம் வானத்தில் எல்லாம் இனிதே ஒலிக்கின்றன. இந்த வளம் சான்ற நிலத்தில் ஒருபுறம் பாண்சேரியும் உண்டு. பாணர்கள் தங்கள் வீட்டில் வளர்ந்த மரத்திலேயே மீன் சீவுகிருர்கள். தங்களுக்கும் விருந்து கிடைக்குமென்று குருகுகள் நரல்கின்றன. இப்படிப் படம் பிடித்துக்காட்டுகின்ருர் நெடுஞ்செழியனது பாண்டி நாட்டு மருதத் திணையை.

மற்ருெரு பக்கம் முல்லை நிலம். சிறு தினை கொய்யப்படுகிறது. வரகின் கதிர்கள் ஈரம் உலர்ந்து முற்றுகின்றன. ஆழ்ந்த பள்ளங்களில் திருமணிகள் விளங்குகின்றன. உயர்ந்த இடத்தில் பொன் கொழிக்கிறது. நௌவிமான் தன் பெண்மானோடு சுற்றிச் சுற்றிக் குதிக்கின்றது. கொன்றையின் நிழலில் பரந்த பாறையை அணி செய்வது போல விளங்கும் நீலப் பயிர்களின் மேலே முல்லை, முசுண்டை முதலிய வெள்ளிய பூக்கள் விழுந்து கிடக்கின்றன. பள்ளங்களில் தெள்ளிய நீரில் நெய்தல் போலச் சில பூக்கள் மலர்ந்து கிடக்கின்றது. இப்படிப் பலதிறப் பூக்களும் விளங்கும் அந்த முல்லை நிலம் எப்படித் தோன்றுகிறது? வெறியாட்டயர்தற்காகக் களம் புனைவதில் வல்ல நல்ல வெறியாட்டயர்பவன் ஒருவன் பல பூக்களும் கொண்டு அணி செய்த வெறிக்களம் போலத் தோன்றுகிறது. இப்படி முல்லை சான்ற புறவு நெடுஞ்செழியனது பாண்டி நாட்டில் விளங்குகிறது.

இங்கு வேறுவகையான உழவு முறை. வயிரமேறிய சந்தனம் போன்ற மரங்களைக் கொன்று வீழ்த்தி அவற்றின் கொம்பினாலேயே சாலோட்டி விதைக்கிருர்கள். துவரை, வெண்கடுகு, ஐவன வெண்ணெல் இவை ஒருபுறம் வளர்கின்றன; மற்ருெருபுறம் பின்னிக் கொண்டு இஞ்சி, மஞ்சள், பச்சைமிளகு முதலிய பல பொருள்கள் மலை நிலத்தில் விளைந்திருக்கின்றன. தினை விளைந்திருக்கும் சாரலில்

வந்து படுகின்ற கிளிகளை ஓட்டுகின்ற ஆரவாரம் ஒருபுறம்; நீலநிற அவரையின் சிவந்த நிறங்கொண்ட தளிரை மேயும் ஆமாவை ஓட்டுகின்ற கானவரது பூசல் மற்றொருபுறம; பரண் கட்டிக் காக்கின்றவன் தினை நிலத்தைப் பன்றிகள் கெடுக்காது இருப்பதற்காகப் பள்ளங்கள் வெட்டி மறைத்து வைக்கின்றான். அதிலே முகத்தை முன்புறமாக வைத்துக்கொண்டு பன்றிகள் வீழ்கின்றன. அதனைக் கொல்கின்ற வர்களின் ஆரவாரம் ஒரு புறம்; வேங்கையின் கிளைகளிலே இருக்கின்ற பூக்களைக் கொய்கின்ற பெண்களின் ஆர்வாரம் மற்றொரு புறம்; ஏற்றினை அட வருகின்ற புலியினோடு நடைபெறும் போரின் பூசல் மற்றொரு புறம். இந்த ஓசைகளெல்லாம் சேர்ந்து மலையிலிருந்து விழும் அருவியினோடு ஒருங்கிணைந்து மலைகளிலெல்லாம எதிர் ஒலி எழுப்பும் இத்தகைய குறிஞ்சி நிலம் நெடுஞ்செழியனது பாண்டி நாட்டில் விளங்கும்.

ஐந்திணை என்றால் பாலைத்திணையும் தானே வர வேண்டும். குறிஞ்சியும், முல்லையும் மழையின்றிக் கோடை நீடியபோது பாலை நிலமாகும். பெரிய மூங்கில் புதர்கள் யானைகளுக்கு இடமாக இருக்கின்றன. ஆனால் மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்வதால் தீப்பொறி பறக்கப் புதர்கள் அழிகின்றன. யானைகள் மெலிந்து போகின்றன; மேய்வதற்கு இடம் நாடி ஓடுகின்றன. தட்டை கொட்டிக கிளியை ஓட்டுவதற்குத் தினை ஒன்றும் விளைந்தபாடில்லை. இசைவாணர் தங்கள் இசைக்கலனை மீட்டியது போலத் தோன்றும் தட்டைப் பாடல்கள் இன்று அழகின்றிக் கிடக்கின்றன. மலைக்கு அழகு அருவி. அருவிகள் வற்றிக் காய்ந்து போனதால் அழகிழந்து கிடக்கின்றன பெரிய மலைகள். காட்டில் வைக்கோல் போலப் புற்கள் உலர்ந்து கிடக்கின்றன. கோடைக் காற்று, மலைப்பிளவுகளையெல்லாம் உண்டு கொண்டது போல, ஒலிக்கும்போது புயல காற்று எழுந்த கடல் போல ஒலிக்கும். அங்கே இருக்கும் குடிசைகள் இலை கொணடு வேய்ந்தவை. அங்கு வாழ்கின்ற இளைஞர்கள் கொலைஞர்களையும் கள்ளர்களையும் ஓட்ட வேண்டியவராதலின் வன்சொல்லே பேசுகின்றனர். அவர்கள் படுப்பதற்கு மான் தோலன்றி வேறு என்ன கிடைக்கும்? இவர்கள் பாண்டியனுக்கு அடங்கிய காவலாளர்களாய்க் கையிலே வில் ஏந்தி வணிகர் முதலியோர் இனிதே செல்லக் கவறுபட்ட வழிகளைக் காத்து நிற்கின்றனர். நிழல் என்பதின் வடிவமே தோன்றாத வேனில் குன்றத்தில் பாலை சான்ற அருவழி இப்படி ஒருபுறம் நெடுஞ்செழியனது பாண்டி நாட்டில் கிடக்கின்றது

நல்ல கதிர் முற்றிய முந்துக்கள் - அரம்கொண்டு அறுத்த சங்கு வளையல்கள் - பல வேறு தானிய வகைகள் - கடல் பாயும் உப்பங்கழியையே வயலாகக் கொணடு அதில் உவர்ப்புடன் கனிந்து விளைந்த வெள்ளை உப்பு - வலியகை கொண்டு ஓட்டும் படகோட்டிகள் கொண்டுவந்த கொழுமீன் துணடுகள் பெரிய கப்பல்களைப் பெருங் கடலில் ஓட்டி அகன்ற உலகத்து நாடுகளின் நலன்களையெல்லாம் கொண்டு வருபவர்கள் - அவற்றோடு கொண்டு வரும் குதிரைகள் - என்ற இவை அனைத்தும் நாளுக்கு நாள் மிகுந்துவரச் சிறந்து தோன்றுகிறது செழியனது பாண்டி நாட்டு நெய்தல் நிலம்.

இத்தகைய அகன்ற இடங்களில் முழவுகள் ஒலிக்கின்றன. பெரிய தெருக்களில் திருவிழாக் கோலம் காண்கின்றோம். துணங் கைக் கூத்து ஒருங்கு நின்று ஆடுகிறார்கள். இப்படி மணம் கமழ்கின்ற சேரிகளில் இனிய ஆரவாரத்தோடு புதிய வளங்கள் சிறந்து தோன்றும் குழுக்கள் பல விளங்குகின்றன. இத்தகைய அழகுடையது அவனுடைய பாடல் சான்ற நன்னாடு.

இத்தகைய நாட்டின் நடுவில் விளங்குகிறது அவனுடைய தலைநகரமாம் மதுரை மாநகரம். மதுரைக்கு வரும் வழியிலுள்ள அழகையும் கூறுகின்றார். குன்றுகளின் உச்சியிலே கலைமான்கள் துள்ளுகின்றன; மயில்கள் அகவுகின்றன வளஞ்சிறந்த சோலைகளில் மந்திகள் விளையாடுகின்றன. ஆகாயத்தின் உயரத்தே ஆரவாரத் தோடு வரும் காற்றுத் தாக்குவதால் சிதையாது நிற்கும் மரங்கள் நிரம்பிய சோலைகளில் ஓடிவருகின்ற தண்ணீர் கரையில் கொழித்த வெண்மணல் குவிந்து வெண்தலையோடு விளங்குகின்றன. இத் தகைய பொழில்கள் தழுவிய ஆற்றின் கரையெல்லாம் கோங்கின் பூமலர் தாவப்பெற்று மாலை போல நீர் ஓடிவரும். இத்தகைய வையையின் துறைதுறைதோறும் பலவேறு பூக்கள் திரண்டிருக்கும். சோலைகள் சூழ்ந்த பெரும்பாண சேரிகள் காலங்காலமாக வாழ்நது வருகின்றன. இந்தச் சேரிகளையும், நிலத்தையும், வளத்தையும் முழு தும் கண்டுகொள்ள முடியாது. பெருஞ்செல்வத்தையுடைய 'மான விறல் வேள்' என்ற தலைவனது அழும்பில் நகரம் போன்ற நாட்டை இழந்தவர்களும், கொழுவிய பல பதிகளில் வாழும் குடிகளை இழந்த வர்களும் தம்முடைய துன்பந் தீரத் துணைபெறுகிறார்கள். பழமை யாகப் பாண்டியனமேல் பகைமை கருதியிருந்தவர்கள் இப்பொழுது இவர்களுக்குத் துணையாக வருகின்றார்கள். அத்தகைய அண்ணல்

யானை அடுபோர் வேந்தர்கள் தங்களுடைய முரசத்தை இடைவழியிலே போட்டுவிட்டு முதுகு காட்டி ஓடுகின்றார்கள். இப்படிப் புறங்காட்டி ஓடும் பலரது முதுகைக் கண்ட கோட்டை ஓங்குகிறது மதுரையில். மண் உள்ளவரையிலும் ஆழ்ந்து சென்று விளங்குகிறது நீலநிறம் பொருந்திய அகழி. அதையடுத்துப் பலபல படைகளோடு விளங்கும் மதில் விண்ணுற ஓங்குகிறது. அதனுடைய வாயில், பழமையாக வரும் பாண்டியரது வன்மையானது நிலைத்துத்தோன்றும் தெய்விகத் தன்மை வாய்ந்தது. கதவுகள் போருக்கும் நெகிழாத திண்மையுடையனவாய் நெய் பூசப்பட்டுக் கரிந்துதோன்றும். மேகம் விளையாடும் மலைபோல ஓங்கிய மாடம். அதனைத் திறந்த போது உள்ளே நுழைகின்ற வாயில் வையையே போய் வருவது போல அகன்று விளங்குகிறது. உள்ளே போனால் அகன்ற நெடிய தெருக்கள் ஆறுகள் போல அகன்று கிடக்கின்றன. வீடுகள் பலநிலை மாடம் கொண்டு வானம் வரை எட்டிக் காற்றுநுழைவதற்குப் பல துளைகளையுமுடையதாக விளங்கும். அந்தத் தெருக்களில் பல்வேறு குழாங்களின் ஆரவாரம் எழும். புயற்காற்று வீசும் கடல் போலப் பறைகள் அடிக்கப்படும். பறையறைவோர், செய்திகளைச் சொல்லிச் செல்வர். குளத்தில் குடைந்துகுடைந்து முழுகும்போது எழும் ஓசை போல ஒலிக்கும் இசைக்கருவிகளை எழுப்பி மகிழ்ச்சி கொண்டு ஆடுபவர்களுடைய ஆரவாரம் ஒருபுறம். ஓவியத்தைப் பார்த்தாற் போல விளங்கும் இரண்டு பெரிய வாணிபத் தெருக்களில் பலவித விழாக்களையும் தெரிவிப்பதற்காக உயர்த்திய அச்சந்தரும் கொடிகள் பல. பாண்டியன் பல்வேறு பெயர்களைக்கொண்ட அழகிய கோட்டைகளைப் பகைவர்களிடமிருந்து வெல்ல வெல்ல நாள் தோறும் தூக்கிக் கட்டப்படுகின்ற நன்கு புனைந்த கொடிகள் பலப் பல. நீர் ஒலிப்பது போல ஆரவாரிக்கும் வேலேந்திய சேனையோடு நெருங்கிய கேடகம் பிடித்த சேனைகளையும் ஓட்டிப் புகழை விளைத்து வரும் அந்தப் பாண்டியனது வெற்றிகளை அறிவிக்கும் நன்கொடிகள் பல. கள்ளின் களிப்பினை எடுத்துக் கூறி அதனை விற்கும் கடைகளின் மேல் பறக்கும் கொடிகள் பலப்பல. மேலும் வேறு பலபல குழுக்களைக் காட்டுகின்ற தனித்தனிக் கொடிகள் பலப்பல. இவையெல்லாம் பெரிய மலைமேலே அருவி போல அசைந்து நிற்கின்றன.

இத்தகைய தெருவில் நாற்படையும் செல்கின்றன; யானைப் படை வரும்போது மதம் பிடித்திருப்பதால் மேலே இருக்கின்ற பாகர்களும் நடக்கப் பார்க்கின்றனர். கீழே காவலாக வரும் பரிக்

கோற்காரரும் அதனை அடக்கப் பார்க்கின்றனர். ஆனால் தன்னைக் கட்டிய கட்டுத்தறியையும் கீழே விழ்த்தி, தன்னை மெல்லத் தளர விட்டுக் கட்டிய இரும்புச்சங்கிலியையும் பொருட்படுத்தாது பாகரை யும் கீழே விழ்த்திப் பரிக்கோற்காரரையும் கொன்று மதம் பிடித்த யானை வருகின்றது என்பதைக் காட்ட, ஊதும் சங்கின் ஓசையைக் கேட்டு, சினம் பொங்கி நிற்கிறது. இது எது போல இருக்கிறது? பனை மீன்கள் போலப் பெரிய மீன்கள் வாழ்கின்ற கடல்; அதன் மேல் பரப்பிலே சங்குகள் மேயும். அந்தக் கடற்பரப்பின் மேல் ஒரு நாவாய் செல்கின்றது; கொடுங்காற்று வீசுகிறது. கப்பலில் நன்றாக அழுத்திக்கட்டிய பலமுள்ள கயிறுகள் அறுபடுகின்றன; பாய்மரத் தில் கட்டிய பாயைக் காற்றுத்தாக்குகிறது; பாய்மரம் ஒடிகிறது. இப்படிச் சினத்தோடு திடீரெனப் புயற்காற்று வீசக் கப்பல்கள்மேல் தாக்குண்டு உலவுகிறது. நெடுஞ் சுழியில் சிக்குகிறது. அதுபோல இருக்கிறது அந்த யானைச் செலவு என்கிறார் ஆசிரியர்.

பின் வருகிறது தேர்ப்படை. ஆகாயமே மறையக் காற் றையும் பிளந்து கொண்டு சூரியனைத் தொழுவது போலத் திரி கின்றது செங்காலன்னத்துச் சேவல். அது போன்ற நிறங் கொண்ட குதிரைகள் தேரில் கட்டப்பட்டுள்ளன. அவை அந்தச் செங் காலன்னம் போல உலவுதலின் தேரும் வேகம் மிகுந்து காற்றுப் போல விரைந்து செல்லும். பின் வருகின்றன குதிரைப் படை. அதன் பிடரியின்மேல் ஒழுங்காக மயிர்கள் விளங்கும். அந்தக் குதிரை மேல் ஏறிய வீரன் குதிரையோட்டும் கோலைக் கையில் பிடித்திருக் கிறான். குதிரை எப்படி ஓட வேண்டும் என்ற கருத்தைக் குறிப்பால் உணர்த்துகிறான். அதற்கேற்பக் குதிரையும் ஆதி மண்டிலமாக ஓடு கிறது. பின்னே வருகிறது காலாட் படை. இவர்கள் போர்க்களக் களமர்கள் வீர பானமாகக் கள்ளைக் குடித்திருக்கிறார்கள். அவர்கள் வருவதே யானை வருவது போன்ற அச்சத்தை உண்டுபண்ணுகிறது. இப்படி அரியவும் பெரியவும் அந்தத் தெருக்களில் வந்து போய்க் கொண்டே இருக்கின்றன.

அந்தத் தெருவில் பலவகைப் பொருள்களை விற்பவர்களும் செல்கின்றார்கள். அழகிய முழவின் தலைப்பக்கம் போலத் தட்டிலே வாசனை வீசும் பூக்களை விற்போர் ஒரு புறம்; பல வகையான பூக்களை எதிர்எதிர் வைத்துத் தொடுத்த கோதை மாலைகளைத் தொடுப் போர் ஒரு புறம்; பலரும் ஒன்று கூடிப் பூந்தாது போல இடித்த

வாசனையுள்ள சுண்ணப் பொடி விற்போர் ஒரு புறம்; பாக்கும் வெற்றிலையும் விற்போர் ஒரு புறம்; சங்கைச் சுட்டுச் சுண்ணஞ் செய்து விற்போர் ஒரு புறம். இரண்டு பக்கமும் வந்த பகைவர்களுக்குத் தப்புவது போலத் தங்கள் உயிருக்கு அஞ்சி கொடுமையாகப் பெருமூச்சு விட்டு ஏக்கத்தோடிருந்து, பின் அவையெல்லாம் போன பின்னர் தங்கள் தொழிலைத் தொடங்குகிறார்கள். பலவேறு தின்பண்டங்களையும் வைத்துக் கொண்டு அவற்றை விற்கிறவர்கள் மலை போன்ற மாடத்தின் கொழுவிய நிழலில் ஒதுங்கி அமர்ந்து கொள்கிறார்கள். அவர்களோடு, பொன்னால் செய்த பாவை பசு வெயிலில் தோன்றியது போல, இளம் பெண்கள் அழகாக ஒழுகும் மாமை நிறத்தோடும், மை ஒழுகுவது போன்ற கூந்தலோடும் ஆடவர்க்கு வருத்தத்தைச் செய்யும் பார்வையோடும் மெல்ல நடந்து கையைத் தட்டி, காமமன்றி வேறொன்றும் கலவாத மாநதரோடு சிரித்து விளையாடிச் செல்கின்றனர். தொன்முது பெண்டிர் வெண் சங்கு போல வாரிவிட்ட கூந்தலோடு இப்படிச் சிரித்து விளையாடும் பெண்களும் மாந்தரும் மகிழ்ந்து திளைப்பதற்காகப் பல வகையான நுகர்பொருள்களை, நுகர்வோர் விரும்பத்தக்க வழியில் செய்து, மூடி கொண்ட செப்பில் பலவகையான அறைகளில் அமைத்துக் கொண்டு, அவர்கள் சூடுதற்கு வேண்டிய வாசனை வீசும் பூக்களையும் உடன் கொண்டு வீடுவீடாகச் சுழன்று வருகின்றனர்.

திருமாலுக்குக் கொண்டாடும் திருவிழாவில் முதல் நாளிலிருந்து ஏழாம் நாள் மாலைக் காலத்தில், எல்லாப் பாவங்களையும் நீக்கும் தீர்த்தமாடுதல் திருநாளாம். பிறிதெங்கும் காணாதபடி கொண்டாடப்படும் சிறப்புடைய இந்தத் திருவிழாவில் நாடே திரண்டு ஆரவாரிக்கிறது. கரையில் மோதும் கடலானது மேகம் தண்ணீரைக் குடிப்பதால் குறைவதுமில்லை. தண்ணீர் வந்து பாய்வதனால் மிகுவதுமில்லை. அதுபோல இந்தத் திருவிழாவில் பண்ணியம் முதலியன விற்போரைப் பற்றிக் கூறினோம். அங்கு நிறைந்த பொருள்கள் அங்கு வருவோர் வாங்கிக் கொண்டுப் போவதால் குறைவதுமில்லை. புதிதுபுதிதான பொருள்களை மாந்தர் கொண்டு வருவதனால் மிகுவதுமில்லை. இப்படியாக மாடங்கள் விளங்கும் புகழ் மலிந்த மதுரையில் பகல் காலத்தே விற்பனை செய்யும் நாளங்காடியில் எழுந்த பலவகை ஓசைகள் ஆரவாரித்தன.

அந்தி விழாவில் கடவுள் எழுந்தருள்கிறார். அந்தத் திருவிழாவைக் காண்பதற்காகக் குற்றமெல்லாம் நீங்க உருக்கிச்

செய்த பொன்னுபரணங்களையுடைய இந்தப் பெண்கள் மாடத்தின் மேலிடத்திலிருந்து தெய்வப் பெண்கள் கீழிறங்குவது போலக் கீழே இறங்குகின்றனர். அவர்கள் பூசியிருக்கும் வாசனை தெருவெல்லாம் வீசுகிறது. ஆனால் அவர்களுடைய முகம் திருவிழாவில் பிடித்திருக்கும் கொடிகள் காற்றில் அலைவதால் மேகத்தில் மறையும் சந்திரனைப் போலத் தோன்றி மறைகின்றன செல்வர்கள் வெயிலின் கொடுமை நீங்கி விளங்கும் மாலைச் செஞ்ஞாயிறு போலச் சிவந்த நுண்ணிய பட்டாடை உடுத்திருக்கின்றனர். அதற்குமேல் வாளைப் புனைந்து கட்டிக்கொண்டிருக்கின்றனர். வீரக்கழலின் தழும்பு இருக்கும் காலினையுடைய தாங்கள் ஏறிய தேரின் விளிம்பிலே இருக்கும் பிரம்பின்மேல் அவர்களுடைய மேலாடைப் புரள்கிறது. பாண்டிநாட்டவர்களாதலின் அவர்கள் வேப்பந்தாரையும் அணிந்திருககிறார்கள். நீலமணி மாலை போலச் செங்கழுநீர் மாலை அணிகலனணிந்த மார்பில் முத்தாரத்தோடு கலந்து விளங்குகின்றது. இவர்கள் தேரில் பூட்டிய குதிரைகள் காற்றைப் போல் ஓடுகின்றன. காலாட்படையினர் காத்துச் செல்கின்றார்கள்.

பஞ்ச பூதங்களையும் படைத்த மழுவாள் நெடியோனான சிவபெருமான் தலைவனாக உள்ள தெய்வங்களுக்கு மாற்ற முடியாத மரபின்படி உயர்ந்த பலியைக் கொடுப்பதற்காக இந்தச் செல்வர்கள் தங்கள் நாண்மகிழ் இருக்கையை விட்டு இப்படி வருகின்றார்கள். அந்தத் தெய்வங்கள் மாசு மறுவற்ற உடலையுடைவர்கள்; சுடர் போல் விளங்கும் அவர்கள் சூடிய பூக்கள் வாடுவதில்லை; அவர்கள் கண்ணிமை இமைப்பதில்லை மணத்தையுடைய அவியாகிய உணவினை மட்டுமே உட்கொள்கின்றனர். இப்படிபட்டவர்க்குப் பலி கொடுக்கும்போது அந்திக் காப்பின் போது பலவகை வாச்சியங்கள் ஒலிக்கின்றன. அழகு விளங்கும் பேரிளம்பெண்டிர்கள் தம்மைக் காக்கும் கணவர்களைத் தழுவிக் கொண்டு தாமரைப் பூவைக் கையில் பிடித்தாற் போலத் தங்களுடைய குழந்தைகளையும் எடுத்துக் கொண்டு தாமும் கணவரும் ஒரே மனமுடையவராய் பூவும் புகையும் கொண்டு தொழுது வாழத்தி வணங்கிப் போற்றிப் புரக்கும் புத்தர் பள்ளி ஒரு புறம்.

குன்றையே குடைந்து செய்தது போன்ற அந்தணர் பள்ளி மற்றொரு புறம். அங்கே பெரியோர்கள் மேவி இனிதாக வாழ்கின்றனர். சிறந்த வேதத்தைப் பொருள் விளங்கப் பாடுகின்றார்கள். மிகச்சிறந்த ஒழுக்கத்தோடு விளங்குகின்றார்கள். இந்த உலகத்

திலே ஒப்பற்றவராக விளங்குகின்றார்கள். நச்சினார்க்கினியர் இவர்கள் பிரமமான நிலத்தில் தாங்களே பிரமமாக விளங்குகின்றார்கள் என்று பொருள் கூறுகிறார். இங்கிருந்தே உயர்நிலையுலகத்தை அடையக்கூடிய அறவழியில் சிறிதும் தவறாது எல்லாவுயிர்களுக்கும் அன்பு பொங்கும் நெஞ்சத்தோடு வாழ்கின்றார்கள். இவர்களை நச்சினார்க்கினியர் 'சீவன் முத்தர்' என்பர்.

அமண்பள்ளி மற்றொரு புறம். அங்கே இல்லறத்தில் ஒழுகும் சமண மதத்தினர் தேன் நிறைந்து வண்டு மொய்க்கும் மலர்களையும் புகையையும் கொண்டு வந்து வணங்குகிறார்கள். அங்குள்ள அமணத் துறவிகள் முக்காலத்தையும் நன்குணர்ந்தவர்கள்; அவற்றை உலகத்தார்க்குச் சொல்கின்றவர்கள்; வானத்தின் செய்திகளையும் பிற உலகின் செய்திகளையும் அறியும் அறிஞர்கள்; தமக்கு அமைந்த நோன்புகளையும் அந்த நோன்புகளுக்குச் சலியாத யாக்கைகளையும் உடையராய்க் கல்வி நிறைந்து, ஆனால் செருக்கின்றி வாழும் அறிஞர்களாகிய அவர்கள் அந்தப் பள்ளியில் நெருங்கியிருக்கின்றார்கள். அவர்கள் தங்களுடைய நோன்புகளை நோற்பதற்காகக் கல்லைப் பொளிந்தாற் போன்ற சிறிய வாயையுடைய குண்டிகையை உறியிலே தூக்கி வைத்துள்ளார்கள். அவர்கள் அருள் எல்லோருக்கும் வருவதற்காக விளங்கும அந்தப் பள்ளியில வாழ்கின்றார்கள். அந்தப் பளளி பொய்கையைக் கண்டாற்போல் குளிர்ந்திருக்கும். அதன் சுவர்கள் செம்பால இயன்றது போலத் தோன்றும். அதிலே பல சித்திரங்கள் வரையப்பட்டிருக்கும். கண்ணை உயர்த்திப் பார்க்கலாம் என்று எண்ணினால் மேற்படி பார்க்க முடியாத அளவு மிக உயர்ந்து தோன்றும் அந்தப் பள்ளி. இப்படி வியத்தகு நிலைமையுளள அங்கே எளிதில் மலர்களைப் பறிப்பதற்காகச் செடிகளை வைத்திருப்பதால் அமண்பள்ளி பூம்பள்ளியாகத் தோன்றுகிறது. இப்படிப் புத்தப் பள்ளியும், அந்தணர் பள்ளியும், அமண்பள்ளியும் பல மலைகள் கூடி நின்று பொலிவன போலத் தோன்றுகின்றன அந்த மதுரை மாநகரில்.

அறங்கூறு அவையம் ஒருபுறம் விளங்குகிறது. தம்மிடத்திலே முறையிட வருபவரது, அறங்கிடைக்குமோ கிடைக்காதோ என்ற அச்சத்தையும், துன்பத்தையும், பேராசையினையும் நீக்கி, கோபமோ மகிழ்ச்சியோ கொள்ளாது அறத்தைக் காத்து, துலாக்கோலைப் போல நடுநிலைமையுடையோர்களாக விளங்கி, இதற்கு வேண்டிய

சிறந்த நோன்பினைக் கடைப்பிடிப்பவர்களாய் விளங்குவோர்கள் தருமத்தை நிலைநாட்டி விளக்குகின்ற அவையம் சிறந்து தோன்றுகிறது. இந்த அவையத்தை 'தர்மாசனத்தார்' என்பர் அடியார்க்கு நல்லார்.

அமைச்சர்கள் மற்றொரு புறம் விளங்குகின்றனர். பல யாகங்களைச் செய்து அதன் முடிவில் நன்கு விளங்குகின்ற உடைகளை உடுத்திக் கொண்டு யாகத்தாலே சொர்க்கம் புக விரும்புவோரைப் புகுவிக்கும் யாகத் தலைவர்கள் போல இந்த அமைச்சர்களும் நன்றும் தீதும் கண்டு ஆராய்ந்து, தீமைகளை அடக்கித் தீயவையிலே போகாமல் ஒழுகுபவர்கள். அன்பையும் அறத்தையும் எப்பொழுதும் தவறாது காக்கின்றவர்கள் பழி தம்மிடத்தே வாராதபடி நீக்கிக் காத்துக்கொண்டு உயர்வு எய்தியவர்கள். இதனால் எங்கும் புகழ் நிரம்பியவர்கள். இவர்கள் தலைப்பாகை அணிந்துள்ளார்கள். இப்படித் தலைமை நிரம்பியதால் 'காவிதிப் பட்டம்' பெற்றவர்கள்.

பிறநாட்டில் வாணிபம் செய்து அந்த நாட்டின் பொருள்களை உள்நாட்டில் விற்கின்ற வணிகர் கூட்டம் ஒருபுறம். அவர்கள் அறநெறி பிழைப்பதில்லை; அந்த நெறியிலேயே ஒழுகுகின்றார்கள். அவர்களுடைய நல்ல வீடுகள் குன்றுகள் பல கூடியிருப்பனபோலத் தோன்றும். அவ்வளவு உயரமாக இருத்தலினால் உயரப் பறக்கும் பருந்துகளும் அவ் வீட்டின் உச்சியில் தங்கிப் பின் மேலும் பறக்கும். அந்த வீடுகளில் வெவ்வேறு வகையான பல பண்டங்களும் உணவுகளும் மலிந்து அழகாக விளங்கும். மலையிலிருந்தும், நிலத்திலிருந்தும், நீரிலிருந்தும் பிறவற்றிலிருந்தும் பிறக்கின்ற பொருள்களையும், பல்வேறு மணிகளையும், முத்துக்களையும், பொன்னையும் விலையாக வாங்கிக் கொண்டு, இப்படிப் பிற நாட்டுப் பொருள்களை விற்கின்ற வாணிபர்கள் ஒருபுறம்.

ஐம்பெருங்குழுவென அரசனைச் சார்ந்தவர்களைப் பிரித்துக் கூறுவதுண்டு. அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதர், ஒற்றர் என்ற ஐவரும் ஐம்பெருங்குழுவாம். இவர்களில் அமைச்சரைப் பற்றிக் 'காவிதி மாக்கள'எனக் கூறினார். ஆதலின் கூறுதற்கு எஞ்சி நிற்பது மற்றைய நாற்பெருங் குழுவாம். அவர்களைக் கூறுகின்றார் இப்போது ஆசிரியர். பழையன் என்றொரு குறுநில மன்னன்: அவனுடைய தலைநகரம் மோகூர். அந்த மோகூரில்

மழைபொழியாமல் இருப்பதே கிடையாது. அதனால் எல்லாம் தவறாது விளையும். அந்தக் குறையில்லாத மோகூரில் விளங்கும் அவையகத்தில் கோசர்கள் வஞ்சினம் கூறி நினைத்ததைச் செய்து முடித்தார்கள். அத்தகைய அவையகம் போலத் தாம் கூறிய படியே செய்து முடித்து மேன்மை பெற்ற நாற்பெருங்குழுவும் மதுரையில் விளங்கித் தோன்றின.

மேலே அந்திக்கடையில் விற்பாரையும் தொழில் செய் வாரையும் கூறுகின்றார். சங்கை அறுத்து வளையலாகக் கடைபவர் ஒருபுறம்; மணிகளில் துளையிடுபவர் மறுபுறம்; பொன்னைக் காய்ச்சி நகைகளாகப் பண்ணும் தட்டார் ஒருபுறம்; பொன்னை உரைத்து மாற்றுக் காணும் பொன்வாணிகர் ஒருபுறம்; ஆடைகள் விற்பார் ஒருபுறம்; செம்பை நிறுத்து வாங்கிக் கொள்வார் ஒரு புறம்; கச்சுக்களைத் தங்கள் கைத்திறனால் தோன்ற முடிவார்கள் ஒருபுறம்; பூவையும் புகையையும் நறுமணம் வீசும் சந்தனத்தையும் ஆராய்ந்து விற்பவர் ஒருபுறம்; எவ்வகைச் செய்தியையும் உவமம் காட்டி நுணணிதின உணர்ந்தவற்றை நுட்பமான அறிவோடு ஓவியம் எழுதும் சித்திரகாரர் என்ற கண்ணுள் வினைஞர் ஒருபுறம். மற்றவர் களும் ஒருபுறம். இவர்கள் திரண்டு கூடி நிற்கின்றனர். மடித் திருக்கும் ஆடைகளை விரித்துக் காட்டுகின்றார்கள். அந்த மடிப்புகள் ஆற்று மணலில் அலைகள் போல விளங்கும் அறலை ஒத்துக் கிடக் கின்றனவாம். நெய்தல் தொழில் செய்து தாங்கள் நெய்த ஆடைகளைச் சிறியனவும் நெடியனவுமான பலவகையான மடிகளைச் சிறியரும் பெரியருமான பல நெய்தற் தொழில் கம்மியர்கள் எடுத்துக்காட்டி விற்கினறார்கள். இந்தக் கூட்டத்தின் பெருக்கி னாலே நான்கு வேறு தெருக்களிலும் ஒருவர் காலோடு ஒருவர் கால் நெருஙக நிற்கின்றார்கள். கோயிலைச் சுற்றிய நான்கு மாட வீதிகளே நான்கு தெருக்களாம்: அல்லது வாணிகம் செய்வோரைக் கூறுவதினாலே பொன் விற்போர், மணி விற்போர், ஆடை விற்போர் தானியங்கள் விற்போர் என்ற நான்கு வேறுவகையான வாணி கர்கள் வாழும் தெருக்களுமாம் என்பர் நச்சினார்க்கினியர்.

இந்த அல்லங்காடியில் மிக்கு எழும் ஓசையைப் புனைந்துரைக் கின்றார். பலாப்பழமும், தேமாங்கனியும், பல வேறு உருவில் விளங்கும் உண்ணுதற்குரிய பலவகைக் காய்களும், பலவகைப் பழங் களும், மழை பெய்வதால் கொடிவிட்டு வளரும் அழகிய கீரைகளும், கற்கண்டும், பலரும் புகழும்படி ஆக்கிய ஊன் சோறும், கிழங்கு

களும், இனிய பாற்சோறு, பால் முதலியவற்றையும் உண்பார்க்குக் கொண்டு வந்து பரிமாறுகின்ற சோறு இடும் சாலைகள் பல. அங்கே பலர் உண்ணுகின்றார்கள். அந்த ஓசை மாங்குடி மருதனாருக்கு ஒன்றை நினைவூட்டுகின்றது. பறை முதலியவற்றைக் கொண்டு வாழும் இசைக் கலைஞர்களாகிய பாணர் முதலியோர் தங்களுடைய குடும்பத்தோடு மேற்குக் கடற்கரையிலிருக்கும் மலைநாட்டுச் சேரனான கோதையை வாழ்த்துகின்றார்கள். அவனுடைய பெருநாள் இருக்கையில் சிறந்த அறிஞர்களும் கூடியிருக்கிறார்கள். அவர்கள் தருக்க நெறியிலே வாதிடுகிறார்கள். அந்த விரும்பத்தக்க ஓசை போலச் சோறிடுஞ்சாலைகளில் எழும் ஓசையும் தோன்றுகிறது மாங்குடி மருதனாருக்கு.

அல்லங்காடியில் பலவகை ஓசையும் எழுந்தனவன்றோ? இதற்கு ஓர் உவமை காண்கின்றார் மாங்குடி மருதனார். மாங்குடி மருதனாருக்கு நெய்தல் நிலத்திலுள்ள ஈடுபாட்டை முன்னரே கண்டோம். காற்றில் வருகிறது கப்பல். வெள்ளிய பாய் விரிந்திருக்கிறது. அந்தக் கப்பல் துறைமுகத்துள் சென்று பண்டங்களை இறக்கும்போது ஒல்லென்ற ஓசை கிளம்புகிறது கப்பலை நல்ல வழியே ஓட்டி இறக்க வினைஞர்கள் முயல்கின்றார்கள். கடலின் புலால் நாற்றம் வீசும் அலைகளையுடைய ஓதம் இருங்கழி வழியே பாய நீர் மட்டம் மிகவுயர்ந்தோங்கி அச்சந்தருகின்ற நடுஇரவில் உள்ளேப் பாய்ந்து பின்னே மீளும். அதைக் கண்டு அஞ்சிய பலவேறு புள்ளினங்களும் வெவ்வேறு ஓசையைக் கிளப்புகின்றன இந்த ஓசையைப்போல இருக்கின்றதாம் அல்லங்காடியின் ஓசை.

நச்சினார்க்கினியர் பலவகைப் பள்ளிகளிலும், அவையத்தும், காவிதி மாக்களிடத்தும் எழுகின்ற ஓசை சேரன் கோதையின் பெருநாள் ஓலக்கத்தில் தருக்கமிடுவார் ஓசை போல இருக்கின்றதாம் என்றும், விற்கின்றவரிடை எழுகின்ற ஓசை பட்டினத்தில் எழும் ஒல்லென் இமிழிசை போல இருக்கின்றதாம என்றும், முடிவாக அல்லங்காடியில் அழிதரு கம்பலை பல்வேறு புள்ளின் இசை எழுந்ததுபோல இருக்கின்றதாம் என்றும் பிரித்துப் பிரித்துப் பொருள் கூறுவார்.

சூரியனது கிரணங்கள் வெப்பம் குறையச் சினம் தணிந்து சூரியன் செல்வதுபோல மேற்கு மலையில் மறைகிறான். கிழக்குப் பக்கத்தில் நாளும் நாளும் வளர்ந்துவருகின்ற சந்திரன் தோன்றித்

தன் நிலவைப் பரப்புவதால் இரவும் பகல்போலத் தோன்றுகிறது. தான் விரும்பிய கணவரைக் கூடுவதற்காகக் குளிர்ந்த கழுநீர் மாலையைச் சூடிக் கொண்டு, எல்லா அணிகளையும் அணிந்துகொண்டு பூந்தளிரில் நல்ல நறுமணமுள்ளவற்றைக் கொண்டு வாசனை ஊட்டிக் கொள்கிறார்கள். கத்தூரியையும், சாந்தையும், சந்தனத்தையும் அணிந்திருக்கின்றார்கள். தங்களுடைய மென்னூல் கலிங்கத்திற்குப் புகையை ஊட்டுகிறார்கள். விளக்கை ஏற்றுகிறார்கள் நகரத்தின் எல்லையிலெல்லாம் பிரிவு நோயை உண்டுபண்ணிக்கொண்டு மாலைக் காலம் வருகிறது. மாலை நீங்கியதும் நாணங் கொண்டு நின்ற மகளிர் ஏழு நரம்புடைய சீறியாழை மீட்டிப் பல பண்களையும் மாறிமாறிப் பாடித் தாங்கள் விரும்பும் கணவர்களைத் தழுவிக் கொண்டு புணர்ச்சி நீங்கியதும் நாணங் கொள்கின்றனர்.

விலைமகளிரைப்பற்றி ஆசிரியர் அடுத்துப் பாடுகின்றார். நீரே திரண்டது போலத் தோன்றும் வெள்ளிய மாலைகளை அவற்றின் வாசனை வெள்ளிய வானத்திலே சென்று வீசும்படியாகக் கொண்டையிலே முடித்துக் கொண்டிருக்கிறார்கள். கையிலிருக்கிற தொடி ஒளி வீசும்படியாகக் கையை வீசி நடக்கின்றனர். புதிய விடுபூக்கள் மலரும்போது தெருவெல்லாம் வாசனை வீசுகின்றன. பிறரைக் கூடியதால் அழிந்த ஒப்பனைகளைத் திருத்திக் கொண்டு புதுக்கோலம் கொள்கின்றனர். மொட்டாக இருக்கும் பூக்களைக் கையாலே மலர்த்தியது போல வாசனை வீசுகின்ற செங்கழுநீர் மலர்களை, மழையில் நன்றாக மலர்ந்த மலர்களையுடைய புதர் போலச் சூடிக் கொள்கிறார்கள். பிற நாட்டினின்றும் தங்கள் ஊரிலிருந்தும் அந்த விலை மாதர்களின் அழகை விரும்பி வந்த இளைய செல்வர்களை வஞ்சனை நிறைந்த பொய்ம் மொழிகளினாலே கூட்டிக் கொண்டு சென்று அவர்களை அணைகின்றனர். அவர்களுடைய செலவத்தையெல்லாம் வாங்கிக் கொள்ளும் வரையில் அன்புடையார் போல நடிக்கின்றனர். தேனை உண்டு பின் வண்டு மலர்களைத் துறப்பது போல இவர்களும் தங்களை விரும்பி வந்தவர்களது செல்வத்தை வாங்கியபின் அவர்களைக் கைவிட்டு விடுகிறார்கள். பழமுள்ள மரங்களைத் தேடிச் செல்கிற பறவை போல வாழ்கின்றார்கள். கொழுவிய குடியிற் பிறந்த செல்வர்களும் அவர்களால் செல்வம் பெற்றவர்களும் விரும்புகின்ற வீட்டில் பொன்னால் செய்த வளையினை அணிந்த மகளிர் விளக்கின் வெளிச்சத்திலே ஒன்றாகக் கூடி வானத்திலே விரும்பியபடி ஆடும் வானரமகளிர் போலத் தங்களைக் கண்டோரது நெஞ்சத்தை இந்த

விலைமாதர்கள் நடுக்கமுறச் செய்கிறார்கள். முதல் சாமத்திலே மீட்டு தற்குரிய யாழ்களுக்கு நடுவே முழவு யாழுக்கேற்ப முழங்க, மகிழ்ந்து ஆடுகிறார்கள். ஆழமான நீருள்ள துறைகளிடத்தே வெறுப்படைந்து கொழுகொம்பிலே இருக்கின்ற மெல்லிய தளிர்களைப் பறித்து, குவளை மாலையைக் கால்வரையும் தொங்கும் பெரிய மாலையாகக் கட்டி அணிந்துகொள்கின்றனர். மணம் வீசுகின்ற வீடுகள்தோறும் சென்று அங்குள்ள இளையரோடு விளையாடுகிறார்கள். இது ஒரு புறம்.

கூட்டமாக வந்த அவுணர்களை வென்ற மாயோனுக்குரிய அந்தத் திருவோணத் திருவிழாவில் மறவர் சேரியில் இருப்பவர்கள் எதிர்எதிர் நின்று போட்டிச் சண்டையில் முதுகு காட்டி ஓடாமல் நின்று நெற்றியிலேயே காயங்கள் பெற்றுக் கன்னி மாலை சூடிய மறவர்கள் போர் ஊக்கம் உடையவர்களாய் வந்து யானையைப் போரில் ஓட்டுகின்றனர். அடங்காத தன்னைப் பாகர்கள் அடக்குவதற்காகக் குத்திய அங்குசம் யானையின் முகத்தில் ஆழமாகப் பதிந்திருக்கின்றது. இப்படிப் பல காயங்கள் பெற்றிருந்தும் எத்தகைய போருக்கும் சலியாது மேற்சென்று காக்கும வளைந்த துதிக்கையையுடையது. அத்தகைய யானையை ஓட்டுகினறனர் மறவர். யானை சினங்கொண்டு வருவதைக் கண்டவர்கள் யானையின் நடை குறையுமாறு கரிய துணியை வைத்திருக்கும் நெருஞ்சி முள்போல் செய்த இரும்பு முட்களைத் தெருவிலே யானை வரும் வழியில் தூவுகின்றனர். அவை இந்த மறவர் காலிலும் பொத்திக்கொள்கின்றன. ஆனால், அவர்கள் அதைப் பொருட்படுத்தாது களிப்பு மிக்க தேறலை உண்டு அந்த மகிழ்ச்சியினால் தெருக்களிலே திரிந்து வருகிறார்கள்.

தங்கள் கணவர்கள் மனமகிழப் பிள்ளையைப் பெற்ற பெண்கள் தங்கள் மார்பில் அந்தக் குழந்தைகளை நினைத்ததும் பாலூறப் பாலூட்டுகின்றனர். அந்தப் பிள்ளை பெற்ற தீட்டு நாட்கள் முடிந்ததும் குள நீரில் முழுகுவதற்காக வருகின்றார்கள் அப்போது யாழிலே செவ்வழிப் பண்ணைப் பாடி, அது முழவோடு ஒத்துவரப் பாடுகின்றனர். ஆகுளி முதலிய சிறு பறைகள் இரட்டுகின்றன. பல வழிபாட்டுப் பொருளோடு பலிச்சோற்றையும் ஏந்திக் கொண்டு ஒண்சுடர் விளக்கம் முன்னே செல்ல மெல்லமெல்ல நடந்து செல்கின்றனர். அவர்களோடு முதற் கருவுற்ற பெண்கள் தமக்கும்

கருவுக்கும் ஒரு தீங்கும் வாராதபடி கைதொழுது குறைதீர்ந்து நிற்கின்றார்கள். இந்தப் பெண்கள் கொண்டு வந்த பலியையும் படையலையும் தெய்வ ஆவேசம் வந்த சாலினி அல்லது தேவராட்டியோடு உண்கிறார்கள். இப்படி ஒரு வழிபாடு.

அச்சத்தைத் தருகின்ற வேலன் தன்னிடம் குறிகேட்க வருவோரிடம் அவர்களுக்கு எழுந்த துன்பமெல்லாம் முருகனால் வந்ததெனக் கூறித், தன் பக்கம் வளைத்துக் கொள்கிறான். பின் அந்தக் குற்றம் தீர வெறியாடல ஆடுகிறான். பறை போல விட்டுவிட்டு ஒலிக்கும் பிறவகைத் தோற்கருவிகள், பிற இசைக் கருவிகளோடு ஒலிக்கின்றன. குறிஞ்சி மாலையைச் சூடிக் கொள்கிறான். முருகனே தன்மேல் வந்து விட்டதைக் காட்டக் கடம்ப மாலையைச் சூடி வழிபடுகின்றான். அபபோது பெண்கள் ஒனறுகூடிக் கைகோத்துக் குரவைக் கூத்து ஆடுகிறார்கள். இப்படி விளங்கும் மன்றுகள் தோறும் குரவைக் கூத்து நிகழ்கின்றது. சேரிகள்தோறும் புனைந்துரைகளும், பாட்டுக்களும், கூத்தாடும் ஆட்டங்களும் ஒன்றோடொன்று கலந்து வேறுவேறாகிய ஆரவாரங்கள் ஒழுங்காக மயங்கி நிற்கின்றன. இந்த ஆரவாரம் மாங்குடி மருதனாரின் மனத்தைப் பிடித்த மற்றொரு காட்சியை நினைவூட்டுகிறது.

பெரும் புகழ் படைத்த நன்னன் என்றொரு தலைவன் இருந்தான். அவன் பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடுவான். அந்தத் திருநாளே நன்னாள என நன்னன் பெயரால் வழங்கப்பெறும். அப்போது அவன நாடு முழுவதும், சேரிகள் முழுவதும் அந்தப் பிறந்த நாளை விழாவாகக் கொண்டாடுவர். அப்போது பெரிய ஆரவாரம் எழும். மதுரையில் எழும் கூத்தும் பாட்டுமாக எழுகின்ற ஆரவாரம் நன்னன் பிறந்தநாளில் எழும் ஆரவாரத்தோடு ஒத்திருத்தலை காண்கிறார் மாங்குடி மருதனார். இப்படியாக இரவின் முதற்சாமம் மதுரையம்பதியில் கழிகின்றது.

எல்லோரும் நல்ல துயில் கொள்கின்றனர். சங்குகளின் ஆரவாரம் அடங்கிப் போகின்றது. தெருவிலே பொருள்களை வைத்து விற்போர்கள் கடைக்கு நிழலாகக் கால்களை நிறுத்தி அவற்றின்மேல் துணி அல்லது பிறவற்றை விரித்திருப்பர். இப்போது அவர்கள் அந்தச் சட்டக்காலை வாங்கி எடுத்துத் தங்கள் கடையை அடைத்துக் கொண்டு துயில்கின்றார்கள். தேன் உருண்டையை நினைப்பூட்டும் பாகினால் சமைத்த அடைகளையும், கற்கண்டு, பருப்பு, தேங்காய்

முதலியவற்றை உள்ளீடாக அமைத்து சுடச்சுடவிருக்கும் கொழுக் கட்டைகளையும், சுடாது கரைத்து வைத்திருக்கின்ற மாவினையு முடைய அப்ப வாணிகர்கள் அவற்றின் பக்கத்திலிருந்தே தூங்கு கின்றார்கள். திருவிழாவில் ஆடுவதற்கு வந்த கூத்தர்களும் தூங்கு கிறார்கள். ஒலிக்கும் கடலும்கூட ஒலி நீங்கி தூங்குகிறது போல் அமைதியாய் இருக்கும். கடல் போலக் கடை வீதியும் ஆரவாரம் நீங்கித் தூங்குகிறது. படுக்கையிலே படுத்து உறங்குபவர்களுடைய கண்கள் இனிதாகத் துயில் கொண்டன. இப்படியாக நள்ளிரவின் பதினைந்து நாழிகையும் முடிந்தன.

ஊரில் போவோர் வருவோர் இல்லை. பேய்களும், அச் சுறுத்தும் தெய்வங்களும் கழுதுகளோடு அந்த அமைதியில் சுற்றி வருகின்றன. அத்தகைய சமயத்தில்தானே திருடர்களும் தங்கள் வேலையைச் செய்யத் தொடங்குவார்கள். கரிய பெண்யானையின் தோல்போல் இருக்கும் கருஞ்சட்டையை அணிந்திருக்கிறார்கள். கல்லையும் மரத்தையும் அறுத்துக்கொண்டு போகும் கூர்மை சிறிதும் மழுங்காத உளியை ஏந்திச் செல்கிறார்கள். தூக்கிட்ட வாள் ஒரு புறம்; செருப்பணிந்த அவர்களுடைய கால்கள் மற்றொரு புறம் கருமை நிறத்தோடு நுட்பமான தொழில்களையுடைய ஆடையை அணிந்திருக்கின்றார்கள். அந்த ஆடை கட்டியிருக்கின்ற இடத்தில் தங்களுடைய தொடையில் பிறருக்குத் தெரியாதபடி வளைவுக் கத்திகளைப் பதித்து வைத்திருக்கின்றார்கள். நீலநிறங் கொண்ட கச்சினை அணிந்திருக்கின்றார்கள். மதிலிலே ஏறுவதற்காக நூல் ஏணியை எடுத்துச் செல்கின்றார்கள். பல அணிகலன்களையும் திருட வேண்டும் என்ற ஆசையினாலே தெருவைச் சுற்றி சுற்றி வருகிறார்கள்.

இவர்களுடைய எண்ணம் நிறைவேறாதபடி மதுரையில் ஊர்காவலர்கள் ஊரைப் பாதுகாக்கின்றார்கள். கண்ணை விழிப்ப தற்குள் மறைந்து செல்லக்கூடிய ஆற்றல் பெற்ற அந்தத் திருடர்கள் மறைந்திருக்கின்ற இடத்தை அவர்களுக்கும் தெரியாமல் ஒற்றுப் பார்த்து அறிந்து கொள்கிறார்கள் இந்தக் காவலர். யானையை இரையாகக் கொள்ளக் காலம் பார்த்திருக்கும் புலி போல இவர்கள் வேவு பார்க்கிறார்கள். எல்லோரும் தூங்கும்போதும் இவர்கள் தூங்கமாட்டார்கள். பேய் முதலியவற்றிற்கும் அஞ்சாத தறு கண்ணர்கள். அறிஞர்களும் புகழ்ந்த ஆண்மையுடையவர்கள். கள்வர்களின் களவுத் தொழில் பற்றிய நூலையும், ஊரைக் காக்கும் காவல் பற்றிய நூல்களையும் ஒரு சிறிதும் தவறாது கற்றிருப்பதோடல்

லாமல் அக் காவற் தொழிலைச் செயல்படுத்தும் வகையில் தேர்ச்சி பெற்றவர்கள் அந்த ஊர்காவலர்கள். கையிலே அம்பினை ஆயுத்த மாக வைத்திருக்கிறார்கள். மழை பெய்து நீர் திரண்டு தேரோடும் தெருவிலும் நடு இரவிலும் கூடத் தாம் இயங்குவது ஒருவருக்கும் தெரியாதபடி விரும்பித் தங்கள் தொண்டைச் செய்து வருகிறார்கள். அதனாலே கடவுள் வழங்கும் செயலற்ற இரவிலும் அச்சம் என்பது சிறிதும் அறியாதவர்களாய் இரண்டாவது யாமத்தையும் மூன்றாவது யாமத்தையும் பொதுமக்களைக் காப்பதிலேயே செலவிடுகிறார்கள்.

இதற்குள் வைகறை வந்து விடுவதால் பொய்கைகளில் போதுக்கள் வாசனையோடு மலர்தலால் தேனை உண்ண வரும் வண்டு கள் ரீங்காரம் செய்கின்றன. அதுபோல ஓதலைக் கடமையாகக் கொண்ட அந்தணர்கள் காலையிலே வேதம் பாடுகின்றனர். யாழ் ஏந்தி வாசிப்பவர்கள் இராகத்தோடு இசையில் மருதப் பண்ணைப் பாடுகிறார்கள். காலையில் எழுந்த யானைகளுக்குப் பரிக்கோற் காரர்கள் உணவாகக் கவளங்களைத் தருகின்றார்கள். ஆனால் யானை யோ அவற்றைக் கைப்பதுபோல வெறுக்கிறன. பந்தியிலே வரிசை யாகக் கட்டப்பட்ட குதிரைகள் தங்களுடைய நல்ல புல்லுணவை உண்டு தெவிட்டிவிடுகின்றன. பல வேறு பண்டங்களை விற்கின் றவர்கள் தங்கள் கடைகளைச் சாணத்தைக் கொண்டு மெழுகு கிறார்கள். கள்ளை விற்கின்றவர்கள் களிப்புடைய கள்ளுக்கு விலை கூறி விற்கின்றார்கள். இல்லறத்தில் வாழ்கின்ற கற்புடைய மகளிர் தாங்கள் விரும்புகின்ற கணவர்களை அணைத்துத் துயின்று, பொழுது புலர்ந்த விடியற் காலத்தில் எழுந்து, அப்போது செய்ய வேண்டிய கடமைகளையெல்லாம் கண்ணைப் பூசி மின்னும் மின்னற்கொடி போலத் தங்கள் ஆபரணங்கள் எல்லாம் ஒலிப்ப நடந்து திண்ணிய சுவர்கள் உள்ள தங்கள் வீட்டில் கதவுகள் ஒலிப்பத் திறக்கின்றனர். கள்ளை உண்டு அந்தக் களிப்பினைத் தம்மிடத்தே தடுத்துக்கொண்டு மழலை வார்த்தைப் பேசும் நாவினையுடைய குடியர்கள் பழைய களிப்பினையுடையாருடைய முழங்குகின்ற குரலினை எழுப்பு கின்றனர்.

சூதர்கள் நின்றேத்தி வாழ்த்துகின்றார்கள். மாகதர்கள் இருந்து கொண்டே புகழ்பாடுகிறார்கள். நாழிகை அறிவிக்கின்ற வைதாளி கர்கள் நாழிகையைச் சொல்லி வருகின்றனர். அரசனை எழுப்பும் பள்ளியெழுச்சி முரசம் முழங்குகிறது. எருதுகள் மாறுபட்டு முழங்கு கின்றன. பொறியினையுடைய கோழிகள் வைகறைப் பொழுதை

அறிவிக்கின்றன. யானையங் குருகின் சேவலும் அன்னச் சேவலும் தத்தம் பேடைகளை அழைக்கின்றன. அழகிய மயிலும் அப்படியே தத்தம் பேடையை அகவி அழைக்கின்றன. பிடிகளோடு விளங்கும் பெரிய யானைகள் ஒருபுறம் முழங்குகின்றன. கூட்டினில் அடைக்கப் பட்டிருக்கும் கரடி முதலிய வலிய விலங்குகள் முழு வலிமையு முடைய புலியோடு ஒரு புறம் முழங்குகின்றன செவ்வானம் நீங்கிய பின் நீலநிறமாக விளங்கும் விசும்பிலே மின்னற்கொடி மேலோங்கியது போலக் காமபானம் உண்டு 'மாண்புடைய ஆபரணங்களையுடைய மகளிர் தங்களுடைய கணவரோடு புலந்து மாலைகளை அறுப்பதால் முத்தத்தோடு பொன்னை உருக்குகிற நிலம் போல விளங்குகிறது. பச்சைப் பாக்கும் வீழ்ந்து கிடக்கிறது. புதிதாகக் கொண்டு வந்து மணலை பரப்பியிருக்கிற முற்றத்திலே வண்டுகளும் ஞிமிறுகளும் ஆரவாரிக்கின்றன. இப்படி விழ்ந்து கிடக்கின்றவற்றை வாடிய பூக்களோடு அந் நகைகளையும் பெருக்கு கிறார்கள். இப்படி இரவு போய் எல்லோருக்கும் ஏமமான வைகறைப் பொழுது வருகின்றது.

அப்போது நாட்காலத்தே பாண்டியனுக்குத் திறை கட்டி அதனாலே தாங்கள் செல்வம் மிக்கு வாழும்படியாக வந்துநிற்கின்ற னர். பிறருடைய வீரத்தைக் குற்றப்படுத்திய வீரர்களான மறவர் களைத் தோற்கடித்து அவர்கள் போர்க்களத்தே விட்டுவிட்டு ஓடின யானைகளைப் பகைவர் நாட்டிலிருந்து கொண்டு வந்துள் ளார்கள். பகைவர் நாட்டிலிருந்து பாயும் குதிரைகளையும் கொண்டு வந்திருக்கிறார்கள். கோபமும் வலிமையும் மிக்க வேடுவர்கள் பகைவர்களுடைய ஊரைச் சுடும்போது எழும் விளக் கத்தில் ஆநிரைகளைக் காத்திருந்த பகைவர்களை வெட்டி வேல் களையே கோலாகக் கொண்டு ஓட்டிவந்த பசு மந்தைகளும் இருக் கின்றன பகைவர்களுடைய கோட்டையைத், தாக்கி அவர் களுடைய அகநாட்டில் அமைத்த கதவுகளையும் கொண்டு வந்திருக் கிறார்கள் இப்படி இன்னும் பலபல பொருள்களோடு கங்கையாறு கடலில் பாய்வது போல் அளந்து முடிவறியாத மதுரை பல வகையான அரும்பண்டங்களோடு தேவருலகத்தையே காண்பது போன்ற அழகைப் பெற்று மிக்க பெரும்புகழை அடைந்து விளங்கு கிறது. கொம்புகள் ஒன்றோடொன்று மணந்திருக்கும் அசோக மரச்சோலையில் வண்டுகள் மொய்க்கும் பூக்கள் செந்தீப் போல விளங்குகின்றன.

கிரணங்களை வீசும் சூரியனுடைய இளவெயில் தோன்றினாற் போலப் பெண்கள் பொனனும் மணியும் கொண்டு இழைத்த ஆபரணங்களைத் தலை முழுவதும் விளங்குகின்ற வகையில் தம் கற்பு மேம்படப் பூண்டுகொண்டு மயில் போன்ற சாயலையும் மாவின் தளிர் போன்ற நிறத்தினையும் தளிரினது புறத்திலே தோன்றுகின்ற ஈர்க்குகள் போலத் திதலையையும் மகரக்குழை தாழ்ந்த காதினையும் தெய்வப் பொய்கையில் விளக்குப் போல மலர்ந்த தாமரையின் பூவை ஒத்த முகத்தினையும் ஆய்ந்த தொடிகளையுமுடைய பெண்களது நறிய தோள்களை முயங்கி மாலைகள் தொங்கவிட்டிருக்கும் படுக்கையிலே தூங்கி, பள்ளியெழுச்சி பாடியதும் எழுகின்றான் அரசன். ஓவியன் எழுதி அலங்கரித்த பாவையிலே தெய்வத் தன்மை தோன்றுவது போன்ற அழகையுடையவனாய் வருகின்றான் அரசன். சந்தனத்தை மார்பில் பூசியிருக்கின்றான். முத்துமாலை அவனுடைய மார்பிலே புரள்கிறது. பல பூக்களும் கலந்து தொடுத்த கதம்ப மாலை கழுத்தினின்றும் கீழே விழ, வண்டுகள் மொய்க்க அந்த மாலையைத் தன் மார்பில் அணிந்திருக்கிறான். பொன்னில் இரத்தினங்கள் பதித்த மோதிரமும் விளங்குகிறது. வீர வளைவுகளும் விளங்குகின்றன. கஞ்சி ஊற்றிய துகிலை அந்த அணிகலன்கள் அழகுசெய்யும்படி உடுத்தியிருக்கின்றான்.

அரசன் திருவோலக்கத்தில் அமர்ந்திருந்து தனக்கு வேண்டிய துணைசெய்த வீரர்களை அழைத்துப் பாராட்டுகின்றான். தன்னுடைய படை ஏரிபோல் பெரிதாக இருந்தாலும் அதனைப் பகைவர்கள் அழித்து வரும்போது தான் ஒருவனாக அதனைத் தடுத்து ஏரியைக் காக்கும் கல்லணை போல வெற்றி பெற்றார்கள் வீரர்கள். இவர்கள், 'வருவிசைப் புனலைக் கற்சிறை போல ஒருவன் தாங்கிய பெருமையானும்' (புறத்.8) என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின்படி பெருவஞ்சிப் போர் செய்தவர். இத்தகையோர் அரசனது வாள் வெற்றி பெற்ற முயற்சியின் சிறப்பை வாழ்த்துகின்றனர். வில்லிருந்து விரைவாக விடும் அம்புகளைத் தாங்குகின்ற மார்பினையும் குதிரைகளைச் செலுத்தி அவை வேண்டுமளவிலே பிடித்துச் செலுத்தும் வலிமையுடைய தோளினையுமுடைய வீரர்கள் இவர்கள். இவர்களைத் தம்முன் கொண்டு வரும்படியாகக் கட்டளையிடுகின்றான். இவர்கள் தும்பைத் திணைப்படி குதிரைநிலைப் போரும் (தொல். 1018) கணையும் வேலும் துணையுற மொய்க்கப் போரிடும் தும்பைப் போரும் (1017) செய்து உயர்ந்தவர்கள்.

கல்லை இடித்து அதுவழியாக நீர்வரும் வாயையுடைய கிடங்கினையுமுடைய முதல்நிலைப்போரில் உழந்த வீரர்களையும் கொண்டு வரும்படி கட்டளையிடுகின்றான் அரசன். இவர்கள் ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும் (தொல். 1014) என்ற போரைச் செய்து சிறந்தவர்கள். புலி முதலியவற்றோடு பகைமை கொண்ட ஏறு இறந்ததும் அதன் தோலை மயிர் சீவாமல் போர்முரசில் கோத்துக் கட்டுவார்கள். அந்த முரசம் முழங்கி விரத்தை உண்டுபண்ண நெருப்பு எரிவதுபோலப் பகைத்துவரும் பகைவர்களது சேனையின் நடுவே சென்று பகைவர்களது யானையை அஞ்சாது வெட்டி அதனால் ஏற்பட்ட புண்ணோடு விளங்கும் பகைவர்களையும் அழைத்து வரும்படி ஏவுகின்றான். 'களிறு எறிந்து எதிர்ந்தோர் பாடு' (தொல். 1018) எனும் இந்தத் தும்பைப்போரைச் செய்தவர்கள் இவர்கள். இப்படியெல்லாம் தன்மாட்டுள்ள நட்பிலே ஒருசிறிதும் குற்றமில்லாது போர் செய்த இவர்களுக்குப் பொன்னால் செய்த தும்பைப் பூவைச் சூடும்படியாக ஏவுகின்றான்.

வேலோடு அம்புகளும் தாக்குதலினால் நிலைகுலைந்து தங்களுடைய கவசத்திலே மூட்டுவாய்கள் சிதைந்து போவதால் உள்ளேயிருக்கின்ற ஊன் கெடுகின்றன. அதனால் அவர்களுடைய மார்பு சக்கரத்தின் குறடுபோல அதில்பட்ட வேலும் அம்பும் அந்தக் குறட்டில் தைத்துள்ள ஆரம்போல விளங்கும். தேவர்களை ஒத்த செல்வத்தையுடைய ஊர்கள் கோட்டைகுள்ளே இருக்கின்றன. இவை பாண்டிய நாட்டோடு நட்புடையன. பகைவரால் தாக்கப் பெற்றுத் தோல்வியுறுகின்றன. இப்படிப்பட்டவர்கள் மறுபடியும் ஆண்டு உயரும்படியாக வேண்டும் முயற்சியெல்லாம் செய்து வெற்றி பெற்ற உழிஞை வீரர்களையும் கொண்டுவரும்படி ஏவுகின்றான்.

உயர்ந்திருக்கும் யானைக் கூட்டங்களைக் கவர்ந்து வந்த வீரர்கள் அவர்கள். தங்களுடைய மார்பிலே சந்தனத்தைப் பூசியது உலர்ந்திருக்கிறது. உயரிய பல மலர்களால் செய்த மாலையையும் அணிந்திருக்கிறார்கள். இந்த மண்டலாதிபதிகளையும் கொண்டு வரும்படி கட்டளையிடுகின்றான். பின்னர், பட்டிமன்றம் ஏறுவோரையும், அவையத்தார் முதலிய பிறரையும் குறிப்பிட்டு அழைத்த பிறகு பிற படைஞர்கள், அறிஞர்கள் முதலியோரையும் பொதுவாக வரும்படி அழைக்கின்றான். புலவர்கள் வருக, பாணர் வருக, ஆடும் பெண்கள் வருக, கூத்தர்கள் வருக என எல்லோரையும் அழைக்கின்றான். தன்னுடைய சுற்றத்தாரைக் காக்கின்றான்.

இரவலர்க்கெல்லாம் தாமரைப் பூப்போலச் செய்த தேர்களையும் யானைகளையும் வழங்குகின்றான். இவர்களுக்கு விருந்தாகத் தினந்தோறும் கள்ளைத் தெளிவாக வடிகட்டுகிறார்கள். மரத்தின நிழல்களிலெல்லாம் செம்மறியாட்டை வெட்டுகிறார்கள். கொழுப்போடு கூடிய தசைகள் சுடப்படும்போது அந்தக் கொழுப்பு உருகுகிறது. பொரிக்கறிகள் நெய்யில் இறைந்து ஆரவாரிக்கின்றன. தாளிக்கின்றபோது எழுகின்ற புகை மழைபோலப் பரவுகிறது. இப்படிப்பட்ட புகழையுடைது மதுரை.

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி பல யாகங்களை செய்தான். நல்ல வேள்வி செய்வதில் துறைபோகிய தொல்லாணை நல்லாசிரியர்கள் கூடயிருந்து செல்வ விருந்தினையும் கல்வி விருந்தினையும் ஞான விருந்தினையும் இதனோடு உண்பதால் புகழ் பெற்றார்கள். ஆசிரியர் நச்சினார்க்கினியர் புணர்கூட்டுண்டது சார்பற்ற மோட்சமாகிய கந்தழியை விருந்தாக உண்டான் என்று பொருள் கூறுவார். நிலந்தரு திருவிற் நெடியோனாகிய பாண்டியன் போல அவரிடத்திலிருந்தும் குற்றமில்லாத சிறப்புப் போன்ற வியப்பும் சால்பும் செம்மையும் நிறைந்தோர் பலர் பலர் புகழவும் பல்யாக சாலை முகுகுடுமிப் பெருவழுதி போலச் சிறக்கவும் நீ வாழ்வாயாக! 'நிலந்தருதிருவின் நெடியோன்' என்பதற்குத் திருமாலின் அவதாரமாகிய கண்ணன் என்று பொருள்கொண்டு கண்ணன் கூறிய கீதையின்படி அவன் போல எல்லோருக்கும் போதிக்க வல்ல ஆசிரியர்களையே இங்கே மாங்குடி மருதனார் சான்றோர் எனக் குறிக்கின்றார் என்பர்.

தன்னுடைய நாட்டில் கிடைத்தற்கரிய பொருள்களைப் பிற நாட்டிலிருந்து கொண்டு வந்து எல்லோருக்கும் உதவுகின்றான் பாண்டியன். நாட்டில் வாழும் குடிமக்களைச் செல்வத்தால் பெருககுகின்றான். அரிய நல்ல பொருள்களை விளக்கும் நூல்களைத் துறைபோகக் கற்கின்றன. இவனுடைய புகழே எங்கும் விளங்குகிறது. கடல் நடுவே தோன்றுகின்ற சூரியன் போலவும் பல நட்சத்திரங்களுக்கிடையில் தோன்றுகின்ற சந்திரன் போலவும் விளங்குகிறான். படைத்தலைவர்கள் நடுவே இவன் இருப்பது சூரியன் போலவும் கலைஞர்களிடையே இருப்பது சந்திரன் போலவும் தோன்றுவதாகக் காண்கின்றார் நச்சினார்க்கினியர்.

இவனுடைய பாண்டியக் குடியிலே அப்போது சிறந்து விளங்கியவன் பெரும்பெயர் மாறன். உண்மையான புகழை உலகத்தில்

நிறுத்தியவன். அவன் பாண்டியன் அவையில் முதன்மை பூணு கிறான். பகைவரைக் கொன்று தோல்வியடைவது தப்பாத வாள் ஏந்திய கோசர்களும் அவன்வழி நிற்கின்றனர். எல்லோரும் புகழும் பொன்னுபரணங்களை யணிந்த ஐம்பெரு கேளிரும் வீரம் சிறந்த குறுநில மன்னரும் பிறரும் இவன் நடத்துகின்ற மரபு வழியிலிருந்து பிறழாது இவனுடைய வாய்மொழியையே கேட்டு ஒழுகுகின்றனர். புகழோடு விளங்கும் அவனுடைய அறங்கூறு அவையத்தார் அவனை நெருங்கி நின்று அவனுடைய அரசினைப் புகழ்கின்றார்கள். விளங்கும் ஆபரணங்களை யணிந்த பெண்கள் பொன் வட்டிலில் வாசனை வீசு கின்ற காமபானத்தைத் தர உண்டு மகிழ்ந்து வாழ்கின்றான் பாண்டியன். 'பெருமானே இத்தனை காலம் நீ வாழவேண்டும் என்று ஏற்பட்ட நல்லூழி முழுதும் இப்படி இனிதாக இருப்பாயாக!' என்று வாழத்தி முடிககின்றார் மதுரைக் காஞ்சிப் புலவனர். இந்த முடிவு மாங்குடி மருதனார் முன்னரே புறநானூற்றில் பாடிய பொருண் மொழிக காஞ்சிப பாடலோடு (சங்க. 2113) ஒத்திருப்பது அறிந்து மகிழ்தற்கு உரியது.

இப்படி மதுரைக் காஞ்சிப் பாடல் காஞ்சியினுடைய பல வகைச் செயல்களையும் அவனுடைய முனனோரது புகழோடும் ஒன்று சேர்த்து வாழ்த்தித் தொடங்குகிறது. படையெடுத்துச் சென்று வென்று, தம்மைவந்து இரப்போர்கசு வாரி வழங்கி, ஆண்டு மாண்டோர்கள் கடல் மணலினும பலரே என நிலையாமையைப் பாடி, நிலையாமையின் நடுவே நிலைத்த அறத்தை வளர்த்துப் பழியஞ்சி இரவலர்க்கு ஈந்து சிறந்தான பாண்டியன் என்ற உண்மையை இந்த ஒப்புமையிடையே நிலைநாட்டுகின்றார். பிறகு அவனுடைய அறவாழ்க்கையின் பயனாக அவனுடைய நாட்டு ஐந்திணை வளமும் சிறப்பதைக் காட்டுகிறார். பின்னர் மதுரைமா நகருக்கு நம்மைக் கொண்டுபோய்ப் பகலெல்லாம் மக்கள் பலர் துயின்று வருவதையும், நாளங்காடி சிறந்து ஒலிப்பதனையும் பிறகு அல்லங்காடி சிறந்து ஆரவாரித்தலையும், அந்தணர்ப் பள்ளி, புத்தப் பள்ளி, சமணப் பள்ளி என்பவற்றில் மக்கள் வழிபடுவதையும் கூறுகிறார். இவையெல்லாம் நடப்பது திருவிழா முடிந்து தீர்த்தவாரி நடக்கும் ஏழாம் நாளிலாம்.

அவையத்தார், அமைச்சர்கள், பெருவாணிகர்கள் என்ற இவர்களேயன்றி பிற நாற்பெருங் குழுவினரும் மற்றைய வணிகர்

களும் கம்மியரும் துலங்குவதையும் கூறுகிறார். நாற்படையும் நடமாடுகின்றன. பிள்ளை பெற்ற பெண்களும் பிறரும் வீர வழிபாடு செய்கின்ற இடங்களைச் சுட்டுகின்றார். இரவின் முதல் சாமம் கழிய எல்லோரும் உறங்குகின்றனர். நடு இரவிலும் ஊர்காப்பாளர் திருடரைத் தேடி வருகின்றனர். இரவு முடிந்து பொழுது புலர்கிறது. வீடுகளைத் திறக்கின்றார்கள். அரண்மனையில் ஆரவாரங்கள் எழுகின்றன. பாண்டியன் எழுந்து திருவோலக்கத்திற்கு வருகின்றான். இவர்களுக்கும் மற்றைய கலைஞர்களுக்கும் பரிசளிக்க அவர்களை அழைக்கின்றான்.

யாகம் வளர்த்தவர்கள், சிறந்த கல்விகற்றவர்கள் முதலிய தொல்லாணை நல்லாசிரியரிடையே புணர் கூட்டுண்டு சிறந்து விளங்குகிறான். வீரர்களும், அவையத்தாரும் பிறரும் அவனைப்பின்பற்றிப் புகழ்ந்து நடக்கின்றனர். மகளிர் காமபானம் ஊற்றுகின்றனர். இப்படி அறத்தையும் பொருளையும் இன்பத்தையும் ஞானத்தையும் அவன் வாழ்வாக வாழ்கின்றான். இந்த அறக்கூழ்வாழ்வு அவனுக்கு ஏற்பட்ட ஊழியெல்லாம் இப்படியே இனிதாக நடப்பதாகஎன்று மாங்குடி மருதனார் வாழ்த்தி உலகின் நிலையாமையையும் அதில் நிலைத்திருப்பது அறனே என்பதனையும் அந்த அறக்கூழ் வாழ்வால் தங்களுக்கும் உலகுக்கும் எப்படி இன்பத்தை விளைவிக்கின்றார்கள் என்பதையும் மதுரையை நடுவிடமாகக் கொண்டு வாழ்கின்ற பாண்டியனுக்கு விளக்குவதாக இந்த மதுரைக்காஞ்சி அமைகிறது.

# பத்துப் பாட்டு

## ( புறம் )

## மூலபாடம்

பதிப்பாசிரியர்
**மு. சண்முகம் பிள்ளை**
தமிழியல் புலம்
மதுரை - காமராசர் பல்கலைக்கழகம்

# பொருநராற்றுப்படை

## (முடத்தாமக்கண்ணியார்)

அறாஅ யாணர் அகன்தலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாள் சோறுநசை உறாது
வேறுபுலம் முன்னிய விரகுஅறி பொருந
குளப்புவழி அன்ன கவடுபடு பத்தல்
விளக்குஅழல் உருவின் விசியுறு பச்சை

எய்யா இளஞ்சூல் செய்யோள் அவ்வயிற்று
ஐதுமயிர் ஒழுகிய தோற்றம் போலப்
பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை
அளைவாழ் அலவன் கண்கண் டன்ன
துளைவாய் தூர்ந்த துரப்புஅமை ஆணி

எண்நாள் திங்கள் வடிவிற்று ஆகி
அண்நா இல்லா அமைவரு வறுவாய்ப்
பாம்புஅணந் தன்ன ஓங்குஇரு மருப்பின்
மாயோள் முன்கை ஆய்தொடி கடுக்கும்
கண்கூடு இருக்கைத் திண்பிணித் திவவின்

ஆய்தினை அரிசி அவையல் அன்ன
வேய்வை போகிய விரல்உளர் நரம்பின்
கேள்வி போகிய நீள்விசித் தொடையல்
மணங்கமழ் மாதரை மண்ணி யன்ன
அணங்கு மெய்ந்நின்ற அமைவரு காட்சி

ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவுஇன் பாலை
வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்ந்தும்
சீருடை நன்மொழி நீரொடு சிதறி
அறல்போல் கூந்தல் பிறைபோல் திருநுதல்

கொலைவில் புருவத்துக் கொழுங்கடை மழைக்கண்
இலவுஇதழ் புரையும் இன்மொழித் துவர்வாய்ப்
பலஉறு முத்தின் பழிதீர் வெண்பல்
மயிர்குறை கருவி மாண்கடை அன்ன
பூங்குழை ஊசல் பொறைசால் காதின்

நாண்அடச் சாய்ந்த நலம்கிளர் எருத்தின்
ஆடுஅமைப் பணைத்தோள் அரிமயிர் முன்கை
நெடுவரை மிசைய காந்தள் மெல்விரல்
கிளிவாய் ஒப்பின் ஒளிவிடு வள்உகிர்
அணங்குஎன உருத்த சுணங்குஅணி ஆகத்து

ஈர்க்குஇடை போகா ஏர்இள வனமுலை
நீர்ப்பெயர்ச் சுழியின் நிறைந்த கொப்பூழ்
உண்டுஎன உணரா உயவும் நடுவின்
வண்டுஇருப்பு அன்ன பல்காழ் அல்குல்
இரும்பிடித் தடக்கையின் செறிந்துதிரள் குறங்கின்

பொருந்துமயிர் ஒழுகிய திருந்துதாட்கு ஒப்ப
வருந்துநாய் நாவின் பெருந்தகு சீறடி
அரக்குஉருக்கு அன்ன செந்நிலன் ஒதுங்கலின்
பரற்பகை உழந்த நோயொடு சிவணி
மரல்பழுத் தன்ன மறுகுநீர் மொக்குள்

நன்பகல் அந்தி நடைஇடை விலங்கலின்
பெடைமயில் உருவின் பெருந்தகு பாடினி
பாடின பாணிக்கு ஏற்ப நாள்தொறும்
களிறு வழங்குஅதர் கானத்து அல்கி
இலைஇல் மராஅத்த எவ்வம் தாங்கி

வலைவலந் தன்ன மென்நிழல் மருங்கில்
காடுஉறை கடவுள்–கடன் கழிப்பிய பின்றைப்
பீடுகெழு திருவின் பெரும்பெயர் நோன்தாள்
முரசுமுழங்கு தானை மூவரும் கூடி
அரசவை இருந்த தோற்றம் போலப்

பாடல் பற்றிய பயனுடை எழாஅல்
கோடியர் தலைவ கொண்டது அறிந
அறியா மையின் நெறிதிரிந்து ஒராஅது
ஆற்றுஎதிர்ப் படுதலும் நோற்றதன் பயனே
போற்றிக் கேண்மதி புகழ்மேம் படுந

ஆடுபசி உழந்தநின் இரும்பேர் ஒக்கலொடு
நீடுபசி ஒராஅல் வேண்டின் நீடுஇன்று
எழுமதி வாழி ஏழின் கிழவ
பழுமரம் முன்னிய பறவையின் யானும்அவன்
இழுமென் சும்மை இடனுடை வரைப்பின்

நசையுநர்த் தடையா நன்பெரு வாயில்
இசையேன் புக்குஎன் இடும்பை திர
எய்த்த மெய்யேன் எய்யேன் ஆகிப்
பைத்த பாம்பின் துத்தி ஏய்ப்ப
கைக்கசடு இருந்தஎன் கண்அகல் தடாரி

இருசீர்ப் பாணிக்கு ஏற்ப விரிகதிர்
வெள்ளி முளைத்த நள்இருள் விடியல்
ஒன்றுயான் பெட்டா அளவையின் ஒன்றிய
கேளிர் போலக் கேள்கொளல் வேண்டி
வேளாண் வாயில் வேட்பக் கூறிக்

கண்ணில் காண நண்ணுவழி இரீஇப்
பருகு அன்ன அருகா நோக்கமொடு
உருகு பவைபோல் என்பு குளிர்கொளீஇ
ஈரும் பேனும் இருந்துஇறை கூடி
வேரொடு நனைந்து வேற்றுஇழை நுழைந்த

துன்னல் சிதாஅர் துவர நீக்கி
நோக்கு நுழை கல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுரி அன்ன அறுவை நல்கி
மழைஎன மருளும் மகிழ்செய் மாடத்து
இழைஅணி வனப்பின் இன்நகை மகளிர்

போக்குஇல் பொலங்கலம் நிறையப் பல்கால்
வாக்குபு தரத்தர வருத்தம் வீட
ஆர உண்டு பேர்அஞர் போக்கிச்
செருக்கொடு நின்ற காலை மற்றுஅவன்
திருக்கிளர் கோயில் ஒருசிறைத் தங்கித்

தவம்செய் மாக்கள் தம்உடம்பு இடாஅது
அதன்பயம் எய்திய அளவை மான
ஆறுசெல் வருத்தம் அகல நீக்கி
அனந்தர் நடுக்கம் அல்லது யாவதும்
மனம்கவல்பு இன்றி மாழாந்து எழுந்து

மாலை அன்னதுஓர் புன்மையும் காலைக்
கண்டோர் மருளும் வண்டுசூழ் நிலையும்
கனவுஎன மருண்டஎன் நெஞ்சு ஏமாப்ப
வல்அஞர் பொத்திய மனம்மகிழ் சிறப்பக்
கல்லா இளைஞர் சொல்லிக் காட்ட

கதுமெனக் கரைந்து வம்எனக் கூஉய்
அதன்முறை கழிப்பிய பின்றைப் பதன்அறிந்து
துராஅய் துற்றிய துருவை அம் புழுக்கின்
பராஅரை வேவை பருகுஎனத் தண்டிக்
காழின் சுட்ட கோழ்ஊன் கொழுங்குறை

ஊழின் ஊழின் வாய்வெய்து ஒற்றி
அவைஅவை முனிகுவம் எனினே சுவைய
வேறுபல் உருவின் விரகுதந்து இரீஇ
மண்அமை முழவின் பண்அமை சீறியாழ்
ஒள்நுதல் விறலியர் பாணி தூங்க

மகிழ்ப்பதம் பல்நாள் கழிப்பி ஒருநாள்
அவிழ்ப்பதம் கொள்கஎன்று இரப்ப முகிழ்த்தகை
முரவை போகிய முரியா அரிசி
விரல்என நிமிர்ந்த நிரல்அமை புழுக்கல்
பரல்வறைக் கருனை காடியின் மிதப்ப

அயின்ற காலைப் பயின்றுஇனிது இருந்து
கொல்லை உழுகொழு ஏய்ப்பப் பல்லே
எல்லையும் இரவும் ஊன்தின்று மழுங்கி
உயிர்ப்புஇடம் பெறாஅது ஊண்முனிந்து ஒருநாள்
செயிர்த்துஎழு தெவ்வர் திறைதுறை போகிய

செல்வ சேறும்எம் தொல்பதிப் பெயர்ந்துஎன
மெல்லெனக் கிளந்தனம் ஆக வல்லே
அகறி ரோஎம் ஆயம் விட்டுஎனச்
சிரறிய வன்போல் செயிர்த்த நோக்கமொடு
துடிஅடி அன்ன தூங்குநடைக் குழவியொடு

பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கஎனத்
தன்அறி அளவையின் தரத்தர யானும்
என்அறி அளவையின் வேண்டுவ முகந்துகொண்டு
இன்மை தீர வந்தனென் வெல்வேல்
உருவப் பல்தேர் இளையோன் சிறுவன்

முருகன் – சீற்றத்து உருகெழு குருசில்
தாய்வயிற்று இருந்து தாயம் எய்தி
எய்யாத் தெவ்வர் ஏவல் கேட்ப
செய்யார் தேஎம் தெருமரல் கலிப்பப்
பவ்வம் மீமிசைப் பகல்கதிர் பரப்பி

வெவ்வெம் செல்வன் விசும்புபடர்ந் தாங்குப்
பிறந்துதவழ் கற்றதன் தொட்டுச் சிறந்தநன்
நாடுசெகில் கொண்டு நாள்தொறும் வளர்ப்ப
ஆளி நல்மான் அணங்குஉடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி

முலைக்கோள் விடாஅ மாத்திரை ஞெரேரெனத்
தலைக்கோள் வேட்டம் களிறுஅட் டாஅங்கு
இரும்பனம் போந்தைத் தோடும் கருஞ்சினை
அரவாய் வேம்பின் அம்குழைத் தெரியலும்
ஓங்குஇரும் சென்னி மேம்பட மிலைந்த

இருபெரு வேந்தரும் ஒருகளத்து அவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்தாள்
கண்ஆர் கண்ணிக் கரிகால் வளவன்
தாள்நிழல் மருங்கில் அணுகுபு குறுகித்
தொழுதுமுன் நிற்குவி ராயின் பழுதுஇன்று

ஈற்றா விருப்பின் போற்றுபு நோக்கிநும்
கையது கேளா அளவை ஒய்யெனப்
பாசி வேரின் மாசொடு குறைந்த
துன்னல் சிதாஅர் நீக்கித் தூய
கொட்டைக் கரைய பட்டுஉடை நல்கிப்

பெறல்அரும் கலத்தில் பெட்டாங்கு உண்கஎனப்
பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர
வைகல் வைகல் கைகவி பருகி
எரிஅகைந் தன்ன ஏடுஇல் தாமரை
சுரிஇரும் பித்தை பொலியச் சூட்டி

நூலின் வலவா துணங்குஅரில் மாலை
வால்ஒளி முத்தமொடு பாடினி அணியக்
கோட்டின் செய்த கொடுஞ்சி நெடுந்தேர்
ஊட்டுஉளை துயல்வர ஓரி நுடங்கப்
பால்புரை புரவி நால்குடன் பூட்டிக்

காலின் ஏழ்அடிப் பின்சென்று கோலின்
தாறுகளைந்து ஏறுஎன்று ஏற்றி வீறுபெறு
பேர்யாழ் முறையுளிக் கழிப்பி நீர்வாய்த்
தண்பணை தழீஇய தளரா இருக்கை
நன்பல் ஊர நாட்டொடு நன்பல்

வெருஉப்பறை நுவலும் பரூஉப்பெரும் தடக்கை
வெருவரு செலவின் வெகுளி வேழம்
தரவிடைத் தங்கல் ஓவிலனே வரவிடைப்
பெற்றவை பிறர்பிறர்க்கு ஆர்த்தித் தெற்றெனச்
செலவுகடைக் கூட்டுதி ராயின் பலபுலந்து

நில்லா உலகத்து நிலைமை தூக்கிச்
செல்களென விடுவக்குவன் அல்லன் ஒல்லெனத்
திரைபிறழிய இரும் பௌவத்துக்
கரைசூழ்ந்த அகன் கிடக்கை
மாமாவின் வயின்வயின் நெல்

தாழ்தாழைத் தண்தண்டலைக்
கூடுகெழீஇய குடிவயினான்
செஞ்சோற்ற பலி மாந்திய
கருங்காக்கை கவர்வு முனையின்
மனைநொச்சி நிழல்ஆங்கண்

ஈற்றுயாமைதன் பார்ப்பு ஓம்பவும்
இளையோர் வண்டல் அயரவும் முதியோர்
அவைபுகு பொழுதில்தம் பகைமுரண் செலவும்
முடக் காஞ்சிச் செம்மருதின்
மடக்கண்ண மயில்ஆலப்

பைம்பாகல் பழம் துணரிய
செஞ்சுளைய கனிமாந்தி
அறைக் கரும்பின் அரிநெல்லின்
இனக் களமர் இசை பெருக
வறள்அடும்பின் இவர் பகன்றைத்

தளிர்ப்புன்கின் தாழ்காவின்
நனைஞாழலொடு மரம் குழீஇய
அவண்முனையின் அகன்று மாறி
அவிழ்தளவின் அகன்தோன்றி
நகுமுல்லை உகுதேறுவீப்

பொன்கொன்றை மணிக்காயா
நல்புறவின் நடை முனையின்
சுறவழங்கும் இரும் பௌவத்து
இறவு அருந்திய இனநாரை
பூம்புன்னைச் சினைச் சேப்பின்

ஓங்கு திரை ஒலிவெரீஇத்
தீம்பெண்ணை மடல் சேப்பவும்
கோள் தெங்கின் குலைவாழைக்
கொழுங்காந்தள் மலர் நாகத்துத்
துடிக் குடிஞைக் குடிப்பாக்கத்து

யாழ்வண்டின் கொளைக்கு ஏற்பக்
கலவம் விரித்த மடமஞ்ஞை
நிலவு எக்கர்ப் பலபெயரத்
தேன்நெய்யொடு கிழங்குமாறியோர்
மீன்நெய்யொடு நறவுமறுகவும்

தீங்கரும்பொடு அவல்வகுத்தோர்
மான்குறையொடு மது மறுகவும்
குறிஞ்சி பரதவர் பாட நெய்தல்
நறும்பூங் கண்ணிக் குறவர் சூடக்
கானவர் மருதம் பாட அகவர்

நீல்நிற முல்லைப் பல்திணை நுவலக்
கானக்கோழி கதிர் குத்த
மனைக்கோழி தினைக் கவர
வரைமந்தி கழி மூழ்கக்
கழிநாரை வரை இறுப்பத்

தண்வைப்பின் நாடு குழீஇ
மண்மருங்கினான் மறுஇன்றி
ஒருகுடையான் ஒன்றுகூறப்
பெரிது ஆண்ட பெருங்கேண்மை
அறனொடு புணர்ந்த திறன்அறி செங்கோல்

அன்னோன் வாழி வென்வேல் குருசில்
மன்னர் நடுங்கத் தோன்றிப் பல்மாண்
எல்லைதரு நன் பல்கதிர் பரப்பிக்
குல்லை கரியவும் கோடுஎரி நைப்பவும்
அருவி மாமலை நிழத்தவும் மற்றுஅக்

கருவி வானம் கடற்கோள் மறப்பவும்
பெருவறன் ஆகிய பண்புஇல் காலையும்
நறையும் நரந்தமும் அகிலும் ஆரமும்
துறைதுறை தோறும் பொறைஉயிர்த்து ஒழுகி
நுரைத்தலைக் குரைப்புனல் வரைப்பகம் புகுதொறும்

புனல்ஆடு மகளிர் கதுமெனக் குடையக்
கூனிக் குயத்தின் வாய்நெல் அரிந்து
சூடு கோடுஆகப் பிறக்கி நாள்தொறும்
குன்றுஎனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையின் இடம்கெடக் கிடக்கும்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட்டு ஆகக்
காவிரி புரக்கும் நாடுகிழ வோனே.

— சோழன் கரிகாற்பெருவளத்தானை
முடத்தாமக்கண்ணியார் பாடியது.

## வெண்பா

ஏரியும் ஏற்றத்தி னானும் பிறர்நாட்டு 1
வாரி சுரக்கும் வளன்எல்லாம் — தேரின்
அரிகாலின் கீழ்உகூஉம் அந்நெல்லே சாலும்
கரிகாலன் காவிரிசூழ் நாடு.

அரிமா சுமந்த அமளிமே லானைத் 2
திருமா வளவன்எனத் தேறேன் — திருமார்பின்
மானமால் என்றே தொழுதேன் தொழுதகைப்
போனவா பெய்த வளை.

முச்சக் கரமும் அளப்பதற்கு நீட்டியகால் 3
இச்சக் கரமே அளந்ததால் — செய்ச்செய்
அரிகால்மேல் தேன்தொடுக்கும் ஆய்புனல்நீர் நாடன்
கரிகாலன் கால்நெருப் புற்று.

# பெரும்பாணாற்றுப்படை

## (கடியலூர் உருத்திரங்கண்ணனார்)

அகல்இரு விசும்பில் பாய்இருள் பருகிப்
பகல்கான்று எழுதரு பல்கதிர்ப் பருதி
காய்சினம் திருகிய கடுந்திறல் வேனில்
பாசிலை ஒழித்த பராஅரைப் பாதிரி
வள்இதழ் மாமலர் வயிற்றிடை வகுத்து அதன்

உள்அகம் புரையும் ஊட்டுறு பச்சைப்
பரியஅரைக் கமுகின் பாளைஅம் பசும்பூக்
கருஇருந் தன்ன கண்கூடு செறிதுளை
உருக்கியன்ன பொருத்துறு போர்வைச்
சுனைவறந் தன்ன இருள்தூங்கு வறுவாய்ப்

பிறைபிறந் தன்ன பின்ஏந்து கவைக்கடை
நெடும்பணைத் திரள்தோள் மடந்தை முன்கைக்
குறுந்தொடி ஏய்க்கும் மெலிந்துவீங்கு திவவின்
மணிவார்ந் தன்ன மாஇரு மருப்பின்
பொன்வார்ந் தன்ன புரிஅடங்கு நரம்பின்

தொடைஅமை கேள்வி இடவயின் தழீஇ
வெம்தெறல் கனலியொடு மதிவலம் திரிதரும்
தண்கடல் வரைப்பில் தாங்குநர்ப் பெறாது
பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்துப்
பழுமரம் தேரும் பறவை போலக்

கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண
பெருவறம் கூர்ந்த கானம் கல்லெனக்
கருவி வானம் துளிசொரிந் தாங்குப்
பழம்பசி கூர்ந்தஎம் இரும்பேர் ஒக்கலொடு

வழங்கத் தவாஅப் பெருவளன் எய்தி
வால்உளைப் புரவியொடு வயக்களிறு முகந்துகொண்டு
யாம்அவண் நின்றும் வருதும் நீயிரும்
இருநிலம் கடநத திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை அந்நீர்த்

திரைதரு மரபின் உரவோன் உம்பல்
மலர்தலை உலகத்து மன்உயிர் காக்கும்
முரசுமுழங்கு தானை மூவருள்ளும்
இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி அன்ன வசைநீங்கு சிறப்பின்

அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்
பல்வேல் திரையன் - படர்குவி ராயின்
கேள்அவன் நிலையே கெடுகநின் அவலம்
அத்தம் செல்வோர் அலறத் தாக்கிக்
கைப்பொருள் வௌவும் களவுஏர் வாழ்க்கைக்

கொடியோர் இன்றுஅவன் கடியுடை வியன்புலம்
உருமும் உரறாது அரவும் தப்பா
காட்டு மாவும் உறுகண் செய்யா
வேட்டுஆங்கு, அசைவுழிஅசைஇ நசைவுழித் தங்கிச்
சென்மோ இரவல சிறக்கநின் உள்ளம்

கொழுஞ்சூட்டு அருந்திய திருந்துநிலை ஆரத்து
முழவின் அன்ன முழுமர உருளி
எழூஉப்புணர்ந் தன்ன பரூஉக்கை நோன்பார்
மாரிக் குன்றம் மழைசுமந் தன்ன
ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடம்

வேழம் காவலர் குரம்பை ஏய்ப்பக்
கோழி சேக்கும் கூடுடைப் புதவின்
முளைஎயிற்று இரும்பிடி முழந்தாள் ஏய்க்கும்
துளைஅரைச் சீறுரல் தூங்கத் தூக்கி
நாடக மகளிர் ஆடுகளத்து எடுத்த

விசிவீங்கு இன்இயம் கடுப்பக் கயிறு பிணித்துக்
காடி வைத்த கலனுடை மூக்கின்
மகவுடை மகடூஉப் பகடுபுறம் துரப்பக்
கோட்டுஇணர் வேம்பின் ஏட்டுஇலை மிடைந்த
படலைக் கண்ணிப் பரேர்எறுழ்த் திணிதோள்

முடலை யாக்கை முழுவலி மாக்கள்
சிறுதுளைக் கொடுநுகம் நெறிபட நிரைத்த
பெருங்கயிற்று ஒழுகை மருங்கில் காப்பச்
சில்பத உணவின் கொள்ளை சாற்றிப்
பல்எருத்து உமணர் பதிபோகு நெடுநெறி

எல்லிடைக் கழியுநர்க்கு ஏமம் ஆக
மலையவும் கடலவும் மாண்பயம் தரூஉம்
அரும்பொருள் அருத்தும் திருந்துதொடை நோன்தாள்
அடிபுதை யரணம் எய்திப் படம்புக்கு
பொருகணை தொலைச்சிய புண்தீர் மார்பின்

விரவுவரிக் கச்சின் வெண்கை ஒள்வாள்
வரைஊர் பாம்பின் பூண்டுபுடை தூங்கச்
சுரிகை நுழைந்த சுற்றுவீங்கு செறிவுஉடைக்
கருவில் ஓச்சிய கண்அகன் எறுழ்த்தோள்
கடம்புஅமர் நெடுவேள் அன்ன மீளி

உடம்பிடித் தடக்கை ஓடா வம்பலர்
தடவுநிலைப் பலவின் முழுமுதல் கொண்ட
சிறுசுளைப் பெரும்பழம் கடுப்ப மிரியல்
புணர்ப்பொறை தாங்கிய வடுஆழ் நோன்புறத்து
அணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்

உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்
வில்லுடை வைப்பின் வியன்காட்டு இயவின்
நீள்அரை இலவத்து அலங்குசினை பயந்த
பூளைஅம் பசுங்காய் புடைவிரிந் தன்ன
வரிப்புற அணிலொடு கருப்பை ஆடாது

யாற்றுஅறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல்
வேல்தலை அன்ன வைந்நுதி நெடுந்தகர்
ஈத்துஇலை வேய்ந்த எய்ப்புறக் குரம்பை
மான்தோல் பள்ளி மகவொடு முடங்கி
ஈன்பிணவு ஒழியப் போகி நோன்காழ்

இரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோல்
உளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி
இருநிலக் கரம்பைப் படுநீறு ஆடி
நுண்புல் அடக்கிய வெண்பல் எயிற்றியர்
பார்வை யாத்த பறைதாள் விளவின்

நீழல் முன்றில் நிலஉரல் பெய்து
குறுங்காழ் உலக்கை ஓச்சி நெடுங்கிணற்று
வல்ஊற்று உவரி தோண்டித் தொல்லை
முரவுவாய்க் குழிசி முரிஅடுப்பு ஏற்றி
வாராது அட்ட வாடுஊன் புழுக்கல்

வாடாத் தும்பை வயவர் பெருமகன்
ஓடாத் தானை ஒண்தொழில் கழல்-கால்
செவ்வரை நாடன் சென்னியம் எனினே
தெய்வ மடையின் தேக்குஇலைக் குவைஇ நும்
பைதீர் கடும்பொடு பதம்மிகப் பெறுகுவிர்

மான்அடி பொறித்த மயங்குஅதர் மருங்கின்
வான்மடி பொழுதில் நீர்நசைஇக் குழித்த
அகழ்சூழ் பயம்பின் அகத்து ஒளித்து ஒடுங்கிப்
புகழா வாகைப் பூவின் அன்ன
வளைமருப்பு ஏனம் வரவுபார்த்து இருக்கும்

அரைநாள் வேட்டம் அழுங்கின் பகல்நாள்
பகுவாய் ஞமலியொடு பைம்புதல் எருக்கித்
தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி
முள்அரைத் தாமரைப் பல்இதழ் புரையும்
நெடுஞ்செவிக் குறுமுயல் போக்குஅற வளைஇ

கடுங்கண் கானவர் கடறுகூட் டுண்ணும்
அருஞ்சுரம் இறந்த அம்பர்ப் பருந்துபட
ஒன்னாத் தெவ்வர் நடுங்க ஓச்சி
வைந்நுதி மழுங்கிய புலவுவாய் எஃகம்
வடிமணிப் பலகையொடு நிரைஇ முடிநாண்

சாபம் சார்த்திய கணைதுஞ்சு வியல்நகர்
ஊகம் வேய்ந்த உயர்நிலை வரைப்பின்
வரைத்தேன் புரையும் கவைக்கடைப் புதையொடு
கடுந்துடி தூங்கும் கணைக்கால் பந்தர்த்
தொடர்நாய் யாத்த துன்அருங் கடிநகர்

வாழ்முள் வேலி சூழ்மிளைப் படப்பைக்
கொடுநுகம் தழீஇய புதவின் செந்நிலை
நெடுநுதி வயக்கழு நிரைத்த வாயில்
கொடுவில் எயினக் குறும்பில் சேப்பின்
களர்வளர் ஈந்தின் காழ்கண் டன்ன

சுவல்விளை நெல்லின் செவ்அவிழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச்சூல உடும்பின்
வறைகால யாத்தது வயின்தொறும் பெறுகுவிர்
யானை தாக்கினும் அரவுமேல் செலினும்
நீல்நிற விசும்பின் வல்ஏறு சிலைப்பினும்

சூல்மகள் மாறா மறம்பூண் வாழ்க்கை
வலிக்கூட்டு உணவின் வாள்குடிப் பிறந்த
புலிப்போத்து அன்ன புல்அணல் காளை
செல்நாய் அன்ன கருவில் சுற்றமொடு
கேளா மன்னர் கடிபுலம் புக்கு

நாள்ஆ தந்து நறவுநொடை தொலைச்சி
இல்அடு கள்ளின் தோப்பி பருகி
மல்லல் மன்றத்து மதவிடை கெண்டி
மடிவாய்த் தண்ணுமை நடுவண் சிலைப்பச்
சிலைநவில் எறுழ்த்தோள் ஓச்சி வலன்வளையூஉப்

பகல்மகிழ் தூங்கும் தூங்கா இருக்கை
முரண்தலை கழிந்த பின்றை மறிய
குளகுஅரை யாத்த குறுங்கால் குரம்பைச்
செற்றை வாயில செறிகழிக் கதவின்
கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பின்

அதளோன் துஞ்சும் காப்பின் உதள
நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றில்
கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கும்
இடுமுள் வேலி எருப்படு வரைப்பின்
நளஇருள் விடியல் புள்எழப் போகிப்

புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி
ஆம்பி வால்முகை அன்ன கூம்புமுகிழ்
உறைஅமை தீம்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட்டு இரீஇ
நாள்மோர் மாறும் நலமா மேனிச்

சிறுகுழை துயல்வரும் காதின் பணைத்தோள்
குறுநெறிக் கொண்ட கூந்தல் ஆய்மகள்
அளைவிலை உணவின் கிளையுடன் அருத்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்ஆன் கருநாகு பெறூஉம்

மடிவாய்க் கோவலர் குடிவயின் சேப்பின்
இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப்பு அன்ன
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்
தொடுதோல் மரீஇய வடுஆழ் நோன்அடி
விழுத்தண்டு ஊன்றிய மழுத்தின் வன்கை

உறிக்கா ஊர்ந்த மறுப்படு மயிர்ச்சுவல்
மேம்பால் உரைத்த ஓரி ஓங்குமிசைக்
கோட்டவும் கொடியவும் விரைஇக் காட்ட
பல்பூ மிடைந்த படலைக் கண்ணி
ஒன்று அமர் உடுக்கைக் கூழ்ஆர் இடையன்

கன்று அமர் நிரையொடு கானத்து அல்கி
அம் நுண் அவிர்புகை கமழக் கைம்முயன்று
ஞெலிகோல் கொண்ட பெருவிறல் ஞெகிழிச்
செந்தீத் தோட்ட கருந்துளைக் குழலின்
இன்தீம் பாலை முனையின் குமிழின்

புழல்கோட்டுத் தொடுத்த மரல்புரி நரம்பின்
வில்யாழ இசைக்கும் விரல்எறி குறிஞ்சிப்
பல்கால் பறவை கிளைசெத்து ஓர்க்கும்
புல்ஆர் வியன்புலம் போகி முள்உடுத்து
எழுகாடு ஓங்கிய தொழுவுடை வரைப்பின்

பிடிக்கணத்து அன்ன குதிருடை முன்றில்
களிற்றுத்தாள் புரையும் திரிமரப் பந்தர்க்
குறுஞ்சாட்டு உருளையொடு கலப்பை சார்த்தி
நெடுஞ்சுவர் பறைநத புகைசூழ் கொட்டில்
பருவ வானத்துப் பாமழை கடுப்பக்

கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்
நெடுங்குரல் பூளைப் பூவின் அன்ன
குறுந்தாள் வரகின் குறள்அவிழ்ச் சொன்றிப்
புகர்இணர் வேங்கை வீகண் டன்ன
அவரை வான்புழுக்கு அட்டிப் பயில்வுற்று

இன்சுவை மூரல் பெறுகுவிர் ஞாங்கர்க்
குடிநிறை வல்சிச் செஞ்சால் உழவர்
நடைநவில் பெரும்பகடு புதவில் பூட்டிப்
பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்
உடுப்புமுக முழுக்கொழு மூழ்க ஊன்றித்

தொடுப்புஎறிந்து உழுத துளர்படு துடவை
அரிபுகு பொழுதின் இரியல் போகி
வண்ணக் கடம்பின் நறுமலர் அன்ன
வளர்இளம் பிள்ளை தழீஇக் குறுங்கால்
கறைஅணல் குறும்பூழ் கட்சிச் சேக்கும்

வன்புலம் இறந்த பின்றை மென்தோல்
மிதிஉலைக் கொல்லன் முறிகொடிற்று அன்ன
கவைத்தாள் அலவன் அளற்றுஅளை சிதையப்
பைஞ்சாய் கொன்ற மண்படு மருப்பின்
கார்ஏறு பொருத கண்அகன் செறுவின்

உழாஅ நுண்தொளி நிரவிய வினைஞர்
முடிநாறு அழுத்திய நெடுநீர்ச் செறுவில்
களைஞர் தந்த கணைக்கால் நெய்தல்
கள்கமழ் புதுப்பூ முனையின் முள்சினை
முகைசூழ் தகட்ட பிறழ்வாய் முள்ளிக்

கொடுங்கால் மாமலர் கொய்துகொண்டு அவண
பஞ்சாய்க் கோரை பல்லின் சவட்டிப்
புணர்நார்ப் பெய்த புனைவுஇன் கண்ணி
ஈருடை இருந்தலை ஆரச் சூடிப்
பொன்காண் கட்டளை கடுப்பக் கண்பின்

புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பின்
இரும்பு வடித்தன்ன மடியா மென்தோல்
கருங்கை வினைஞர் காதல்அம் சிறாஅர்
பழஞ்சோற்று அமலை முனைஇ வரம்பில்
புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில்

அவல்எறி உலக்கை பாடுவிறந்து அயல
கொடுவாய்க் கிள்ளை படுபகை வெரூஉம்
நீங்கா யாணர் வாங்குகதிர்க் கழனிக்
கடுப்புடைப் பறவைச் சாதி அன்ன
பைதுஅற விளைந்த பெருஞ்செந் நெல்லின்

தூம்புடைத் திரள்தாள் துமித்த வினைஞர்
பாம்புஉறை மருதின் ஓங்குசினை நீழல்
பலிபெறு வியன்களம் மலிய ஏற்றிக்
கணம்கொள் சுற்றமொடு கைபுணர்ந்து ஆடும்
துணங்கைஅம் பூதம் துகில்உடுத் தவைபோல்

சிலம்பி வால்நூல் வலந்த மருங்கின்
குழுமுநிலைப் போரின் முழுமுதல் தொலைச்சிப்
பகடுஊர்பு இழிந்த பின்றைத் துகள்தப
வையும் துரும்பும் நீக்கிப் பைதுஅறக்
குடகாற்று எறிந்த குப்பை வடபால்

செம்பொன் மலையின் சிறப்பத் தோன்றும்
தண்பணை தழீஇய தளரா இருக்கைப்
பகட்டுஆ ஈன்ற கொடுநடைக் குழவிக்
கவைத்தாம்பு தொடுத்த காழ்ஊன்று அல்குல்
ஏணி எய்தா நீள்நெடு மார்பின்

முகடுதுமித்து அடுக்கிய பழம்பல் உணவின்
குமரி மூத்த கூடுஓங்கு நல்இல்
தச்சச் சிறாஅர் நச்சப் புனைந்த
ஊரா நல்தேர் உருட்டிய புதல்வர்
தளர்நடை வருத்தம் வீட அலர்முலைச்

செவிலிஅம் பெண்டிர்த் தழீஇப் பால்ஆர்ந்து
அமளித் துஞ்சும் அழகுடை நல்இல்
தொல்பசி அறியாத் துளங்கா இருக்கை
மல்லல் பேரூர் மடியின் மடியா
வினைஞர் தந்த வெள்நெல் வல்சி

மனைவாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவிர்
மழைவிளை யாடும் கழைவளர் அடுக்கத்து
அணங்குடை யாளி தாக்கலின் பலவுடன்
கணம்சால் வேழம் கதழ்வுற் றுஅங்கு
எந்திரம் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை

விசயம் அடூஉம் புகைசூழ் ஆலைதொறும்
கரும்பின் தீம்சாறு விரும்பினிர் மிசைமின்
வேழம் நிரைத்து வெண்கோடு விரைஇத்
தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த
குறிஇறைக் குரம்பைப் பறியுடை முன்றில்

கொடுங்கால் புன்னைக் கோடுதுமித்து இயற்றிய
பைங்காய் தூங்கும் பாய்மணல் பந்தர்
இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றிப்
புலவுநுனைப் பகழியும் சிலையும் மானச்
செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும்

மைஇருங் குட்டத்து மகவொடு வழங்கிக்
கோடை நீடினும் குறைபடல் அறியாத்
தோள்தாழ் குளத்த கோடுகாத் திருக்கும்
கொடுமுடி வலைஞர் குடிவயின் சேப்பின்
அவையா அரிசி அம்களித் துழவை

மலர்வாய்ப் பிழாவில் புலர ஆற்றிப்
பாம்புஉறை புற்றின் குரும்பி ஏய்க்கும்
பூம்புற நல்அடை அளைஇத் தேம்பட
எல்லையும் இரவும் இருமுறை கழிப்பி
வல்வாய்ச் சாடியின் வழைச்சுஅற விளைந்த

வெந்நீர் அரியல் விரல்அலை நறும்பிழி
தண்மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகுவிர்
பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோல்
கோள்வல் பாண்மகன் தலைவலித்து யாத்த
நெடுங்கழைத் தூண்டில் நடுங்க நாண்கொளீஇக்

கொடுவாய் இரும்பின் மடிதலை புலம்பப்
பொதிஇரை கதுவிய போழ்வாய் வாளை
நீர்நணிப் பிரம்பின் நடுங்குநிழல் வெரூஉம்
நீத்துடை நெடுங்கயம் தீப்பட மலர்ந்த
கடவுள் ஒண்பூ அடர்தல் ஓம்பி

உறைகால் மாறிய ஓங்குஉயர் நனந்தலை
அகல்இரு வானத்துக் குறைவில் ஏய்ப்ப
அரக்குஇதழ்க் குவளையொடு நீலம் நீடி
முரண்பூ மலிந்த முதுநீர்ப் பொய்கைக்
குறுநர் இட்ட கூம்புவிடு பல்மலர்

பெருநாள் அமையத்துப் பிணையினிர் கழிமின்
செழுங்கன்று யாத்த சிறுதாள் பந்தர்ப்
பைஞ்சேறு மெழுகிய படிவ நல்நகர்
மனைஉறை கோழியொடு ஞமலி துன்னாது
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்

மறைகாப் பாளர் உறைபதிச் சேப்பின்
பெருநல் வானத்து வடவயின் விளங்கும்
சிறுமீன் புரையும் கற்பின் நறுநுதல்
வளைக்கை மகடூஉ வயின்அறிந்து அட்ட
சுடர்க்கடைப் பறவைப் பெயர்ப்படு வத்தம்

சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்து
உறுப்புஉறு பசுங்காய் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி அளைஇப் பைந்துணர்
நெடுமரக் கொக்கின் நறுவடி விதிர்த்த
தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்

வண்டல் ஆயமொடு உண்டுறைத் தலைஇப்
புனல்ஆடு மகளிர் இட்ட பொலங்குழை
இரைதேர் மணிச்சிரல் இரைசெத்து எறிந்தெனப்
புன்ஆர் பெண்ணைப் புலம்புமடல் செல்லாது
கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த

வேள்வித் தூணத்து அசைஇ யவனர்
ஓதிம விளக்கின் உயர்மிசைக் கொண்ட
வைகுறு மீனின் பையயத் தோன்றும்
நீர்ப்பெயற்று எல்லைப் போகி பால்கேழ்
வால்உளைப் புரவியொடு வடவளம் தரூஉம்

நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை
மாடம் ஓங்கிய மணல்மலி மறுகின்
பரதர் மலிந்த பல்வேறு தெருவின்
சிலதர் காக்கும் சேண்உயர் வரைப்பின்
நெல்உழு பகட்டொடு கறவை துன்னா

ஏழகத் தகரோடு எகினம் கொட்கும்
கூழுடை நல்இல் கொடும்பூண் மகளிர்
கொன்றை மென்சினை பனிதவழ் பவைபோல்
பைங்காழ் அல்குல் நுண்துகில் நுடங்க
மால்வரைச் சிலம்பின் மகிழ்சிறந்து ஆலும்

பீலி மஞ்ஞையின் இயலிக் கால
தமனியப் பொற்சிலம்பு ஒலிப்ப உயர்நிலை
வான்தோய் மாடத்து வரிப்பந்து அசைஇக்
கைபுனை குறுந்தொடி தத்தப் பைபய
முத்த வார்மணல் பொற்கழங்கு ஆடும்

பட்டின மருங்கின் அசையின் முட்டுஇல்
பைங்கொடி நுடங்கும் பலர்புகு வாயில்
செம்பூத் தூய செதுக்குடை முன்றில்
கள்அடு மகளிர் வள்ளம் நுடக்கிய
வார்ந்துஉகு சில்நீர் வழிந்த குழம்பின்

ஈர்ஞ்சேறு ஆடிய இரும்பல் குட்டிப்
பல்மயிர்ப் பிணவொடு பாயம் போகாது
நெல்மா வல்சி தீற்றிப் பல்நாள்
குழிநிறுத்து ஓம்பிய குறுந்தாள் ஏற்றைக்
கொழுநிணத் தடியொடு கூர்நறாப் பெறுகுவிர்

வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்றஅருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவின் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்

துறைபிறக்கு ஒழியப் போகிக் கறைஅடிக்
குன்றுஉறழ் யானை மருங்குல் ஏய்க்கும்
வண்தோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த
மஞ்சள் முன்றில் மணநாறு படப்பைத்
தண்டலை உழவர் தனிமனைச் சேப்பின்

தாழ்கோள் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்
வீழ்இல் தாழைக் குழவித் தீநீர்க்
கவைமுலை இரும்பிடிக் கவுள்மருப்பு ஏய்க்கும்
குலைமுதிர் வாழைக் கூனி வெண்பழம்
திரள்அரைப் பெண்ணை நுங்கொடு பிறவும்

தீம்பல் தாரம் முனையின் சேம்பின்
முளைப்புற முதிர்கிழங்கு ஆர்குவிர் பகல் பெயல்
மழைவீழ்ந் தன்ன மாத்தாள் கமுகின்
புடைசூழ் தெங்கின் முப்புடைத் திரள்காய்
ஆறுசெல் வம்பலர் காய்பசி தீரச்

சோறுஅடு குழிசி இளக விழூஉம்
வீயா யாணர் வளம்கெழு பாக்கத்துப்
பல்மர நீள்இடைப் போகி நல்நகர்
விண்தோய் மாடத்து விளங்குசுவர் உடுத்த
வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்

நாடுபல கழிந்த பின்றை நீடுகுலைக்
காந்தள்அம் சிலம்பில் களிறுபடிந் தாங்குப்
பாம்புஅணைப் பள்ளி அமர்ந்தோன் ஆங்கண்
வெயில்நுழைபு அறியாக் குயில்நுழை பொதும்பர்க்
குறுங்கால் காஞ்சி சுற்றிய நெடுங்கொடிப்

பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூக்
கார்அகல் கூவியர் பாகொடு பிடித்த
இழைசூழ் வட்டம் பால்கலந் தவைபோல்
நிழல்தாழ் வார்மணல் நீர்முகந்து உறைப்பப்
புனல்கால் கழீஇய பொழில்தொறும் திரள்கால்

சோலைக் கமுகின் சூல்வயிற்று அன்ன
நீலப் பைங்குடம் தொலைச்சி நாளும்
பெருமகிழ் இருக்கை மரீஇச் சிறுகோட்டுக்
குழவித் திங்கள் கோள்நேர்ந் தாங்குச்
சுறவுவாய் அமைத்த சுரும்புசூழ் சுடர்நுதல்

நறவுப்பெயர்த்து அமைத்த நல்எழில் மழைக்கண்
மடவரல் மகளிரொடு பகல்விளை யாடிப்
பெறற்குஅருந் தொலசீர்த் துறக்கம் ஏய்க்கும்
பொய்யா மரபின் பூமலி பெருந்துறைச்
செவ்விகொள் பவரோடு அசைஇ அவ்வயின்

அருந்திறல் கடவுள் வாழ்த்திச் சிறிதுநும்
கருங்கோட்டு இன்இயம் இயக்கினிர் கழிமின்
காழோர் இகழ்பதம் நோக்கிக் கீழ
நெடுங்கை யானை நெய்ம்மிதி கவளம்
கடுஞ்சூல் மந்தி கவரும் காவில்

களிறுகதன் அடக்கிய வெளிறுஇல் கந்தின்
திண்தேர் குழித்த குண்டுநெடுந் தெருவின்
படைதொலைபு அறியா மைந்துமலி பெரும்புகழ்க்
கடைகால் யாத்த பல்குடி கெழீஇக்
கொடையும் கோளும் வழங்குநர்த் தடுத்த

அடையா வாயில் மிளைசூழ் படப்பை
நீல்நிற உருவின் நெடியோன் கொப்பூழ்
நான்முக ஒருவன் – பயந்த பல்இதழ்த்
தாமரைப் பொகுட்டின் காண்வரத் தோன்றிச்
சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின்

இழுமென் புள்ளின் ஈண்டுகிளைத் தொழுதிக்
கொழுமென் சினைய கோளி யுள்ளும்
பழம்மீக் கூறும் பலாஅப் போலப்
புலவுக்கடல் உடுத்த வானம் சூடிய
மலர்தலை உலகத் துள்ளும் பலர்தொழ

விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்
அவ்வாய் வளர்பிறை சூடிச் செவ்வாய்
அந்தி வானத்து ஆடுமழை கடுப்ப
வெண்கோட்டு இரும்பிணம் குருதி ஈர்ப்ப
ஈர்ஐம் பதின்பரும பொருதுகளத்து அவியப்

பேர்அமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தேர்
ஆராச் செருவின் ஐவர் போல
அடங்காத் தானையோடு உடன்றுமேல் வந்த
ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து ஆர்த்துக்
கச்சி யோனே கைவண் தோன்றல்

நச்சிச் சென்றோர்க்கு ஏமம் ஆகிய
அளியும் தெறலும் எளிய ஆகலின்
மலைந்தோர் தேஎம் மன்றம் பாழ்பட
நயந்தோர் தேஎம் நன்பொன் பூப்ப
நட்புக் கொளல் வேண்டி நயந்திசி னோரும்

துப்புக் கொளல் வேண்டிய துணையி லோரும்
கல்வீழ் அருவி கடல்படர்ந் தாங்குப்
பல்வேறு வகையின பணிந்த மன்னர்
இமையவர் உறையும் சிமையச் செவ்வரை
வெண்திரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுப்

பொன்கொழித்து இழிதரும் போக்குஅருங் கங்கைப்
பெருநீர் போகும் இரியல் மாக்கள்
ஒருமரப் பாணியின் தூங்கி யாங்கு
தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇச்
செவ்வி பார்க்கும் செழுநகர் முற்றத்துப்

பெருங்கை யானைக் கொடுந்தொடி படுக்கும்
கருங்கைக் கொல்லன் இரும்புவிசைத்து எறிந்த
கூடத் திண்இசை வெரீஇ மாடத்து
இறைஉறை புறவின் செங்கால் சேவல்
இன்துயில் இரியும் பொன்துஞ்சு வியல்நகர்க்

குணகடல் வரைப்பில் முந்நீர் நாப்பண்
பகல்செய் மண்டிலம் பாரித் தாங்கு
முறைவேண்டு நர்க்கும் குறைவேண்டு நர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டினர்க்கு அருளி
இடைத்தெரித்து உணரும் இருள்தீர் காட்சிக்

கொடைக் கடன் இறுத்த கூம்பா உள்ளத்து
உரும்புஇல் சுற்றமோடு இருந்தோன் – குறுகிப்
பொறிவரிப் புகர்முகம் தாக்கிய வயமான்
கொடுவரிக் குருளை கொளவேட் டாங்குப்
புலவர் பூண்கடன் ஆற்றிப் பகைவர்

கடிமதில் எறிந்து குடுமி கொள்ளும்
வென்றி அல்லது வினைஉடம் படினும்
ஒன்றல் செல்லா உரவுவாள் தடக்கைக்
கொண்டி உண்டித் தொண்டையோர் மருக
மள்ளர் மள்ள மறவர் மறவ

செல்வர் செல்வ செருமேம் படுந
வெண்டிரைப் பரப்பில் கடுஞ்சூர் கொன்ற
பைம்பூண் சேஎய் பயந்தமா மோட்டுத்
துணங்கைஅம செல்விக்கு அணங்கு நொடித்தாங்குத்
தண்டா ஈகைநின் பெரும்பெயர் ஏத்தி

வந்தேன் பெரும வாழிய நெடிதுஎன
இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பிக்
கடன்அறி மரபின் கைதொழூஉப் பழிச்சி
நின்நிலை தெரியா அளவை அந்நிலை
நாவல்அம் தண்பொழில் வீவுஇன்று விளங்க

நில்லா உலகத்து நிலைமை தூக்கி
அந்நிலை அணுகல் வேண்டி நின்அரைப்
பாசி அன்ன சிதர்வை நீக்கி
ஆவி அன்ன அவிர்நூல் கலிங்கம்
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் உடீஇக்

கொடுவாள் கதுவிய வடுஆழ் நோன்கை
வல்லோன் அட்ட பல்ஊன் கொழுங்குறை
அரிசெத்து உணங்கிய பெருஞ்செந் நெல்லின்
தெரிகொள் அரிசித் திரள்நெடும் புழுக்கல்
அருங்கடித் தீம்சுவை அமுதொடு பிறவும்

விருப்புடை மரபின் கரப்புடை அடிசில்
மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி
மகமுறை மகமுறை நோக்கி முகன்அமர்ந்து
ஆனா விருப்பின் தான்நின்று ஊட்டி
மங்குல வானத்துத் திங்கள் ஏய்க்கும்

ஆடுவண்டு இமிரா அழல்அவிர் தாமரை
நீடுஇரும் பித்தை பொலியச் சூட்டி
உரவுக்கடல் முகந்த பருவ வானத்துப்
பகல்பெயல் துளியின் மின்னுநிமிர்ந் தாங்குப்
புனைஇருங் கதுப்பகம் பொலியப் பொலனின்

தொடைஅமை மாலை விறலியர் மலைய
நூலோர் புகழ்ந்த மாட்சிய மால்கடல்
வளைகண் டன்ன வால்உளைப் புரவி
துணைபுணர் தொழில நால்குஉடன் பூட்டி
அரித்தேர் நல்கியும் அமையான் செருத்தொலைத்து

ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து ஒழித்த
விசும்புசெல் இவுளியொடு பசும்படை தரீஇ
அன்றே விடுக்கும்அவன் பரிசில் இன்சீர்க்
கின்னரம் முரலும் அணங்குடைச் சாரல்
மஞ்ஞை ஆலும் மரம்பயில் இறும்பின்

கலைபாய்ந்து உதிர்த்த மலர்வீழ் புறவின்
மந்தி சீக்கும் மாதுஞ்சு முன்றில்
செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டுக்
களிறுதரு விறகின் வேட்கும்
ஒளிறுஇலங்கு அருவிய மலைகிழ வோனே.

— தொண்டைமான் இளந்திரையனைக்
கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது.

## வெண்பா

கங்குலும் நண்பகலும் துஞ்சா இயல்பிற்றாய்
மங்குல்சூழ் மாகடல் ஆர்ப்பதூஉம் — வெஞ்சினவேல்
கான்பயந்த கண்ணிக் கடுமான் திரையனை
யான்பயந்தேன் என்னும் செருக்கு.

# சிறுபாணாற்றுப்படை

## (நத்தத்தனார்)

மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை
அணிமுலைத் துயல்வரூஉம் ஆரம் போலச்
செல்புனல் உழந்த சேய்வரல் கான்யாற்றுக்
கொல்கரை நறும்பொழில் குயில்குடைந்து உதிர்த்த
புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடைநெறித்துக்

கதுப்புவிரித் தன்ன காழக நுணங்குஅறல்
அயில்உருப்பு அனைய ஆகி ஐதுநடந்து
வெயில்உருப்பு உற்ற வெம்பரல் கிழிப்ப
வேனில் நின்ற வெம்பத வழிநாள்
காலைஞா யிற்றுக் கதிர்கடா உறுப்பப்

பாலை நின்ற பாலை நெடுவழிச்
சுரன்முதல் மராஅத்த வரிநிழல் அசைஇ
ஐதுவீழ் இகுபெயல் அழகுகொண் டருளி
நெய்கனிந்து இருளிய கதுப்பின் கதுப்புஎன
மணிவயின் கலாபம் பரப்பிப் பலவுடன்

மயில்மயில் குளிக்கும் சாயல் சாஅய்
உயங்குநாய் நாவின் நல்எழில் அசைஇ
வயங்குஇழை உலறிய அடியின் அடிதொடர்ந்து
ஈர்ந்து நிலம்தோயும் இரும்பிடித் தடக்கையின்
சேர்ந்துஉடன் செறிந்த குறங்கின் குறங்குஎன

மால்வரை ஒழுகிய வாழை வாழைப்
பூஎனப் பொலிந்த ஓதி ஓதி
நளிச்சினை வேங்கை நாள்மலர் நச்சிக்
களிச்சுரும்பு அரற்றும் சுணங்கின் சுணங்குபிதிர்ந்து
யாணர்க் கோங்கின் அவிர்முகை எள்ளிப்

பூணஅகத்து ஒடுங்கிய வெம்முலை முலைஎன
வண்கோள் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன்சேறு இகுதரும் எயிற்றின் எயிறுஎனக்
குல்லைஅம் புறவில் குவிமுகை அவிழ்ந்த
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்

மடமான் நோக்கின் வாள்நுதல் விறலியர்
நடைமெலிந்து அசைஇய நன்மென் சீறடி
கல்லா இளைஞர் மெல்லத் தைவரப்
பொன்வார்ந் தன்ன புரிஅடங்கு நரம்பின்
இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ

நைவளம் பழுநிய நயம்தெரி பாலை
கைவல் பாண்மகன் கடன்அறிந்து இயக்க
இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇத்
துனிகூர் எவ்வமொடு துயர்ஆற்றுப் படுப்ப
முனிவுஇகந்து இருந்த முதுவாய் இரவல

கொழுமீன் குறைய ஒதுங்கி வள்இதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவாய் எருமை
பைங்கறி நிவந்த பலவின் நீழல்
மஞ்சள் மெல்இலை மயிர்ப்புறம் தைவர
விளையா இளங்கள் நாற மெல்குபு பெயராக்

குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளும்
குடபுலம் காவலர் மருமான் ஒன்னார்
வடபுல இமயத்து வாங்குவில் பொறித்த
எழுஉறழ் திணிதோள் இயல்தேர்க் குட்டுவன்
வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே அதாஅன்று

நறவுவாய் உறைக்கும் நாகுமுதிர் நுணவத்து
அறைவாய்க் குறுந்துணி அயில்உளி பொருத
கைபுனை செப்பம் கடைந்த மார்பின்
செய்பூங் கண்ணி செவிமுதல் திருத்தி
நோன்பகட்டு உமணர் ஒழுகையொடு வந்த

மகாஅர் அன்ன மந்தி மடவோர்
நகாஅர் அன்ன நளிநீர் முத்தம்
வாள்வாய் எருந்தின் வயிற்றுஅகத்து அடக்கித்
தோள்புறம் மறைக்கும் நல்கூர் நுசுப்பின்
உளர்இயல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற

கிளர்பூண் புதல்வரொடு கிலுகிலி ஆடும்
தத்துநீர் வரைப்பின் கொற்கைக் கோமான்
தென்புலம் காவலர் மருமான் ஒன்னார்
மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக்
கண்ஆர் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்

தமிழ்நிலை பெற்ற தாங்கஅரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே அதாஅன்று
நறுநீர்ப் பொய்கை அடைகரை நிவந்த
துறுநீர்க் கடம்பின் துணைஆர் கோதை
ஓவத்து அன்ன உண்துறை மருங்கின்

கோவத்து அன்ன கொங்குசேர்பு உறைத்தலின்
வருமுலை அன்ன வண்முகை உடைந்து
திருமுகம் அவிழ்ந்த தெய்வத் தாமரை
ஆசுஇல் அங்கை அரக்குத்தோய்ந் தன்ன
சேஇதழ் பொலிந்த செம்பொன் கொட்டை

ஏம இன்துணை தழீஇ இறகுஉளர்ந்து
காமரு தும்பி காமரம் செப்பும்
தண்பணை தழீஇய தளரா இருக்கைக்
புணகுலம் காவலர் மருமான் ஒன்னார்
ஓங்குஎயில் கதவம் உருமுச்சுவல் சொறியும்

தூங்குஎயில் எறிந்த தொடிவிளங்கு தடக்கை
நாடா நல்இசை நல்தேர்ச் செம்பியன்
ஓடாப் பூட்கை உறந்தையும் வறிதே அதாஅன்று
வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய

அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும் சுரும்புஉண
நறுவீ உறைக்கும் நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் அருவி வீழும் சாரல்

பறம்பின் கோமான் பாரியும் கறங்குமணி
வால்உளைப் புரவியொடு வையகம் மருள
ஈர நல்மொழி இரவலர்க்கு ஈந்த
அழல்திகழ்ந்து இமைக்கும் அஞ்சுவரு நெடுவேல்
கழல்தொடித் தடக்கைக் காரியும் நிழல்திகழ்

நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆல்அமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த
சாவம் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நல்மொழி ஆயும் மால்வரைக்
கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி

அமிழ்துவிளை தீம்கனி ஔவைக்கு ஈந்த
உரவுச்சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்
அரவக்கடல் தானை அதிகனும் கரவாது
நட்டோர் உவப்ப நடைப்பரி காரம்
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்

துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாடன் நள்ளியும் நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நல்நாடு கோடியர்க்கு ஈந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த

ஓரிக் குதிரை ஓரியும் எனஆங்கு
எழுசமம் கடந்த எழுஉறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்

நறுவீ நாகமும் அகிலும் ஆரமும்
துறைஆடு மகளிர்க்குத் தோட்புணை ஆகிய
பொருபுனல் தரூஉம் போக்குஅரு மரபின்
தொல்மா இலங்கைக் கருவொடு பெயரிய
நல்மா இலங்கை மன்ன ருள்ளும்

மறுஇன்றி விளங்கிய வடுஇல் வாய்வாள்
உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்
களிற்றுத்தழும்பு இருந்த கழல்தயங்கு திருந்துஅடிப்
பிடிக்கணம் சிதறும் பெயல்மழைத் தடக்கைப்
பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை

நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு
தாங்கஅரு மரபின் தன்னும் தந்தை
வான்பொரு நெடுவரை வளனும் பாடி
முன்நாள் சென்றனம் ஆக இந்நாள்
திறவாக் கண்ண சாய்செவிக் குருளை

கறவாப் பால்முலை கவர்தல் நோனாது
புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்
காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த
பூழி பூத்த புழல்கா ளாம்பி
ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்

வளைக்கைக் கிணைமகள் வள்உகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடைஅடைத்து
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குஉடன் மிசையும்
அழிபசி வருத்தம் வீடப் பொழிகவுள்

தறுகண் பூட்கைத் தயங்குமணி மருங்கின்
சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி
யாம்அவண் நின்றும் வருதும் நீயிரும்
இவண்நயந்து இருந்த இரும்பேர் ஒக்கல்
செம்மல் உள்ளமொடு செல்குவி ராயின்

அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவும்
தலைநாள் செருந்தி தமனியம் மருட்டவும்
கடுஞ்சூல் முண்டகம் கதிர்மணி கழாஅலவும்
நெடுங்கால் புன்னை நித்திலம் வைப்பவும்
கானல் வெண்மணல் கடல்உலாய் நிமிர்தரப்

பாடல் சான்ற நெய்தல் நெடுவழி
மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவின் பட்டினம் படரின்
ஓங்குநிலை ஒட்டகம் துயில்மடிந் தன்ன
வீங்குதிரை கொணர்ந்த விரைமற விறகின்

கரும்புகைச் செந்தீ மாட்டிப் பெருந்தோள்
மதிஏக் கறாஉம் மாசுஅறு திருமுகத்து
நுதிவேல் நோக்கின் நுளைமகள் அரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்பக்
கிளைமலர்ப் படப்பைக் கிடங்கில் கோமான்

தளைஅவிழ் தெரியல் தகையோன் - பாடி
அறல்குழல் பாணி தூங்கி யவரொடு
வறல்குழல் சூட்டின வயின்வயின் பெறுகுவிர்
பைந்நனை அவரை பவழம் கோப்பவும்
கருநனைக் காயாக் கணமயில் அவிழவும்

கொழுங்கொடி முசுண்டை கொட்டம் கொள்ளவும்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்
கொலலை நெடுவழிக் கோபம் ஊரவும்
முல்லை சான்ற முலலைஅம் புறவின்
விடர்கால் அருவி வியல்மலை மூழ்கிச்

சுடர்கால் மாறிய செவ்வி நோக்கித்
திறல்வேல் நுதியின் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூர் எய்தின்
உறுவெயிற்கு உலைஇய உருப்புஅவிர் குரம்பை
எயிற்றியர் அட்ட இன்புளி வெம்சோறு

தேமா மேனிச் சில்வளை ஆயமொடு
ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவிர்
நறும்பூங் கோதை தொடுத்த நாள்சினைக்
குறுங்கால் காஞ்சிக் கொம்பர் ஏறி
நிலைஅருங் குட்டம் நோக்கி நெடிதுஇருந்து

புலவுக்கயல் எடுத்த பொன்வாய் மணிச்சிரல்
வள்உகிர்க் கிழித்த வடுஆழ் பாசடை
முள்அரைத் தாமரை முகிழ்விரி நாட்போது
கொங்குகவர் நீலச் செங்கண் சேவல்
மதிசேர் அரவின் மானத் தோன்றும்

மருதம் சான்ற மருதத் தண்பணை
அந்தணர் அருகா அருங்கடி வியல்நகர்
அம்தண் கிடங்கின்அவன் ஆமூர் எய்தின்
வலம்பட நடக்கும் வலிபுணர் எருத்தின
உரன்கெழு நோன்பகட்டு உழவர் தங்கை

பிடிக்கை அன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்
தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப
இருங்காழ் உலக்கை இரும்புமுகம் தேய்ந்த
அவைப்புமாண் அரிசி அமலைவெண் சோறு
கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவிர்

எரிமறிந் தன்ன நாவின் இலங்குஎயிற்றுக்
கருமறிக் காதின் கவைஅடிப் பேய்மகள்
நிணன்உண்டு சிரித்த தோற்றம் போலப்
பிணன்உகைத்துச் சிவந்த பேர்உகிர்ப் பணைத்தாள்
அண்ணல் யானை அருவிதுகள் அவிப்ப

நீறுஅடங்கு தெருவின்அவன் சாறுஅயர் மூதூர்
சேய்த்தும் அன்று சிறிது நணியதுவே
பொருநர்க்கு ஆயினும் புலவர்க்கு ஆயினும்
அருமறை நாவின் அந்தணர்க்கு ஆயினும்
கடவுள் மால்வரை கண்விடுத் தன்ன

அடையா வாயில்அவன் அருங்கடை குறுகிச்
செய்ந்நன்றி அறிதலும் சிற்றினம் இன்மையும்
இன்முகம் உடைமையும் இனியன் ஆதலும்
செறிந்து விளங்கு சிறப்பின் அறிந்தோர்ஏத்த
அஞ்சினர்க்கு அளித்தலும் வெஞ்சினம் இன்மையும்

ஆண்அணி புகுதலும் அழிபடை தாங்கலும்
வாள்மீக் கூற்றத்து வயவர் ஏத்தக்
கருதியது முடித்தலும் காமுறப் படுதலும்
ஒருவழிப் படாமையும் ஓடியது உணர்தலும்
அரிஏர் உண்கண் அரிவையர் ஏத்த

அறிவுமடம் படுதலும் அறிவுநன்கு உடைமையும்
வரிசை அறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்தப்
பல்மீன் நடுவண் பால்மதி போல
இன்நகை ஆயமொடு இருந்தோன்-குறுகிப்

பைங்கண் ஊகம் பாம்புபிடித் தன்ன
அம்கோட்டுச் செறிந்த அவிழ்ந்துவீங்கு திவவின்
மணிநிரைத் தன்ன வனப்பின் வாய்அமைத்து
வயிறுசேர்பு ஒழுகிய வகைஅமை அகளத்துக்
கானக் குமிழின் கனிநிறம் கடுப்பப்

புகழ்வினைப் பொலிந்த பச்சையொடு தேம்பெய்து
அமிழ்துபொதிந்து இலிற்றும் அடங்குபுரி நரம்பின்
பாடுதுறை முற்றிய பயன்தெரி கேள்விக்
கூடுகொள் இன்இயம் குரல்குரல் ஆக
நூல்நெறி மரபின பண்ணி ஆனாது

முதுவோர்க்கு முகிழ்த்த கையினை எனவும்
இளையோர்க்கு மலர்ந்த மார்பினை எனவும்
ஏரோர்க்கு நிழன்ற கோலினை எனவும்
தேரோர்க்கு அழன்ற வேலினை எனவும்
நீசில மொழியா அளவை மாசுஇல்

காம்பு சொலித்தன்ன அறுவை உடீஇப்
பாம்பு வெகுண்டன்ன தேறல் நல்கிக்
காளரி ஊட்டிய கவர்கணைத் தூணிப்
பூவிரி கச்சைப் புகழோன் தன்முன்
பனிவரை மார்பன் பயந்த நுண்பொருள்

பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்
வாள்நிற விசும்பின் கோள்மீன் சூழ்ந்த
இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து
விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி
ஆனா விருப்பின் தான்நின்று ஊட்டித்

திறல்சால் வென்றியொடு தெவ்வுப்புலம் அகற்றி
விறல்வேல் மன்னர் மனஎயில் முருக்கி
நயவர் பாணர், புன்கண் தீர்த்தபின்
வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு
பருவ வானத்துப் பால்கதிர் பரப்பி

உருவ வால்மதி ஊர்கொண் டாங்குக்
கூர்உளி பொருத வடுஆழ் நோன்குறட்டு
ஆரம் சூழ்ந்த அயில்வாய் நேமியொடு
சிதர்நனை முருக்கின் சேண்ஓங்கு நெடுஞ்சினைத்
ததர்பிணி அவிழ்ந்த தோற்றம் போல

உள்அரக்கு எறிந்த உருக்குறு போர்வைக்
கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி
ஊர்ந்து பெயர்பெற்ற எழில்நடைப் பாகரொடு
மாசெலவு ஒழிக்கும் மதனுடை நோன்தாள்
வாள்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ

அன்றே விடுக்கும்அவன் பரிசில் மென்தோள்
துகில்அணி அல்குல் துளங்குஇயல் மகளிர்
அகில்உண விரித்த அம்மென் கூந்தலின
மணிமயில் கலாபம் மஞ்சிடைப் பரப்பித்
துணிமழை தவழும் துயல்கழை நெடுங்கோட்டு

எறிந்துஉரும் இறந்த ஏற்றுஅருஞ் சென்னிக்
குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச்
செல்இசை நிலைஇய பண்பின்
நல்லியக் கோடனை நயந்தனிர் செலினே.

— ஓய்மான்நாட்டு நல்லியக்கோடனை
இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது.

## வெண்பா

அணியிழையார்க்கு ஆரணங்கு ஆகிமற்று அந்நோய்
தணிமருந்தும் தாமேஆம் என்ப — மணிமிடைபூண்
இம்மென் முழவின் எயிற்பட்டின நாடன்
செம்மல் சிலைபொருத தோள். 1

நெடுவரைச் சந்தனம் நெஞ்சம் குளிர்ப்பப்
படும்அடும் பாம்பேர் மருங்குல் — இடுகொடி
ஓடிய மார்பன் உயர்நல் லியக்கோடன்
சூடிய கண்ணி சுடும். 2

# கூத்தராற்றுப்படை

## —மலைபடுகடாம்—

### (இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்)

திருமழை தலைஇய இருள்நிற விசும்பின்
விண்அதிர் இமிழ்இசை கடுப்பப் பண்அமைத்துத்
திண்வார் விசித்த முழவொடு ஆகுளி
நுண்உருக்கு உற்ற விளங்குஅடர்ப் பாண்டில்
மின்இரும் பீலி அணித்தழைக் கோட்டொடு

கண்இடை விடுத்த களிற்றுஉயிர்த் தூம்பின்
இளிப்பயிர் இமிரும் குறும்பரந் தூம்பொடு
விளிப்பது கவரும் தீங்குழல் துதைஇ
நடுவுநின்று இசைக்கும் அரிக்குரல் தட்டை
கடிகவர்பு ஒலிக்கும் வல்வாய் எல்லரி

நொடிதரு பாணிய பதலையும் பிறவும்
கார்கோள் பலவின் காய்த்துணர் கடுப்ப
நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்
கடுக்கலித்து எழுந்த கண்அகன் சிலம்பில்
படுத்துவைத் தன்ன பாறை மருங்கின்

எடுத்துநிறுத் தன்ன இட்டுஅருஞ் சிறுநெறி
தொடுத்த வாளியர் துணைபுணர் கானவர்
இடுக்கண் செய்யாது இயங்குநர் இயக்கும்
அடுக்கல் மீமிசை அருப்பம் பேணாது
இடிச்சுர நிவப்பின் இயவுக்கொண்டு ஒழுகித்

தொடித்திரிவு அன்ன தொண்டுபடு திவவின்
கடிப்பகை அனைத்தும் கேள்வி போகாக்
குரல்ஓர்த்துத் தொடுத்த சுகிர்புரி நரம்பின்
அரலை தீர உரீஇ வரகின்
குரல்வார்ந் தன்ன நுண்துளை இரீஇச்

சிலம்புஅமை பத்தல் பசையொடு சேர்த்தி
இலங்குதுளை செறிய ஆணி முடுக்கிப்
புதுவது புனைந்த வெண்கை யாப்புஅமைத்துப்
புதுவது போர்த்த பொன்போல் பச்சை
வதுவை நாறும் வண்டுகமழ் ஐம்பால்

மடந்தை மாண்ட நுடங்குஎழில் ஆகத்து
அடங்குமயிர் ஒழுகிய அவ்வாய் கடுப்ப
அகடுசேர்பு பொருந்தி அளவினில் திரியாது
கவடுபடக் கவைஇய சென்றுவாங்கு உந்தி
நுணங்குஅரம் நுவறிய நுண்நீர் மாமைக்

களங்கனி அன்ன கதழ்ந்துகிளர் உருவின்
வணர்ந்து ஏந்து மருப்பின் வள்உயிர்ப் பேரியாழ்
அமைவரப் பண்ணி அருள்நெறி திரியாது
இசைபெறு திருவின் வேத்தவை ஏற்பத்
துறைபல முற்றிய பைதீர் பாணரொடு

உயர்ந்து ஓங்கு பெருமலை ஊறுஇன்று ஏறலின்
மதம்தபு ஞமலி நாவின் அன்ன
துளங்குஇயல் மெலிந்த கல்பொரு சீறடிக்
கணம்கொள் தோகையின் கதுப்புஇகுத்து அசைஇ
விலங்குமலைத்து அமர்ந்த சேயரி நாட்டத்து

இலங்குவளை விறலியர் நின்புறம் சுற்றக்
கயம்புக் கன்ன பயம்படு தண்நிழல்
புனல்கால் கழீஇய மணல்வார் புறவில்
புலம்புவிட்டு இருந்த புனிறுஇல் காட்சிக்
கலம்பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ

தூமலர் துவன்றிய கரைபொரு நிவப்பின்
மீமிசை நல்யாறு கடல்படர்ந் தாஅங்கு
யாம்அவண் நின்றும் வருதும் நீயிரும்
கனிபொழி கானல் கிளையொடு உணீஇய
துனைபறை நிவக்கும் புள்ளினம் மானப்

புனைதார்ப் பொலிந்த வண்டுபடு மார்பின்
வனைபுனை எழில்முலை வாங்குஅமைத் திரள்தோள்
மலர்போல் மழைக்கண் மங்கையர் கணவன்
முனைபாழ் படுக்கும் துன்அருந் துப்பின்
இசைநுவல் வித்தின் நசைஏர் உழவர்க்குப்

புதுநிறை வந்த புனல்அம் சாயல்
மதிமாறு ஓரா நன்றுஉணர் சூழ்ச்சி
வில்நவில் தடக்கை மேவரும் பெரும்பூண்
நன்னன்சேய் நன்னன் படர்ந்த கொள்கையொடு
உள்ளினிர் சேறி ராயின் பொழுது எதிர்ந்த

புள்ளினிர் மன்ற என்-தாக் குறுதலின்
ஆற்றின் அளவும் அசையும்நல் புலமும்
வீற்றுவளம் சுரக்கும்அவன் நாடுபடு வல்சியும்
மலையும் சோலையும் மாபுகல் கானமும்
தொலையா நல்இசை உலகமொடு நிற்பப்

பலர்புறம் கண்டுஅவர் அருங்கலம் தரீஇப்
புலவோர்க்குச சுரக்கும்அவன் ஈகை மாரியும்
இகழுநர்ப் பிணிக்கும் ஆற்றலும் புகழுநர்க்கு
அரசுமுழுது கொடுப்பினும் அமரா நோக்கமொடு
தூத்துளி பொழிந்த பொய்யா வானின்

வீயாது சுரக்கும்அவன் நாள்மகிழ் இருக்கையும்
நல்லோர் குழீஇய நாநவில் அவையத்து
வல்லா ராயினும் புறம்மறைத்துச் சென்றோரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வுஇன்றி விளக்கி
நல்லிதின் இயக்கும்அவன் சுற்றத்து ஒழுக்கமும்

நீரகம் பணிக்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பேர்இசை நவிரம் மேஎய் உறையும்
காரி உண்டிக் கடவுளது இயற்கையும்
பாய்இருள் நீங்கப் பகல்செய்யா எழுதரும்
ஞாயிறு அன்னஅவன் வசைஇல் சிறப்பும்

இகந்தன வாயினும் தெவ்வர் தேஎம்
நுகம்படக் கடந்து நூழில் ஆட்டிப்
புரைத்தோல் வரைப்பின் வேல்நிழல் புலவோர்க்குக்
கொடைக்கடன் இறுத்தஅவன் தொல்லோர் வரவும்
இரைதேர்ந்து இவரும் கொடுந்தாள் முதலையொடு

திரைபடக் குழிந்த கல்அகழ் கிடங்கின்
வரைபுரை நிவப்பின் வான்தோய் இஞ்சி
உரைசெல வெறுத்தஅவன் மூதூர் மாலையும்
கேள்இனி வேளைநீ முன்னிய திசையே
மிகுவளம் பழுநிய யாணர் வைப்பின்

புதுவது வந்தன்று இதுஅதன் பண்பே
வானமின்னு வசிவு பொழிய ஆனாது
இட்ட எல்லாம் பெட்டாங்கு விளையப்
பெயலொடு வைகிய வியன்கண் இரும்புனத்து
அகல்இரு விசும்பின் ஆஅல் போல

வாலிதின் விரிந்த புன்கொடி முசுண்டை
நீலத்து அன்ன விதைப்புன மருங்கில்
மகுளி பாயாது மலிதுளி தழாலின்
அகளத்து அன்ன நிறைச்சுனைப் புறவின்
கௌவை போகிய கருங்காய் பிடிஏழ்

நெய்கொள ஒழுகின பல்கவர் ஈர்எண்
பொய்பொரு கயமுனி முயங்குகை கடுப்பக்
கொய்பதம் உற்றன குலவுக்குரல் ஏனல்
விளைதயிர்ப் பிதிர்வின் வீஉக்கு இருவிதொறும்
குளிர்புரை கொடுங்காய் கொண்டன அவரை

மேதி அன்ன கல்பிறங்கு இயவின்
வாதிகை அன்ன கவைக்கதிர் இறைஞ்சி
இரும்புகவர்வு உற்றன பெரும்புன வரகே
பால்வார்பு கெழீஇப் பல்கவர் வளிபோழ்பு
வாலிதின் விளைந்தன ஐவன வெண்ணெல்

வேல்ஈண்டு தொழுதி இரிவுற் றென்னக்
கால்உறு துவைப்பின் கவிழ்க்கனைத்து இறைஞ்சிக்
குறைஅறை வாரா நிவப்பின் அறைஉற்று
ஆலைக்கு அலமலரும் தீம்கழைக் கரும்பே
புயல்புனிறு போகிய பூமலி புறவின்

அவல்பதம் கொண்டன அம்பொதித் தோரை
தொய்யாது வித்திய துளர்படு துடவை
ஐயவி அமன்ற வெண்கால் செறுவில்
மையென விரிந்தன நீள்நறு நெய்தல்
செய்யாப் பாவை வளர்ந்துகவின் முற்றிக்

காயம் கொண்டன இஞ்சி மாஇருந்து
வயவுப்பிடி முழந்தாள் கடுப்பக் குழிதொறும்
விழுமிதின் வ்ழ்ந்தன கொழுங்கொடிக் கவலை
காழ்மண்டு எஃகம் களிற்றுமுகம் பாய்ந்தென
ஊழ்மலர் ஒழிமுகை உயர்முகம் தோயத்

துறுகல் சுற்றிய சோலை வாழை
இறுகுலை முறுகப் பழுத்த பயம்புக்கு
ஊழுற்று அலமரும் உந்தூழ் அகலறைக்
காலம் அன்றியும் மரம்பயன் கொடுத்தலின்
காலின் உதிர்ந்தன கருங்கனி நாவல்

மாறுகொள ஒழுகின ஊறுநீர் உயவை
நூறொடு குழீஇயின கூவை சேறுசிறந்து
உண்ணுநர்த் தடுத்தன தேமாப் புண்அரிந்து
அரலை உக்கன நெடுந்தாள் ஆசினி
விரல்ஊன்று படுகண் ஆகுளி கடுப்பக்

குடிஞை இரட்டும் நெடுமலை அடுக்கத்துக்
கீழும் மேலும் காழ்வாய்த்து எதிரிச்
சுரம்செல் கோடியர் முழவின் தூங்கி
முரஞ்சுகொண்டு இறைஞ்சின அலங்குசினைப் பலவே
தீயின் அன்ன ஒண்செங் காந்தள்

தூவல் கலித்த புதுமுகை ஊன்செத்து
அறியாது எடுத்த புன்புறச் சேவல்
ஊஉன் அன்மையின் உண்ணாது உகுத்தென
நெருப்பின் அன்ன பல்இதழ் தாஅய்
வெறிக்களம் கடுக்கும் வியல்அறை தோறும்

மணஇல் கமழும் மாமலைச் சாரல்
தேனினர் கிழங்கினர் ஊன்ஆர் வட்டியர்
சிறுகண் பன்றிப் பழுதுளி போக்கிப்
பொருதுதொலை யானைக் கோடுசீர் ஆகத்
தூவொடு மலிந்த காய கானவர்

செழும்பல் யாணர்ச் சிறுகுடிப் படினே
இரும்பேர் ஒக்கலொடு பதம்மிகப் பெறுகுவிர்
அன்றுஅவண் அசைஇ அல்சேர்ந்து அல்கிக்
கன்றுஎரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி

அலங்குகழை நரலும் ஆரிப் படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் எனினே
நும்இல் போல நில்லாது புக்குக்

கிழவிர் போலக் கேளாது கெழீஇச்
சேண்புலம்பு அகல இனிய கூறிப்
பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குருஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்
ஏறித் தரூஉம் இலங்குமலைத் தாரமொடு

வேய்ப்பெயல் விளையுள் தேக்கள் தேறல்
குறைவுஇன்று பருகி நறவுமகிழ்ந்து வைகறைப்
பழஞ்செருக்கு உற்றநும் அனந்தல் தீர
அருவி தந்த பழம்சிதை வெண்காழ்
வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை

முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை
பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ
வெண்புடைக் கொண்ட துய்த்தலைப் பழனின்
இனபுளிக் கலந்து மாமோர் ஆகக்
கழைவளர் நெல்லின் அரிஉலை ஊழ்த்து

வழைஅமை சாரல் கமழத் துழைஇ
நறுமலர் அணிந்த நாறுஇரு முச்சிக்
குறுமகள் ஆக்கிய வால்அவிழ் வல்சி
அகம்மலி உவகை ஆர்வமொடு அளைஇ
மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்

செருச்செய் முன்பின் குருசில் முன்னிய
பரிசில் மறப்ப நீடலும் உரியிர்
அனையது அன்றுஅவன் மலைமிசை நாடே
நிரைஇதழ்க் குவளைக் கடிவீ தொடினும்
வரைஅர மகளிர் இருக்கை காணினும்

உயிர்செல வெம்பிப் பனித்தலும் உரியிர்
பலநாள் நில்லாது நிலநாடு படர்மின்
விளைபுனம் நிழத்தலின் கேழல் அஞ்சிப்
புழைதொறும் மாட்டிய இருங்கல் அடாஅர்
அரும்பொறி உடைய ஆறே நள்இருள்

அலரி விரிந்த விடியல் வைகினிர் கழிமின்
நளிந்துபலர் வழங்காச் செப்பம் துணியின்
முரம்புகண் உடைந்த பரல்அவல் போழ்வில்
கரந்து பாம்புஒடுங்கும் பயம்புமார் உளவே
குறிக்கொண்டு மரங் கொட்டி நோக்கிச்

செறிதொடி விறலியர் கைதொழூஉப் பழிச்ச
வறிதுநெறி ஓரீஇ வலம்செயாக் கழிமின்
புலந்துபுனிறு போகிய புனம்சூழ் குறவர்
உயர்நிலை இதணம் ஏறிக் கைபுடையூஉ
அகல்மலை இறும்பின் துவன்றிய யானைப்

பகல்நிலை தளர்க்கும் கவண்உமிழ் கடுங்கல்
இருவெதிர் ஈங்கழை தத்திக் கல்லெனக்
கருவிரல் ஊகம் பார்ப்போடு இரிய
உயிர்செகு மரபின் கூற்றத்து அன்ன
வரும்விசை தவிராது மரம்மறையாக் கழிமின்

உரவுக்களிறு கரக்கும் இடங்கர் ஒடுங்கி
இரவின் அன்ன இருள்தூங்கு வரைப்பின்
குமிழி சுழலும் குண்டுகய முடுக்கர்
அகழ்இழிந் தன்ன கான்யாற்று நடவை
வழூஉம்மருங்கு உடைய வழாஅல் ஓம்பி

பரூஉக்கொடி வலந்த மதலை பற்றித்
துருவின் அன்ன புன்தலை மகாரோடு
ஒருவிர் ஒருவிர் ஓம்பினிர் கழிமின்
அழுந்துபட்டு அலமரும் புழகுஅமல் சாரல்
விழுந்தோர் மாய்க்கும் குண்டுகயத்து அருகா

வழும்புகண் புதைத்த நுண்நீர்ப் பாசி
அடிநிலை தளர்க்கும் அருப்பமும் உடைய
முழுநெறி பிணங்கிய நுண்கோல் வேரலொடு
எருவை மென்கோல் கொண்டனிர் கழிமின்
உயர்நிலை மாக்கல் புகர்முகம் புதைய

மாரியின் இகுதரு வில்உமிழ் கடுங்கணைத்
தாரொடு பொலிந்த வினைநவில் யானைக்
குழியில் பொலிந்த சுடர்ப்பூ இலஞ்சி
ஓர்யாற்று இயவின் பூத்த புரிசைப்
பராவுஅரு மரபின் கடவுள் காணின்

தொழாநிர் கழியின் அல்லது வறிது
நும்இயம் தொடுதல் ஓம்புமின் மயங்குதுளி
மாரி தலையும்அவன் மல்லல் வெற்பே
அலகை அன்ன வெள்வேர்ப் பீலிக்
கலவ மஞ்ஞை கட்சியில் தளரினும்

கடும்பறைக் கோடியர் மகாஅர் அன்ன
நெடுங்கழைக் கொம்பர் கடுவன் உகளினும்
நேர்கொள் நெடுவரை நேமியின் தொடுத்த
சூர்புகல் அடுக்கத்துப் பிரசம் காணினும்
ஞெரேரென நோக்கல் ஓம்புமின் உரித்தன்று

நிரைசெலல் மெல்அடி நெறிமாறு படுகுவிர்
வரைசேர் வகுந்தின் கானத்துப் படினே
கழுதில் சேணோன் ஏவொடு போகி
இழுதின் அன்ன வால்நிணம் செருக்கி
நிறப்புண் கூர்ந்த நிலந்தின் மருங்கின்

நெறிக்கெடக் கிடந்த இரும்பிணர் எருத்தின்
இருள்துணிந் தன்ன ஏனம் காணின்
முளிகழை இழைந்த காடுபடு தீயின்
நளிபுகை கமழாது இறாயினிர் மிசைந்து
துகளறத் துணிந்த மணிமருள் தெள்நீர்

குவளைஅம் பைஞ்சுனை அசைவிடப் பருகி
மிகுத்துப்பதம் கொண்ட பரூஉக்கண் பொதியினிர்
புள்கை போகிய புன்தலை மகாரொடு
அற்குஇடை கழிதல் ஓம்பி ஆற்றநும்
இல்புக்கன்ன கல்அளை வதிமின்

அல்சேர்ந்து அல்கி அசைதல் ஓம்பி
வான்கண் விரிந்த விடியல் ஏற்றெழுந்து
கான்அகப் பட்ட செந்நெறிக் கொண்மின்
கயம்கண் டன்ன அகன்பை அம்கண்
மைந்துமலி சினத்த களிறுமதன் அழிக்கும்

துஞ்சுமரம் கடுக்கும் மாசுணம் விலங்கி
இகந்துசேண் கமழும் பூவும் உண்டோர்
மறந்துஅமை கல்லாப் பழனும் ஊழ்இறந்து
பெரும்பயம் கழியினும் மாந்தர் துன்னார்
இருங்கால் வீயும் பெருமரக் குழாமும்

இடனும் வலனும் நிலையினிர் நோக்கிக்
குறிஅறிந்து அவைஅவை குறுகாது கழிமின்
கோடுபல முரஞ்சிய கோளி ஆலத்துக்
கூடுஇயத்து அன்ன குரல்புணர் புள்ளின்
நாடுகாண் நனந்தலை மென்மெல அகன்மின்

மாநிழல் பட்ட மரம்பயில் இறும்பின்
ஞாயிறு தெரூஅ மாக நனந்தலைத்
தேஎம் மருளும் அமையம் ஆயினும்
இரூஅ வன்சிலையர் மாதேர்பு கொட்கும்
குறவரும் மருளும் குன்றத்துப் படினே

அகன்கண் பாசறைத் துவன்றிக் கல்லென
இயங்கல் ஓம்பிநும் இயங்கள் தொடுமின்
பாடுஇன் அருவி பயம்கெழு மீமிசைக்
காடுகாத்து உறையும் கானவர் உளரே
நிலைத்துறை வழீஇய மதன்அழி மாக்கள்

புனல்படு பூசலின் விரைந்துவல் எய்தி
உண்டற்கு இனிய பழனும் கண்டோர்
மலைதற்கு இனிய பூவும் காட்டி
ஊறு நிரம்பிய ஆறுஅவர் முந்துஉற
நும்மின் நெஞ்சத்து அவலம் வீட

இம்மென் கடும்போடு இனியிர் ஆகுவிர்
அறிஞர் கூறிய மாதிரம் கைக்கொள்பு
குறியவும் நெடியவும் ஊழ்இழிபு புதுவோர்
நோக்கினும் பனிக்கும் நோய்கூர் அடுக்கத்து
அலர்தாய வரிநிழல் அசையினிர் இருப்பின்

பலதிறம் பெயர்பவை கேட்குவிர் மாதோ
கலைதொடு பெரும்பழம் புண்கூர்ந்து ஊறலின்
மலைமுழுதும் கமழும் மாதிரம் தோறும்
அருவி நுகரும் வான்அர மகளிர்
வருவிசை தவிராது வாங்குபு குடைதொறும்

தெரிஇமிழ் கொண்ட நும் இயம்போல் இன்இசை
இலங்குஏந்து மருப்பின் இனம்பிரி ஒருத்தல்
விலங்கல் மீமிசைப் பணவைக் கானவர்
புலம்புக்கு உண்ணும் புரிவளைப் பூசல்
சேய்அளைப் பள்ளி எஃகுஉறு முள்ளின்

எய்தெற இழுக்கிய கானவர் அழுகை
கொடுவரி பாய்ந்தெனக் கொழுநர் மார்பில்
நெடுவசி விழுப்புண் தணிமார் காப்புஎன
அறல்வாழ் கூந்தல் கொடிச்சியர் பாடல்
தலைநாள் பூத்த பொன்இணர் வேங்கை

மலைமார் இடூஉம் ஏமப் பூசல்
கன்றுஅரைப் பட்ட கயந்தலை மடப்பிடி
வலிக்கு வரம்புஆகிய கணவன் ஓம்பலின்
ஒண்கேழ் வயப்புலி பாய்ந்தெனக் கிளையொடு
நெடுவரை இயம்பும் இடிஉமிழ் தழங்குகுரல்

கைக்கோள் மறந்த கருவிரல் மந்தி
அருவிடர் வீழ்ந்ததன் கல்லாப் பார்ப்பிற்கு
முறிமேய் யாக்கைக் கிளையொடு துவன்றிச்
சிறுமை உற்ற களையாப் பூசல்
கலைகை அற்ற காண்புஇன் நெடுவரை

நிலைபெய்து இட்ட மால்பு நெறியாகப்
பெரும்பயன் தொகுத்த தேம்கொள் கொள்ளை
அருங்குறும்பு எறிந்த கானவர் உவகை
திருந்துவேல் அண்ணற்கு விருந்துஇறை சான்மென
நறவுநாள் செய்த குறவர்தம் பெண்டிரொடு

மான்தோல் சிறுபறை கறங்கக் கல்லென
வான்தோய் மீமிசை அயரும் குரவை
நல்எழில் நெடுந்தேர் இயவுவந் தன்ன
கல்யாறு ஒலிக்கும் விடர்முழங்கு இரங்குஇசை
நெடுஞ்சுழிப் பட்ட கடுங்கண் வேழத்து

உரவுச்சினம் தணித்துப் பெருவெளில் பிணிமார்
விரவுமொழி பயிற்றும் பாகர் ஓதை
ஒலிகழைத் தட்டை புடையுநர் புனம்தொறும்
கிளிகடி மகளிர் விளிபடு பூசல்
இனத்தின் தீர்ந்த துளங்குஇமில் நல்ஏறு

மலைத்தலை வந்த மரைஆன் கதழ்விடை
மாறு மைந்தின் ஊறுபடத் தாக்கிக்
கோவலர் குறவரோடு ஒருங்குஇயைந்து ஆர்ப்ப
வள்இதழ்க் குளவியும் குறிஞ்சியும் குழைய
நல்ஏறு பொரூஉம் கல்லென் கம்பலை

காந்தள் துடுப்பின் கமழ்மடல் ஓச்சி
வண்கோள் பலவின் சுளைவிளை தீம்பழம்
உண்டுபடு மிச்சில் காழ்பயன் கொண்மார்
கன்றுகடாஅ உறுக்கும் மகாஅர் ஓதை
மழைகண் டன்ன ஆலைதொறும் ஞெரேரெனக்

கழைகண் உடைக்கும் கரும்பின் ஏத்தமும்
தினைக்குறு மகளிர் இசைபடு வள்ளையும்
சேம்பும் மஞ்சளும் ஓம்பினர் காப்போர்
பன்றிப் பறையும் குன்றகச் சிலம்பும்
என்றுஇவ் அனைத்தும் இயைந்து ஒருங்கு ஈண்டி

அவலவும் மிசையவும் துவன்றிப் பலவுடன்
அலகைத் தவிர்த்த எண்அருந் திறத்த
மலைபடு கடாஅம் மாதிரத்து இயம்பக்
குரூஉக்கண் பிணையல் கோதை மகளிர்
முழவுத்துயில் அறியா வியலுள் ஆங்கண்

விழவின் அற்றுஅவன் வியன்கண் வெற்பே
கண்ண் தண்ண்எனக் கண்டும் கேட்டும்
உண்டற்கு இனிய பலபா ராட்டியும்
இன்னும் வருவ தாக நமக்குஎனத்
தொல்முறை மரபினிர் ஆகிப் பல்மாண்

செருமிக்குப் புகலும் திருஆர் மார்பன்
உரும்உரறு கருவிய பெருமலை பிற்பட
இறும்பூது கஞலிய இன்குரல் விறலியர்
நறுங்கார் அடுக்கத்துக் குறிஞ்சி பாடிக்
கைதொழூஉப் பரவிப் பழிச்சினிர் கழிமின்

மைபடு மாமலைப் பனுவலின் பொங்கிக்
கைதோய்வு அன்ன கார்மழைத் தொழுதி
தூஉய் அன்ன துவலை துவற்றலின்
தேஎம் தேருக் கடும்பரிக் கடும்பொடு
காஅய்க் கொண்டநும் இயம்தொய் படாமல்
கூவல் அன்ன விடரகம் புகுமின்
இருங்கல் இகுப்பத்து இறுவரை சேராது
குன்றுஇடம் பட்ட ஆர்இடர் அழுவத்து
நின்று நோக்கினும் கண்வாள் வௌவும்
மண்கனை முழவின் தலைக்கோல் கொண்டு

தண்டுகால் ஆகத் தளர்தல் ஓம்பி
ஊன்றினிர் கழிமின் ஊறுதவப் பலவே
அயில்காய்ந் தன்ன கூர்ங்கல் பாறை
வெயில்புறந் தரூஉம் இன்னல் இயக்கத்துக்
கதிர்சினம் தணிந்த அமயத்துக் கழிமின்

உரைசெல வெறுத்தஅவன் நீங்காச் சுற்றமொடு
புரைதவ உயரிய மழைமருள் பல்தோல்
அரசுநிலை தளர்க்கும் அருப்பமும் உடைய
பின்னி அன்ன பிணங்குஅரில் நுழைதொறும்
முன்னோன் வாங்கிய கடுவிசைக் கணைக்கோல்

இன்இசை நல்யாழ்ப் பத்தரும் விசிபிணி
மண்ஆர் முழவின் கண்ணும் ஓம்பிக்
கைபிணி விடாஅது பைபயக் கழிமின்
களிறுமலைந் தன்ன கண்கூடு துறுகல்
தளிபொழி கானம் தலைதவப் பலவே

ஒன்னாத் தெவ்வர் உலைவுஇடத்து ஆர்த்தென
நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்
செல்லா நல்இசைப் பெயரொடு நட்ட
கல்ஏசு கவலை எண்ணுமிகப் பலவே
இன்புஉறு முரற்கைநும் பாட்டு விருப்பாகத்

தொன்றுஒழுகும் மரபின்நும் மருப்புஇகுத்துத் துனைமின்
பண்டுநற்கு அறியாப் புலம்பெயர் புதுவிர்
சந்து நீவிப் புல்முடிந்து இடுமின்
செல்லும் தேஎத்துப் பெயர்மருங்கு அறிமார்
கல்எறிந்து எழுதிய நல்அரை மராஅத்த

கடவுள் ஓங்கிய காடுஏசு கவலை
ஒட்டாது அகன்ற ஒன்னாத் தெவ்வர்
சுட்டினும் பனிக்கும் சுரம்தவப் பலவே
தேம்பாய் கண்ணித் தேர்வீசு கவிகை
ஓம்பா வள்ளல் படர்ந்திகும் எனினே

மேம்பட வெறுத்தஅவன் தொல்திணை மூதூர்
ஆங்கனம் அற்றே நம்ம னோர்க்கே
அசைவுழி அசைஇ அஞ்சாது கழிமின்
புலிஉற வெறுத்ததன் வீழ்பிணை உள்ளிக்
கலைநின்று விளிக்கும் கானம் ஊழ்இறந்து

சிலைஒலி வெரீஇய செங்கண் மரைவிடை
தலைஇறும்பு கதழும் நாறுகொடிப் புறவின்
வேறுபுலம் படர்ந்த ஏறுடை இனத்த
வளைஆன் தீம்பால் மிளைசூழ் கோவலர்
வளையோர் உவப்பத் தருவனர் சொரிதலின்

பலம்பெறு நசையொடு பதிவயின் தீர்ந்தநும்
புலம்புசேண் அகலப் புதுவிர் ஆகுவிர்
பகர்விரவு நெல்லின் பலவரி அன்ன
தகர்விரவு துருவை வெள்ளையொடு விரைஇக்
கல்லென் கடத்திடைக் கடலின் இரைக்கும்

பல்யாட்டு இனநிரை எல்லினிர் புகினே
பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவிர்
துய்ம்மயிர் அடக்கிய சேக்கை அன்ன
மெய்உரித்து இயற்றிய மிதிஅதள் பள்ளித்
தீத்துணை யாகச் சேந்தனிர் கழிமின்

கூப்பிடு கடக்கும் கூர்நல் அம்பின்
கொடுவில் கூளியர் கூவை காணின்
படியோர்த் தேய்த்த பணிவு இல் ஆண்மைக்
கொடியோள் கணவன் படர்ந்திகும் எனினே
தடியும் கிழங்கும் தண்டினர் தரீஇ

ஓம்புநர் அல்லது உடற்றுநர் இல்லை
ஆங்குவியம் கொண்மின் அதுஅதன் பண்பே
தேம்பட மலர்ந்த மராஅமெல் இணரும்
உம்பல் அகைத்த ஒண்முறி யாவும்
தளிரொடு மிடைந்த காமரு கண்ணி

திரங்குமரல் நாரில் பொலியச் சூடி
முரம்புகண் உடைந்த நடவை தண்ணென
உண்டனிர் ஆடிக் கொண்டனிர் கழிமின்
செவ்வீ வேங்கைப் பூவின் அன்ன
வேய்கொள் அரிசி மிதவை சொரிந்த

சுவல்விளை நெல்லின் அவரைஅம் புளிங்கூழ்
அற்குஇடை உழந்தநும் வருத்தம் வீட
அகலுள் ஆங்கண் கழிமிடைந்து இயற்றிய
புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவிர்
பொன்அறைந் தன்ன நுண்நேர் அரிசி

வெண்எறிந்து இயற்றிய மாக்கண் அமலை
தண்ணென் நுண்இழுது உள்ளீடு ஆக
அரையினிர் சேப்பின் அல்கலும் பெறுகுவிர்
விசையம் கொழித்த பூழி அன்ன
உண்ணுநர்த் தடுத்த நுண்இடி நுவணை

நொய்மர விறகின் ஞெகிழி மாட்டிப்
பனிசேண் நீங்க இனிதுஉடன் துஞ்சிப்
புலரி விடியல் புள்ஓர்த்துக் கழிமின்
புல்அரைக் காஞ்சிப் புனல்பொரு புதவின்
மெல்அவல் இருந்த ஊர்தொறும் நல்லியாழ்ப்

பண்ணுப் பெயர்த்தன்ன காவும் பள்ளியும்
பல்நாள் நிற்பினும் சேந்தனிர் செலினும்
நன்பல உடைத்துஅவன் தண்பணை நாடே
கண்புமலி பழனம் கமழத் துழைஇ
வலையோர் தந்த இருஞ்சுவல் வாளை

நிலையோர் இட்ட நெடுநாண் தூண்டில்
பிடிக்கை அன்ன செங்கண் வராஅல்
துடிக்கண் அன்ன குறையொடு விரைஇப்
பகன்றைக் கண்ணிப் பழையர் மகளிர்
ஞெண்டுஆடு செறுவில் தராய்க்கண் வைத்த

விலங்கல் அன்ன போர்முதல் தொலைஇ
வளம்செய் வினைஞர் வல்சி நல்கத்
துளங்குதசும்பு வாக்கிய பசும்பொதித் தேறல்
இளங்கதிர் ஞாயிற்றுக் களங்கள்தொறும் பெறுகுவிர்
முள்அரித்து இயற்றிய வெள்அரி வெண்சோறு

வண்டுபடக் கமழும் தேம்பாய் கண்ணித்
திண்தேர் நன்னற்கும் அயினி சான்ம்எனக்
கண்டோர் மருளக் கடும்புடன் அருந்தி
எருதுஎறி களமர் ஓதையொடு நல்யாழ்
மருதம் பண்ணி அசையினிர் கழிமின்

வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇச்
செங்கண் எருமை இனம்பிரி ஒருத்தல்
கனைசெலல் முன்பொடு கதழ்ந்துவரல் போற்றி
வனைகலத் திகிரியின் குமிழி சுழலும்
துனைசெலல் தலைவாய் ஓவுஇறந்து வரிக்கும்

காணுநர் வயாஅம் கட்குஇன் சேயாற்றின்
யாணர் ஒருகரைக் கொண்டனிர் கழிமின்
நிதியம் துஞ்சும் நிவந்துஓங்கு வரைப்பின்
பதிஎழல் அறியாப் பழங்குடி கெழீஇ
வியல்இடம் பெறாஅ விழுப்பெரு நியமத்து

யாறுஎனக் கிடந்த தெருவின் சாறுஎன
இகழுநர் வெரூஉம் கவலை மறுகின்
கடல்எனக் கார்என ஒலிக்கும் சும்மையொடு
மலைஎன மழைஎன மாடம் ஓங்கி
துனிதீர் காதலின் இனிதுஅமர்ந்து உறையும்

பனிவார் காவின் பல்வண்டு இமிரும்
நனிசேய்த்து, அன்றுஅவன் பழவிறல் மூதூர்
பொருந்தாத் தெவ்வர் இருந்தலை துமியப்
பருந்துபடக் கடக்கும் ஒள்வாள் மறவர்
கருங்கடை எஃகம் சாத்திய புதவின்

அருங்கடி வாயில் அயிராது புகுமின்
மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர்
வெல்போர்ச் சேஎய்ப் பெருவிறல் உள்ளி
வந்தோர் மன்ற அளியர் தாம்எனக்
கண்டோர் எல்லாம அமர்ந்துஇனிதின் நோக்கி

விருந்துஇறை அவர்அவர் எதிர்கொளக் குறுகிப்
பரிபுலம்பு அலைத்தநும் வருத்தம் வீட
எரிகான் றன்ன பூஞ்சினை மராஅத்துத்
தொழுதி போக வலிந்து அகப்பட்ட
மடநடை ஆமான் கயமுனிக் குழவி

ஊமை எண்கின் குடாவடிக் குருளை
மீமிசைக் கொண்ட கவர்பரிக் கொடுந்தாள்
வரைவாழ் வருடை வன்தலை மாத்தகர்
அரவுக்குறும்பு எறிந்த சிறுகண் தீர்வை
அளைச்செறி உழுவை கோள்உற வெறுத்த

மடக்கண் மரையான் பெருஞ்செவிக் குழவி
அரக்குவிரித் தன்ன செந்நில மருங்கில்
பரல்தவழ் உடும்பின் கொடுந்தாள் ஏற்றை
வரைப்பொலிந்து இயலும் மடக்கண் மஞ்ஞை
கானக் கோழிக் கவர்குரல் சேவல்

கானப் பலவின் முழவுமருள் பெரும்பழம்
இடிக்கலப்பு அன்ன நறுவடி மாவின்
வடிச்சேறு விளைந்த தீம்பழத் தாரம்
தூவல் கலித்த இவர்நனை வளர்கொடி
காஅய்க் கொண்ட நுகம்மருள் நூறை

பருஉப்பளிங்கு உதிர்த்த பலஉறு திருமணி
குருஉப்புலி பொருத புண்கூர் யானை
முத்துடை மருப்பின் முழுவலி மிகுதிரள்
வளைஉடைந் தன்ன வள்இதழ்க் காந்தள்
நாகம் திலகம் நறுங்காழ் ஆரம்

கருங்கொடி மிளகின் காய்த்துணர்ப் பசுங்கறி
திருந்துஅமை விளைந்த தேக்கள் தேறல்
கான்நிலை எருமை கழைபெய் தீம்தயிர்
நீல்நிற ஓரி பாய்ந்தென நெடுவரை
நேமியின் செல்லும் நெய்க்கண் இறுஅல்

உடம்புணர்வு தழீஇய ஆசினி அனைத்தும்
குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி
கடல்மண்டு அழுவத்துக் கயவாய் கடுப்ப
நோனாச் செருவின் நெடுங்கடைத் துவன்றி
வானத்து அன்ன வளம்மலி யானைத்

தாதுஎருத் ததைந்த முற்றம் முன்னி
மழைஎதிர் படுகண் முழவுகண் இகுப்பக்
கழைவளர் தூம்பின் கண்ணிடம் இமிர
மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
நரம்புமீது இறவாது உடன்புணர்ந்து ஒன்றிக்

கடவது அறிந்த இன்குரல் விறலியர்
தொன்றுஒழுகு மரபின் தம்இயல்பு வழாஅது
அருந்திறல் கடவுள் பழிச்சிய பின்றை
விருந்தின் பாணி கழிப்பி நீள்மொழிக்
குன்றா நல்இசைச் சென்றோர் உம்பல்

இன்றுஇவண் செல்லாது உலகமொடு நிற்ப
இடைத்தெரிந்து உணரும் பெரியோர் மாய்ந்தெனக்
கொடைக்கடன் இறுத்த செம்மலோய்என
வென்றிப் பல்புகழ் விறலோடு ஏத்திச்
சென்றது நொடியவும் விடாஅன் நசைதர

வந்தது சாலும் வருத்தமும் பெரிதுஎனப்
பொருமுரண் எதிரிய வயவரொடு பொலிந்து
திருநகர் முற்றம் அணுகல் வேண்டிக்
கல்லென் ஒக்கல் நல்வலத்து இரீஇ
உயர்ந்த கட்டில் உரும்புஇல் சுற்றத்து

அகன்ற தாயத்து அஃகிய நுட்பத்து
இலம்என மலர்ந்த கையர் ஆகித்
தம்பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர்
நெடுவரை இழிதரும் நீத்தம்சால் அருவிக்
கடுவரல் கலுழிக் கட்குஇன் சேயாற்று

வடுவாழ் எக்கர் மணலினும் பலரே
அதனால், புகழொடும் கழிகநம் வரைந்த நாள்எனப்
பரந்துஇடம் கொடுக்கும் விசும்புதோய் உள்ளமொடு
நயந்தனிர் சென்ற நும்மினும் தான்பெரிது
உவந்த உள்ளமோடு அமர்ந்துஇனிது நோக்கி

இழைமருங்கு அறியா நுழைநூல் கலிங்கம்
எள்அறு சிறப்பின் வெள்அரைக் கொளீஇ
முடுவல தந்த பைந்நிணத் தடியொடு
நெடுவெண் நெல்லின் அரிசி முட்டாது
தலைநாள் அன்ன புகலொடு வழிசிறந்து

பலநாள் நிற்பினும் பெறுகுவிர் நில்லாது
செல்வேம் தில்லஎம் தொல்பதிப் பெயர்ந்துஎன
மெல்லெனக் கூறி விடுப்பின் நும்முள்
தலைவன் தாமரை மலைய விறலியர்
சீர்கெழு சிறப்பின் விளங்குஇழை அணிய

நீர்இயக்கு அன்ன நிரைசெலல் நெடுந்தேர்
வாரிக் கொள்ளா வரைமருள் வேழம்
கறங்குமணி துவைக்கும் ஏறுடைப் பெருநிரை
பொலம்படைப் பொலிந்த கொய்சுவல் புரவி
நிலம்தினக் கிடந்த நிதியமோடு அனைத்தும்

இலம்படு புலவர் ஏற்றகைந் நிறையக்
கலம்பெயக் கவிழ்ந்த கழல்தொடித் தடக்கையின்
வளம்பிழைப்பு அறியாது வாய்வளம் பழுநிக்
கழைவளர் நவிரத்து மீமிசை ஞெரேரென
மழைசுரந் தன்ன ஈகை நல்கித்

தலைநாள் விடுக்கும் பரிசில் மலைநீர்
வென்றுஎழு கொடியின் தோன்றும்
குன்றுசூழ் இருக்கை நாடுகிழ வோனே.

—செங்கண்மாத்துவேள் நன்னன்சேய் நன்னனை இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசினார் பாடியது.

## வெண்பா

தூஉஉத் தீம்புகை தொல்விசும்பு போர்த்ததுகொல்
பாஅஅய்ப் பகல்செய்வான் பாம்பின்வாய்ப் பட்டான்கொல்
மாஅ மிசையான்கோன் நன்னன் நறுநுதலார்
மாஅமை எல்லாம் பசப்பு.

# திருமுருகாற்றுப்படை

## (நக்கீரர்)

### 1. திருப்பரங்குன்றம்

உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாஅங்கு
ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி
உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை
மறுஇல் கற்பின் வாணுதல் கணவன்
கார்கோள் முகந்த கமம்சூல் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்உறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்நறுங் கானத்து
இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து
உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்
மால்வரை நிவந்த சேண்உயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத்தோள்
கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்
கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர்இழைச்
சேண்இகந்து விளங்கும் செயிர்தீர் மேனித்
துணையோர் ஆய்ந்த இணைஈர் ஓதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் இடைஇடுபு
பைந்தாள் குவளைத் தூஇதழ்க் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகம் தைஇய தேம்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழ மண்ணுறுத்துத்
துவரமுடித்த துகள்அறு முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇக் கருந்தகட்டு
உளைப்பூ மருதின் ஒள்இணர் அட்டிக்
கிளைக்கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புஉறு பிணையல் வளைஇத் துணைத்தக

வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகம் திளைப்பத் திண்காழ்
நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேம்கமழ் மருதுஇணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்

வேங்கை நுண்தாது அப்பிக் காண்வர
வெள்ளில் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி ஓங்கிய வென்றுஅடு விறல்கொடி
வாழிய பெரிதுஎன்று ஏத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்புஅகம் சிலம்பப் பாடிச்

சூர்அர மகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்துச்
சுரும்பும் மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்குச்

சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்
உலறிய கதுப்பின் பிறழ்பல் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதில் பிணர்மோட்டு

உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றுஅடு விறல்களம் பாடித் தோள்பெயரா

நிணம்தின் வாயள் துணங்கை தூங்க
இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ்இணர்
மாமுதல் தடிந்த மறுஇல் கொற்றத்து

எய்யா நல்இசைச் செவ்வேல் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை யாயின் பலஉடன்
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப

இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன்று எடுத்த சேண்உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர்அரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து

மாடம்மலி மறுகின் கூடல் குடவயின்
இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் - தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல ஊதி எல்படக்
கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்

அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றுஅமர்ந்து உறைதலும் உரியன். அதாஅன்று,

## 2. திருச்சீர் அலைவாய்

வைந்நுதி பொருத வடுஆழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருங்கின் கடுநடைக்

கூற்றத்து அன்ன மாற்றஅரு மொய்ம்பின்
காலகிளர்ந் தன்ன வேழம் மேல்கொண்டு
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பின் சென்னிப் பொற்ப

நகைதாழ்பு துயல்வருஉம் வகைஅமை பொலங்குழை
சேண்விளங்கு இயற்கை வாள்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாஇல் கொள்கைத் தம்தொழில் முடிமார்
மனன்நேர்பு எழுதரு வாள்நிற முகனே

மாஇருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம் ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்துஇனிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம்கொடுத்தன்றே ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ

அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக்கும்மே ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட்டன்றே ஒருமுகம்

குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகை அமர்ந்தன்றே
ஆங்குஅம், மூவிரு முகனும் முறைநவின்று ஒழுகலின்
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பின்
செம்பொறி வாங்கிய மொய்ம்பின் சுடர்விடுபு

வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை உக்கம் சேர்த்தியது ஒருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயது
[ஒருகை
அங்குசம் கடாவ ஒருகை இருகை

ஐஇரு வட்டமொடு எஃகுவலம் திரிப்ப ஒருகை
மார்பொடு விளங்க ஒருகை
தாரொடு பொலிய ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக்கொட்ப ஒருகை
பாடுஇன் படுமணி இரட்ட ஒருகை

நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட
ஆங்குஅப், பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர்எழுந்து இசைப்ப வால்வளை ஞரல

உரம்தலைக் கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்புஆறாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குஉயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே. அதாஅன்று,

## 3. திருஆவினன்குடி

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசுஅற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்புஎழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்

பலஉடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் இடும்பை

யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனிஇல் காட்சி முனிவர் முன்புகப்
புகைமுகந் தன்ன மாசுஇல் தூஉடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்

நல்யாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்நரம்பு உளர
நோய்இன்று இயன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்உரை கடுக்கும் திதலையர் இன்நகைப்

பருமம் தாங்கிய பணிந்துஏந்து அல்குல்
மாசுஇல் மகளிரொடு மறுஇன்றி விளங்கக்
கடுவொடு ஒடுங்கிய தூம்புடை வால்எயிற்று
அழல்என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்

புள்அணி நீள்கொடிச் செல்வனும் வெள்ஏறு
வலம்வயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமைஅமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூஎயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல்

வேள்வி முற்றிய வென்றுஅடு கொற்றத்து
ஈர்இரண்டு ஏந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெருந் தெய்வத்து நல்நகர் நிலைஇய

உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவர் ஆக
ஏமுறு ஞாலம் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாஇல் ஊழி
நான்முக ஒருவன் சுட்டிக் காண்வரப்

பகலில் தோன்றும் இகல்இல் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்

தீஎழுந் தன்ன திறலினர் தீப்பட
உரும்இடித் தன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கில்தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துஉடன் காணத்
தாஇல் கொள்கை மடந்தையொடு சில்நாள்

ஆவினன்குடி அசைதலும் உரியன். அதாஅன்று,

## 4. திருஏரகம்

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமை நல்யாண்டு
ஆறினில் கழிப்பிய அறன்நவில் கொள்கை

மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப்பாளர் பொழுது அறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து

ஆறுஎழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கின் நவிலப் பாடி
விரைஉறு நறுமலர் ஏந்திப் பெரிதுஉவந்து
ஏரகத்து உறைதலும் உரியன். அதாஅன்று,

## 5. குன்றுதொறு ஆடல்

பைங்கொடி நறைக்காய் இடை-இடுபு வேலன்

அம்பொதிப் புட்டில் விரைஇக் குழவியொடு
வெண்கூ தாளம் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் அகலம்
கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர்
நீடுஅமை விளைந்த தேக்கள் தேறல்

குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரல்உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்

முடித்த குல்லை இலையுடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வால்இணர் இடை-இடுபு
சுரும்புஉணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு

செய்யன் சிவந்த ஆடையன் செவ்அரைச்
செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்
தகரன் மஞ்ஞையன் புகர்இல் சேவல்அம்

கொடியன் நெடியன் தொடிஅணி தோளன்
நரம்புஆர்த் தன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்
முழவுஉறழ் தடக்கையின் இயல ஏந்தி

மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதொறு ஆடலும் நின்றதன் பண்பே. அதாஅன்று,

## 6. பழமுதிர்சோலை

சிறுதினை மலரொடு விரைஇ மறிஅறுத்து
வாரணக் கொடியொடு வயின்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்

ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்

மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்
மாண்தலைக் கொடியொடு மண்ணி அமைவர
நெய்யோடு ஐயவி அப்பி ஐதுஉரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டுஉடன் உடீஇச்

செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்

பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணைஅற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பில் நல்நகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழ்இசை அருவியொடு இன்இயம் கறங்க

உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகுஇயம் நிறுத்து முரணினர் உட்க
முருகுஆற்றுப் படுத்த உருகெழு வியல்நகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலஉடன்

கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டுஆண்டு உறைதலும் அறிந்தவாறே
ஆண்டுஆண்டு ஆயினும் ஆக காண்தக

முந்துநீ கண்டுழி முகன்அமர்ந்து ஏத்திக்
கைதொழூஉப் பரவிக் கால்உற வணங்கி
நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறுஅமர் செல்வ

ஆல்கெழு கடவுள் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழைஅணி சிறப்பின் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ

மாலை மார்ப நூல்அறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ

குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நல்மொழிப் புலவர் ஏறே
அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக
நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபேர் ஆள

அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டுஅமர் கடந்தநின் வென்றுஆடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி

போர்மிகு பொருந குருசில் எனப்பல
யான்அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின்அளந்து அறிதல் மன்உயிர்க்கு அருமையின்
நின்அடி உள்ளி வந்தனென் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமை யோய்எனக்

குறித்தது மொழியா அளவையின் குறித்துடன்
வேறுபல் உருவின் குறும்பல் கூளியர்
சாறுஅயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்துஎன

இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வம் சான்ற திறல்விளங்கு உருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந்து எய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணம்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி

அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவுஎன
அன்புடை நன்மொழி அளைஇ விளிவுஇன்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ ஆகித் தோன்ற விழுமிய
பெறல்அரும் பரிசில் நல்குமதி பலஉடன்

வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்து
ஆர முழுமுதல் உருட்டி வேரல்
பூவுடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியின் தொடுத்த
தண்கமழ் அலர்இருல் சிதைய நன்பல

ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முததுடை வான்கோடு தழீஇத் தத்துற்று

நன்பொன் மணிநிறம் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலஉடன் வெரீஇக்

கோழி வயப்பெடை இரியக் கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாஅடி உளியம்
பெருங்கல் விடர்அளைச் செறியக் கருங்கோட்டு
ஆமா நல்ஏறு சிலைப்பச் சேண்நின்று

இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

— குமரவேளை மதுரைக் கணக்காயனார் மகனார்
நக்கீரர் பாடியது.

## வெண்பா

குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர்தடிந்தாய்
புன்தலைய பூதப் பொருபடையாய் — என்றும்
இளையாய் அழகியாய் ஏறுஊர்ந்தான் ஏறே
உளையாய்என் உள்ளத்து உறை. 1

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றுஅங்கு அமரரிடர் தீர்த்ததுவும் — இன்றுஎன்னைக்
கைவிடா நின்றதுவும கற்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல். 2

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் — வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை. 3

இன்னம் ஒருகால் எனதுஇடும்பைக் குன்றுக்கும்
கொல்நவில்வேல் சூர்தடிந்த கொற்றவா — முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுஉருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும். 4

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் — பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே. 5

அஞ்சும் முகம்தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல்என வேல்தோன்றும் — நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும
முருகாஎன்று ஓதுவார் முன். 6

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன மகனே — ஒருகைமுகன்
தமபியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். 7

காக்கக் கடவியநீ காவாது இருந்தக்கால்
ஆர்க்குப் பரம்ஆம் அறுமுகவா — பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடம்காண் இரங்காய் இனி. 8

பரங்குன்றில் பன்னிருகைக் கோமான்தன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு — சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே அணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல். 9

நக்கீரர் தாம்உரைத்த நல்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறும் சாற்றினல் — முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும். 10

# மதுரைக் காஞ்சி
## ( மாங்குடி மருதனார் )

ஓங்குதிரை வியன் பரப்பின்
ஒலிமுந்நீர் வரம்பு ஆகத்
தேன் தூங்கும் உயர்சிமைய
மலைநாறிய வியல் ஞாலத்து
வலமாதிரத்தான் வளிகொட்ப

வியல் நாண்மீன் நெறிஒழுகப்
பகல்செய்யும் செஞ்ஞாயிறும்
இரவுச் செய்யும் வெண்திங்களும்
மைதீர்ந்து கிளர்ந்து விளங்க
மழைதொழில் உதவ மாதிரம் கொழுக்கத்

தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய
நிலனும் மரனும் பயன் எதிர்பு நந்த
நோய்இகந்து நோக்கு விளங்க
மேதக மிகப்பொலிந்த
ஓங்குநிலை வயக்களிறு

கண்டு தண்டாக் கட்குஇன்பத்து
உண்டு தண்டா மிகுவளத்தான்
உயர் பூரிம விழுத்தெருவில்
பொய் அறியா வாய்மொழியான்
புகழ்நிறைந்த நல்மாந்தரொடு

நல்ஊழி அடிப்படரப்
பல்வெள்ளம் மீக்கூற
உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக
பிணக்கோட்ட களிற்றுக் குழும்பின்
நிணம் வாய்ப்பெய்த பேய்மகளிர்

இணைஒலி இமிழ் துணங்கைச்சீர்ப்
பிணையூபம் எழுந்து ஆட
அஞ்சுவந்த போர்க்களத்தான்
ஆண்தலை அணங்குஅடுப்பின்
வயவேந்தர் ஒண்குருதி

சினத்தீயின் பெயர்பு பொங்கத்
தெறல்அருங் கடுந்துப்பின்
விறல்விளங்கிய விழுச்சூர்ப்பின்
தொடித்தோட்கை துடுப்புஆக
ஆடுஉற்ற ஊன்சோறு

நெறிஅறிந்த கடிவாலுவன்
அடிஒதுங்கிப் பின்பெயராப்
படையோர்க்கு முருகுஅயர
அமர்கடக்கும் வியன்தானைத்
தென்னவன் பெயரிய துன்அருந் துப்பின்

தொன்முது கடவுள் பின்னர் மேய
வரைத்தாழ் அருவிப் பொருப்பின் பொருந
விழுச்சூழிய விளங்கு ஓடைய
கடுஞ்சினத்த கமழ் கடாஅத்து
அளறுபட்ட நறுஞ்சென்னிய

வரைமருளும் உயர்தோன்றல
வினைநவின்ற பேர்யானை
சினஞ்சிறந்து களன்உழக்கவும்
மாஎடுத்த மலிகுரூஉத்துகள்
அகல்வானத்து வெயில்கரப்பவும்

வாம்பரிய கடுந்திண்தேர்
காற்றுஎன்னக் கடிதுகொட்பவும்
வாள்மிகு மறமைந்தர்
தோள்முறையான் வீறுமுற்றவும்
இருபெரு வேந்தரொடு வேளிர்சாயப்

பொருது அவரைச் செருவென்றும்
இலங்கு அருவிய வரைநீந்திச்
சுரம் போழ்ந்த இகல்ஆற்றல்
உயர்ந்து ஓங்கிய விழுச்சிறப்பின்
நிலம்தந்த பேர்உதவிப்

பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல்
மரம்தின்னூஉ வரைஉதிர்க்கும்
நரை உருமின் ஏறு அனையை
அருங்குழுமிளைக் குண்டு கிடங்கின்
உயர்ந்து ஓங்கிய நிரைப்புதவின்

நெடுமதில் நிரைஞாயில்
அம்புஉமிழ் அயில் அருப்பம்
தண்டாது தலைச்சென்று
கொண்டு நீங்கிய விழுச்சிறப்பின்
தென்குமரி வடபெருங்கல்

குணகுட கடலா எல்லைத்
தொன்று மொழிந்து தொழில் கேட்ப
வெற்றமொடு வெறுத்து ஒழுகிய
கொற்றவர்தம் கோன் ஆகுவை
வான்இயைந்த இருமுந்நீர்ப்

பேஎம் நிலைஇய இரும்பௌவத்துக்
கொடும்புணரி விலங்கு போழக்
கடுங்காலொடு கரைசேர
நெடுங்கொடிமிசை இதை எடுத்து
இன்இசைய முரசம் முழங்கப்

பொன்மலிந்த விழுப்பண்டம்
நாடுஆர நன்கு இழிதரும்
ஆடுஇயல் பெருநாவாய்
மழைமுற்றிய மலைபுரையத்
துறைமுற்றிய துளங்கு இருக்கைத்

தெண்கடல் குண்டு அகழிச்
சீர்சான்ற உயர் நெல்லின்
ஊர்கொண்ட உயர்கொற்றவ
நீர்த்தெவ்வும் நிரைத்தொழுவர்
பாடுசிலம்பும் இசை ஏற்றத்

தோடு வழங்கும் அகல் ஆம்பியின்
கயன்அகைய வயல் நிறைக்கும்
மென்தொடை வன்கிழாஅர்
அதரி கொள்பவர் பகடுபூண் தெள்மணி
இரும்புள் ஓப்பும் இசையே என்றும்

மணிப்பூ முண்டகத்து மணல்மலி கானல்
பரதவர் மகளிர் குரவையொடு ஒலிப்ப
ஒருசார், விழவுநின்ற வியல்ஆங்கண்
முழவுத்தோள் முரண்பொருநர்க்கு
உருகெழு பெருஞ்சிறப்பின்

இருபெயர்ப் பேர்ஆயமொடு
இலங்கு மருப்பின் களிறு கொடுத்தும்
பொலந்தாமரைப் பூச்சூட்டியும்
நலம் சான்ற கலம் சிதறும்
பல்குட்டுவர் வெல்கோவே

கல்காயும் கடுவேனிலொடு
இருவானம் பெயல் ஒளிப்பினும்
வரும்வைகல் மீன் பிறழினும்
வெள்ளம் மாறாது விளையுள் பெருக
நெல்லின் ஓதை அரிநர் கம்பலை

புள்இமிழ்ந்து ஒலிக்கும் இசையே என்றும்
சலம்புகன்று சுறவுக் கலித்த
புலவுநீர் வியன் பௌவத்து
நிலவுக்கானல் முழவுத்தாழைக்
குளிர்ப் பொதும்பர் நளித்தூவல்

நிரைதிமில் வேட்டுவர் கரைசேர்கம்பலை
இருங்கழிச் செறுவின் வெள்உப்புப் பகர்நரொடு
ஒலி ஓவாக் கலியாணர்
முதுவெள்ளிலை மீக்கூறும்
வியல்மேவல் விழுச் செல்வத்து

இருவகையான் இசை சான்ற
சிறுகுடிப் பெருந்தொழுவர்
குடிகெழீஇய நானிலவரொடு
தொன்று மொழிந்து தொழில் கேட்பக்
கால் என்னக் கடிது உராஅய்

நாடுகெட எரிபரப்பி
ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து
அரசுபட அமர் உழக்கி
முரசு கொண்டு களம்வேட்ட
அடுதிறல் உயர் புகழ் வேந்தே

நட்டவர்குடி உயர்க்குவை
செற்றவர்அரசு பெயர்க்குவை
பேர்உலகத்து மேஎம் தோன்றிச்
சீருடைய விழுச்சிறப்பின்
விளைந்து முதிர்ந்த விழுமுத்தின்

இலங்குவளை இருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக்கத்து
நல் கொற்கையோர் நசைப்பொருந
செற்ற தெவ்வர் கலங்கத் தலைச்சென்று
அஞ்சுவரத் தட்கும் அணங்குடைத் துப்பின்

கோழ்ஊஉன் குறைக் கொழுவல்சிப்
புலவுவில் பொலி கூவை
ஒன்றுமொழி ஒலி இருப்பின்
தென்பரதவர் போர் ஏறே
அரிய எல்லாம் எளிதினின் கொண்டு

உரிய எல்லாம் ஓம்பாது வீசி
நனிபுகன்று உறைதும் என்னாது ஏற்றுஎழுந்து
பனிவார் சிமையக் கானம் போகி
அகநாடு புக்கு அவர் அருப்பம் வௌவி
யாண்டுபல கழிய வேண்டுபுலத்து இறுத்து

மேம்பட மரீஇய வெல்போர்க் குருசில்
உறுசெறுநர் புலம்புக்கு அவர்
கடிகாவின் நிலைதொலைச்சி
இழிபு அறியாப் பெருந்தண்பணை
குரூஉக் கொடிய எரிமேய

நாடு எனும்பேர் காடு ஆக
ஆ சேந்தவழி மா சேப்ப
ஊர் இருந்தவழி பாழ்ஆக
இலங்குவளை மடமங்கையர்
துணங்கைஅம் சீர்த் தழூஉ மறப்ப

அவை இருந்த பெரும் பொதியில்
கவைஅடிக் கடுநோக்கத்துப்
பேய்மகளிர் பெயர்புஆட
அணங்கு வழங்கும் அகல் ஆங்கண்
திலத்து ஆற்றும் குழூஉப் புதவின்

அரந்தைப் பெண்டிர் இனைந்தனர் அகவக்
கொழும்பதிய குடிதேம்பிச்
செழுங்கேளிர் நிழல்சேர
நெடுநகர் வீழ்ந்த கரிகுதிர்ப் பள்ளிக்
குடுமிக் கூகை குராலொடு முரலக்

கழுநீர் பொலிந்த கண்அகன் பொய்கைக்
களிறுமாய் செருந்தியொடு கண்புஅமன்று ஊர்தர
நல்ஏர் நடந்த நசைசால் விளைவயல்
பல்மயிர்ப் பிணவொடு கேழல் உகள
வாழா மையின் வழிதவக் கெட்டுப்

பாழா யினநின் பகைவர் தேஎம்
எழாஅத்தோள் இமிழ்முழக்கின்
மாஅத்தாள் உயர்மருப்பின்
கடுஞ்சினத்த களிறு பரப்பி
விரிகடல் வியன்தானையொடு

முருகுஉறழப் பகைத்தலைச் சென்று
அகல் விசும்பின் ஆர்ப்பு இமிழப்
பெயல்உறழக் கணை சிதறிப்
பலபுரவி நீறு உகைப்ப
வளை நரல வயிர் ஆர்ப்பப்

பீடுஅழியக் கடந்து அட்டுஅவர்
நாடு அழிய எயில் வௌவிச்
சுற்றமொடு தூ அறுத்தலின்
செற்ற தெவ்வர் நின்வழி நடப்ப
வியன்கண் முதுபொழில் மண்டிலம் முற்றி

அரசியல் பிழையாது அறநெறி காட்டிப்
பெரியோர் சென்ற அடிவழிப் பிழையாது
குடமுதல் தோன்றிய தொன்றுதொழு பிறையின்
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம்
குணமுதல் தோன்றிய ஆர்இருள் மதியின்

தேய்வன கெடுகநின் தெவ்வர் ஆக்கம்
உயர்நிலை உலகம் அமிழ்தொடு பெறினும்
பொய்சேண் நீங்கிய வாய்நட் பினையே
முழங்குகடல் ஏணி மலர்தலை உலகமொடு
உயர்ந்த தேஎத்து விழுமியோர் வரினும்

பகைவர்க்கு அஞ்சிப் பணிந்து ஒழுகலையே
தென்புல மருங்கின் விண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி பெறினும்
பழி நமக்கு எழுக என்னாய் விழுநிதி
ஈதல் உள்ளமொடு இசைவேட் குவையே

அன்னாய் நின்னொடு முன்னிலை எவனோ
கொன்ஒன்று கிளக்குவல் அடுபோர் அண்ணல்
கேட்டிசின் வாழி கெடுகநின் அவலம்
கெடாது நிலைஇயர்நின் சேண்விளங்கு நல்இசை
தவாப் பெருக்கத்து அறாயாணர்

அழித்து ஆனாக் கொழுந்திற்றி
இழித்து ஆனாப் பலசொன்றி
உண்டு ஆனாக் கூர்நறவின்
தின்று ஆனா இனவைகல்
நிலன்எடுக் கல்லா ஒண்பல் வெறுக்கைப்

பயன்அறவு அறியா வளம்கெழு திருநகர்
நரம்பின் முரலும் நயம்வரு முரற்சி
விறலியர் வறுங்கைக் குறுந்தொடி செறிப்பப்
பாணர் உவப்பக் களிறுபல தரீஇக்
கலந்தோர் உவப்ப எயில்பல கடைஇ

மறம்கலங்கத் தலைச்சென்று
வாள்உழந்து அதன் தாள் வாழ்த்தி
நாள் ஈண்டிய நல் அகவர்க்குத்
தேரோடு மாசிதறிச்
சூடுற்ற சுடர்ப்பூவின்

பாடு புலர்ந்த நறுஞ் சாந்தின்
விழுமிய பெரியோர் சுற்றம் ஆகக்
கள்ளின் இரும்பைக் கலம்செல உண்டு
பணிந்தோர் தேஎம் தம்வழி நடப்பப்
பணியார் தேஎம் பணித்துத் திறைகொண்மார்

பருந்து பறக்கல்லாப் பார்வல் பாசறைப்
படுகண் முரசம் காலை இயம்ப
வெடிபடக் கடந்து வேண்டுபுலத்து இறுத்த
பணை கெழு பெருந்திறல் பல்வேல் மன்னர்
கரை பொருது இரங்கும் கனைஇரு முந்நீர்த்

திரைஇடு மணலினும் பலரே உரைசெல
மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே
அதனால், குணகடல் கொண்டு குடகடல் முற்றி
இரவும் எல்லையும் விளிவுஇடன் அறியாது
அவலும் மிசையும் நீர்த்திரள்பு ஈண்டிக்

கவலைஅம் குழும்பின் அருவி ஒலிப்பக்
கழைவளர் சாரல் களிற்றினம் நடுங்க
வரைமுதல் இரங்கும் ஏறொடு வான்ஞெமிர்ந்து
சிதரல் பெரும்பெயல் சிறத்தலின் தாங்காது
குணகடற்கு இவர்தரும் குரூஉப்புனல் உந்தி

நிவந்துசெல் நீத்தம் குளம்கொளச் சாற்றிக்
களிறு மாய்க்கும் கதிர்க்கழனி
ஒளிறு இலஞ்சி அடைநிவந்த
முள்தாள் சுடர்த்தாமரை
கள்கமழும் நறுநெய்தல்

வள்இதழ் அவிழ் நீலம்
மெல்இலை அரி ஆம்பலொடு
வண்டு இறைகொண்ட கமழ்பூம் பொய்கை
கம்புட் சேவல் இன்துயில் இரிய
வள்ளை நீக்கி வயமீன் முகந்து

கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்
வேழப் பழனத்து நூழிலாட்டுக்
கரும்பின் எந்திரம் கட்பின் ஓதை
அள்ளல் தங்கிய பகடுஉறு விழுமம்
கள்ஆர் களமர் பெயர்க்கும் ஆர்ப்பே

ஒலிந்த பகன்றை விளைந்த கழனி
வன்கை வினைஞர் அரிபறை இன்குரல்
தளிமழை பொழியும் தண்பரங் குன்றில்
கலிகொள் சும்மை ஒலிகொள் ஆயம்
ததைந்த கோதை தாரொடு பொலியப்

புணர்ந்து உடன்ஆடும் இசையே அனைத்தும்
அகல்இரு வானத்து இமிழ்ந்து இனிதுஇசைப்பக்
குருகுநரல மனைமரத்தான்
மீன் சீவும் பாண்சேரியொடு
மருதம் சான்ற தண்பணை சுற்றி, ஒருசார்ச்

சிறுதினை கொய்யக் கவ்வை கறுப்பக்
கருங்கால் வரகின் இருங்குரல் புலர
ஆழ்ந்த குழும்பில் திருமணி கிளர
எழுந்த கடற்றின் நன்பொன் கொழிப்பப்
பெருங்கவின் பெற்ற சிறுதலை நவ்வி

மடக்கண் பிணையொடு மறுகுவன உகளச்
சுடர்ப்பூங் கொன்றை தாஅய நீழல்
பாஅய் அன்ன பாறை அணிந்து
நீலத்து அன்ன பைம்பயிர் மிசைதொறும்
வெள்ளி அன்ன ஒள்வீ உதிர்ந்து

சுரிமுகிழ் முசுண்டையொடு முல்லை தாஅய்
மணிமருள் நெய்தல் உறழக் காமர்
துணிநீர் மெல்அவல் தொய்யிலொடு மலர
வல்லோன் தைஇய வெறிக்களம் கடுப்ப
முல்லை சான்ற புறவுஅணிந்து ஒருசார்

நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய
குறுங்கதிர்த் தோரை நெடுங்கால் ஐயவி
ஐவன வெண்ணெலொடு அரில்கொள்பு நீடி
இஞ்சி மஞ்சள் பைங்கறி பிறவும்
பல்வேறு தாரமொடு கல்அகத்து ஈண்டித்

தினைவிளை சாரல் கிளிகடி பூசல்
மணிப்பூ அவரைக் குரூஉத் தளிர்மேயும்
ஆமா கடியும் கானவர் பூசல்
சேணோன் அகழ்ந்த மடிவாய்ப் பயம்பின்
வீழ்முகக் கேழல் அட்ட பூசல்

கருங்கால் வேங்கை இருஞ்சினைப் பொங்கர்
நறும்பூக் கொய்யும் பூசல் இருங்கேழ்
ஏறுஅடு வயப்புலிப் பூசலொடு அனைத்தும்
இலங்குவெள் அருவியொடு சிலம்புஅகத்து இரட்டக்
கருங்கால் குறிஞ்சி சான்ற வெற்பு அணிந்து

அருங்கடி மாமலை தழீஇ ஒருசார்
இருவெதிர்ப் பைந்தூறு கூர்எரி நைப்ப
நிழத்த யானை மேய்புலம் படரக்
கலித்த இயவர் இயம் தொட்டன்ன
கண்விடுபு உடையூஉத் தட்டை கவின்அழிந்து

அருவி ஆன்ற அணிஇல் மாமலை
வைகண் டன்ன புல்முளி அம்காட்டுக்
கமம்சூழ் கோடை விடர்அகம் முகந்து
கால்உறு கடலின் ஒலிக்கும் சும்மை
இலைவேய் குரம்பை உழைஅதள் பள்ளி

உவலைக் கண்ணி வன்சொல் இளைஞர்
சிலையுடைக் கையர் கவலை காப்ப
நிழல்உரு இழந்த வேனில் குன்றத்துப்
பாலை சான்ற சுரம்சேர்ந்து ஒருசார்
முழங்கு கடல் தந்த விளங்குகதிர் முத்தம்

அரம் போழ்ந்து அறுத்த கண்நேர் இலங்குவளை
பரதர் தந்த பல்வேறு கூலம்
இருங்கழிச் செறுவின் தீம்புளி வெள்உப்புப்
பரந்து ஓங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்
கொழுமீன் குறைஇய துடிக்கண் துணியல்

விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்
நனந்தலைத் தேஎத்து நன்கலன் உய்ம்மார்
புணர்ந்து உடன்கொணர்ந்த புரவியொடு அனைத்தும்
வைகல் தோறும் வழிவழிச் சிறப்ப
நெய்தல் சான்ற வளம்பல பயின்று ஆங்கு

ஐம்பால் திணையும் கவினி அமைவர
முழவு இமிழும் அகல் ஆங்கண்
விழவு நின்ற வியல் மறுகின்
துணங்கைஅம் தழூஉவின் மணம்கமழ் சேரி
இன்கலி யாணர்க் குழூஉப்பல பயின்று ஆங்குப்

பாடல் சான்ற நல்நாட்டு நடுவண்
கலைதாய உயர் சிமையத்து
மயில் அகவும் மலிபொங்கர்
மந்தி ஆட மாவிசும்பு உகந்து
முழங்குகால் பொருத மரம்பயில் காவின்

இயங்கு புனல் கொழித்த வெண்தலைக் குவவுமணல்
கான்பொழில் தழீஇய அடைகரை தோறும்
தாதுசூழ் கோங்கின் பூமலர் தாஅய்க்
கோதையின் ஒழுகும் விரிநீர் நல்வரல்
அவிர்அறல் வையைத் துறைதுறை தோறும்

பல்வேறு பூத்திரள் தண்டலை சுற்றி
அழுந்துபட்டு இருந்த பெரும்பாண் இருக்கையும்
நிலனும் வளனும் கண்டுஅமை கல்லா
விளங்கு பெருந்திருவின் மான விறல்வேள்
அழும்பில் அன்ன நாடு இழந்தனரும்

கொழும்பல் பதிய குடி இழந்தனரும்
தொன்று கறுத்து உறையும் துப்புத்தர வந்த
அண்ணல் யானை அடுபோர் வேந்தர்
இன்னிசை முரசம் இடைப்புலத்து ஒழியப்
பலமாறு ஓட்டிப் பெயர்புறம் பெற்று

மண்உற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கின்
விண்உற ஓங்கிய பலபடைப் புரிசைத்
தொல்வலி நிலைஇய அணங்குடை நெடுநிலை
நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்
மழைஆடும் மலையின நிவந்த மாடமொடு

வையை அன்ன வழக்குடை வாயில்
வகைபெற எழுந்து வானம் மூழ்கிச்
சில்காற்று இசைக்கும் பல்புழை நல்இல்
யாறுகிடந் தன்ன அகல்நெடுந் தெருவில்
பல்வேறு குழாஅத்து இசைஎழுந்து ஒலிப்ப

மாகால் எடுத்த முந்நீர் போல
முழங்குஇசை நன்பணை அறைவனர் நுவலக்
கயம்குடைந் தன்ன இயம் தொட்டு இமிழ்இசை
மகிழ்ந்தோர் ஆடும் கலிகொள் சும்மை
ஓவுக் கண்டன்ன இருபெரு நியமத்துச்

சாறு அயர்ந்து எடுத்த உருவப்பல்கொடி
வேறுபல் பெயர ஆர்எயில் கொளக்கொள
நாள்தோறு எடுத்த நலம்பெறு புனைகொடி
நீர் ஒலித்தன்ன நிலவுவேல் தானையொடு
புலவுப்படக் கொன்று மிடைதோல் ஓட்டிப்

புகழ்செய்து எடுத்த விறல்சால் நன்கொடி
கள்ளின் களிநவில் கொடியொடு நன்பல
பல்வேறு குழூஉக்கொடிப் பதாகை நிலைஇப்
பெருவரை மருங்கின அருவியின் நுடங்கப்
பனைமீன் வழங்கும் வளைமேய் பரப்பின்

வீங்குபிணி நோன்கயிறு அரீஇ இதைபுடையூக்
கூம்புமுதல் முருங்க எற்றிக் காய்ந்துடன்
கடுங்காற்று எடுப்பக் கல்பொருது உரைஇ
நெடுஞ்சுழிப் பட்ட நாவாய் போல
இருதலைப் பணிலம் ஆர்ப்பச் சினம்சிறந்து

கோலோர்க் கொன்று மேலோர் வீசி
மென்பிணி வன்தொடர் பேணாது காழ்சாய்த்துக்
கந்துநீத்து உழிதரும் கடாஅ யானையும்
அம்கண்மால் விசும்பு புதைய வளிபோழ்ந்து
ஒண்கதிர் ஞாயிற்று ஊறுஅளவாத் திரிதரும்

செங்கால் அன்னத்துச் சேவல் அன்ன
குரூஉமயிர்ப் புரவி உராலின் பரிநிமிர்ந்து
கால்எனக் கடுக்கும் கவின்பெறு தேரும்
கொண்ட கோலன் கொள்கை நவிற்றலின்
அடிபடு மண்டிலத்து ஆதி போகிய

கொடிபடு சுவல விடுமயிர்ப் புரவியும்
வேழத்து அன்ன வெருவரு செலவின்
கள்ஆர் களமர் இருஞ்செரு மயக்கமும்
அரியவும் பெரியவும் வருவன பெயர்தலின்
தீம்புழல் வல்சிக் கழல்கால் மழவர்

பூந்தலை முழவின் நோன்தலை கடுப்பப்
பிடகைப் பெய்த கமழ்நறும் பூவினர்
பலவகை விரித்த எதிர்பூங் கோதையர்
பலர்தொகுபு இடித்த தாதுஉகு சுண்ணத்தர்
தகைசெய் தீம்சேற்று இன்நீர்ப் பசுங்காய்

நீடுகொடி இலையினர் கோடுசுடு நூற்றினர்
இருதலை வந்த பகைமுனை கடுப்ப
இன்உயிர் அஞ்சி இன்னா வெய்துயிர்த்து
ஏங்குவனர் இருந்து அவை நீங்கிய பின்றைப்
பல்வேறு பண்ணியம் தழீஇத்திரி விலைஞர்

மலைபுரை மாடத்துக் கொழுநிழல் இருத்தர
இருங்கடல் வான்கோடு புரைய வாருற்று
பெரும்பின் னிட்ட வால்நரைக் கூந்தலர்
நன்னர் நலத்தர் தொல்முது பெண்டிர்
செந்நீர்ப் பசும்பொன் புனைந்த பாவை

செல்சுடர்ப் பசுவெயில் தோன்றியன்ன
செய்யர் செயிர்த்த நோக்கினர் மடக்கண்
ஐஇய கலுழும் மாமையர் வைஎயிற்று
வார்ந்த வாயர் வணங்குஇறைப் பணைத்தோள்
சோர்ந்து உகுவன்ன வயக்குறு வந்திகைத்

தொய்யில் பொறித்த சுணங்குஎதிர் இளமுலை
மைஉக் கன்ன மொய்இருங் கூந்தல்
மயிலிய லோரும் மடமொழி யோரும்
கைஇ மெல்லிதின் ஒதுங்கிக் கைஎறிந்து
கல்லா மாந்தரொடு நகுவனர் திளைப்பப்

புடைஅமை பொலிந்த வகைஅமை செப்பில்
காமர் உருவின் தாம்வேண்டு பண்ணியம்
கமழ்நறும் பூவொடு மனைமனை மறுக
மழைகொளக் குறையாது புனல்புக மிகாது
கரைபொருது இரங்கும் முந்நீர் போலக்

கொளக்கொளக் குறையாது தரத்தர மிகாது
கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி
ஆடுதுவன்று விழவின் நாடுஆர்த் தன்றே
மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்
நாள்அங்காடி நனந்தலைக் கம்பலை

வெயில்கதிர் மழுங்கிய படர்கூர் ஞாயிற்றுச்
செக்கர்அன்ன சிவந்து நுணங்கு உருவின்
கண்பொருபு உகூஉம் ஒண்பூங் கலிங்கம்
பொன்புனை வாளொடு பொலியக் கட்டித்
திண்தேர்ப் பிரம்பின் புரளும் தானைக்

கச்சம் தின்ற கழல்தயங்கு திருந்துஅடி
மொய்ம்பு இறந்து திரிதரும் ஒருபெருந் தெரியல்
மணிதொடர்ந் தன்ன ஒண்பூங் கோதை
அணிகிளர் மார்பின் ஆரமொடு அளைஇக்
கால்இயக்கு அன்ன கதழ்பரி கடைஇக்

காலோர் காப்பக் கால்எனக் கழியும்
வான வண்கை வளம்கெழு செல்வர்
தாள்மகிழ் இருக்கை காண்மார் பூணொடு
தெள்அரிப் பொற்சிலம்பு ஒலிப்ப ஒள் அழல்
தாஅற விளங்கிய ஆய்பொன் அவிர்இழை

அணங்கு வீழ்வு அன்ன பூந்தொடி மகளிர்
மணம்கமழ் நாற்றம் தெருவுடன் கமழ
ஒண்குழை திகழும் ஒளிகெழு திருமுகம்
திண்காழ் ஏற்ற வியல்இரு விலோதம்
தெண்கடல் திரையின் அசைவளி புடைப்ப

நிரைநிலை மாடத்து அரமியம் தோறும்
மழைமாய் மதியின் தோன்றுபு மறைய
நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்போடு ஐந்துஉடன் இயற்றிய
மழுவாள் நெடியோன தலைவன் ஆக

மாசுஅற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
வாடாப் பூவின் இமையா நாட்டத்து
நாற்ற உணவின் உருகெழு பெரியோர்க்கு
மாற்றஅரு மரபின் உயர்பலி கொடுமார்
அந்தி விழவில் தூரியம் கறங்கத்

திண்கதிர் மதாணி ஒண்குறு மாக்களை
ஓம்பினர்த் தழீஇத் தாமபுணர்ந்து முயங்கித்
தாதுஅணி தாமரைப் போதுபிடித் தாங்குத்
தாமும் அவரும் ஓராங்கு விளங்கக்
காமர் கவினிய பேரிளம் பெண்டிர்

பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச்
சிறந்து புறம்காக்கும் கடவுள்-பள்ளியும்
சிறந்த வேதம் விளங்கப் பாடி
விழுச்சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து
நிலம்அமர் வையத்து ஒருதாம் ஆகி

உயர்நிலை உலகம் இவண்நின்று எய்தும்
அறநெறி பிறழா அன்புடை நெஞ்சின்
பெரியோர் மேஎய் இனிதின் உறையும்
குன்றுகுயின் றன்ன அந்தணர் பள்ளியும்
வண்டுபடப் பழுநிய தேன்ஆர் தோற்றத்துப்

பூவும் புகையும் சாவகர் பழிச்சச்
சென்ற காலமும் வரூஉம் அமயமும்
இன்றுஇவண் தோன்றிய ஒழுக்கமொடு நன்குஉணர்ந்து
வானமும் நிலனும் தாம்முழுது உணரும்
சான்ற கொள்கைச் சாயா யாக்கை

ஆன்றுஅடங்கு அறிஞர் செறிந்தனர் நோன்மார்
கல்பொளிந் தன்ன இட்டுவாய்க் கரண்டைப்
பல்புரிச் சிமிலி நாற்றி நல்குவரக்
கயம்கண் டன்ன வயங்குடை நகரத்து
செம்புஇயன் றன்ன செஞ்சுவர் புனைந்து

நோக்குவிசை தவிர்ப்ப மேக்குஉயர்ந்து ஓங்கி
இறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையும்
குன்றுபல குழீஇப் பொலிவன தோன்ற
அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி
செற்றமும் உவகையும் செய்யாது காத்து

ஞெமன்கோல் அன்ன செம்மைத்து ஆகிச்
சிறந்த கொள்கை அறம்கூறு அவையமும்
நறுஞ்சாந்து நீவிய கேழ்கிளர் அகலத்து
ஆவுதி மண்ணி அவிர்துகில் முடித்து
மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல

நன்றும் தீதும் கண்டுஆய்ந்து அடக்கி
அன்பும் அறனும் ஒழியாது காத்துப்
பழிஒரீஇ உயர்ந்து பாய்புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மாக்களும்
அறநெறி பிழையாது ஆற்றின் ஒழுகிக்

குறும்பல் குழுவின் குன்றுகண் டன்ன
பருந்துஇருந்து உகக்கும் பல்மாண் நல்இல்
பல்வேறு பண்டமோடு ஊண்மலிந்து கவினி
மலையவும் நிலத்தவும் நீரவும் பிறவும்
பல்வேறு திருமணி முத்தமொடு பொன்கொண்டு

சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர்நரும்
மழைஒழுக்கு அறாஅப் பிழையா விளையுள்
பழையன் மோகூர் அவையகம் விளங்க
நால்மொழிக் கோசர் தோன்றி யன்ன
தாம்மேஎந் தோன்றிய நால்பெருங் குழுவும்

கோடுபோழ் கடைநரும் திருமணி குயினரும்
சூடுஉறு நன்பொன் சுடர்இழை புனைநரும்
பொன்உரை காண்மரும் கலிங்கம் பகர்நரும்
செம்புநிறை கொண்மரும் வம்புநிறை முடிநரும்
பூவும் புகையும் ஆயும் மாக்களும்

எவ்வகைச் செய்தியும் உவமம் காட்டி
நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கின்
கண்ணுள் வினைஞரும் பிறரும் கூடித்
தெண்திரை அவிர்அறல் கடுப்ப ஒண்பல்
குறியவும் நெடியவும் மடிதரூஉ விரித்துச்

சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ
நால்வேறு தெருவினும் கால்உற நிற்றரக்
கொடும்பறைக் கோடியர் கடும்புடன் வாழ்த்தும்
தண்கடல் நாடன் ஒண்பூங் கோதை
பெருநாள் இருக்கை விழுமியோர் குழீஇ

விழைவுகொள் கம்பலை கடுப்பப் பலவுடன்
சேறும் நாற்றமும் பலவின் சுளையும்
வேறுபடக் கவினிய தேமாங் கனியும்
பல்வேறு உருவின் காயும் பழனும்
கொண்டல் வளர்ப்பக் கொடிவிடுபு கவினி

மென்பிணி அவிழ்ந்த குறுமுறி அடகும்
அமிர்துஇயன் றன்ன தீம்சேற்றுக் கடிகையும்
புகழ்படப் பண்ணிய பேர்ஊன் சோறும்
கீழ்செல வீழ்ந்த கிழங்கொடு பிறவும்
இன்சோறு தருநர் பல்வயின் நுகர

வால்இதை எடுத்த வளிதரு வங்கம்
பல்வேறு பண்டம் இழிதரும் பட்டினத்து
ஒல்லென் இமிழ்இசை மானக் கல்லென
நனந்தலை வினைஞர் கலம்கொண்டு மறுகப்
பெருங்கடல் குட்டத்துப் புலவுத்திரை ஓதம்

இருங்கழி மருவிப் பாயப் பெரிது எழுந்து
உருகெழு பால்நாள் வருவன பெயர்தலின்
பல்வேறு புள்ளின் இசைஎழுந் தற்றே
அல்அங் காடி அழிதரு கம்பலை
ஒண்சுடர் உருப்புஒளி மழுங்கச் சினம்தணிந்து

சென்ற ஞாயிறு நன்பகல் கொண்டு
குடமுதல் குன்றம் சேரக் குணமுதல்
நாள்முதிர் மதியம் தோன்றி நிலாவிரிபு
பகல்உரு உற்ற இரவுவர நயந்தோர்
காதல் இன்துணை புணர்மார் ஆய்இதழ்த்

தண்நறுங் கழுநீர் துணைப்ப இழைபுனையூஉ
நல்நெடுங் கூந்தல் நறுவிரை குடைய
நரந்தம் அரைப்ப நறுஞ்சாந்து மறுக
மெல்நூல் கலிங்கம் கமழ்புகை மடுப்பப்
பெண்மகிழ்வு உற்ற பிணைநோக்கு மகளிர்

நெடுஞ்சுடர் விளக்கம் கொளீஇ நெடுநகர்
எல்லை எல்லாம் நோயொடு புகுந்து
கல்லென் மாலை நீங்கி நாணுக்கொள
ஏழ்புணர் சிறப்பின இன்தொடைச் சீறியாழ்
தாழ்பெயல் கனைகுரல் கடுப்பப் பண்ணுப்பெயர்த்து

வீழ்துணை தழீஇ வியல்வியம்பு கமழ
நீர்திரண் டன்ன கோதை பிறக்கிட்டு
ஆய்கோல் அவிர்தொடி விளங்க வீசிப்
போதுஅவிழ் புதுமலர் தெருவுடன் கமழ
மேதகு தகைய மிகுநலம் எய்திப்

பெரும்பல் குவளைச் சுரும்புபடு பல்மலர்
திறந்துமோந் தன்ன சிறந்துகமழ் நாற்றத்துக்
கொண்டல் மலர்ப்புதல் மான வேய்ந்து
நுண்பூண் ஆகம் வடுக்கொள முயங்கி
மாயப் பொய்பல கூட்டிக் கவவுக்கரந்து

சேயரும் நணியரும் நலன்நயந்து வந்த
இளம்பல் செல்வர் வளம்தப வாங்கி
நுண்தாது உண்டு வறும்பூத் துறக்கும்
மென்சிறை வண்டினம் மானப் புணர்ந்தோர்
நெஞ்சு ஏமாப்ப இன்துயில் துறந்து

பழம்தேர் வாழ்க்கைப் பறவை போலக்
கொழுங்குடிச் செல்வரும் பிறரும் மேஎய
மணம்புணர்ந்து ஓங்கிய அணங்குடை நல்இல்
ஆய்பொன் அவிர்தொடிப் பாசிழை மகளிர்
ஒண்சுடர் விளக்கத்துப் பலருடன் துவன்றி

நீல்நிற விசும்பில் அமர்ந்தனர் ஆடும்
வானவ மகளிர் மானக் கண்டோர்
நெஞ்சு நடுக்குஉறூஉக் கொண்டி மகளிர்
யாம நல்யாழ் நாப்பண் நின்ற
முழவின் மகிழ்ந்தனர் ஆடிக் குண்டுநீர்ப்

பனித்துறைக் குவவுமணல் முனைஇ மென்தளிர்க்
கொழுங்கொம்பு கொழுதி நீர்நனை மேவர
நெடுந்தொடர்க் குவளை வடிம்புற அடைச்சி
மணம்கமழ் மனைதொறும் பொய்தல் அயரக்
கணம்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்

மாயோன் மேய ஓண நல்நாள்
கோணம் தின்ற வடுஆழ் முகத்த
சாணம் தின்ற சமம்தாங்கு தடக்கை
மறம்கொள் சேரி மாறுபொரு செருவில்
மாறுது உற்ற வடுப்படு நெற்றிச்

சுரும்புஆர் கண்ணிப் பெரும்புகல் மறவர்
கடுங்களிறு ஓட்டலின் காணுநர் இட்ட
நெடுங்கரைக் காழகம் நிலம்பரல் உருப்பக்
கடுங்கள் தேறல் மகிழ்சிறந்து திரிதரக்
கணவர் உவப்பப் புதல்வர்ப் பயந்து

பணைத்துஏந்து இளமுலை அமுதம் ஊறப்
புலவுப்புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு
வளமனை மகளிர் குளநீர் அயரத்
திவவுமெய்ந் நிறுத்துச் செவ்வழி பண்ணிக்
குரல்புணர் நல்யாழ் முழவோடு ஒன்றி

நுண்நீர் ஆகுளி இரட்டப் பலவுடன்
ஒண்சுடர் விளக்கம் முந்துற மடையொடு
நல்மா மயிலின் மென்மெல இயலிக்
கடுஞ்சூல் மகளிர் பேணிக் கைதொழுது
பெருந்தோள் சாலினி மடுப்ப ஒருசார்

அருங்கடி வேலன் முருகொடு வளைஇ
அரிக்கூடு இன்இயம் கறங்க நேர்நிறுத்துக்
கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்
சீர்மிகு நெடுவேள் பேணித் தழூஉப் பிணையூஉ
மன்றுதொறும் நின்ற குரவை சேரிதொறும்

உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ
வேறுவேறு கம்பலை வெறிகொள்பு மயங்கிப்
பேர்இசை நன்னன் பெரும்பெயர் நல்நாள்
சேரி விழவின் ஆர்ப்பு எழுந்தாங்கு
முந்தை யாமம் சென்ற பின்றைப்

பணிலம் கலிஅவிந்து அடங்கக் காழ்சாய்த்து
நொடைநவில் நெடுங்கடை அடைத்து மடமதர்
ஒள்இழை மகளிர் பள்ளி அயர
நல்வரி இருஅல் புரையும் மெல்அடை
அயிர்உருப்பு உற்ற ஆடுஅமை விசயம்

கவவொடு பிடித்த வகைஅமை மோதகம்
தீம் சேற்றுக் கூவியர் தூங்குவனர் உறங்க
விழவின் ஆடும் வயிரியர் மடியப்
பாடுஆன்று அவிந்த பனிக்கடல் புரையப்
பாயல் வளர்வோர் கண்இனிது மடுப்பப்

பால்நாள் கொண்ட கங்குல் இடையது
பேயும் அணங்கும் உருவுகொண்டு ஆய்கோல்
கூற்றக் கொல்தேர் கழுதொடு கொட்ப
இரும்பிடி மேஎந்தோல் அன்ன இருள்சேர்பு
கல்லும் மரனும் துணிக்கும் கூர்மைத்

தொடலை வாளர் தொடுதோல் அடியர்
குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடிச்
சிறந்த கருமை நுண்வினை நுணங்குஅறல்
நிறம் கவர்பு புனைந்த நீலக் கச்சினர்
மெல்நூல் ஏணிப் பல்மாண் சுற்றினர்

நிலன்அகழ் உளியர் கலன்நசைஇக் கொட்கும்
கண்மாறு ஆடவர் ஒடுக்கம் ஒற்றி
வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்
துஞ்சாக் கண்ணர் அஞ்சாக் கொள்கையர்
அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர் செறிந்த

நூல்வழிப் பிழையா நுணங்குநுண் தேர்ச்சி
ஊர்காப் பாளர் ஊக்கஅருங் கணையினர்
தேர்வழங்கு தெருவின் நீர்திரண்டு ஒழுக
மழைஅமைந் துற்ற அரைநாள் அமயமும்
அசைவிலர் எழுந்து நயம்வந்து வழங்கலின்

கடவுள் வழங்கும் கைஅறு கங்குலும்
அச்சம் அறியாது ஏமம் ஆகிய
மற்றை யாமம் பகல்உறக் கழிப்பிப்
போதுபிணி விட்ட கமழ்நறும் பொய்கைத்
தாதுஉண் தும்பி போதுமுரன் றுங்கு

ஓதல் அந்தணர் வேதம் பாடச்
சீர்இனிது கொண்டு நரம்புஇனிது இயக்கி
யாழோர் மருதம் பண்ணக் காழோர்
கடுங்களிறு கவளம் கைப்ப நெடுந்தேர்ப்
பணைநிலைப் புரவி புல்உணாத் தெவிட்டப்

பல்வேறு பண்ணியக் கடைமெழுக்கு உறுப்பக்
கள்ளோர் களிநொடை நுவல இல்லோர்
நயந்த காதலர் கவவுப்பிணித் துஞ்சிப்
புலர்ந்துவிரி விடியல் எய்த விரும்பிக்
கண்பொரா எறிக்கும் மின்னுக்கொடி புரைய

ஒண்பொன் அவிர்இழை தெழிப்ப இயலித்
திண்சுவர் நல்இல் கதவம் கரைய
உண்டுமகிழ் தட்ட மழலை நாவின்
பழஞ்செருக் காளர் தழங்குகுரல் தோன்றச்
சூதர் வாழ்த்த மாகதர் நுவல

வேதா ளிகரொடு நாழிகை இசைப்ப
இமிழ்முரசு இரங்க ஏறுமாறு சிலைப்பப்
பொறிமயிர் வாரணம் வைகறை இயம்ப
யானையங் குருகின் சேவலொடு காமர்
அன்னம் கரைய அணிமயில் அகவப்

பிடிபுணர் பெருங்களிறு முழங்க முழுவலிக்
கூட்டுஉறை வயமாப் புலியொடு குழும
வானம் நீங்கிய நீல்நிற விசும்பின்
மின்னுநிமிர்ந் தனையர் ஆகி நறவுமகிழ்ந்து
மாண்இழை மகளிர் புலந்தனர் பரிந்த

பரூஉக்காழ் ஆரம் சொரிந்த முத்தமொடு
பொன்சுடு நெருப்பின் நிலம்உக் கென்ன
அம்மென் குரும்பைக் காய்படுபு பிறவும்
தருமணல் முற்றத்து அரிஞிமிறு ஆர்ப்ப
மென்பூஞ் செம்மலொடு நன்கலம் சீப்ப

இரவுத்தலைப் பெயரும் ஏம வைகறை
மைபடு பெருந்தோள் மழவர் ஓட்டி
இடைப்புலத்து ஒழிந்த ஏந்து கோட்டுயானை
பகைப்புலம் கவர்ந்த பாய்பரிப் புரவி
வேல்கோல் ஆக ஆள்செல நூறிக்

காய்சின முன்பின் கடுங்கண் கூளியர்
ஊர்சுடு விளக்கின் தந்த ஆயமும்
நாடுடை நல்எயில் அணங்குடைத் தோட்டி
நாள்தொறும் விளங்கக் கைதொழூஉப் பழிச்சி
நாள்தர வந்த விழுக்கலம் அனைத்தும்

கங்கைஅம் பேரியாறு கடல்படர்ந் தாஅங்கு
அளந்துகடை அறியா வளம்கெழு தாரமொடு
புத்தேள் உலகம் கவினிக் காண்வர
மிக்குப்புகழ் எய்திய பெரும்பெயர் மதுரைச்
சினைதலை மணந்த சுரும்புபடு செந்தீ

ஒண்பூம் பிண்டி அவிழ்ந்த காவில்
சுடர்பொழிந்து ஏறிய விளங்குகதிர் ஞாயிற்று
இலங்குகதிர் இளவெயில் தோன்றி யன்ன
தமனியம் வளைஇய தாவுஇல் விளங்குஇழை
நிலம்விளக் குறுப்ப மேதகப் பொலிந்து

மயில்ஓ ரன்ன சாயல் மாவின்
தளிர்ஏர் அன்ன மேனித் தளிர்ப்புறந்து
ஈர்க்கின் அரும்பிய திதலையர் கூர்எயிற்று
ஒண்குழை புணரிய வண்தாழ் காதின்
கடவுள் கயத்துஅமன்ற சுடர்இதழ்த் தாமரைத்

தாதுபடு பெரும்போது புரையும் வாள்முகத்து
ஆய்தொடி மகளிர் நறுந்தோள் புணர்ந்து
கோதையின் பொலிந்த சேக்கைத் துஞ்சித்
திருந்துதுயில் எடுப்ப இனிதின் எழுந்து
திண்காழ் ஆரம் நீவிக் கதிர்விடும்

ஒண்காழ் ஆரம் கவைஇய மார்பின்
வரிக்கடைப் பிரசம் மூசுவன மொய்ப்ப
எருத்தம் தாழ்ந்த விரவுப்பூந் தெரியல்
பொலம் செயப் பொலிந்த நலம்பெறு விளக்கம்
வலிகெழு தடக்கைத் தொடியொடு சுடர்வரச்

சோறு அமைவுஉற்ற நீருடைக் கலிங்கம்
உடைஅணி பொலியக் குறைவின்று கவைஇ
வல்லோன் தைஇய வரிப்புனை பாவை
முருகுஇயன் றன்ன உருவினை ஆகி
வருபுனல் கற்சிறை கடுப்ப இடைஅறுத்து

ஒன்னார் ஓட்டிய செருப்புகல் மறவர்
வாள்வலம் புணர்ந்தநின் தாள்வலம் வாழ்த்த
வில்லைக் கவைஇக் கணைதாங்கு மார்பின்
மாதாங்கு எறுழ்த்தோள் மறவர்த் தம்மின்
கல்இடித்து இயற்றிய இட்டுவாய்க் கிடங்கின்

நல்எயில் உழந்த செல்வர் தம்மின்
கொல்ஏற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த
மாக்கண் முரசம் ஓவுஇல கறங்க
எரிநிமிர்ந் தன்ன தானை நாப்பண்
பெருநல் யானை போர்க்களத்து ஒழிய

விழுமிய வீழ்ந்த குரிசிலர் தம்மின்
புரையோர்க்குத் தொடுத்த பொலம்பூந் தும்பை
நீர்யார் என்னாது முறைகருதுபு சூட்டிக்
காழ்மண்டு எஃகமொடு கணைஅலைக் கலங்கிப்
பிரிபுஇணை அரிந்த நிறம்சிதை கவயத்து

வானத்து அன்ன வளநகர் பொற்ப
நோன்குறட்டு அன்ன ஊன்சாய் மார்பின்
உயர்ந்த உதவி ஊக்கலர் தம்மின்
நிவந்த யானைக் கணநிரை கவர்ந்த
புலர்ந்த சாந்தின் விரவுப்பூந் தெரியல்

பெருஞ்செய் ஆடவர் தம்மின் பிறரும்
யாவரும் வருக ஏனோரும் தம்என
வரையா வாயில் செறுஅது இருந்து
பாணர் வருக பாட்டியர் வருக
யாணர்ப் புலவரொடு வயிரியர் வருகஎன

இருங்கிளை புரக்கும் இரவலர்க்கு எல்லாம்
கொடுஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசிக்
களம்தோறும் கள்அரிப்ப
மரம்தோறும் மைவீழ்ப்ப
நிணஊன் சுட்டு உருக்குஅமைய

நெய்கனிந்து வறைஆர்ப்பக்
குரூஉக்குய்ப்புகை மழைமங்குலின்
பரந்துதோன்று வியல்நகரால்
பல்சாலை முதுகுடுமியின்
நல்வேள்வித் துறைபோகிய

தொல்ஆணை நல்ஆசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலம்தரு திருவின் நெடியோன் போல
வியப்பும் சால்பும் செம்மை சான்றோர்
பலர்வாய்ப் புகர்அறு சிறப்பின் தோன்றி

அரியதந்து குடி அகற்றிப்
பெரிய கற்று இசைவிளக்கி
முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்
பல்மீன் நடுவண் திங்கள் போலவும்
பூத்த சுற்றமொடு பொலிந்துஇனிது விளங்கிப்

பொய்யா நல்இசை நிறுத்த புனைதார்ப்
பெரும்பெயர் மாறன் தலைவன் ஆகக்
கடந்துஅடு வாய்வாள் இளம்பல் கோசர்
இயல்நெறி மரபின்நின் வாய்மொழி கேட்பப்
பொலம்பூண் ஐவர் உட்படப் புகழ்ந்த

மறம்மிகு சிறப்பின் குறுநில மன்னர்
அவரும் பிறரும் துவன்றிப்
பொற்பு விளங்கு புகழ்அவை நிற்புகழ்ந்து ஏத்த
இலங்குஇழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய
மணம்கமழ் தேறல் மடுப்ப நாளும்

மகிழ்ந்து இனிது உறைமதி பெரும
வரைந்து நீ பெற்ற நல்ஊழியையே.

— தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன்
நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார் பாடியது.

## வெண்பா

பைங்கண் இளம்பகட்டின் மேலானைப் பால்மதிபோல்
திங்கள் நெடுங்குடையின் கீழானை — அங்கு இரந்து
நாம் வேண்ட நல்நெஞ்சே நாடுதிபோய் நானிலத்தோர்
தாம்வேண்டும் கூடல் தமிழ். 1

சொல்என்னும் பூம்போது தோற்றிப் பொருள்என்னும்
நல்இருந் தீம்தாது நாறுதலால் — மல்லிகையின்
வண்டுஆர் கமழ்தாமம் அன்றே மலையாத
தண்தாரான் கூடல் தமிழ். 2

# பத்துப்பாட்டு—பதிப்புக்கள்
# ஆராய்ச்சி நூலடைவு

# 1. பத்துப்பாட்டு—பதிப்புக்கள்

| நூற்பெயர் | பதிப்பாசிரியர் | வெளியீட்டகம் | பதிப்பு | ஆண்டு |
|---|---|---|---|---|
| பத்துப்பாட்டு (முழுமையும்) நச்சினார்க்கினியர் உரையுடன் | டாக்டர். உ. வே. சாமிநாதையர் | டாக்டர். உ. வே. சாமிநாதையர் | I<br>II<br>III | 1889<br>1918<br>1931<br>1950, 56, 61, 74 |
| பத்துப்பாட்டு (முழுமையும்) உரையுடன் (இரு பகுதி) | பொ. வே. சோமசுந்தரனார் | சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை | I<br>மறு பதிப்பு | 1956<br>1962, 1966, 1968, 1971 |
| Pattupattu Ten Tamil Idyals | J. V. Chelliah | | I<br>II | 1946<br>1962 |
| பத்துப்பாட்டு (மூலம்) | டாக்டர் உ. வே. சாமிநாதையர் | டாக்டர் உ. வே. சாமிநாதையர் | I | 1931 |
| ,, | எஸ். ராஜம் | மர்ரே அண்டு கம்பெனி, சென்னை | I | 1957 |
| Six Long Poems from Sangam Tamil | N. Raghunnathan | — | I | 1977 |

ஒவ்வொரு பாட்டாகத் தனித்தனியாகவும் பத்து நூல்களாக வெளிவந்துள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| திருமுருகாற்றுப்படை | ஆறுமுக நாவலர் | விக்டோரியா அச்சுக் கூடம் | | 1917 |
| திருமுருகாற்றுப்படைமூலமும் பரிமேலழகர் உரையும் | அ. மகாதேவசெட்டியார் | ஸ்ரீ சாதுஇரத்தினசற்குரு புஸ்தகசாலை, சென்னை. | | 1924 |
| திருமுருகாற்றுப்படை | சு. அருளம் பலவனர் | யாழ்ப்பாணம் | | 1937 |
| திருமுருகாற்றுப்படை பொருட் சுருக்கமும் பதவுரையும் குறிப்பும் | தை.ஆ.கனகசபாபதி முதலியார் | கே. பழனியாண்டிபிள்ளை கம்பனி, சென்னை. | | 1937 |
| திருமுருகாற்றுப்படை மூலமும் உரையும் | எஸ். வையாபுரிப்பிள்ளை | சைவசித்தாந்தமகா சமாஜம், சென்னை. | IV | 1946 |
| வழிகாட்டி (திருமுருகாற்றுப் படை) | கி.வா. ஜகந்நாதன் | அல்லயன்ஸ் கம்பனி, சென்னை | | 1947 |
| திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சி உரையுடன் | வை.மு.கோபால கிருஷ்ணமாசாரியார் | ஆனந்த பார்வதி அச்சகம் சென்னை. | | 1951 |
| திருமுருகாற்றுப்படை உரைக் கொத்து | தொகுப்பு K.M. வெங்கடராமையா | திருப்பனந்தாள் காசிமடம் | | 1959 |
| பொருநராற்றுப்படை | மகாதேவ முதலியார் | லோகநாதன் & பிரதர்ஸ் | | 1907 |
| பொருநராற்றுப்படை | வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் | வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் | | 1934 |

| நூற்பெயர் | பதிப்பாசிரியர் | வெளியீட்டகம் | பதிப்பு | ஆண்டு |
| --- | --- | --- | --- | --- |
| சிறுபாணாற்றுப்படை | வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார். | வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் | | 1932 |
| சிறுபாணாற்றுப்படை விளக்கம் | வி. கந்தசாமி முதலியார் | ஒற்றுமை ஆபீஸ், சென்னை | | 1947 |
| பெரும்பாணாற்றுப்படை | வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் | வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் | | 1936 |
| ,, ஆராய்ச்சியும் உரையும் | ரா. இராகவய்யங்கார் | அண்ணாமலைப் பல்கலைக் கழகம் | II | 1958 |
| முல்லைப் பாட்டு | மறைமலையடிகள் | மறைமலையடிகள், பல்லாவரம் | | 1903 |
| முல்லைப் பாட்டு | வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் | வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் | | 1929 |
| முல்லைப் பாட்டு | இளவழகனார் | இளவழகனார், வாலாஜாபேட்டை | | 1939 |
| முல்லைப் பாட்டு | க. ப. சந்தோஷம் | சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை | | 1955 |
| நெடுநல் வாடை (பொருள் நலன்) | கு. தண்டபாணிப்பிள்ளை | சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| நெடுநல் வாடை (பாநலன்) | ,, | ,, | | 1947 |
| நெடுநல் வாடை | வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியார் | வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியார் | | 1937 |
| குறிஞ்சிப் பாட்டு | பொ. வெ. சோமசுந்தரனுர் | சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை | I | 1956 |
| குறிஞ்சிப் பாட்டு இலக்கியத்திறனுய்வு விளக்கம் | தமிழண்ணல் | பாரி நிலையம், சென்னை | I | 1961 |
| குறிஞ்சிப் பாட்டு விளக்கம் | எஸ்.ஆர். மார்க்கபந்து சர்மா | தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம் | | 1961 |
| பட்டினப்பாலை | வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் | வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் | | 1933, 1938 |
| பட்டினப்பாலை | மறைமலையடிகள் | சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை | | 1956 |

# 2. பத்துப்பாட்டு ஆராய்ச்சி நூலடைவு *


Arumugam, K : *Studies in Pattupattu,* unpublished M. Litt., thesis of the University of Madras, 1959.

Nithyanandhan, S. *The Pattupattu - A Historical Social, and Linguistic Study*, unpublished D. Phil. thesis of the University of London, 1950.

Sundaram, R. M : *Grammatical study of Pattuppattu with Index, text and translations,* unpublished Ph.D. thesis of the University of Kerala, 1964.

மா. நவநீத கிருஷ்ணன் *தமிழ் இலக்கியத்தில் ஆற்றுப்படை,* அச்சேருத மதுரை காமராசர் பல்கலைக்கழக Ph. D. ஆய்வேடு.

மா. இரர்சமாணிக்கனூர் *பத்துப்பாட்டு ஆராய்ச்சி*, சென்னைப் பல்கலைக் கழகம், 1970

*பத்துப்பாட்டுக் காட்சிகள்,* பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1955

மு. வரதராசனூர் மற்றும் பலர் *பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள்* சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1952.


இப் பட்டியல் முழுமையானதன்று

சாமி. சிதம்பரனார் — *பத்துப்பாட்டும் பண்டைத்தமிழரும்* ஸ்டார் பிரசுரம், சென்னை, 1956.

ப. அரங்கசாமி (பதிப்பாசிரியர்), — *பத்துப்பாட்டில் பைந்தமிழ் வளம்* பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1967

ந சி. கந்தையா பிள்ளை — *பத்துப்பாட்டு உரைநடை,* பிரொகிரசிவ் அச்சகம், சென்னை, 1935

லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார் — *பத்துப்பாட்டு வளம்,* பாரி நிலையம் சென்னை, 1968.

மொ. அ. துரையரங்கசாமி — *அன்பு நெறியே தமிழர் நெறி,* மீனாட்சிபுத்தக நிலையம், மதுரை,

P. Meenakshisundaram Mullaippattu, the Idyl of the Jasmine.

# பொருட்குறிப்பு அகராதி

# சுருக்க விளக்கம்

| | |
|---|---|
| பொ. | பொருநராற்றுப்படை |
| பொ. வெ. | பொருநராற்றுப்படை வெண்பா |
| பெ. | பெரும்பாணாற்றுப்படை |
| பெ. வெ. | பெரும்பாணாற்றுப்படை வெண்பா |
| சி. | சிறுபாணாற்றுப்படை |
| சி. வெ. | சிறுபாணாற்றுப்படை வெண்பா |
| கூ. | கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) |
| கூ. வெ. | கூத்தராற்றுப்படை வெண்பா |
| தி. | திருமுருகாற்றுப்படை |
| தி. வெ. | திருமுருகாற்றுப்படை வெண்பா |
| ம. | மதுரைக் காஞ்சி |
| ம. வெ. | மதுரைக் காஞ்சி வெண்பா |
| ப. | நூலின் பக்கம் |

# பொருட்குறிப்பு அகராதி


**அ**

அகத்தியர் ப. 62
அகம் ம. 508
அகல் பெ. 377
அகவர் பொ. 220, ம. 223
அகழ் கூ. 214
அகளம் (பத்தர்) சி. 224
அகில் பொ. 238, சி. 116, 263
அங்குசம் தி. 110
அசையும் நல்புலம் கூ. 67
அஞ்சினர் சி. 210
அட்டில் சி. 132
அடகு (இலைக்கறி) ம. 531
அடிசில் பெ. 476, சி. 241
அடிபுதை யரணம் பெ. 69
அடியார் நடுவில் நாம் இருப்பதால் வருகின்ற பெரும் பயன் ப. 53
அடுகள வேள்வி ப. 60
அடுப்பு ம. 29
அடும்பு பொ. 195
அடை பெ. 278
அணங்கு பொ. 20, 35 பெ. 459, 494, ம. 164, 353, 446, 632
அணில் பெ. 85
அத்துவிதக் கொள்கை ப. 37
அத்வைதக் கொள்கை ப. 70
அதட்பள்ளி கூ. 419
அதரி கொள்பவர் ம. 94
அதளோன் பெ. 151
அதிகன் சி. 103
அதியன் ப. 20
அந்தணர் பெ. 315, சி. 187, 204, தி. 263, ம. 656
அந்தணர்கள் ப. 49
அந்தணர் பள்ளி ம. 474, ப. 81
அந்தணர் வேள்வி தி. 96
அந்தரக் கொட்பினர் தி. 174
அந்தரப் பல்லியம் தி. 119
அந்தி ம. 427
அந்திக் கடை ப. 84
அந்திக்காப்பு ப. 81
அந்திவானம் பெ. 413
அந்தி விழவு ம. 460
அந்தி விழா ப. 80
அம்பு கூ. 421
அமண்பள்ளி ப. 82
அமணத் துறவிகள் ப. 82
அமர் ம. 128
அமரர் தி. வெ. 2
அமளி பெ. 252
அமிர்து ம. 532
அமிழ்து சி. 227, ம. 197
அமுது பெ. 475
அமை கூ. 522, தி. 195
அமைச்சர்கள் ப. 83
அமைதியைக் காத்தல் ப. 11
அயில் சி. 7, கூ. 373
அயினி கூ. 467

அரக்கு பொ. 43, பெ. 293, சி. 74, 256, கு. 507
அரசவை பொ. 55
அரசியல் ம. 191
அரசியலின் மூன்று
குறிக்கோள்கள் ப.71
அரசு கு. 74, ம. 132
அரண்கள் ப. 28
அரம் பொ. 144, கு. 35
அரமியம் ம. 451
அரவு பொ. 83, பெ. 42, 134 சி. 185, கு. 504
அரிக்கூடு இன்இயம் ம. 612
அரிசி பெ. 474, சி. 194, கு. 440
அரிநர் கம்பலை ம. 110
அரிமா பொ. வெ. 2
அரியவழக்கு-பெறீஇயர் ப.33
அரிவையர் சி. 215
அரிஸ்ட்டாட்டில் ப. 57
அருங்கலம் கு. 71
அருப்பம் கு. 378, ம. 67, 149
அருவி பொ. 235, பெ. 427, 500, சி. 90, 170, கு. 278, 554, ம. 42, 57, 299 306, 374
அரை நாள் பெ. 111
அல் (இரவு) கு. 254, 256, 437
அல் அங்காடி ம. 544
அல்லங்காடி ப. 64
அல்லங்காடியில்
அழிதருகம்பலை ப. 85
அல்லங்காடியின் ஓசை ப. 85
அலவன் பொ. 9, பெ. 208
அலகை கு. 234, 347
அலவன் சி. 195
அலைவாய் தி. 125
அவரை பெ. 195, சி.164 கு. 110, 436 ம. 292
அவரைஅம் புளிங்கூழ் கு. 436
அவல்(உணவுவகை) பொ. 216, பெ. 226, கு. 121
அவல் (பள்ளம்) கு. 198
அவலும் மிசையும் ம. 240
அவிர்இழை ம. 445
அவிழ்ப் பதம் பொ. 112
அவுணர் ம. 590, ப. 35.
அழும்பில் ம. 345
அவை பொ. 188, ம. 161
அவைஅகம் ம. 508
அவைப்பு சி. 194
அவையடக்கம் ப. 73
அவையம் கு. 77
அவையல் பொ.16
அவைய அரிசி பெ.275
அழகர் மலை ப. 50
அழிநிலைக் காட்சி ப. 63
அழிபசி வருத்தம் ப. 21
அழிபடை சி. 211
அழும்பில் நகரம் ப. 77
அளகின் வாட்டு பெ. 256
அளியும் தெறலும் பெ. 422
அளை பெ. 163, கு. 300
அறங்கூறு அவையம் ப. 82
அறக்கூழ் வாழ்வு ப. 96
அறநெறி ம. 191, 472, 500
அறம் கூறும் அவையம் ம. 492
அறம்வளர்க்கும் கொற்றம் ப 68
அறமும் அன்பும் ப. 67
அறல் பொ. 25. சி, 6
அறன் பொ. 230
அறிஞர் கு. 287

அறிந்தோர் சி. 209
அறுமுகம் தி.வெ. 8
அறுமுகம் கொண்ட
கோலத்தின் உட்பொருள் ப.44
அறுவகைத்தொழில் ப.49
அறுவர் தி.255
அறுவை பொ.83, சி.236
அன்பு வாழ்வு ப.46
அன்பு வாழ்வு உலகில்
நிலைக்க வேண்டும் ப.46
அன்னம் சி.146, ம.386, 675
அனந்தர் பொ.94

ஆ

ஆ (பசு) பெ.141, 243,
ம. 157
ஆகுளி கு. 3, 140, ம.606
ஆசிரியர் காணே ப.50
ஆசினி கு.139, 526, தி.301
ஆட்டு ம.616
ஆடுகளம் தி.245
ஆடுபவர் ப.78
ஆண் ம.29
ஆண்அணி சி.211
ஆணி பொ.10 கு.27
ஆதி ம.390
ஆம்பல் ம.252
ஆம்பி(குடைக்காளான்) பெ.157
ஆம்பி(பன்றிப்பத்தர்) ம.91
ஆமா தி. 315, ப. 293
ஆமான் குழவி கு. 500
ஆமான் சூட்டு சி. 177
ஆமூர் சி. 188, ப. 22
ஆய் சி. 99. ப. 20
ஆய்மகள் பெ. 162, ப. 13
ஆயம்(திரள்) பொ. 123,
பெ. 311, சி. 176,
சி. 220
ஆயம்(பசுத்திரள்) ம. 692
ஆயன் ப. 13
ஆர்வலர் தி. 93
ஆரம்(ஆரக்கால்)பெ. 46, சி. 253
ஆரம் (சந்தனம்) பொ. 238
சி. 116, கு. 520
ம. 715
ஆரம் (முத்துவடம்) சி. 2
ம. 439, 681, 716
ஆரை பெ. 50
ஆஅல் (ஆரல்) கு. 100
ஆல் தி. 256
ஆல் அமர் செல்வன் சி. 97
ஆலங்கானம் ம. 127
ஆலம் கு. 268
ஆலை பெ. 261, கு. 119, 340
ஆவி பெ. 469
ஆவியர் பெருமகன் சி. 86
ஆவினன் குடி தி. 176
ஆவுதி ம. 494
ஆளி பொ. 139
ஆற்றுப் படலம் ப. 74
ஆற்றுப் படுத்தப்படுவோர் ப. 2
ஆற்றுப் படை ப. 2, 38
ஆற்றுப்படைகளின்
நோக்கம் ப. 8
ஆற்றுப்படைத்
தொடக்கம் ப. 39
ஆற்றுப்படை பெரும் பாட்டாக
வளர்ந்தது ப. 31
ஆற்றுப்படையின்
அமைப்பு ப. 30
ஆறுஅலை கள்வர் பொ. 21

ஆறுபடை வீடுகள் ப. 43
ஆறுமுகங்கள் ப. 36
ஆறுமுகங்களும் பன்னிரண்டு கைகளும் ப. 44
ஆன் பெ. 165
ஆன் தீம்பால் கு. 409
ஆன்று அடங்கு அறிஞர் ம. 481

## இ

இகழுநர் கு. 73
இசைக்கலைஞர்கள் ப. 73
இசைக்கலைப் புதையல் ப. 2
இசைக்கலையின் மேன்மை ப. 7
இசைக் குடும்பத்தின் பெருமை ப. 9
இஞ்சி கு.92, 126,ம. 289
இடங்கர் கு. 211
இடி கு. 512
இடையன் பெ. 175
இடைவழி ப. 57
இதணம் கு. 204
இதை ம. 79,376,536
இந்திய ஆக்கம் ப. 33
இந்திய உலகு ப. 63
இந்திரன் ப. 48
இமயம் சி. 48
இமையவர் பெ. 429
இயங்கள் கு. 277
இயங்குநர் கு. 18
இயம சி. 125,229 கு. 232, 269, ம. 304, 363, தி. 240
இயவர் ம. 304
இயவுள் தி. 274
இரசலீலை ப. 50
இரப்போர் ப. 72
இரவலர் சி. 93
இரவலர்கள் ப. 59
இரவலன் பெ. 45 சி. 40, தி. 284
இரவில் மாட்டிய இலங்கு சுடர் ஞெகிழி பெ. 349
இரவு பொ. 118, பெ. 279, ம. 8, 239, 686
இரியல் மாக்கள் பெ. 432
இருங்கல் அரும் பொறி கு. 194-195
இரு சீர்ப் பாணி பொ. 71
இருட்டும் அவன்தானே ப. 41
இருபெயர்ப் பேர் ஆயம் ம. 101
இரு பிறப்பாளர் தி. 182
இரு பெரு வேந்தர் (சேர பாண்டியர்) பொ. 146
இருபெரு வேந்தர் (சேரன் சோழன்) ம. 55
இரும்பு பெ. 437, கு. 113
இருவகையான இசை (உழவு வாணிகம்) ப. 121
இல் ம. 358, 502, 578, 667
இல் அடு கள் பெ. 142
இலங்கை சி. 119,120
இலஞ்சி கு. 228, ம. 248
இலவம் பெ. 83
இலவு இதழ் பொ. 27
இலை(வெற்றிலை) ம. 401
இவுளி பெ. 492
இழுது கு. 244, 442
இழுமென்புள் பெ. 406
இழை பொ. 85, தி. 18
இளந்திரையன் ப. 11
இளநீர் தி. 308

இளம் பல் செல்வர் ம. 572
இளம் பெண்கள் ப. 80
இளி கு. 7
இளையர் பெ. 268
இளையோர் பொ. 187, சி. 232
இறடி கு. 169
இறவு பொ. 204
இருஅல் கு. 525, ம. 624
இறை பெ. 439
இன் இயம் பெ. 56
இன்பச் சிறப்பு ப. 59, 61
இன்புளி வெஞ்சோறு சி. 175

ஈ

ஈகை பெ. 460
ஈகைச் செந்நுகம் சி. 113
ஈகைமாரி கு. 72
ஈசன் தி. வெ. 7
ஈசன் மகன் தி. வெ. 7
ஈத்து இலை பெ. 88
ஈந்து பெ. 130
ஈர் பொ. 79, பெ. 219
ஈர்—ஐம்பதின்மர் (துரியோதனன் முதலிய நூற்றுவர்) பெ. 415
